ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான ஸ்ரீ மணவாளமாமுனிகள்

திருவாய் மலர்ந்தருளிய

திருவாய்மொழி நூற்றந்தாதி.

இதற்கு

ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி

பிள்ளைலோகம்ஜீயர் அருளிச்செய்த

வ்யாக்யாநமும்

பதவுரையும்.

[illegible]

ஸ்ரீமான் [illegible]

வித்வான் வெங்கடாசார்யராலும்

ஸ்ரீமான்புதுப்பட்டு திருவேங்கடாசார்யராலும்,

பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம்

வித்வான் அண்ணங்கராசாரியராலும்

நன்றாகப் பரிசோதிக்கப்பட்டு,

ஸ்ரீ வைஷ்ணவக்ரந்த முத்ராபக ஸபையாரால்

பராங்குச திருவவதாராதி ௪௦௧௫-வது ஸம்வத்ஸரமான

ராக்ஷஸ ஸம்வத்ஸரத்தில்

காஞ்சிபுரம்.

ஸ்ரீ நிவாஸ அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு ப்ரசரம் செய்யப்பட்டது.

விஜயதேநராம்,

1916.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை
(லிமிடெட்)

இச்சபையில் தமிழ்லிபியில் அச்சிட்ட க்ரந்தங்கள்

தனிச்லோகம் வ்யாக்யாநம், ப்ரதிபத தாத்பர்ய ஸஹிதம்		1	10	0
பாரதாதி தனிச்லோகம்	,, ,,	0	3	0
ராமசரமச்லோகம்	,, ,,	0	1	9
துஷ்கரஸ்லோக டிப்பணி	,, ,,	0	2	6
யதிதர்மஸமுச்சயம்	,, ,,	0	9	0
முதல் திருவந்தாதி	,, அரும்பதப்ரதிபத ஸஹிதம்	0	9	0
இரண்டாம் திருவந்தாதி	,, ,,	0	6	6
மூன்றாம் திருவந்தாதி	,, ,,	0	6	0
நான்முகன் திருவந்தாதி	,, ,,	0	7	0
திருவிருத்தம்	அரும்பதப்ரதிபத தாத்பர்யஸஹிதம்	1	14	0
திருவாசிரியம்	,, ,,	0	3	0
பெரிய திருவந்தாதி	,, ,, ப்ரதிபதஸஹிதம்	0	7	0
திருவெழுகூற்றிருக்கை	,,	0	3	0
சிறிய திருமடல்	,, ,,	0	5	0
பெரிய திருமடல்	,, ,,	0	5	0
திருக்குறுந்தாண்டகம்	,, ,,	0	3	0
திருநெடுந்தாண்டகம்	,, ,,	1	0	0
திருப்பல்லாண்டு	,, ,,	0	8	0
இராமாநுச நூற்றந்தாதி உரையுடன்	,,	0	8	0
பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம் தாத்பர்ய ஸஹிதம்		0	7	0
ஷண்மததர்சினி		0	1	0
பெரியதிருமொழி க-முதல் கக பத்துக்கள்		8	0	0
பெரியாழ்வார் திருமொழி ஸவ்யாக்யாநம்		5	6	6
திருச்சந்த விருத்தம வ்யாக்யாநம்		1	6	0
திருமாலை ஸவ்யாக்யாநம		0	14	0
திருப்பள்ளியெழுச்சி		0	3	0
அமலனாதிபிரான்		0	7	6
திருவாய்மொழி நூற்றந்தாதி		1	0	0

இப்படிக்கு

ரா. திருவேங்கடத்தானய்யா,
காரியதர்சி, தனாதிகாரி.
நெ. 31, வெங்கடாசலமுதலி வீதி, சென்னை.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.



பரமகாருணிகரான பெரியஜீயரருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதித்

தனியன்.

அல்லும்பகலுமநுபவிப்பார் தங்களுக்குச்
சொல்லும்பொருளுந் தொகுத்துரைத்தான் — நல்ல
மணவாளமாமுனிவன் மாறன்மறைக்குத்
தணவாநூற்றந்தாதி தான். (க)

தனியன் பதவுரை.

அல்லும்பகலும்	இரவும்பகலுமாகிய எப்பொழுதும்
சொல்லும்பொருளும்	(இனிய) சொற்களையும் பொருள்களையும்
அநுபவிப்பார் தங்களுக்கு	(நெஞ்சுகுளிரும்படி) அநுபவிக்க விரும்புமவர்களுக்காக,
நல்ல	நன்மைபொருந்திய
மணவாளமாமுனிவன் தான்	மணவாளமாமுனிகள்
மாறன்	நம்மாழ்வார் அருளிச்செய்த
மறைக்கு	தமிழ்வேதமான திருவாய்மொழிக்கு

தனவா	மிகவும் பொருந்தின
நூற்றந்தாதி	நூற்றந்தாதியை
தொகுத்து	ஸங்க்ரஹமாக
உரைத்தான்	அருளிச்செய்தார்.

(சொல்லும் பொருளும் தொகுத்து—சொல்லையும் பொருளையும் சுருக்கி என்றந்வயமாகவுமாம்.) (க)

மன்னுபுகழ்சேர் மணவாளமாமுனிவன்
தன்னருளாலுட்பொருள்கள் தன்னுடனே—சொன்ன
திருவாய்மொழி நூற்றந்தாதியாம் தேனை
ஒருவாதருந்து நெஞ்சே யுற்று. (உ)

நெஞ்சே	மனமே!
மன்னு புகழ் சேர்	நித்யமான கீர்த்தியையுடையரான
மணவாளமாமுனிவன்	மணவாளமாமுனிகள்
தன் அருளால்	தம்முடைய க்ருபையினாலே
உள்பொருள்கள் தன்னுடனே	ஆழ்ந்த கருத்துகள் அமையும்படி
சொன்ன	அருளிச்செய்த
திருவாய்மொழி நூற்றந்தாதி ஆம் தேனை	திருவாய்மொழி நூற்றந்தாதி யாகிற தேனை
உற்று	கிட்டி
ஒருவாது	இடைவிடாமல்
அருந்து	பானம்பண்ணு. (உ)

தனியன் பதவுரை முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

திருவாய்மொழி நூற்றந்தாதிக்குப் பிள்ளைலோகஞ்ஜீயரருளிச்செய்த வ்யாக்யாநம்.

அவதாரிகை.

ஸ்ரீயஃபதியான ஸர்வேஶ்வரன் (க) "திருமாலாலருளப்பட்ட சடகோபன்" என்னும்படி ஆழ்வாருக்கு *மயர்வற மதிநலமருள, இப்படி நிர்ஹேதுககடாக்ஷபாத்ரபூ(ஸ)தரானவாழ்வாரும் (உ) "அருள்கொண்டாயிரமின்றமிழ்ப்பாடினான்" என்னும்படி திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை *பண்ணார் பாடலாம்படி பாடியருளி, அநந்தரம் தம்முடைய நிரவதிகக்ருபையாலே மதுரகவிப்ரப்ருதி ஸஜ்ஜநங்களுக்கு (ங) "அந்தாதிமேலிட்டறிவித்தேனாழ்பொருளைச் சிந்தாமற் கொண்மினீர்தேர்ந்து" என்னும்படி யுபதேசித்து, அவ்வளவுமன்றிக்கே * ஊரும்நாடுமுலகமுந் தம்மைப்போலேயாம்படி *செயல் நன்றாகத் திருத்திப் பணிகொண்டருளி நடத்திப் போந்த வனந்தரம் நெடுங்காலம் சென்றவாறே இத்திவ்ய ப்ரபந்தங்கள் ஸங்குசிதமாய்ப்போனபடியைத் திருவுள்ளம்பற்றி, "இதுக்காவாரார்" என்றுபார்த்து, நாதமுனிகளை (ச) "அருள்பெற்ற நாதமுனி" என்னும்படி தம்முடைய கடாக்ஷ விசேஷத்தாலே கடாக்ஷித்தருளி, இவர்க்கு திவ்யஜ்ஞாநத்தையுமுண்டாக்கி, அந்த திவ்ய சக்ஷுர்மூலமாகவே ஸாணுகதி புரஸ்ஸரமாக தீர்க்க ஸாணுகதியான திருவாய்மொழிமுதலான திவ்யப்ரபந்தங்களையும் ப்ரகாஶிப்பித்தருளினர்.

இப்படி ஆழ்வாருடைய திவ்யகடாக்ஷத்துக்கு விஷயபூதரான நாதமுனிகளும் (ரு) "அழித்ததுற்றவன்றிசைகளாக்கினான்" என்னும்படி இத்தமிழ் மறைகளை இயலிசையாக்கி நடத்தியும், அதுக்குமேலே குருகைக்காவலப்பன், உய்யக்கொண்டார் தொடக்கமான ஆஸ்திகரைக் குறித்து, ப்ரபத்த்யர்த்த ஸஹிதமாக நிதயைப்ரஸாதிக்க, அவர்களுமப்படியே அவர் திருப்பேரனார்க்கு மணக்கால் நம்பி

(க) தி-வாய்-அ-அ-கக (உ) கண்ணி-அ (ங) ச-திருவ-க (ச) உபதேச-நக (ரு)

ழுகேந ப்ரஸாதிப்பிக்க, பின்பு (க) "ஆளவந்தாரவை வளர்த்தோன்" என்னும்படி அவரும் அத்தை வர்த்தி(ப்பி)ப்பிக்க, அவர்கடாக்ஷ லக்ஷ்யபூதராய் *மாறனடிபணிந்துய்ந்த எம்பெருமானாரும், (உ) "வளர்த்த இதத்தாய்" என்னும்படி வர்த்தி(ப்பி)ப்பித்துக்கொண்டுபோர, பின்பு, *ராமாநுஜபதாம்போஜ ஸமாஶ்ரயண ஶாலிகளான சோவித்ரகூராதிப பட்டார்ய ஸிகமாந்தமுநிபர்யந்தமாய் உபதேஶபரம்பரயா ஸங்க்ருஹீதவ்யாக்யாநமாக நடந்து சென்றவிது, *திருமால் சீர்க்கடலையுள் பொதிந்த† *இன்பத்திருவெள்ளம்மூழ்கின நம்மாழ்வாரவதாரமாய் நம்பிள்ளையென்று பேர்பெற்ற லோகாசார்யராலே லோகமெங்கும் வெள்ளமிடும்படி *தீர்த்தங்களாயிரமான திருவாய்மொழி விஶதவ்யாக்யாநரூபமாய் ப்ரவஹிக்க, அது (ங) "ஆங்கவர் பால்" என்று தொடங்கி மேலோரளவும் விஸ்த்ருதமாயிற்று.

இப்படி தீர்க்க ஸாஞ்ஜ்ஞதியான திருவாய்மொழி நாதயாமுந யதிவராதிகளாலே வர்த்திப்பித்துக் கொண்டு போந்தமையைப் பற்ற "திருவருள்மால்" என்றும் "நாயம் வெங்கஜநேத்ர-நாதம் பங்கஜநேத்ர" என்றும் இத்தனியன்களாலே வந்த வித்தஸம்ப்ரதாயக்ரமம் தேவாதிபரளவும் தர்ஶிப்பிக்கப்பட்டது. இப்படி பரம்பரயா நடந்துவந்த திருவாய்மொழியினீட்டின் ஸம்ப்ரதாய க்ரமந்தான் அதுக்கு தேஶிகரான *தேவப்பெருமாள் கைக்கொண்டருளும் திருமலையாழ்வாரடியாக விரேகாஜோவயந்த்ரயதிந: கரா—மெணெகலிலெ யா:-கார்ந்தோபயந்த்ருயமிந: கருணைகஸிந்தோ:" (ச) என்னும்படி யானஜீயரிடத்திலே "மணவாளமாமுனியானவேரிதேங்கி" என்னும்படி தேங்கிற்று.

அத்தைப்பற்றவிறே "ஆயாத்ரீ ரமெளஉந யா: ஸிமக ஸம்ஜி ஸ-ஞ்ஜ்ஞஹாமெஷ்ராஉஹிந்ரா யொமீந்ரஹ்யவதாரோ Zயத்ஹிஹிகமி த:-ஆர்யாச்ச்ரீ ஶைலநாதா தநூக ஸமஜித்ஸ-ஐக்தி பாஷ்யோமஹிம்நாயோகீந்த்ரஸ்யாவதாரோ Zயம் நிஹிகதித:" (ரு) என்றும், "திருவாய்மொழிப்பிள்ளை திருத்தாள் சேர்ந்தந்துறைகொள் தமிழ்மறைக்கும் மறைவெள்ளத்துக்கு மோடமாயாரியர்களிட்ட நூலையுள்ளு

(க) (உ) தனியன் (ங) உபதேச-௬௯ (ச) வரவர-ஸ்தோ (ரு) யதீந்த்ரப்ர.
† (பா) திருவருள் மூழ்கின.

ணர்ந்து" (க) என்றும், "தமிழ்நன்மறையோ வேதமெல்லாந்தரை கண்டகோயில் மணவாளமாமுனி" (உ) என்றுஞ்சொன்னார்கள்.

இப்படி முப்பத்தாறுபிரப்பெருக்கரக்கையாலே "மதிளரங்கர் வண்புகழ்மேலான்ற தமிழ்மறைகள்" (ங) என்னும்படி தம்விஷயமான திருவாய்மொழியினர்த்தத்தை இவரிடத்திலே கேட்கவேணுமென்று, பெருமாள் தாமுந்திருவுள்ளமாய் ஸ்ரூயதாம் மஹஸம் ஸம்விவாமிராமஜாமாத்ரா ஸ்வஉக்ஷ்ட - ஸந்த்வாஸடம் ஸடாரிப்ராமர்த்தத்வம் த்வதுக்தம்" என்னும்படியாநங்கரப்பட்டுக் கேட்டருளினாரிறே.

அதின் பின்புஸ்ரீபட்டநாதமுனி வாகமஹாத்ரியோகி தொடக்கமான வாசார்யர்களாகிற கால்களாலே புறப்பட்டுக்காடுங்காம்புமெங்குமேறிப்பாய்ந்துபலித்தது இப்படி ஈமேஸ்ரீதவ்யஸ்ருக (ஹாம) மற ஸ்வஸூக்தியாலே வஸீகரிக்கவல்லவைபவமானது "மணவாளமாமுனி தோற்றியபின்னல்லவோ தமிழ்வேதந்துலங்கியது" (ச) என்றும், "மணவாளமாமுனி வந்திலனேலாற்றிற்கரைத்த புளியல்லவோ தமிழாரணமே" (ரு) என்றும, அநவய வ்யதிரேகங்களிரண்டாலும் சொல்லப்பட்டது, இவர் தாமும் "எந்தை திருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால் வந்தவுபதேசமார்க்கம்" (சு) என்றும் அத்தாலே "மாறன்கலையுணவாகப்பெற்றோம்" (எ) என்றும் "வகுளபூஷணவாக்ம்ருதாஸ்வாதநம் - வகுளபூஷணவாகம்ருதாஸநம்" என்றும், தாமுமருளிச் செய்தார்.

ஏவம்விதமாஹாத்ம்யயுக்தரான விவர் தம்முடைய வநுபவத்துக்குப்போக்குவீடாகவும், திருவாய்மொழியினுடைய துர்க்ரஹமான வர்த்தங்களையெல்லாருமறியும்படி ஸுக்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும், "சொல்லும்பொருளுந் தொகுத்துரைத்தான்" என்னும்படி ஸங்கதியாக விப்ப்ரபந்தத்திலே யருளிச்செய்கிறார். ஈட்டில் ஸங்கதியேயாயிற்று இவர்தாமிப்படி ஸங்க்ரஹித்தருளிச் செய்கிறது.

இப்ப்ரபந்தங்களுக்கு அநேகநிர்பந்தங்களுண்டாயிறேயிருப்பது அதெங்ஙனேயென்னில்; "வெண்பா" என்கிறசந்தஸ்ஸையும், இப்

(க) (உ) (ங) தி-வாய் தனியன் (ச) (ரு) ஸம்-கக
(சு) உபதேச-க (எ) ஆ-ரு௫ (அ)

படியான விப்பாட்டில் முற்பாதியிலே ஓரோ திருவாய்மொழியின் தாத்பர்யமும், தத்ஸங்கதிக † ளடைகையும், பாட்டுக்கள்தோறும் ஆழ்வார் திருநாமங்கள் வருகையும், அதில் தாத்பர்யங்களைத் தத்பர்யந்தமாகப் பேசுகையும், அந்தாதியாய் நடக்குகையுமாகிற வைசித்ர்ய நிர்ப்பந்தமுண்டாயிருக்குமாயிற்று. இதுதான் * பாலோடமுதன்னவாயிரமான திருவாய்மொழியின் ஸாரமாகையாலே "திருவாய்மொழி நூற்றந்தாதியாந் தேனை" என்னும்படி ஸாரஸமான நிரூபகமாய், ஆயிரத்தின் ஸங்க்ரஹமாகையாலே ஓரோ திருவாய்மொழியினர்த்தத்தை யோரோபாட்டாயருளிச்செய்கையாலே அதுதான் நூறுபாட்டாய், * அல்லும்பகலுமநுபவிப்பார்க்கு நிரதிசயபோக்யமாய், அவ்வளவு மன்றிக்கே உடையவர் நூற்றந்தாதியோபாதி ஆழ்வார் நூற்றந்தாதியு முத்தேச்யமாகையாலே ஆழ்வார்திருவடிகளிலே ப்ரேமமுடையார்க்கு அநவரதாநுஸந்தேயமுமாயிருப்பதொன்றாயிற்று.

இதில் சரமபர்வமான வாழ்வார் திருவடிகளையிறே ப்ராப்யப்ராபகங்களாக நிஷ்கர்ஷிக்கிறது; அதுதான் * பராங்குசபாதபக்தராய் * சடகோபர்தே மலர்த்தாட்கேய்ந்தினிய பாதுகமாமெங்ஐயிராமாநுசனளவும் வந்திருக்குமிறே. ஆழ்வார்தாம் திவ்யமஹிஷிகளுடையவும், திவ்யஸூரிகளுடையவும், முக்தருடையவும் முமுக்ஷுக்களுடையவும் படிகளையுடையராயிருக்கையாலே உடையவரும் இவர்விஷயத்திலேயா யீடுபட்டிருப்பது.

திருவாய்மொழி நூற்றந்தாதி

வ்யாக்யாநாவதாரிகை முற்றிற்று.

---

† (பா) ளடைவையும்



ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பரமகாருணிகரான பெரியஜீயரருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதி.

மூ.—உயர்வேபரன்படியை யுள்ளதெல்லாந்தான்கண்டு
உயர்வேதநேர்கொண்டுரைத்து-மயர்வேதும்
வாராமல் மானிடரை வாழ்விக்குமாறன்சொல்
வேராகவே விளையும்வீடு. (க)

பதவுரை.

உயர்வு	உயர்த்தியையுடைய
பரன்	பரமபுருஷனுடைய [லும்
படியை உள்ளது எல்லாம்	ஸ்வபாவமாயிருப்பவற்றை யடங்க
தான் கண்டு	தாம் ஸாக்ஷாத்கரித்து
உயர்வேதம் நேர்கொண்டு	உயர்ந்தபிரமாணமாகியஸ்ருதியின் சாயையாலே
உரைத்து	அருளிச்செய்து

மயர்வு ஏதும்	அறிவின்மை அஜ்ஞாநமும்
வாராமல்	உண்டாகாதபடியாக
மானிடரை	மநுஷ்யர்களை
வாழ்விக்கும்	உஜ்ஜீவிப்பித்தருளின
மாறன்	நம்மாழ்வாருடைய
சொல்வேர் ஆக	ஸ்ரீஸூக்தியடியாக
வீடுவிளையும்	மோக்ஷமுண்டாம். (க)

அவ;—முதற்பாட்டு. (உயர்வேபரன்படியித்யாதி) இதில் ஸர்வஸ்மாத்பரன் திருவடிகளிலே தொழுதெழப்பாராயென்றுபாரத்வப்ரதிபாதகமாயிருக்கிற வாழ்வார் திவ்யஸூக்தியான இத்திருவாய்மொழியடியாகவே சேதநர்க்கு மோக்ஷலாபமென்னுமர்த்தத்தை அநுவதித்தருளிச்செய்கிறார்.

அதெங்ஙனேயென்னில்; ஸ்வரூபரூபகுணவிபூதிகளால் பரிபூர்ணனாய் ஸர்வஸ்மாத்பரனாய் ஸ்ரிய:பதியாய் அபௌருஷேயமான ஸ்வத:ப்ரமாண ஶ்ருதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்டுள்ளவெம்பெருமானை பாஹ்யகுத்ருஷ்டிகளால் அவிசால்யமாம்படி அவன் ப்ரஸாதத்தாலே ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து அநுபவித்தபடியே ஸவிபூதிகனான வெம்பெருமானைப்பேசி, ஏவம்விதனானவன் திருவடிகளிலே (க) "[illegible] - குணைர்தாஸ்யமுபாகத:" என்னும்படி அடிமைசெய்துஉஜ்ஜீவியென்று தம் திருவுள்ளத்தை அநுஶாஸித்தருளிச் செய்த முதற்றிருவாய்மொழியினர்த்தத்தை யநுவதித்து, * உயர்வேபரன்படியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா;—(உயர்வேபரன்படியை யுள்ளதெல்லாந்தான்கண்டு) பரத்வத்தில் பரத்வமாயிற்று இத்திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கப்படுகிறது. "ஆமவையாயவையாய் நின்றவவர்" என்றும், "முழுதுண்டபரபரன்" என்றும் "அரிபொறையாய் நின்றபரனடிமேல்" என்றும், பரத்வதசையாயிற்று இதிற்சொல்லுகிறது; ‡ உயர்வேபரன் படியாவது (க) "தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தமீஶ்வராணும்

(க) ரா-கி-ச-கஉ (உ) ஶ்வேதா-சு.

‡ இங்கு ஸமீசீநபாடம் கோஶாந்தரத்தில் காண்க.

பரமம்மஹேஸ்வரம்'' என்றும் "பராத்பராணாம் பர:– பர: பராணாம் பரம:'' (௧) என்றுஞ்சொல்லுகிற ஸர்வஸ்மாத்பரத்வத்தையாயிற்று, "உயர்வற உயர்நலம்'' என்றருளிச்செய்தது; அத்தையடியொற்றியாயிற்று இவரிப்படியருளிச் செய்கிறது. "உயர்வே'' என்கிற அவதா (ர) ரணத்தாலே-அல்லாதாருயர்த்திகளைப்போலே தாழ்கையன்றிக்கே மேன்மேலெனவென்று முயர்த்தியேயாயிருக்கை (௨) "நேதிநேதி-நேதிநேதி''(௩)"நோஜ்யாயோ ந ஸத்ருசோ-நோத்யமதோ நதிசோமதே'' (௪) "நலத்தாலுயர்ந்துயர்ந்தப்பாலவன்'' (௫) "அயர்வறுமமரர்களதிபதி''(௬) "தேவர்க்குந்தேவாவோ'' என்னக்கடவதிறே. அன்றிக்கே, உயர்வென்று-உச்ச்ராயமாய், "ஏ'' என்று-எய்கையாய் - பொருந்துதலாய் அது அல்லாதார்க்குப்போலே அநநுரூபமாயிருப்பதன்றிக்கே, எய்ப்பரனென்று - அநுரூபமாய்ப் பொருந்தியிருக்கிறபரனென்றுமாம். இப்படி உயர்த்தியாயிருக்கிற பரன்படியாவது - பரத்வைகாந்தமான ஸ்வபாவம்.

உள்ளதெல்லாமாவது - முதற்பாட்டில் கல்யாணகுணயோகமும் நித்யவிபூதியோகமும் விக்ரஹ வைலக்ஷண்யமும், இரண்டாம் பாட்டில், இவற்றுக்காஸ்ரயமான திவ்யாத்மஸ்வரூபம் சேதநாசேதந விலக்ஷணமென்னுமதுவும், மூன்றும் பாட்டில் நித்யவிபூதியோபாதி ததீபத்வ ப்ரகாரத்தாலே அவனுக்கந்தரங்கமாய்த் தோற்றுகிற லீலாவிபூதி யோக(ம)மும், நாலாம்பாட்டில் அந்த லீலாவிபூதியினுடைய ஸ்வரூபம் அவனதீநமென்னுமதுவும், ஐந்தாம்பாட்டில் அதினுடைய ஸ்திதியும் அவனதீநமென்னுமதுவும், ஆறும்பாட்டில் அதினுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியும் அவனதீநமென்னுமதுவும் ஏழாம்பாட்டில் ஜகத்துக்குமீஸ்வரனுக்குமுண்டானஸரீராத்மபாவமும், எட்டாம்பாட்டில்‡ (இதுக்கிசையாதகுத்ருஷ்டி நிரஸநமும்) த்ரிமூர்த்தி ஸாம்யவாத நிரஸநமும், ஒன்பதாம் பாட்டில் ஸூந்யவாதி நிரஸநமும், பத்தாம்பாட்டில் வ்யாப்தி ஸௌகர்யமுமாகிறவிவை. இப்படி, உள்ளதெல்லாவற்றையும், (தான் கண்டு) (௭) "திவ்யம் ததாமி தே சக்ஷு: பஸ்ய மே யோகமைஸ்வரம் -

---

(௧) வி-பு-௧-௨-௧௨. (௨) ப்ரு-௪-௩- (௩) ஸ்தோ-ர- (௪) தி-வாய்-௧-௭-௨ (௫) தி-வாய்-௩-௧-௧. (௬) தி-வாய்-௮-௧-௫. (௭) கீ-௧௧-௮.

‡ குண்டலிதம் க்வாசித்கம்.

திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்ய மே யோகமைச்வரம்" என்னும்படி * மயர்வற மதிநலமருளி, அவன் ப்ரஸாதத்தாலே காட்டக் கண்டு, இப்படி அவன் † காட்டினவை கீழ்ச்சொன்னவற்றையும்,

(உயர்வேதம் நேர்கொண்டுரைத்து) அபௌருஷேயமாய் நித்ய நிர்தோஷமாய் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்கள் போலே ஹேத்வந்தரங்களபேக்ஷிக்க வொண்ணாதாகையாலே ஸர்வப்ரமாணஜ்யேஷ்டமான ஸ்ருதிச்சாயையாலே அருளிச்செய்து. அதாவது-(க) "ஸோ(அ)ச்நுதே ஸர்வாந் காமாந் - ஸோ(அ)ச்நுதே ஸர்வாங்காமாந்" என்று கல்யாண போக்யத்தை "நலமுடையவன்" என்றும், (உ) "... தாது:ப்ரஸாதாந்மஹிமாநம்" என்கிற ரூபவைபவத்தை "அருளினன்" என்றும், (௩) "தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: - தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:" என்கிற விக்ரஹவிபூதியோகத்தை "அயர்வறுமமரர்களதிபதியவனவன் துயரறுசுடரடி" என்றும், (௪) "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம - ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" (௫) "ஆநந்தம் - ஆநந்தமய:", (௬) "ஆநந்தோ ப்ரஹ்ம - ஆநந்தோ ப்ரஹ்ம" என்கிற திவ்யாத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை "உணர்முழுநலம்" என்றும், (௬) "பாதோ(அ)ஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி - பாதோ(அ)ஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்று உபயவிபூதியையுஞ்சொல்லி, (உ) "பதிம் விச்வஸ்ய - பதிம் விச்வஸ்ய" என்றும்சொன்ன அந்த உபயவிபூதிநாதத்வத்தாலே லீலாவிபூதியும் அவனதென்னுமதை "இலனது" என்று தொடங்கி தர்சிப்பித்தார், (௭) "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம - ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" (அ) "நேஹ நாநாஸ்தி கிஞ்சந - நேஹ நாநாஸ்தி கிஞ்சந" (௯) "ஸூக்ஷ்மா ... ஸூக்ஷ்மா அங்காநங்யாதே வதா:" என்கிற ஸர்வப்ரகாரித்வத்தையும் ஸர்வாந்தர்யாமித்வேந ஸர்வப்ரகாரித்வத்தையும் "பரமவன்" "அவரவர்" என்கிற பாட்டுக்களிலே ப்ரகாசிப்பித்தும், "தேந விநா த்ருணாக்ரமபி ந சலதி - தேநவிநா த்ருணாக்ரமபி நசலதி" (௧௦) "ஈச்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே(அ)ர்ஜுந திஷ்டதி | ப்ராமயந் ஸர்வ

---

† (பா) வகைகள். (க) தை-ஆ-௧. (உ) தை-நா-௧௦. (௩) ஸுபா-௬. (௪) தை-ஆ-௫. (௫) தை-ப்ரு-௬. (௬) புருஷஸூ. (௭) சாந்தோ ௩-௧௪. (அ) கட-௨-௪. (௯) தை-ஸ்ரீ-௫. (௧௦) கீ-௧௮-௬௧.

தாதிபஞ்சராத்ரோக்தநியாய ஈஸ்வரஸ்ஸர்வ பூதாநாம்ஹ்ருத்தே
சேऽர்ஜுநதிஷ்டதி। ப்ராமயந்ஸர்வபூதாநியந்த்ராரூடாநிமாயயா”
என்று ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளை த்ருதி (?) நமென்னுமத்தை
“நின்றனிருந்தனர்” என்றும், (க) “யஸ்யாத்மாஶரீரம் யஸ்ய
ப்ருதிவீஶரீரம் - யஸ்யாத்மாஶரீரம் யஸ்யப்ருதிவீஶரீரம்” என்ற
ஸர்வ ஶரீரத்வத்தையும், (உ) “அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய
நாராயணஸ்ஸ்திதஃ- அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்யநா
ராயணஸ்ஸ்திதஃ” என்ற ஸர்வ வ்யாப்தியையும் (ங) “ஹ்ரீஶ்சதே
லக்ஷ்மீஶ்சபத்ந்யௌ - ஹ்ரீஶ்சதே லக்ஷ்மீஶ்சபத்ந்யௌ” என்ற
ஶ்ரியஃபதித்வத்தையும் “திடவிசும்பு” என்கிறபாட்டாலே காட்டி
யும், (ச) “தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தேவதாநாம் பரமஞ்ச
தைவதம் - தமீஶ்வராணாம் பரமம்மஹேஶ்வரம் தந்தேவதாநாம்
பரமஞ்சதைவதம்” (உ) “நாராயணபரம் ப்ரஹ்ம தத்வம்நாராய
ணஃபரஃ - நாராயணபரம் ப்ரஹ்மதத்வம்நாராயணபரஃ” என்
று ஸர்வஸ்மாத் பரத்வத்தை ஸாதித்து த்ரிமூர்த்திஸாம்யத்தை
நிவர்த்திப்பிக்கும்படியை *சாரநிவநதிலையாலே ஸா[illegible]க்தமாக்கி
யும், வேதபாஹ்யகுத்ருஷ்டிகளுடைய நிராகரணத்தை “உளனெனில்” இத்யாதிப்பாட்டுக்
யாலே ஸிந்திப்பிக்கும், (ரு) “அணோரணீயாந் - அணோரணீயாந்”
என்கிற வ்யாப்திஸௌகர்யத்தை *பரந்ததண்பரவையிலே பேசியும்,
இப்படிவேதமார்க்காநுஸாரியாயிற்று முதற்பாட்டுதொடங்கியரு
ளிச்செய்தது; அத்தைப்பற்றவிறே (உயர்வேதநேர்கொண்டுரைத்து)
என்றிவரருளிச்செய்கிறது, “சுடர்மிகுசுருதி” என்றிறேஶ்ருதிப்ர
மாணத்தை யங்கீகரித்தருளிற்று, (சு) “[illegible]ந்தோ ப்ரஹ்மணோவித்வாந் -
அனந்தாப்ரஹ்மணஸ்ஸ்வரூப” என்று ஸ்வரூப[illegible]முண்டாகை
யாலே ஸ்வரூபம் புகுந்திடத்தே ஸ்வரூபநிரூப[illegible]ன பிராட்டியு
முண்டாகக் குறையில்லை.

(மயர்வேதும் வாராமல்) மயர்வாவது - அஜ்ஞாநம், அது
அத்யல்பமும் வாராதபடி. “மயர்வற” என்று தம்முடைய வஜ்
ஞாநத்தைஸர்வேஶ்வரன் ஸவாஸநமாகப்போக்கினப்போலே இவர்
களுடைய அஜ்ஞாநாநுதயாந்யதாஜ்ஞாநவிபரீதஜ்ஞாநங்களை ஸவாஸ
நமாகப்போக்கி இப்படி பரத்வவிஷயமான வஜ்ஞாநகந்த (மு) ம்

(க) ப்ரு-ரு-எ- (உ) தை-நா-கக- (ங) யஜு-ஆ.
(ச) ஶ்வேதா-சு. (ரு) தை-நா-கூ.

மூ.—வீடுசெய்து மற்றெவையு மிக்கபுகழ் நாரணன்றாள்

நாடுநலத்தாலடைய நன்குரைக்கும்—நீடுபுகழ்

வண்குருகூர் மாறனிந்த மாநிலத்தோர் தாம்வாழப்

பண்புடனேபாடி யருள்பத்து. (உ)

வாராதபடி. (மானிடரைவாழ்விக்கும் மாறன்சொல்) பரோப தேசகர்ப்ப(ஸ)ஸ்வாநுபவப்ரகாசகமான ஸ்ரீஸூக்தியாலேமநுஷ்யஜந்மாக்களாயுள்ளவர்களை வாழ்விக்கும். வாழ்விக்கையாவது-பகவதநுபவைகபராக்கி(க)"ஸஞ்சிநோ-ஸந்தமேநம்"என்னும்படி பண்ணுகை, தம்மைத்தொழுதெழப் பண்ணினாப்போலே. (மாறன் சொல் வேராகவே விளையும்வீடு) ஆதாவது-இப்படி ஸகல ஜீவோஜ்ஜீவந தத்பரரான வாழ்வார் திவ்யஸூக்தியடியாக பகவத்ஜ்ஞாநமுண்டாய், அதடியாக மோக்ஷலாபமென்றபடி; ஸூக்திமூலமாகவே முக்திபலிக்குமிறே. "பரனடிமேல் குருகூர்ச் சடகோபன் சொல நிரனிறையாயிரத்திவை பத்தும்வீடே" என்றதைக் கடாக்ஷித்தருளிச்செய்தபடி. அன்றிக்கே, ஆழ்வார் திருநாமமடியாகவே மோக்ஷம் ஸித்திக்குமென்கிறாராகவுமாம். தனுக்தியாலேயாதல், தத்விஷயமான வுக்தியாலேயாதலாகலாயிறே. (உ) "தென்குருகூர் நகர்நம்பிக்கன்பனாய் மதுரகவிசொன்னசொல் நம்புவார்பதிவைகுந்தம் காண்மினே" என்னக்கடவதிறே. (க)

பதவுரை.

நீடுபுகழ்	பெரும்புகழையுடையரும்
வண்குருகூர் மாறன்	வளப்பத்தையுடைய திருக்குருகூர்க்குத் தலைவருமான நம்மாழ்வார்
இந்தமாநிலத்தோர்தாம்	இப்பெரிய பூமியிலுள்ளவர்கள்
வாழ	உஜ்ஜீவிப்பதற்காக
பண்புடனே	கிருபையுடன்
பாடியருள்	பாடியருளின

(க) தை-ஆ-கூ- (உ) கண்ணி-கக.

பத்து	("வீடுமின் முற்றவும்" என்கிற) பத்துப்பாட்டுக்களானவை
மற்று எவையும்	(பகவத்விஷயத்தவிர) மற்றெல்லாவற்றையும்
வீடுசெய்து	விட்டு
மிக்க புகழ்	மிகுந்த புகழையுடைய
நாரணன்	ஸ்ரீமந்நாராயணனுடைய
தாள்	திருவடிகளை
நாடு	உலகத்தாரெல்லாரும்
நலத்தால் அடைய	அபிநிவேசத்தால் ஆஸ்ரயிக்க
நன்கு உரைக்கும்	நன்ருக உபதேசிக்கும். (உ)

அவ;— இரண்டாம்பாட்டு (வீடுசெய்து) இதில் தம்முடைய திருவுள்ளம்போலே அநுபவத்துக்குத் துணையாய்த் திருந்தும்படி ஸம்ஸாரிகளைக்குறித்துப்பதேசம்பண்ணுகிறபாசுரத்தை †பநுபவித்து அருளிச்செய்கிருர். அது எங்ஙனே யென்னில்; கீழ் எம்பெருமானுடைய பாத்வத்தை யநுபவித்தவர் அநுபவஜநிதஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே * ஸொயயநு:வொஷஸ்ரமு - போதயந்த: பரஸ்பரம் பண்ணியல்லது தரிக்கமாட்டாதே துணைத்தேட்டமாயதுக் கீடானுரை ஸம்ஸாரத்திலே காணுமையாலே அவர்களைத் திருத்தியாகிலும் சேர்த்துக்கொள்ளுவோமென்று பரோபதேஶ ப்ரவ்ருத்தராய், பகவத்வ்யதிரிக்த விஷயங்களின் தோஷபாஹுள்யத்தையும், பகவத்குணவைலக்ஷண்யத்தையுமுபதேசியா நின்றுகொண்டு அப்ராப்த விஷயங்களைவிட்டு ப்ராப்தவிஷயமான வெம்பெருமானை பஜியுங்கோளென்கிற *வீடுமின் முற்றத்திலர்த்தத்தை "வீடுசெய்து" இத்யாதியாலே யருளிச் செய்கிருரென்கை.

வ்யா;— (வீடுசெய்து மற்றெவையும்) "த்ருஹாவா த்ராம்ஸ் ச தாராம்ஸ் - த்யக்த்வாபுத்ராம்ஸ்சதாராம்ஸ்ச" (க) என்னும்படி †பரிக்ரஹங்களையுடைய பரித்யஜித்து. வீடுசெய்து - விடுகையைச்செய்து.

(க) ரா-யு-கஎ-கசு- † (பா) பரித்யஜித்த பரிக்ரஹங்களையுடையவும்'
† அநுபவித்து.

(மற்றவையும்) பகவத்ப்ரதிகூலமாயிருந்துள்ளவை யெல்லாவற்றையும் நினைக்கிறது. பஜநவிரோதிகளாய் அஹங்கார ஹேதுவாயுள்ள தடங்களும் முமுக்ஷுவுக்கு த்யாஜ்யமிறே. "வீடுமின் முற்றவும்வீடுசெய்து" என்றதைப்பின்சென்றபடி. "மின்னினிலையில மன்னுயிராக்கைகளென்னுமிடத்திறையுன்னுமினீரே" "நீர்நுமதென்றிவைவேர்முதல்மாய்த்து" என்றும், "அதுசெற்று" என்றும் "உள்ளவிம்மூன்றையுமுள்ளிகெடுத்து" என்றும், இப்படிஸங்கோசமாயிருக்குமதெல்லாம்த்யாஜ்யமாய், அத்தால்ஸுகுணமாயிருக்குமது உபாதேயமாயிறே யிருப்பது; அத்தைச் சொல்லுகிறது (மிக்க புகழ்நாரணன்றாளென்று). "ஈறிலவண்புகழ்நாரணன்" என்றதைப் பின்சென்றபடி. ஸம்ருத்தமான கல்யாணகுண ஸஹிதனாய் ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுடைய சரணங்களை (நாடுநலத் தாலடையநன்குரைக்கும்) "வீடுசெய்மின்" "இறையுன்னுமினீரே" என்று நாடாகவே ஆஶ்ரயிக்கும்படி இவனுபதேசிக்கிறது. அத்தை நினைத்திறே "நாடுநலத்தாலடைய" என்கிறது. நலத்தாலடைகையாவது - "எல்லையிலன்னலம்புல்கு" "அவன் முற்றிலடங்கே" "ஈசனடங்கெழிலஃதென்றடங்குகவுள்ளே" "இறையுள்ளிலொடுங்கே" "ஒடுங்கவவன்கண்" என்று அங்கபரிஷ்வங்கம்போலே அபிநிவேசத்தாலே யாஶ்ரயிக்கும்படியை விதித்தபடியென்கை. இப்படி லோகத்திலுண்டான ஜநங்கள் பக்தியாலே பஜிக்கும்படி நன்றாக உபதேசித்தருளும். உபதேசத்துக்கு நன்மையாவது - நிர்ஹேதுகமாகவும், உபதேஶ்யார்த்தங்களில் ஸங்கோசமின்றிக்கே உபதேசிக்கையுமென்றபடி.

திருவாய்மொழிதோறும் திருநாமப் பாட்டுண்டாகையாலே அத்தையும் தத்தத்பலத்தோடே தலைக்கட்டாக வருளிச்செய்கிறார் (சீர்புகழ் வண்குருகூர் மாறனிந்த மாநிலத்தோர்தாம் வாழப்பண்புடனேபாடியருள்பத்தென்று). அதாவது-ஸம்ஸாரிகள் வைமுக்யம்பாராமல் பரோபதேசம் பண்ணுகையாலே நித்யமாய்நெடுகிப் போருகிற யஶஸ்ஸையுடையராய்; தர்ஶநீயமாயுதா(ரா)ரமானதிருநகர்க்கு நிர்வாஹகரானவாழ்வாரென்னுதல்; அன்றிக்கேவண்மை-

மூ — பத்துடையோர்க்கென்றும் பரனெளியனும் பிறப்பால்
முத்திதருமாநிலத்தீர் மூண்டவன்பால்—பத்திசெயும்
என்றுரைத்த மாறன்றனின் சொல்லாறப்போம் நெடுகச்
சென்றபிறப்பாமஞ்சிறை. (௯)

“வண்டிடன் குருகூர் வண்சடகோபன்” என்னும்படி ஆழ்வார்க்கு, விசேஷணமாதல். இப்படியான தம்மௌதார்யத்தினாலே இந்த மஹாப்ருதிவியி லுண்டானவர்களெல்லாரும் பகவத் பஜநத்தாலே ஸத்தைபெற்றுவாழும்படி. (பண்புடனேபாடியருள்பத்து) பண்பு-ஸ்வபாவம். தம்முடைய க்ருபாஸ்வபாவத்தாலேயாதல், ஔதார்யஸ்வபாவத்தாலேயாதல், பரப்பறப்பாடியருளின பத்துப்பாட்டாயிற்று. “சேர்த்தடத்தென் குருகூர்ச்சடகோபன் சொல் சீர்த்தொடையாயிரத்தோர்த்தவிப்பத்து” என்றதைப் பின்சென்றபடி. “பாட்டுக்கு க்ரியையும், பத்துக்குக் கருத்தும்” என்கையாலே பத்துப்பாட்டுக்கு முயிர்ப்பாட்டு ப்ரகாசகமாயிருக்கும், அந்த நிதானப் பாட்டுக்குசேஷமாயிருக்கும் மற்றப்பாட்டுக்களும்; இத்திருவாய்மொழி திவ்யப்ரபந்தத்துக்கெல்லாமுள்ளதொன்றிறே. “வீடுமினென்று - த்யாஜ்யாவஸ்ய தேஷுஷம-ஸணவிதீத்யாம - த்யாஜ்யோபாதேய தோஷகுணபரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாகவுபதேசித்து” என்று ஆசார்யஹ்ருதயத்திலே நாயனருமருளிச்செய்தார். இத்தை பக்திபரமாக யோஜித்து பாஷ்யகாரர் பாஷ்யம் தலைக்கட்டி யருளினபின்பு, ப்ரபத்திபரமாகயோஜித்த க்ரமத்தைப்பற்றவாயிற்று ஆசார்யர்களெல்லாருமப்படியே யோஜித்தார்கள்; இவருமப்படியேயருளிச்செய்தார். (௨)

பதவுரை.

பரன்	ஸர்வேஸ்வரன்.
பத்து உடையோர்க்கு	பக்திமான்களுக்கு
என்றும்	எந்நாளும்
எளியன் ஆம்	ஸுலபனவன்;
பிறப்பால்	அவதாரத்தாலே
முத்தி தரும்	மோக்ஷத்தைக்கொடுத்தருள்வன்;

(ஆதலால்,)

மாநிலத்தீர்	(இந்தப்)பெரியபூமியிலுள்ளவர்களே!
ஊண்ட அன்பால்	படிந்த அன்பினாலே
பத்திசெயும்—என்று உரைத்த	(அவன்விஷயத்தில்) பக்திபண்ணுங்கள்" என்றருளிச்செய்த
மாறன்தன்	ஆழ்வாருடைய
இன்சொல்லால்	மதுரமான திருவாய்மொழியின் அநுஸந்தாநத்தினால்
நெடுகச்சென்ற பிறப்பாம் அம்சிறை	நீளமாகத் தொடர்ந்துவந்த பிறவியாகிய கடுஞ்சிறை
போம்	நீங்கும். (ரு)

அவ;—மூன்றாம்பாட்டு (பத்துடையோர்க்கென்றும்) இதில், ஸௌலப்யத்தை யுபதேசித்த திவ்யஸூக்தியை யநுவதித்தருளிச் செய்கிறார், அதெங்ஙனேயென்னில்; 'ஸர்வஸ்மாத்பரனாய் அதீந்த்ரியனானவனை க்ஷுத்ரரான நாங்கள் கண்டு பஜிக்கும்படியெங்ஙனே யென்றுவெருவுகிறஸம்ஸாரிகளைக்குறித்து "பரனானவன்றானே அதீந்த்ரியமான வடிவைக்கண்ணுக்கிலக்காக்கிக்கொண்டு இதர ஸஜாதீயனாய்ஸம்ஸாரிகளுக்கும் பஜிக்கலாம்படி தன்க்ருபையாலே ராமக்ருஷ்ணாதிரூபேணாவதரித்து ஸுலபனாயின் புபஜிக்கத்தட்டில்லை என்கிற * பத்துடையடியவரிலர்த்தத்தை "பத்துடையோர்க்கு" என்றருளிச் செய்கிறாரென்கை.

வ்யா;— (பத்துடையோர்க்கென்றும் பரனெளியனும் பிறப்பால்) பத்துடையோர்க்கு - பக்திமான்களுக்கு. பத்துடையோர் - "நிதியுடையோர்" என்னுமாபோலே. ஆஶாலேஶமாத்ரத்தையே போரப்பொலிய வெண்ணியிருக்கு மீஶ்வராபிப்ராயத்தாலே யருளிச்செய்கிறார்; "பத்துடையடியவர்" என்றாரிறே. ஏவம்விதபக்தியுக்தர்க்கு. (என்றும்) ஸர்வகாலத்திலும். (பரன்;) "யாவையும் யாவரும் தானாமமைவுடை நாரணன்" "மலர்மகள் விரும்புமநரும் பெறலடிகள்" என்று சொல்லப்படுகிற ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேஶ்வரன், (எளியனும்)(க) "வாயுஸூனோ: - வாயுஸூனோ:" (உ) "ஜமௌஷு - இமௌஸ்ம" இத்யாதிப்படியே யெளியனும். "பத்

(க) ரா-யு-சுக-கஉ0. (உ) ரா-பா-ருக-ச.

அஞ்சிறை = அழகிய சிறை

மூ.—அஞ்சிறையபுட்கள் தமையாழியானுக்கு நீர்
என்செயலைச்சொல்லுமெனவிரந்து—விஞ்ச
நலங்கியதுமாறனிங்கே நாயகனைத்தேடி
மலங்கியதும்பத்திவளம். ... (௬)

துடையடிவர்க்கெளியவன், மத்துறுகடை வெண்ணெய் களவினி லுரவிடையாப் புண்டிரவிலேறு டிணைந்திருந்தேங்கிய வெளிவெத்தி றம்'' என்னும்படி கட்டவுமடிக்கவுமாம்படி யெளியனும் - ஸுலப னும். அது எத்தாலேயென்னில் (பிறப்பால்) அவதாரத்தாலே; 'பலபிறப்பாயொளிவரும்'' என்றத்தை நினைக்கிறது.

(முத்திதரும்) அவதரித்தவிடத்தே பக்ஷிக்கும் ரக்ஷஸ்ஸுக்கும் மோக்ஷத்தைக்கொடுக்கும். "வீடாந்தெளிதருநிலைமைய தொழி விலன்'' என்றத்தைப்பின்சென்றபடி. (மாநிலத்தீர்) அவனவதரிக் கைக்கிடான விந்த மஹாப்ருதிவிலுள்ளவர்களே! (மூண்டவன் பால்பத்திசெயும்)விதிப்ரேரிதராயன்றிக்கே அத்யந்தாபி(ஹி)நிவேஶ யுக்தராய் பரத்வஸௌலப்யாதிகுணவிஶிஷ்டனானவன் திருவடிக ளிலே பக்தியைப் பண்ணுங்கோள். (என்றுரைத்த) என்றருளிச் செய்த. இத்தால் - "நன்றெனநலஞ்செய்வதவனிடை'' என்றத்தை யநுபாஷித்தபடி. (பத்திசெயுமென்றுரைத்த மாறன்றனின் சொல் லாற்போம்) அவதாரஸௌலப்யத்தை முன்னிட்டாஶ்ரயியுங்கோ ளென்று ஆழ்வார் ஶ்ராவ்யமாக வருளிச்செய்த வித்திருவாய் மொழியி னநுஸந்தாநத்தாலே நிவ்ருத்தமாம். (கருக்கச்சென்று பிறப்பாமஞ்சிறை) அநாதிகாலம் தீர்க்கமாய்ப்போந்த ஜந்மமாகிற க்ரூரமானசிறை. "அறுவர்தம்பிறவியஞ்சிறை'' என்றத்தை யநுவி தா(யா)நம் பண்ணினபடி. 'த்ரூஹணஞ்ஹம்வஸநஜந்மநெந்தி ரெதிஸோஜந - த்யக்த்வாதேஹம் புநர்ஜந்ம நைதிமாமேதி ஸோர்ஜுந'' (க) என்னக்கடவதிறே. (௩)

பதவுரை.

மாறன் — ஆழ்வார்

அம்சிறைய புட்கள்தமை — அழகிய சிறகுகளையுடைய (நாரை முதலிய) பறவைகளை (நோக்கி)

(க) கீ-ச-௯

ஆழியானுக்கு	"சக்ராயுதத்தை யுடைய ஸர்வேச்வரனுக்கு
நீர்	நீங்கள்
என் செயலை	என்படியை
சொல்லும் என	தெரிவியுங்கள்" என்று
இரந்து	வேண்டிக்கொண்டு
விஞ்ச	மிகவும்
நலங்கியதும்	நலங்குலைந்ததும்
இங்கே	இவ்விபூதியிலே
நாயகனை	(தமக்கு)நாயகனான எம்பெருமானை
தேடி	தேடி
மலங்கியதும்	நிலைதளும்பியதும்
பத்திவளம்	(அவருடைய) பக்தியின் பெருமையாம். (ச)

அவ:—நாலாம்பாட்டு. (அஞ்சிறையவித்யாதி) இதில், "அபராதஸஹத்வத்தை யறிவியுங்கோள்" என்று தூதப்ரேஷணம்பண்ணுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார்.

அதெங்ஙனேயென்னில்; அவதாரஸௌலப்யத்தை யுபதேசித்து, "அவனையாஸ்ரயியுங்கோள்" என்று பிறர்க்கு உபதேசித்த விடத்தில் அவர்கள் அதில் விமுகராயிருக்கையாலே அவர்களைவிட்டு, குணஸாம்யத்தாலே க்ருஷ்ணாவதாரத்தோடொப்பான த்ரிவிக்ரமாவதாரத்தை யநுஸந்தித்து, தச்சரணங்களை த்ரிவிதகரணத்தாலு மநுபவிக்கப் பாரித்தவிடத்தில் அது முற்காலத்திலேயாய், தாம் பிற்பாடராகையாலே பாரித்தபடியநுபவிக்கப்பெறாமல் கலங்கினதசையை *மதியினால் குறண்மாணாயுலகிரந்தகள்வரான வத்தலைக்கறிவிக்கவேணுமென்று க (வ) டகரையர்த்தித்துச் சொல்லுகிற க்ரமத்தை, கலந்து பிரிந்தாற்றாளாய்த்தலைமகள் "என்னபராதத்தைப்பார்த்துப் பிரிந்துபோனவர்க்கு

“கிங்கோபமூலம் மநுஜேந்த்ர - கிங்கோபமூலம் மநுஜேந்த்ரபுத்ர” (௧) என்னும்படி தம்மபராதஸஹத்வத்தையுமொரு கால் பார்க்கக் கடவதன்றோவென்று சொல்லுங்கோளென்று தன்னுத்யாநத்திலே வர்த்திக்கிற பக்ஷிகளைத்தன் ப்ராணரக்ஷணத்துக் குறுப்பாகத் தூதுவிடுகிற பேச்சாலே சொல்லச்சொல்லுகிற * அஞ்சிறையமடநாரையிலர்த்தத்தை “அஞ்சிறையபுட்கள்தமை” இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

(அஞ்சிறையபுட்கள்தமை) விலக்ஷணமான பக்ஷங்களையுடைய பக்ஷிகளை. “அஞ்சிறையமடநாராய்” என்றிறேயருளிச்செய்தது. புட்களென்றது-“இனக்குயில்காள்” “மென்னடையவன்னங்காள்” “நன்னீலமகன்றில்காள்” “வண்சிறுகுருகே” “ஆழிவரிவண்டே” “இளங்கிளியே” “சிறுபூவாய்” என்றிப்படி யருளிச்செய்தவற்றை. (ஆழியானுக்குநீர்) “கடலாழிநீர்தோற்றியதனுள்ளே கண்வளருமடலாழியம்மானை” என்றதைக்கடாக்ஷித்தபடி. முதல்தூதுக்கு விஷயம் வ்யூஹமிறே. (நீர்) வ்யூஹத்தையும் ஸேவித்துக்காணவல்ல நீங்கள். (என்செயலைச் சொல்லுமெனவிரந்து) என்செயலைதர்ஸிப்பியுங்கோளென்றர்த்தித்து.

என்செயலாவது - “மதியெல்லாமுள்கலங்கிமயங்குமால்” என்றும், “என்னீர்மை” என்றும் “நன்னீர்மையினியவர்கண்தங்காது” என்றும் “மல்குநீர்க்கண்ணேற்கு” என்றும் “அவராவிதுவராமுன்” என்றும் “சாயலொடுமணிமாமை தளர்ந்தேன்” என்றும் தன்னாற்றாமையை ஆவிஷ்கரித்தமை; “என்பிழையே நினைந்தருளியருளாத திருமாலார்க்கென் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென்றொருவாய்ச்சொல்” என்று அவனபராத ஸஹத்வத்தை ஆவிஷ்கரித்ததும் இதிலேஸூசிதம். இப்படியாற்றாமையை யாவிஷ்கரித்து.

(விஞ்சநலங்கியதும்) மிகவும் நலங்குலைந்ததும். (மாறனிங்கே நாயகனைத்தேடி மலங்கியதும் பத்திவளம்) ஆழ்வாரிங்கே-இவ்விபூதியிலே கூப்பீடு கேட்குமிடமான கடலிலே * அடலாழியம்மானை நாயகனைத்தேடி, (௨) “பாலாழிநீகிடக்கும் பண்பையாங்கேட்டேயும்

(௧) ரா-கி-௩௩-௨௦. (௨) பெரியதிருவ-௩௪.

மூ.—வளமிக்கமால் பெருமைமன்னுயிரின் தன்மை
உளமுற்றங்கூடுருவவோர்ந்து - தளர்வுற்று
நீங்கநினைமாறனை மால் நீடிலகுசீலத்தால்
பாங்குடனேசேர்த்தான்பரிந்து. (ரு)

காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்று மலங்கியதும், பக்த்யதிஶயம்- ❋ மதியெல்லாமுள் கலங்கினபக்திப்ரபாவம். வளம்- பெருமையும், ஸம்பத்தும். நலங்குதல் - நலக்கேடு. மலங்குதல்— திண்டாட்டம். (௪)

பதவுரை.

வளம்மிக்க	செல்வத்தால்மிகுந்த
மால்	எம்பெருமானுடைய
பெருமை	(நித்யஸூரி நிர்வாஹகத்வமாகிற) பெருமையும்
மன்னுயிரின் தன்மை	ஆத்மாவின் சிறுமையும்
உளம் உற்று	திருவுள்ளத்திலேபட,
ஆங்கு	இப்படி திருவுள்ளத்தில் பட்டதசையில்
ஊடுருவ ஓர்ந்து	தீர்க்கமாக ஆராய்ந்து
தளர்வுற்று	தளர்ந்து
நீங்கநினை	(அவ்வெம்பெருமானை விட்டு) நீங்க வேணுமென நினைத்த
மாறனை	ஆழ்வாரை
மால்	ஸர்வேஶ்வரன்
நீடு இலகு சீலத்தால்	நெடுகிவிளங்குவதான (தனது) சீல குணத்தினால்
பரிந்து	ஸ்நேஹித்து
பாங்குடனே	ஸந்தோஷத்துடனே
சேர்த்தான்	அணைத்துக்கொண்டான். (ரு)

அவ;-அஞ்சாம்பாட்டு. (வளமிக்கமால் பெருமை) இதில் ஸர்வ ஸமாஶ்ரயணத்துக்குறுப்பாக ஸௌஶீல்யத்தைப்பேசுகிறபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார்.

அதெங்ஙனே யென்னில்; * அஞ்சிறையமடநாரையில் - தூதப்ரேஷணவ்யாஜத்தாலே தம்மாற்றாமையையவனுக்கறிவித்தவநந்தரம் அவன்வந்து ஸம்ஶ்லேஷித்தருளக்கண்டு அவன் பெருமையையும் தம்சிறுமையையும்நினைத்து "ஸர்வபோக்யனானவனை அயோக்யனானான்கிட்டி தூஷிப்பதில் அகன்றுபோகை நன்"றென்று தாமகலப்புக, "ஆழ்வீர்! உம்முடையபொல்லாங்கைப்பாராதே நம்முடைய செல்லாமையைப்பாரீர்" என்று "ஆக்ரம்ய லோகாந் - ஆக்ரம்யலோகாந்" (க) என்கிற த்ரிவிக்ரமாபதாந ஸித்தமான தன் ஸௌஶீல்யத்தையும், நவநீதசௌர்யவ்ருத்தாந்தஸித்தமானதன்செல்லாமையையுங்காட்டித்தம்மை அவன்சேர்த்துக்கொள்ள, அத்தாலே தாம் அகலுகை தவிர்ந்து பொருந்தினபடியை யருளிச்செய்கிற * வளவேழுலகிலர்த்தத்தை "வளம்மிக்க" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா;-(வளமிக்கமால்பெருமைமன்னுயிரின்தன்மை) அதாவது "அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்த (ம-ரு) ரான நித்யஸூரி நிர்வாஹகத்வத்தாலே வந்தஸர்வேஶ்வரனுடைய பெருமையையும், அசித்ஸம்ஸ்ருஷ்டமாகையாலே ஹேயஸம்ஸர்க்கார்ஹமாய் அணுபரிமாணமாயிருக்கிற வாத்மாவினுடைய தன்மையையுமென்கை. "வளவேழுலகின் முதலாய வானோரிறையைக் களவேழ்வெண்ணெய் தொடுவுண்டகள்வா வென்பன் - அருவினையேன்" என்றருளிச்செய்தபடியை அடியொத்தினபடி. (உற்று) எம்பெருமானுடையவும் தம்முடையவும் உத்கர்ஷாபகர்ஷங்கள் திருவுள்ளத்திலேபட்டு. (அங்கூடுருவவோர்ந்து) இப்படித்திருவுள்ளத்திலுற்றதசையில் நிரூபிக்குமிடத்து முடியவிசாரித்து. 'அருவினையேன்" என்று தொடங்கி "அடியேன் சிறியஞானத்தன்" என்னுமளவு மாராய்ந்து. இப்படி தீர்க்கதர்ஶியாக தர்ஶித்து.

(தளர்வுற்று) மிகவுமவஸந்நராய். "நகல்வத்யைவ - நகல்வத்யைவ" (உ) "யதிவீரதிঃ - யதிப்ரீதிঃ" (ங) இத்யாதிப்படியே. (நீங்கநினைமாறனை) அகன்று அத்தலைக்கதிஶயத்தைப்பண்ணவெண்ணுகிற வாழ்வாரை. நீங்குகை-ஸ்வவிநாஶமாகிலும் ஸ்வாமிக்கதி

(க) ரா-பா-உக-உ0. (உ) ரா-உத்தர-சஅ.
(ங) ரா-உத்தர-சOரு.

மூ— பரிவதிலீசன் படியைப் பண்புடனேபேசி
அரியனலனாராதனைக் கென்று-உரிமையுடன்
ஓதியருள்மாறனொழிவித்தானிவ்வுலகில்
பேதையர்கள் தங்கள் பிறப்பு. (௬)

ஸயாவஹராய் விஸ்லேஷிக்க ஸ்மரிக்கிறவரை. (மால்) தன் செல்லாமையைக் காட்டி ஆஶ்ரிதவ்யாமுக்தனான ஸர்வேஶ்வரன். "நெடுமாலே" "மாலேமாயப்பெருமானே" என்றத்தைக் கடாக்ஷித்தருளிச் செய்தபடி. ஏவம்வித வ்யாமுக்தனானவன். (நீடிலருசீலத்தால்) நெடுகிப்போருமதான நித்ய நிரூப ஶீலகுணத்தாலே அதாவது - "திசைகளெல்லாந் திருவடியாற்றாயோன்" என்றும், "உண்டாயுலகேழ்முன்னமே' என்று தொடங்கி "நெய்யூண்மருந்தோ மாயோனே" என்றும், இப்படி ஸௌஶீல்யாதிகளாலே வஶீகரித்தபடியென்கை. (பரிந்துபாங்குடனே சேர்த்தான்) பரிந்துபாங்குடனே சேர்க்கையாவது-இவரை ஸ்நிக்த ஸுஹ்ருதியாக ஸ்நேஹித்து மங்கவிடாமல் அலப்யலாபமாக ஹர்ஷத்துடனே ஸங்கதராகப்பண்ணினான். திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி இவரையும் சேரவிரும்பினான். "வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான்பொய்கலவாது. என்மெய்கலந்தானே" என்னக்கடவதிறே. (௫)

பதவுரை.

பரிவதில்	ஹேயப்ரத்யநீகனான
ஈசன்	ஸர்வேஶ்வரனுடைய
படியை	(ஆராதிப்பதற்கு எளியன் என்கிற) ப்ரகாரத்தை
பண்புடனே பேசி	பரிபூர்ணனாகையாலே இட்டதுகொண்டு த்ருப்தனாகிற ஸ்வபாவத்துடனே அருளிச் செய்து
ஆராதனைக்கு	திருவாராதநத்திற்கு
அரியன் அலன் என்று	(அவன்) அருமையானவனல்லனென்று,

உரிமையுடன்	அந்தரங்க ஸ்நேஹத்தோடு
ஓதிஅருள்மாறன்	(பாசுரங்களை)ஓதியருளின ஆழ்வார்
இவ்வுலகில்	இந்த உலகத்திலுள்ள
பேதையர்கள் தங்கள்	அறிவிலிகளுடைய
பிறப்பு	பிறவியை
ஒழிவித்தான்	ஒழித்தருளினார். (௬)

அவ. - ஆறும்பாட்டு. (பரிவதிலீசன்படியை) - இதில், ஆஶ்ரயணத்தில அருமையில்லாமையை யருளிச்செய்த பாசுரத்தை அநுவதித்தருளிச்செய்கிறார்.

அதெங்ஙனேயென்னில்; ஶீலவானேயாகிலும், ஶ்ரிய:பதியாய்ப் பரிபூர்ணனானவன் பெருமைக்கீடாக க்ஷுத்ரனாய் க்ஷுத்ரோபகரணனானவிவனால் பச்சையிட்டாஶ்ரயிக்கப்போமோவென்ன; ஶ்ரிய:பதித்வம் - இத்தலையில் குற்றம்பாராமலங்கீகரிக்கும் நீர்மைக்கு உடலாகையாலும், பரிபூர்ணத்வம் - இத்தலையில் ஏற்றம்பாராமல் பெற்றது கொண்டு ஸந்தோஷிக்கைக்குடலாகையாலும், ஆஶ்ரயிப்பார்க்கு பத்ரபுஷ்பாதிகளாலே ஸ்வாராதனென்கிற * பரிவதிலீசனிலர்த்தத்தை "பரிவதிலீசன்படியை" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

வ்யா-(பரிவதிலீசன்படியை) ஹேயப்ரத்யநீக கல்யாணைகதானனான ஸர்வேஶ்வரனுடைய ஸ்வாராதஸ்வபாவத்தை, (பண்புடனே பேசி) பரிபூர்ணனாகையாலே இட்டது கொண்டு த்ருப்தனாம் ஸ்வபாவத்துடனே யருளிச் செய்து. "பரிவதிலீசனை" என்று தொடங்கி, "புரிவதுவும் புகைபூவே" என்றத்தைப் பின்சென்றபடி. அன்றிக்கே, பண்புடனே பேசியென்று - அவனுடைய ஸ்வாராதத்தையைச்சொல்லி யல்லது நிற்கமாட்டாத தம் ஸ்வபாவத்தாலே சொல்லி யென்றாகவுமாம். (அரியனலனாராதனைக்கென்று) இப்படி பத்ரபுஷ்பாதிகளாலே ஸ்வாராதனாகையால், -ஆஶ்ரயிக்குமிடத்தில், 'ஸுவ்யாவர்ஜிதவ்யூஹக - ஸபர்யா பூஜிதஸ்ஸம்யக்' (க) என்னும்படி ஸபர்யைக் கருமையில்லாதவனென்று, (உரிமையுடனோதியருள் மாறன்) அந்தரங்கமான ஸ்நேஹத்தோடேயருளிச் செய்தவாழ்வார். அதாவது-'எதுவேதென் பணியென்னாததுவே

(க) ரா-பா-க-௫௭.

மூ.-பிறவியற்று நீள்விசும்பிற் பேரின்பமுய்க்கும்
திறமளிக்குஞ் சீலத்திருமால் — அறவினியன்
பற்றுமவர்க்கென்று பகர்மாறன்பாதமே
உற்றதுணையென் றுளமேயோடு. (௭)

யாட்செய்யுமீடே" என்றும், "உள்கலந்தார்க்கோரமுதே" என்றும், "அமுதிலுமாற்றவினியன்" என்றும், "தாள்கள் தலையில் வணங்கி நாள் கடலைக்கழிமினே" என்றும், "அவனைத்தொழுதால்" என்றும், "தருமவரும்பயனாய திருமகளார் தனிக்கேள்வன்" என்றும்-ஆஸ்ரயணாதி பலபர்யந்தமாக அருளிச்செய்தவையென்கை. (ஒழிவித்தானிவ்வுலகில் பேதையர்கள் தங்கள் பிறப்பு) இப்படியுபதேசிக்கையாலே, இந்தலோகத்திலறிவிலிகளானவர்கள் பிறவியையகற்றுவித்தார், இஜ்ஜகத்தில் அஜ்ஞருடைய ஜந்மஸம்பந்தத்தை ஸ்வஸூக்தியாலேநிவர்த்திப்பித்தார். "ஏதமிலாயிரத்திப்பத்தோத வல்லார் பிறவாரே" என்றத்தைப் பின்சென்றபடி. (௬)

பதவுரை.

உள்ளமே	நெஞ்சே!
பிறவி அற்று	ஜந்மஸம்பந்தமற்று
நீள்விசும்பில்	பரமாகாச (பரமபத) த்தில்
பேர் இன்பம் உய்க்கும் திறம்	பரமானந்தத்தை அநுபவிக்கும் திறத்தை
அளிக்கும் சீலம்	அநுக்ரஹிக்கக் கடவ ஸ்வபாவத்தையுடைய
திருமால்	ஸ்ரிய:பதியானவன்
பற்றுமவர்க்கு	(தன்னை) ஆஸ்ரயிப்பவர்களுக்கு
அறஇனியன் என்று	மிகவும் போக்யனாயிருப்பனென்று
பகர்	அருளிச்செய்த
மாறன்	ஆழ்வாருடைய
பாதமே	திருவடிகளே
உற்றதுணை என்று	ப்ராப்தமான துணையென்று
ஓடு	விரைந்து சென்று பற்று. (௭)

அவ.—ஏழாம்பாட்டு. (பிறவியற்றுநீள்விசும்பில்) இதில், ஆச்ரயண ரஸ்யதையைப் பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; ஆராதநத்தில் அல்பஸந்துஷ்டனதபாலே இவனுக்குச் செய்யவேண்டுவது பணியில்லையேயாகிலும், உள்ளது தேவையாயிருக்குமன்று ஆச்ரயணங்கூடாதேயென்ன, ஸ்வாராத்ய விஷயஸாரஸ்யத்தாலே ப(ஃ)லதசையிற்போலே ஆச்ரயணதசையே பிடித்தும் ரஸிக்கும் விஷயமாகையாலே, அபிமதவிஷயத்தில் பரிமாற்றம்போலே ஆச்ரயணம் அத்யந்தம் ஸரஸமாயிருக்குமென்கிற பிறவித்துயரிலர்த்தத்தை "பிறவியற்று" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா;-(பிறவியற்று நீள்விசும்பில்பேரின்பமுய்க்குந்திருமகளிக்கும் சீலத்திருமால்) ஜந்மஸம்பந்தமற்று நிரதிசயபோக்யமான பரமாகாசத்திலே நிரதிசயாநந்தத்தை யநுபவிக்கும்படி யநுக்ரஹிக்கும் ஸ்வபாவனான ச்ரிய:பதியானவன். "தருமவரும்பயனாய திருமகளார் தனிக்கேள்வன்" என்றத்தை யநுபாஷித்தருளினபடி. ஏவம் விதனானவன் (அறவினியன்பற்றுமவர்க்கென்று) மிகவும்ஸரஸனாயிருக்கும் ஆச்ரயிக்குமவர்களுக்கென்று. "எப்பாலெவர்க்கும் நலத்தாலுயர்ந்துயர்ந்தப்பாலவன்" "தூயவமுதைப் பருகிப்பருகி யென்மாயப்பிறவி மயர்வறுத்தேனே" என்னுமத்தையும் அடியொற்றியருளிச் செய்தபடி.

மற்றும் அவனுடைய போக்யதைக் கநுகுணமாக "ஆழிப்படையந்தணனை" என்றும், "ஒண்சுடர்க்கற்றையை" என்றும், "விடுவேனோ என்விளக்கை" என்றும், "பின்னும் வீராய்மலர்த்துழாய்வேய்ந்தமுடியன்" என்றும், "பின்னை நெடும்பணைத்தோள் மகிழ்பீடுடை முன்னையமரர் முழுமுதல்" என்றருளிச் செய்தவையும் தச்சேஷங்களாகக்கடவது. (அறவினியன் பற்றுமவர்க்கென்று பகர்மாறன் பாதமேயுற்றதுணையென்றுள்ளமேயோடு) இப்படியாச்ரயிப்பார்க்கு "[illegible] குணைர்விருருசே ராம:" (க) என்

(க) ரா-அ க-கூஉ.

அஅ. ஓடுமனஞ்செய்கையுரையொன்றி நில்லாதாருடனே
கூடிநெடுமாலடிமை கொள்ளுநிலை—நாடறிய
ஓர்ந்தவன்றன் செம்மையுரைசெய்த மாறனென
ஏய்ந்துநிற்கும் வாழ்வாமிவை. (அ)

னும்படி நிரதிசயபோக்யனாயிருக்குமென்று இத்திருவாய்மொழி முகேந அருளிச்செய்யுமாழ்வார் திருவடிகளே ப்ராப்தமான துணை யென்று நெஞ்சே ஸீக்ரகதியாய்ச் சென்றுபற்று. * முந்துற்றநெஞ் சாய் அங்கேபற்றும்படி ஓடு. (எ)

பதவுரை.

ஓடும்	(விஷயாந்தரங்களில்படிவதற்காக) விரைந்து போகின்ற
மனம்	நெஞ்சும்
செய்கை	காயமும்
உரை	வாக்கும் (ஆகிய இவை)
ஒன்றி நில்லாதாருடனே	ஒருவழிப்பட்டு நிற்கப்பெறாத குடிலரோடு
கூடி	சேர்ந்து
நெடுமால்	ஸர்வேஸ்வரன்
அடிமைகொள்ளும் நிலை	அடிமை கொள்ளுகிற குணத்தை
நாடு அறிய	நாட்டார் அறியும்படி
ஓர்ந்து	ஆராய்ந்து
அவன்தன் செம்மை	அவனது ஆர்ஜவத்தை
உரைசெய்த	அருளிச்செய்த
மாறன் என	ஆழ்வார் என்று அநுஸந்திக்க
வாழ்வு ஆம் இவை	ஸ்வரூபாநுரூபமான ஸம்பத்துக்களாகிய இவை
ஏய்ந்து நிற்கும்	பொருந்தி நிலைநிற்கும். (அ)

அஅ.—எட்டாம்பாட்டு. (ஓடுமனம்) இதில்ருஜுக்களோடு குடிலரோடுவாசியற ஆர்ஜவகுணயுக்தனென்றநுஸந்தித்தவாழ்வார் திவ்யஸூக்தியையநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில், ஆஸ்ரயணம் அத்யந்தஸுகரமாயிருந்ததேயாகிலும், ஆஸ்ரயிக்கிற

மூ.-இவையறிந்தோர் தம்மளவிலீசனுவந்தாற்ற
அவயவங்கடோறுமணையும்—சுவையதனைப்
பெற்றார்வத்தான்மாறன் பேசின சொற்பேச, மால்
பொற்றாள் நஞ்சென்னிபொரும். (கூ)

வர்கள் கரணத்ரயத்தாலும் செவ்வைக்கேடரான ஸம்ஸாரிகளோ கையாலே பரிமாற்றத்திலருமை தட்டிபிராதோவென்னில்; நீரோ மேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப்போலே, இவர்களுடைய செவ்வைக்கேடே தனக்குச்செவ்வையாம்படி இன்றுஸ்ரயிக்கிற விவர்களளவிலும்செவ்வையனுப்பரிமாறுமார்ஜவகுணயுக்தனென்கிற * ஓடும்புள்ளிலர்த்தத்தை "ஓடுமனஞ்செய்கை" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

வ்யா;-(ஓடுமனஞ்செய்கையுரை யொன்றி நில்லாதாருடனேகூடி) சஞ்சலமாய் (க) * நின்றவாநில்லாநெஞ்சும், அதின்வழியைப் பின்செல்லும் வாக்காயங்களும், ஒருமைப்பட்டிருக்கையன்றிக்கே, செவ்வைகெடநடக்கும் குடிலரோடுகூடிக்கலந்து, (நெடுமாலடிமை கொள்ளுநிலே) ஸர்வஸ்மாத்பரனானவன் அடிமைகொள்ளுமார்ஜவ ஸ்வபாவத்தை, (நாடறியவோர்ந்து) நாட்டாரறியும்படியாராய்ந்து. (அவன்றன்செம்மை) "தேநதே த்ருஹ்யவா ஜநா:- தேநதேதமநுவ்ரதா:" (உ) "ராஜோராஜ்ஞ ஸ்ரவ ஸுகா-ராமோராஜ்யமுபாஸித்வா"(ந)என்னும்படியான அவனுடைய ஆர்ஜவத்தை, (உரைசெய்த) அருளிச்செய்த. அதாவது - "ஓடும்புள்ளேறிச்சூடும் தண்டுழாய் நீடுநின்றவையாடுமம்மானே" என்று-நித்யஸூரிகள் திறத்தில் பரிமாறுமார்ஜவத்தையும், "அம்மானாய்" என்றும், "கண்ணாவான்" என்றும், "நீர்புரைவண்ணன்" என்றுமளவும் நித்யஸம்ஸாரிகளோடே செவ்வையனுப் பரிமாறுமார்ஜவத்தையு மருளிச்செய்தாரென்கை. இப்படி உரைசெய்த (மாறனை) ஆர்ஜவகுணத்தை யருளிச்செய்த ஆழ்வாரென்றநுஸந்திக்க, (எய்ந்துநிற்கும் வாழ்வாமிவை) ஸ்வரூபாநுரூபமான ஸம்பத்தாயுள்ளவை யெல்லாம் பொருந்தி "சென்றொன்றி நின்றதிரு" (ச) என்னும்படி நிலைநிற்கும். (அ)

பதவுரை.

இவை — கீழ்த்திருவாய்மொழியில் வெளியிட்ட ஆர்ஜவாதி குணங்களை

(க) இ-மொ-க-ச. (உ) (ந) ரா-பா-க-கஎ. (ச) ச-திருவ கக.

அறிந்தோர் தம் அளவில்	அறிந்தவர்கள் பக்கலில்
ஈசன்	ஸர்வேஶ்வரன்
உவந்து	ஸந்தோஷித்து
ஆற்ற	ஸாத்மிக்க ஸாத்மிக்க
அவயவங்கள்தோறும்	எல்லா அவயவங்களிலும்
அணையும்	கலக்கப்பெறுகிற
சுவையதனைப்பெற்று	ரஸத்தைப்பெற்று
ஆர்வத்தால்	(அதனைப்பெற்ற) ப்ரீதியாலே
மாறன்பேசின	ஆழ்வார் அருளிச்செய்த
சொல்	ஸ்ரீஸூக்திகளை
பேச	(நாம்) உச்சரிக்க,
மால்	ஸர்வேஶ்வரனுடைய
பொன்தாள்	அழகிய திருவடிகள்
நம் சென்னி	நம்முடைய தலைமீது
பொரும்	சேரும். (கூ)

அவ; - ஒன்பதாம்பாட்டு. (இவையறிந்தோர்தம்மளவில்) இதில் எம்பெருமானுடைய ஸாத்ம்யபோக(ஹோம)ப்ரத(ஃ)த்வத்தை யருளிச்செய்த பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்; இத்தலையில் செவ்வைக்கேடு தனக்குச் செவ்வையாம்படி இவர்களுக்குப் பாங்காகத்தன்னை யமைத்துப்பரிமாறுமார்[illegible]குண யுக்தனேயாகிலும், தன்னினைவறிந்து செவ்வியராய்ப் பரிமா[illegible]யும் திருவடி திருவனந்தாழ்வான் தொடக்கமான நித்யாஶ்ரிதரோடே உகப்போடே கலக்குமாபோலே இன்றாஶ்ரயிக்கிறவர்களோடு உகப்புடனே கலந்து பரிமாறக்கூடுமோவென்னில்; அவர்களெல்லாரோடும் ஒரோப்ரகாரத்தாலே பரிமாறுகிறவன் அவர்களெல்லாரோடும் பரிமாறுகிற பரிமாற்றமெல்லாவற்றையும் இவரொருவருடனே ஸர்வேந்த்ரியங்களாலும் ஸர்வகா(மா)த்ரங்களாலும் பொறுக்கப் பொறுக்கப்பரிமாறுமென்கிற * இவையு மவையு[illegible]மித்தத்தை "இவையறிந்தோர்தம்மளவில்" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

வ்யா;-(இவையறிந்தோர் தம்மளவில்) இந்தஆர்ஜவகுணத்தை யறிந்தவர்கள்விஷயத்திலே. (ஈசனுவந்தாற்றவவயவங்கள்தோறுமணை

மூ. பொருமாழி சங்குடையோன் பூதலத்தேவந்து
தருமாறேதுவறத்தன்னைத் — திரமாகப்
ப்பார்த்துரை செய்மாறன் பதம்பணி நெஞ்சே நீ
வாழ்த்திடுகவென்னுடையவாய். (௩௦)

யும் சுவையதனைப்பெற்று) ஸர்வேஶ்வரன் ஹ்ருஷ்டனாய் ஸாத்மிக்க ஸாத்மிக்க, ஸர்வாவயவங்களிலும் ஸம்ஶ்லேஷிக்கும் ரஸந்தன்னைப் பெற்றுப் பொறுக்கப்பொறுக்க உறுப்புத்தோறும் சிறப்புத்திரக் கலக்குமதான பெரும்பேற்றைப்பெற்று. அதாவது - 'ஸாரோ [illegible] - ஸராமோவாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே'' (க) என்னும்படி "என்னுடைச்சூழலுளானே" "அருகலிலானே" 'ஒழிவிலனென்னோடுடனே' 'கண்ணனென்னொக்கலையானே' "மாயனென்னெஞ்சினுள்ளானே" 'என்னுடைத்தோளிணையானே' "என்னுடை நாவினுளானே" 'கமலக்கண்ணனென்கண்ணினுளானே' 'என்னெற்றியுளானே' 'என்னுச்சியுளானே' என்று தலைக்குமேலே ஏறினபடியை அடியொற்றினபடி.

அணையுஞ்சுவையாவது - அருகலிலறுசுவை. "பிராட்டி, திருவடி, திருவனந்தாழ்வான் தொடக்கமானோரோட்டைக்கலவியில் ரஸங்களெல்லாம் ஏகவிஷயத்திலுண்டாம்படி கலந்து" என்றதை நினைக்கிறது. (ஆர்வத்தால் மாறன் பேசினசொல் பேச [illegible] பெரும்பேறு பெற்று, அத்தாலுண்டான வ[illegible]ஆழ்வாருளிச்செய்த திவ்யஸூக்திகளை கேவலம் வாக்காலே பேசி[illegible]க்க; (மால்பொற்றாள் நம் சென்னிபொரும்; ஆஶ்ரிதவ்யாமுக்தனான ஸர்வேஶ்வரனுடைய ஸ்ப்ருஹணீயமான சரணங்கள் நம்முடைய சென்னித்திடரிலே சேரும். பொருவென்று ஒப்பாய், அதால் - சேருமென்றபடி. "நிச்சலும் விண்ணப்பஞ்செய்ய நீள்கழல் சென்னிபொரும்" என்றதையருளிச்செய்தபடி. [illegible])

பதவுரை.

பொரும்	(பகைவர்மீது) போர்புரியாநிற்கிற
ஆழி	திருவாழியாழ்வானையும்
சங்கு	ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்

(க) ரா-கி-௪-உக.

உடையோன்	(திருக்கையிலே) உடைய எம்பெருமான்
பூதலத்தே வந்து	இப்பூமியில் வந்தவதரித்து
ஓர் ஏது அற	ஒருஹேதுவில்லாமல் (நிர்ஹேதுகமாக)
தன்னை தரும் ஆறு	(அடியார்க்கு) தன்னை (அநுபவிக்கத்) தருகிறபடியை
திரமாக	ஸ்திரமாக
பார்த்து	ஸாக்ஷாத்கரித்து
உரைசெய்	அருளிச்செய்த
மாறன்	ஆழ்வாருடைய
பதம்	திருவடிகளை
என் சென்னி	என் ஶிரஸ்ஸானது
பணிக	வணங்குக;
என்னுடையவாய்	என்வாக்கானது
வாழ்த்திடுக	மங்களாஶாஸநம் பண்ணுக. (௧௦)

அவ. - பத்தாம்பாட்டு. (பொருமாழி) ஸர்வாங்க ஸம்ஶ்லேஷம் பண்ணுகைக்கு ஹேத்வந்தரங்காணுமல் "நிர்ஹேதுகமாகாதே" என்று நிர்வ்ருதராகிறபடியைப் பேசுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனே யென்னில்; இப்படி உகப்புடனே பண்ணும் ஸர்வாங்க ஸம்ஶ்லேஷமாகிற விஷயப்பேற்றுக்குத் தகுதியாக இவனால் நேர்ந்து செய்யத்தக்கதுண்டோ வென்னில்; புத்த்(யு)ாதி ஸகலபதார்த்தங்களுக்கும் நியாமகனாகையாலே, அத்வேஷந் தொடங்கி பரிகணனைநடுவாகப் பரமபக்திபர்யந்தமாகத்தானே விளைவித்து வந்து நிர்ஹேதுகமாக வங்கீகரிக்கும் ஸ்வபாவனென்று அவனுடைய நிர்ஹேதுகோபகாரகத்வத்தை யநுஸந்தித்து நிர்வ்ருதராகிற * பொருமாநீள் படையிலர்த்தத்தை "பொருமாழி சங்குடையோன்" என்று தொடங்கி யருளிச்செய்கிறார்.

வ்யா.-(பொருமாழி சங்குடையோன் பூதலத்தே வந்து) ஶத்ருக்கள் மேலே பொராநிற்கிற திருவாழி ஸ்ரீ பாஞ்சஜந்யமாகிற திவ்யாயுதங்களையுடைய ஸர்வேஶ்வரன், எதிரம்பு கோக்கிற

வாயுந்திருமால் மறையநிற்க வாற்றாமை
போய்விஞ்சிமிக்க புலம்புதலாய்—ஆய
அறியாதவற்றோடணைந் தழுதமாறன்
செறிவாரை நோக்குந் தினிந்து. (கக)

இந்தப் பூதலத்திலே சக்ஷுர்விஷயமாம்படி வந்து. "பொருமா நீள்படை" என்று தொடங்கி "கருமாணிக்கமென் கண்ணுளதாகும்" என்றத்தைக் கடாக்ஷித்தருளிச் செய்தபடி. (தருமாறேரேது வறத்தன்னை) நிர்ஹேதுகமாகத் தன்னையுபகரிக்கிற வுபாயத்தை, (ஓரேதுவறத் தன்னைத் தருமாறு) ஒருஹேதுவின்றிக்கே நிர்ஹேதுகமாக ப(ர)லஸ்வரூபனான தன்னையே தருகிற ப்ரகாரத்தை (திறமாகப் பார்த்துரை செய்மாறன்) அதாவது—கண்ணுள்ளேநிற்கும் காதன்மையால் தொழிலெண்ணிலும் வரும்" என்கிற-பக்திக்கும் பரிகணனைக்குமொக்க முகங் காட்டும்படிக்குமேலே, "ஒரெண்டானுமின்றியே வந்தியலுமாறு—கண்டாயே" என்று—"ஸஹிதஃ-ஸஹிதஃ" (க) 'ஸஜ்ஜ-தஃ.ஸங்கதஃ' (உ) என்று கரைசேர்ந்த நிர்ஹேதுகக்ருபையை அல்பஜ்ஞராலே அவிசா(ல)ல்யமாம்படி ஸ்த்திரமாகதர்ஸித்து, அந்த ப்ரகாரத்தையருளிச்செய்தவாழ்வார். (பதம்பணிகவென் சென்னி வாழ்த்திடுகவென்னுடைய வாய்) இப்படி நிர்ஹேதுக வைபவத்திலே நிர்வ்ருதராகிறபடியை வெளியிட்டவாழ்வார் திருவடிகளை "உத்யுக்தாவுணர்வி-மூர்த்நா ப்ரணமாமி" (௩) என்னும்படி என் ஸிரஸ்ஸானது ப(ஸ)ஜித்திடுக; "திருக்குருகைப்பெருமாள் தன்திருத்தாள்கள் வாழியே" (௪) என்று என் வாக்கானது மங்களாஸாஸநம் பண்ணியிடுக. இப்படி உபகாரஸ்ம்ருத்யதிஸயத்தாலே தாம் ஆழ்வார் திருவடிகளிலே ஆழங்காற்பட்டபடியையருளிச்செய்தருளினார். கம.

பதவுரை.

வாயும் — (அடியார் அநுபவிக்கலாம்படி) கிட்டுகையையே ஸ்வபாவமாகவுடைய

திருமால் — ஸ்ரீயஃபதியானவன்

(க) ரா-பா-க-உக. (உ) ரா-பா-க-ருஅ. (௩) ஸ்தோ-ரு- (௪) வாழித்தி.

மறையநிற்க	(கண்ணுக்குப் புலப்படாமல் பிரிந்து) மறைந்திருக்க, (அதனாலே)
ஆற்றாமைபோய் விஞ்சி	போகம் அதிகரித்து
மிக்கப்புலம்புதலைய	மிகவும் அழும்படியான நிலைமை நேர்ந்து,
ஆய அறியாதவற்றோடு	(அசேதநங்களாகையாலே) தம்முடைய துக்கத்தை ஆராய அறியாதவற்றை
அணைந்து	கட்டிக்கொண்டு
அழுத	(அவற்றை ஸமதுக்கிகளாகக்கொண்டு) அழுத
மாறன்	ஆழ்வார்
செறிவாரை	ஆஶ்ரிதர்களை
தணிந்து நோக்கும்	த்ருடமாகக்கடாக்ஷித்தருள்வர். (௧௧)

அவ;—பதினோராம்பாட்டு. (வாயுந்திருமால்) இதில்-ஸகல பதார்த்தங்களையும் ஸமதுக்கிகளாகவெண்ணி, துக்கிக்கிறபடியைப் பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனே யெனில்;—"பெருநிலங்கடந்த நல்லடிப்போதயர்ப் பிலனலற்றுவன் றழுவுவன் வணங்குவன்" (௧) என்று இவர் பாரித்தபடியே அநுபவிக்கப் பெறாமையால் ஷட்குணஸாம்யத்தாலே தாமான தன்மை குலைந்து, பிராட்டியான தன்மையை ப(ஸ)ஜித்துத் தூதுவிடக்கடவரானார் அஞ்சிறையமடநாரையில்; இங்கு "நம்பியைத் தென்குறுங்குடிநின்ற" (௨) இத்யாதிப்படியே-மேன்மை, நீர்மை, வடிவழகு, மூன்றுங்குறைவற உண்டாய், அவதாரத்தில் பிற்பாடருமிழக்கவேண்டாதபடி முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிறஸ்தலமான அர்ச்சாவதாரத்திலே யநுபவிக்க வாசைப்பட்டுக் கிடையாமையாலே [illegible]ஞ்சுழ[illegible]பிட்டு, நாரை, அன்றில், கடல், வாடை, வானம், மதி, இருள், கழி, விளக்குத் தொடக்கமான ஸகலபதார்த்தங்களும் தம்மைப்போலே பகவத்விரஹத்தாலே நோவுபடுகிறனவாகக் கொண்டு அவற்றுக்குமாகத்தாம் நோவுபட்டுச் செல்லுகிறபடியை அந்யாபதேஶத்தாலே பேசிச்சொல்லுகிற "வாயுந்திரையுகளி"லர்த்தத்தை, 'வாயுந்திருமால்' இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

(௧) தி-வாய்-௧-௩-௧௦. (௨) தி-வாய்-௧-௧௦-௧.

மூ:—திண்ணிதா மாறன் திருமால் பரத்துவத்தை
நண்ணியவதாரத்தேநன்குரைத்த—வண்மையறிந்து
அற்றார்கள் யாவரவரடிக்கேயாங்களவர்பால்
உற்றாரைமேவிடாதூன். (௪௨)

வ்யா;—(வாயுந்திருமால் மறையநிற்க) அநுபவயோக்யமாம்படி கிட்டுகையே ஸ்வபாவமாயிருக்கிற ஸ்ரிய:பதியானவன், போக (ஸாம)ஸாத்ம்ய ஹேதுவாக விஶ்லேஷித்து அத்ருஶ்யனாய்நிற்க, கீழே "மைந்தனைமலராண்மணவாளனை" (௧) என்றத்தை யநுபாவித்தபடி. அன்றிக்கே "நீயுந்திருமாலால்" என்றதாகவுமாம். 'மணியை வானவர்கண்ணனைத்தன்னதோரணியை' (௨) என்று - மேன்மையும், நீர்மையும், வடிவழகுமுடையவன் விஶ்லேஷிக்கையாலே. (ஆற்றாமைபோய் விஞ்சிமிக்கப் புலம்புதலாய்) 'ஆராத காதல்' என்னும்படி விஶ்லேஷவ்யஸநமானது கைகழியப்போய் மிக்கு, 'விசேதஸ்த்வஹ ஶஸாரா: விக்ராஹ நாவிசுக்ஷண-ஸீதே ம்ருதஸ்தேஶ்வஸாரா: பித்ராஹீநோஸிலக்ஷ்மண" (௩) என்னும்படி, 'எம்மேபோல்நீயும்' என்று பலகாலுஞ்சொல்லும்படி மிக்க ப்ரலாபமாய்.

(ஆயவறியாத வற்றோடணைந்தழுதமாறன்) அசேதநங்களாகையாலே தம்முடைய துக்கத்தை யாராயவறியாதவற்றைக்கிட்டிக் கட்டிக்கொண்டு "ஆற்றாமைசொல்லியழுவோமை" என்றுஸமதுக்கிகளாக வழுதவாழ்வார். 'காற்றுங்கழியுங்கட்டியழ" (௪) என்றாரிறே. (செறிவாரை நோக்குந்திணிந்து) அநந்யப்ரயோஜநராய் அந்தரங்கமாக வாஶ்ரயிக்குமவர்களை த்ருடமாகக் கடாக்ஷிப்பர். தம்மைப்போலே அசேதநங்களைக் கட்டிக்கொண்டழாமல் பகவத்ஸம்ஶ்லேஷமுண்டாய் ஆநந்திக்கும்படி கடாக்ஷித்தருளுவர். (௧௧)

பதவுரை.

திண்ணிதாம் மாறன்	த்ருடசித்தரான ஆழ்வார்
திருமால்	ஸர்வேஶ்வரனுடைய
பரத்துவத்தை	பரத்வத்தை

(௧) தி-வாய்-௧-௧௦-௪. (௨) தி-வாய்-௧-௧௦-௧௧. (௩) ரா-அ-௧௦௩-௧௫. (௪) ஆசார்யஹ்ருதயம்.

5

அவதாரத்தே நண்ணி	அவதாரத்திற்பொருந்தி
நன்கு உரைத்தவண்ணம்	நன்றாக அருளிச்செய்தபடியை
அறிந்து	அறிந்து
அற்றார்கள் யாவர்	(அவ்வாழ்வார்க்கே அநந்யார்ஹ ஶேஷராக) அற்றுத்தீர்ந்தவர் யாவருண்டோ [ஹராய்)
அவர் அடிக்கே	அவர்கள் திருவடிக்கே (அநந்யார்
ஆங்கு	அவ்விடத்திலே
அவர்பால் உற்றுரை	அவர்விஷயத்திலே அந்தரங்கராய்க் கிட்டுமவர்களை
உளன்	தேஹஸம்பந்தம்
மேவிடாது	மேற்கொள்ளாது. (௧௨)

அவ;—பன்னிரண்டாம்பாட்டு. (திண்ணிதாமாறன்) ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமானபரத்வத்தை அவதாரத்திலே யநுஸந்தித்துப் பரோபதேஶம் பண்ணுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். அது எங்ஙனேயென்னில்; பிரிந்தாரைக்கண்ணுஞ் சுழலை யிடப்பண்ணுமளவன்றிக்கே, கூடினாலும் பிரிவைமறக்கும்படி பண்ணவற்றான விஷயவைலக்ஷண்யம், அதுக்கீடான குணவைலக்ஷண்யம், அதுக்கடியான ஸர்வேஶ்வரத்வம் இவற்றையநுஸந்தித்து, இப்படி ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமான ஸர்வேஶ்வரத்வத்தை இதிஹாஸ புராண ப்ரக்ரியையாலே பிறரைக்குறித்து உபதேசித்துச் செல்லுகிற *திண்ணன்வீட்டிலர்த்தத்தை 'திண்ணிதாமாறன்' இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

வ்யா;-(திண்ணிதாமாறன்) கீழ்"மூவாமுதல்வா வினியெம்மைச் சோரேலே" என்றவநந்தரம்;"சோராதவெப்பொருட்கு மாதியாஞ் சோதி" என்கிறகாரணத்வத்தால் வந்தபரத்வத்தைக்காட்டி ஸமாதானம் பண்ண, அத்தாலேதரித்ததா(ர்)ட்ட்யத்தையுடைய வாழ்வாரென்னுதல்; எல்லார்க்கும் ஸுத்ருடமாம்படி பரத்வத்தை யருளிச்செய்த ஆழ்வாரென்னுதல். (திருமால்பரத்துவத்தை) ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுடைய பரத்வத்தை, "நீயுந்திருமாலால்" என்றிறேயருளிச்செய்தது. (நண்ணியவதாரத்தே நன்குரைத்த) திருமால்பரத்துவத்தை அவதாரத்தேநண்ணி நன்குரை

த்து. முதற்றிருவாய்மொழியிலே ஶ்ருதிச்சாயையாலே பரத்வே பரத்வத்தை யருளிச்செய்தாப்போலன்றிக்கே; இதிஹாஸபுராண ப்ரக்ரியையாலே அதிஸுலபமான அவதாரத்திலே பரத்வத்தை யாஶ்ரயணீயமாம்படி நன்றாக வருளிச்செய்தது. அன்றிக்கே, திருமால் பரத்துவத்தைத்தாம் நண்ணி† (அவதாரத்திலே)நன்குரைத்த தென்றாகவுமாம்.

நன்குரைத்த வண்ணமறிகையாவது - இப்படி அவதாரே பரத்வத்தை ஸுஸ்பஷ்டமாம்படி "கண்ணன் கண்ணல்ல தில்லையோர்கண்" என்றும், "கோபாலகோளரியேறன்றி-ஏழுலகு மீபாவஞ் செய்தருளாலளிப்பாரார்" என்றுமருளிச்செய்த ப்ரகாரத்தை யறிகை. மற்றும் தச்சேஷமாக "தேவனெம்பெருமானுக் கல்லால் பூவும் பூசனையுந்தகுமே"என்றும் "தகுங்கோலத்தாமரைக் கண்ணனெம்மான் மிகுஞ்சோதி மேலறிவார் யவரே"என்றும்"கள்வா" என்றுதொடங்கி "புள்ளூர்திகழல் பணிந்தேத்துவர்" என்று மருளிச்செய்தவையுமுண்டிறே. இப்படி யருளிச்செய்யுமிடத்து (௧) "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய: - க்ருஷ்ண ஏவஹிலோகாநாமுத்பத்திரபிசாப்யய:" என்றும் (௨) "ஸௌஷ ... ஜநார்த்தந: - ஸௌஷப்ருத்தீர்க்காக்ஷஸ ஸம்பந்தீ தேஜநார்தந:" என்றும், (௩) "... அர்ச்ச்யமர்ச்சிதுமிச்சாமஸ்ஸர்வே ஸம்மதந்துமர்ஹத" என்றும், (௪) "பாதேந கமலாபேந ப்ரஹ்மருத்ரார்சிதேந ச - பாதேநகமலாபேநப்ரஹ்மருத்ரார்சிதேநச" என்றுஞ்சொல்லுகிற ப்ரமாணங்களைப் பின்சென்றிறே யருளிச்செய்தது; (௫) "ராம: கமலபத்ராக்ஷ: ஸர்வஸத்வமநோஹர: - ராம:கமலபத்ராக்ஷஸ் ஸர்வஸத்வமநோஹர:" (௬) "பாவந: ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந - பாவநஸ்ஸர்வலோகாநாந்த்வமே வரகுநந்தந" இத்யாதிப்ரமாணங்களைப்பற்ற "தகுங்கோலத் தாமரைக்கண்ணனெம்மான்" என்றும் "ஈபாவஞ்செய்தருளாலளிப் பாரார்" என்று மருளிச்செய்தாரிறே. இப்படி பரோபதேஶ ப்ர

(௧) பார-ஸபா-௩௮-௨௩. (௨) பார-ஆர-௧௮௯-௫௨. (௩) பார-ஸபா-௩௯-௪.
(௪) - (௫) ரா-ஸு-௩௫-௮. (௬) ரா-உத்தர-௮௨.

† குண்டலிதம் க்வாசித்கம்.

மூ.—ஊனமறவேவந்துள் கலந்தமாலினிமை
ஆனதனுபவித்தற்காந்துணையா—வானில்
அடியார் குழாங்கூடவாசையுற்றமாறன்
அடியாருடன் நெஞ்சேயாடு. (௧௩)

காரத்தையறிந்து பரத்வஸ்தா (ஸூா) பகரான ஆழ்வாரிடத்திலே, (அற்றார்கள் யாவர்) அற்றுத்தீர்ந்து அநந்யார்ஹராயிருப்பார் யாவர்சிலர்; (அவரடிக்கே யாங்கவர்பாலுமுற்றுமேலிடாதான்) அவர்கள்திருவடிகளுக்கு அநந்யார்ஹராய், அவ்விடத்திலே அப்படியே அவர்கள் விஷயத்திலே அந்தரங்கராய்க் கிட்டினவர்களை மாம்ஸாஸ்ருகா(மா)தி மலரூபமான தேஹம் அபிப(ஹிஹ)வியாது. இத்தால் தேஹஸம்பந்தம் மேலிடாதென்றபடி. (௧௨)

பதவுரை.

நெஞ்சே	நெஞ்சமே!
ஊனம் அறவந்து	நிஸ்ஸங்கோசமாகவந்து
உள்கலந்த	அந்தரங்கமாய்க்கலந்த
மால் இனிமையானது	ஸர்வேஶ்வரனுடையகலவியின்பத்
அநுபவித்தற்கு	அநுபவிப்பதற்கு [தை
ஆம் துணையா	அநுகூலமானதுணை அபேக்ஷிதமா
வானில்	பரமபதத்திலுள்ள [ய்
அடியார்	அடியார்களுடைய
குழாம் கூட	திரளிற்சேர்வதற்கு
ஆசை உற்ற	ஆசைப்பட்ட
மாறன்	ஆழ்வாருடைய
அடியாருடன்	அடியார்களோடே
ஆடு	நீ கூடிவாழ்வாயாக. (௧௩)

அவ:-பதின்மூன்றாம்பாட்டு. (ஊனமறவேவந்து) இதில் எம்பெருமான் "ஏகதத்வம்" என்னும்படி ஸம்ஶ்லேஷிக்க, ததநுபவஸஹகாரிஸாபேக்ஷரா யருளிச்செய்த பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார்.

எங்ஙனேயென்னில்; இப்படி ப்ராஸங்கிகமான பரோபதேசத்தைத் தலைக்கட்டின வநந்தரம், கீழ், தம்முடைய ஆர்த்திதீரவந்து கலந்த எம்பெருமானுடைய ஸம்ஶ்லேஷ ரஸத்தைப் பேசவொருப்பட்டு எப்போர்ப்பட்ட இனிமையும் விளையும்படி தம்முடனே அ

ஸன்வந்து "ஸாத்ஸா-ஸீதயாஸாயுஜ்ய-ராமஸ்துஸீதயாஸார்த்தம்" (க) இத்யாதிப்படியே "ஏகதத்வம்" என்னலாம்படி கலந்தபடியையும் அந்தக்கலவியால் வந்தரஸம் தம்மொருவராலு முண்டறுக்க வொண்ணாதபடி யளவிறந்திருக்கிற படியையுமநுஸந்தித்து, தனித்தேட்டமான இதரவிஷயங்கள் போலன்றிக்கே, துணைத்தேட்டமாய், அதுக்கிவ்விபூதியிலாளில்லாமையாலே, "இவ்வநுபவத்தில் நிலைநின்ற நித்யஸூரிகள்திரளிலே போய்ப்புக்கநுபவிக்கப் பெறுவதெப்போதோ" என்று ப்ரார்த்திக்கிற *ஊனில்வாழிலர்த்தத்தை "ஊனமறவேவந்து" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

வ்யா;-(ஊனமறவேவந்துள் கலந்தமாலினிமையானது) அதாவது - "நித்யஸம்ஸாரி" என்று ஸங்கோசியாமல், ஸங்கோசமறஸர்வேஶ்வரன் வந்து "தானும் யானுமெல்லாந்தன்னுள்ளே கலந்தொழிந்தோம் தேனும்பாலும் நெய்யும் கன்னலுமமுதுமொத்தே" என்றும் "எனதாவியுள் கலந்த பெருநல்லுதவி" என்றும் "கனிவார் வீட்டின்பமே" என்றும், "அடியேன் வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே" என்றும் இப்படி ஸர்வரஸங்களுமுண்டாம்படி அந்தரங்கமாகக்கலந்த கலவியினிமையானது - ஸஹ்ருதயமாகஸம்ஶ்லேஷித்த ஸாரஸ்யமானது,

(அநுபவித்தற்காந்துணையா) ஏவம்விதரஸ்யதையை யநுபவிக்கைக்கு "அடியார்கள்குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ" என்று - அநுகூலஸஹவாஸமபேக்ஷிதமாய், (வானிலடியார் குழாங்கூடவாசையுற்றமாறனடியாருடன் நெஞ்சேயாடு) *வையத்தடியவர்களன்றிக்கே, அநுபவத்துக்கு தேசிகரான வானிலடியார் குழாங்களுடனே கூடவேணுமென்று அபிநிவேசத்திலே யூன்றின வாழ்வாரடியாரான விங்குத்தை ஶ்ரீவைஷ்ணவர்களோடே நெஞ்சேகூடியாடு. அன்றிக்கே, அக்குழாத்திலே மூழ்கியநுபவிக்கப்பாரென்றுமாம். "அடியீருடன்கூடி நின்றாடுமினோ" என்றாரிறே. (கரு)

(க) ரா-பா-எஎ-உரு.

மூ.—ஆடிமகிழ்வானிலடியார் குழாங்களுடன்
கூடியின்பமெய்தாக் குறையதனால்—வாடிமிக
அன்புற்றார் தன்னிலைமையாய்ந்துரைக்கமோகித்துத்
துன்புற்றான்மாறனந்தோ. (கச)

பதவுரை.

ஆடிமகிழ்	(பகவதநுபவத்தாலே) நர்த்தநம் பண்ணிக்களிக்கிற
வானில்	பரமபதத்தில் உள்ள
அடியார்குழாங்களுடன்	அடியார்களுடைய திரளோடே
கூடி	கலந்து
இன்பம் எய்தாக்குறையதனால்-	களிக்கப்பெறாத குறையாலே
மிகவாடி	மிகவும் வாட்டமடைந்து
அன்புற்றார்	நிரவதிகஸ்நேஹயுக்தரானமதுரகவி முதலானோர்
தன்நிலைமை	தமது தசையை
ஆய்ந்து உரைக்க	ஆராய்ந்து சொல்லும்படியாக
மாறன்	ஆழ்வார்
மோகித்து	மோஹமடைந்து
துன்புற்றான்	துக்கித்தார்;
அந்தோ	ஐயோ!. (கச)

அவ;—பதினாலாம்பாட்டு. (ஆடிமகிழ்வானில்) இதில் - ததீயரையுமவனையும் பிரிகையாலே மிகவும்தளர்ந்து, தாய்பேச்சாலே பேசுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார்.

எங்ஙனேயென்னில், எம்பெருமானைப் பிரிந்த வளவன்றிக்கே, அவனுக்கு ப்ராணபூதரான நித்யஸூரிகளையுங் கூடப் பிரிகையாலே, தம்தசையைத்தாமறியாத படி மோஹிதராய்க் கிடக்கிற தம்படியைப் பார்ஶ்வஸ்தரான பரிவர் அவனுக்கு விண்ணப்பஞ் செய்கிறப்ரகாரத்தைக் கலந்துபிரிந்து மோஹங்கதையான பிராட்டியுடைய விரஹபரவஶவ்யாபாரோக்திகளை யநுகரித்து அவனுக்கறிவிக்கிற திருத்தாயார் பேச்சாலே யருளிச்செய்கிற * ஆடியாடியி லர்த்தத்தை "ஆடிமகிழ்" இத்யாதியாலேயருளிச்செய்கிறார்.

வ்யா;—(ஆடிமகிழ்வானிலடியார் குழாங்களுடன்கூடியின்ப
மெய்தாக்குறையதனால் வாடிமிக) (ஆடிமகிழ்வானில்) பகவதநுப
வத்திலே யவகாஹித்து ஹ்ருஷ்டராகிறவென்னுதல்; அன்றிக்கே,
பகவதநுபவ ப்ரகர்ஷத்தாலே “ந்ருத்யந்தி கேசித் ப்ரந்ருத்யந்தி கே
சித்” (௧) என்னும்படியாடி, அத்தாலே ஹ்ருஷ்டராகிற வென்னு
தல். இப்படியானவானிலடியாருண்டு-வைகுண்டவாஸிகளான நித்ய
ஸூரிகள்; அவர்கள் ஸங்க(ஃ)த்திலே ஸங்கதராய், ஆநந்தத்தை
யடையாத வபூர்த்தியாலே “வாடிவாடும்” என்றுமிகவாடி. (அன்
புற்றார் தன்னிலைமையாய்ந் துரைக்க) “முயல்கின்றேனுன்றன்மொய்
கழற்கன்பை” (௨) என்று நிரவதிகஸ்நேஹயுக்தரான மதுரகவி
ப்ரப்ருதிப்ரபுத்த(ஸ) ஸுஹ்ருத்துக்கள், இவர் வ்யாமோஹத்
தை எம்பெருமானுக்கு நிரூபித்து, தம்முகேந “இதும்கவர் க்ருபா
ஸாத்யம்” என்று விஜ்ஞாபிக்கிறபடியை, தன் திறத்திலே பரிவுடைய
திருத்தாயார் தன்ஸ்வபாவத்தை யாராய்ந்து பேசும்படியாக.

(மோகித்துத் துன்புற்றான்மாறனந்தோ) தாம் தம்தசையைப்
பேசமாட்டாமல் பிறர்பேசும்படிமோஹித்து துக்கத்தை ப்ராப்த
ரானாராழ்வார்; ஐயோ. “ஜஜரவிஷ்யிதம் ஜநஃ-மமாபி வ்யதிதம் மநஃ”
(௩) என்று, (௪) * அற்றபற்றர்க்கு மிரங்கவேண்டும் படியாயிறே
இவர்தசையிருப்பது. அன்புற்றார் தன்னிலைமையாய்ந் துரைக்கை
யாவது-‘ஸாதியஷ்ஷஸு-ஸாதியர்கூர்த்தவஞ்ச” (௫) இத்யா
திப்படியே “எங்கும் நாடி நாடி நரசிங்காவென்று வாடி வாடும்”
என்றும் “உம்மைக்காணுமாசை யுள்நைகின்றாள், உம்மைக்காண
நீரிரக்கமிலீரே” என்றும், “வண்டுதிவளுந் தண்ணந்துழாய்கொடீ
ரென தவளவண்ணர் தகவுகளே.” என்றும், “உம்மைத்தஞ்சமென்
றிவள் பட்டனவே” என்றும் “நுமதிட்டமென்கொலிவ்வேழைக்கே”
என்றும் “இவள் மாழைநோக்கொன்றும் வாட்டேன்மினே” என்று
மிப்புடைகளிலே யருளிச்செய்தவையென்கை. இப்படி தம்தசை
தமக்கும் வாசாமகோசரமாய், கண்டாரெல்லாமிரங்க வேண்
டும்படியா யிருக்குமாயிற்று. (௧௪)

(௧) ரா-ஸு-௬௧-௧௪. (௨) கண்ணி-௧௦. (௩) ரா-ஸு-௧௬-௨௮.
(௪) தி ௪ வி-௫. (௫) ரா-ஸு ௩௧-௧௧.

மூ.—அந்தாமத்தன்பா லடியார்களோடிறைவன்
வந்தாரத்தான்கலந்த வண்மையினால்—சந்தாபம்
தீர்ந்தசடகோபன் றிருவடிக்கே நெஞ்சமே
வாய்ந்தவன்பை நாடோறும்வை. (கரு)

பதவுரை.

நெஞ்சமே	மனமே!
அம்தாமத்து அன்பால்	ஸ்ரீ வைகுண்டத்தில் பண்ணும்விருப்பத்தோடே
அடியார்களோடுவந்து	அஸ்த்ரபூஷண ப்ரமுகராயுள்ள நித்ய ஸூரிகளோடேகூடி (பரமபதத்தினின்றும்) வந்து
இறைவன் தான்	ஸர்வேஶ்வரன்
ஆர கலந்த வண்மையினால்	பரிபூர்ணமாகக் கலந்த ஔதார்யத்தாலே
சந்தாபம்தீர்ந்த	தாபமொழியப்பெற்ற
சடகோபன்	ஆழ்வாருடைய
திருவடிக்கே	ஸ்ரீபாதங்களிலே
வாய்ந்த அன்பை	பொருந்தின பக்தியை
நாள்தோறும் வை	எப்போதும் வைப்பாயாக. (கரு)

அவ; பதினைந்தாம்பாட்டு. (அந்தாமத்தன்பால்) இதில்-* ஆடியாடியில் விடாய்தீர * அடியார்கள் குழாங்களோடே வந்து கலந்தபடியைப்பேசின பாசுரத்தையநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; இவருடைய வார்த்திதீரவந்துகலந்து * வாட்டமில் புகழ்வாமனனானவன் ; ஆயிரமாண்டு முதலையின்கையிலேயகப்பட்டு இடர்பட்டவானையினிடரைச் சடக்கென வந்து போக்கினாப்போலே, * ஆடியாடியில்தான்பட்ட இடரெல்லாம் பேரும்படி, ஆசைப்பட்டபடியே அடியார்கள் குழாங்களோடே வந்து ஸம்ஶ்லேஷித்தருளக்கண்டு, தம்மோட்டைக் கலவியாலே அவன்வடிவிலே பிறந்த புதுக்கணிப்பை மண்டியநுபவித்து ப்ரீதராய்ச்செல்லுகிற * அந்தாமத்தன்பிலர்த்தத்தை * அந்தாமத்தன்பாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா;—(அந்தாமத்தன்பால்) அழகிய ஶ்ரீவைகுண்டதாமத்திற் பண்ணும் விருப்பத்தாலே. அத்தேசத்திலும் அத்தேசிகரிடத்திலு

முண்டான அதிஸ்நேஹத்தாலே. (அடியார்களோடிறைவன்) அடியார்களுண்டு; அஸ்த்ரபூஷண ப்ரமுகராயுள்ள நித்யஸூரிகள்; அவர்களோடேகூட ஸர்வேஶ்வரன் ஸபரிகரனாயுள்ளனும்படி ஸம்ஶ்லேஷித்தனாய். "அந்தாமத்தன்புசெய்தென்னாவிசேரம்மானுக்கந்தாமவாழ்முடி சங்காழி நூலாரமுள" என்றதை நினைக்கிறது. (வந்தாங்கு தான் கலந்தவண்மையினால்) ஸர்வஸ்மாத்பரனான தான் பரமபதத்தினின்றும் (௧) *பரமபதமாபந்நாந விவரிந்த விடத்தளவும் வந்து பரிபூர்ணமாக ஸம்ஶ்லேஷித்த ஔதார்யத்தாலே. (சந்தாபந்தீர்ந்த) விஶோயிதஜடஸ்ஸ்நாதஃ தஸ்தௌ தத்ரஶ்ரியாஜ்வலந் - விஶோதிதஜடஸ்ஸ்நாதஃ—தஸ்தௌ தத்ரஶ்ரியாஜ்வலந்" (௨) ஸுதீவ்ராஸுஸஸூஹ - அதிவராமஸம்ஸ்பர்ஶே" (௩) என்னும்படி "செந்தாமரைத்தடங்கண் செங்கனிவாய் செங்கமலம் செந்தாமரையடிகள் செம்பொன் திருவுடம்பே" என்றும்; "திருவுடம்புவான்சுடர் - என்னுள் கலந்தானுக்கே" என்றும்; "என்னுள் கலந்தவன் செங்கனிவாய் செங்கமலம் மின்னுஞ் சுடர்மலைக்குக் கண்பாதங் கைகமலம்" என்றும்; "எப்பொருளுந்தானாய் மரதகக்குன்றமொக்கும்" என்றும் *வாட்டமில் புகழ்வாமனன் மலைபோலே பெருத்து அவயவ ஸௌந்தர்யாதிகளையுமுடையனாயிருக்கிறபடியை யநுபவித்து ஸந்தாபமானது ஸவாஸநமாக நிவ்ருத்தமான. ஸந்தாபமாவது - *ஆடியாடியில் - வாடுதல் இரக்கம் வெவ்வுயிர்தல் வாய்வெருவுதல் உள்ளமுகவுருகுதல் உள்ளுளாவியுலருதல் தனெநஞ்சம் வேதல் துடக்கமானவை. * உள்ளுளாவியுலர்ந்து நீர "அல்லாவியுள்கலந்த" என்றும் "என்முடிவுகாணாதே யென்னுள் கலந்தான்" என்றும் "என்னுள் கலந்தவன்" என்றுமிறே யருளிச்செய்தது. (சந்தாபந்தீர்ந்த சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே வாய்ந்தவன்பை நாடோறும் வை) வானோர் தனித்தலைவன், *அந்தாமத்தன்பு செய்யும்படியான ஆழ்வார்திருவடிகளிலே "உன்றன் மொய்கழற்கன்பை முயல்கின்றேன்" (௪) என்கிறபடியே மநஸ்ஸே ஸஸங்கதமான ஸங்கத்தை நித்யமாக நிக்ஷிப்தயாக்கு. நிதியை அடியிலே யிட்டுவைப்பாரைப்போலே அன்பையடியிலே யிட்டுவை. (௧௫)

(௧) வி-த-௯௮. (௨) ரா-யு-௧௩௧-௧௫. (௩) ரா-பா-௭௭-௨௯. (௪) கண்ணி-௧௦.

மூ.—வைகுந்தன் வந்து கலந்ததற் பின்வாழ் மாறன்
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து-நைகின்ற
தன்மைதனைக்கண்டுன்னைத்தான் விடேனென்றுரைக்க
வன்மையடைந்தான் கேசவன் (௧௬)

பதவுரை.

வைகுந்தன்	நித்யவிபூதியுக்தன்
வந்து கலந்ததற்பின்	வந்து (தம்முடன்) கலந்தபிறகு
வாழ்	ஸத்தைபெற்ற
மாறன்	ஆழ்வார்
செய்கின்ற நைச்சியத்தை	செய்கிற நைச்யாநுஸந்தாநத்தை நோக்கி
சிந்தித்து	(ஈஶ்வரன்) விசாரமடைந்து
நைகின்ற தன்மைதனைகண்டு	சிதிலமாகிறபடியைப் பார்த்து
உன்னை விடேன் என்று உரைக்க	'(என்னுடைய பிரிவில்பயப்படுகிற) உன்னை நான் விடமாட்டேன்' என்றருளிச்செய்ய
கேசவன்	எம்பெருமான்
வன்மை அடைந்தான்	ஸ்தைர்யத்தை அடைந்தான். (௧௬)

அவ;—பதினாறும்பாட்டு. (வைகுந்தன்) இதில்-"அப்பொழுதைக் கப்பொழுதென் னாராவமுதம்' என்றநுபவிக்கிற விவர், 'அயோக்யன்' என்றகலிற்செய்வதென்" என்று ஈஶ்வரனதிஶங்கை பண்ண, இவர் ஸமாதாநம்பண்ணித் தேற்றினபடியைப் பேசுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்; ஸர்வேஶ்வரனோடே ஸம்ஶ்லேஷிக்கிற விவர், "அல்லாவியுள் கலந்த" என்று தம்சிறுமையை யநுஸந்திக்கையாலே, "*வளவேழுலகு தலையெடுத்து இன்னமுமிவர் நம்மைவிடிற்செய்வதென்" என்றதிஶங்கைபண்ணி அவனலமாக்கிற படியைக்கண்டு "இவனுக்கு நம் பக்கல் பாரதந்த்ர்ய வாத்ஸல்யங்களிருந்தபடியென்?" என்று விஸ்மிதராய், தாமகலாமைக்குறுப்பான பலவற்றையுஞ்சொல்லி அவனதிஶங்கையைத் தீர்த்து, அவனை தரிப்பிக்கிற *வைகுந்தா மணிவண்ணனிலர்த்தத்தை "வைகுந்தன்" இத்யாதியாலேயருளிச்செய்கிறாரென்கை.

மூ.-கேசவனாலென் தமர்கள் கீழ்மேலெழுபிறப்பும்
தேசடைந்தாரென்று சிறந்துரைத்த-வீசுபுகழ்
மாறன் மலரடியே மன்னுயிர்க்கெல்லாமுய்கைக்
காமென்று நெஞ்சேயனை. (௧௭)

வ்யா;—(வைகுந்தன் வந்து கலந்ததற்பின்) நித்யவிபூதியுக்தன் "அந்தாமத்தன்பு செய்தென்னாவிசேரம்மான்" என்னும்படி ஒரு நீராகக்கலந்த பின்பு (வாழ்மாறன்) அத்தாலேஸத்தைப்பெற்று ஸம்பந்நரானவாழ்வார். (செய்கின்ற நைச்யத்தைச்சிந்தித்து) இவர் "அல்லாவி" என்று அகலநினைக்கிற நைச்யாநுஸந்தாநத்தைக்கண்டு- "இதென்னாய் விளையக்கடவது" என்றீஸ்வரன்விசாரித்து. (நைகின்ற தன்மைதனைக்கண்டு) அவன் ஸிதிலனாகிற ப்ரகாரத்தை தர்ஸித்து.

(உன்னைத்தான் விடேனென்றுரைக்க) இப்படியென் விஸ்லேஷத்தி லதிஸி(ஸீ)ருவாயிருக்கிற உன்னைத்தான் விடேனென்று-'உன்னை நான் பிடித்தேன்கொள் சிக்கெனவே' 'உன்னை யெந்நாளும் விடுகேன்' 'அந்தமிலடிமை யடைந்தேன் விடுவேனோ' 'உன்னை நானடைந்தேன் விடுவேனோ' என்று ஈஸ்வரனைக் குறித்தருளிச்செய்ய. (வன்மையடைந்தான் கேசவன்)(க) "விஜ்ஞ ஈ:ஷ்ஷ கௌபிஸுகோஷ-விஜ்வர: ப்ரமுமோதஹ" என்னும்படி * துளக்கற்றமுதமாயெங்கும் பக்கநோக்கறியாதே "என் மரதகமலையே" என்னும்படி ஸ்தைர்யத்தை ப்ராபித்தான் ப்ரஸஸ்தகேஸனானவன். (௧௭)

பதவுரை.

நெஞ்சே	மனமே!
கேசவனால்	'எம்பெருமானாலே
எந்தமர்கள்	அஸ்மதீயர்கள்
கீழ்மேல் எழுபிறப்பும்	கீழும்மேலுமுண்டான ஸம்பந்தி ஸம்பந்திகளளவும்
தேசுஅடைந்தார் என்று	ஒளி பெற்றார்கள்' என்று
சிறந்து உரைத்த	நன்றாக அருளிச்செய்த
வீசுபுகழ்	(எங்கும்) பரவுகின்ற கீர்த்தியையுடையரான

(க) ரா-பா-௧௮டு.

மாறன்	ஆழ்வாருடைய
மலர் அடியே	திருவடித்தாமரைகளே
மன் உயிர்க்கு எல்லாம்	நித்யமான ஆத்மாக்களுக்கெல்லாம்
உய்கைக்கு ஆறு என்று	உஜ்ஜீவநோபயமென்று (நிச்சயித்து)
அணை	(அத்திருவடிகளை) ஆஶ்ரயிப்பாயாக. (கஎ)

அவ:-பதினேழாம்பாட்டு. (கேசவனால்) இதில்-கீழ்மேலுண்டான வர்களெல்லாரும் தம்முடையஸம்பந்தத்தாலே பகவத்தாஸ்ய லாபத்தை லபித்தார்களென்று ஹ்ருஷ்டராய்ப்பேசுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில், கீழ் - தம்மளவி லுண்டான வுகப்புத் தம்மொருவரளவிலும் சுவறிவிடுகையன்றிக்கே, தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளளவும், "எமர் கீழ்மேலெழு பிறப்பும் விடியாவென் நரகத்தென் றுஞ் சேர்தல்மாறினர்" என்கிற -விரோதிநிவ்ருத்தி யளவுமன்றிக்கே, ப(ர)லத்திலும் வெள்ளமிட்டலை யெறிகிறபடியைக்கண்டு, "ஸோஹமர்த்தோ யதாதவ-மம்ப்யேஷ யதாதவ" (க) என்னும்படி ஒருவனுடைய வ்யாமோஹ மிருக்கும் படியே' என்று † வித்த(ஐ)ராய், தம்மையிப்படி ஸபரிகரமாக விஷயீகரிக்கைக்கடியான அவன்குணசேஷ்டிதங்களைத்திருத்வாதஶநாம முகத்தாலே பேசி யநுபவித்து ப்ரீதராகிற கேசவன்றமரிலர்த்தத்தை "கேசவனெலந்தமர்கள்" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

வ்யா:-(கேசவனலந்தமர்கள் கீழ்மேலெழுபிறப்புந்தேசடைந்தாரென்று சிறந்துரைத்த) 'எம்பிரானெம்மான் நாராயணனாலே-எமர்கீழ்மேலெழுபிறப்பும்-கேசவன்றமரானார்கள்-மாசதிரிதுபெற்று, அத்தாலேநம்முடைவாழ்வு வாய்க்கின்றவா" என்றத்தை நினைக்கிறது. (கேசவனலந்தமர்கள்) ஜகத்காரணபூதனாய், விரோதிநிராகரணம்பண்ணுமவனாய், ப்ரஶஸ்தகேசனுமான வவனாலே மதியர் தேசடைந்தாரென்று - தேஜஸ்ஸை ப்ராப்தரானார்களென்று. கேச

(க) ரா-யு-கஉ௪-௧௦௪. † (பா) விஜ்வரராய்

வன்யமராகையிறே-இவர்களுக்குத்தேசு. தாஸ்யமிறே ஆத்மாவுக்கு தேஜஸ்கரமாவது; அத்தைத் தம்மோட்டை ஸம்பந்தத்தாலே கீழ் மேலுண்டான ஸம்பந்தி பரம்பரையிலுள்ளவர்களெல்லாரும் லபித்தார்களென்று, அந்தவுபகார கௌரவத்தாலே, அவன் குணசேஷ்டிதங்களுக்கு வாசகமாய் வைஷ்ணவத்வ சிஹ்நமாய் "கேசவன், நாரணன், மாதவன், கோவிந்தன், விட்டு, மதுசூதன், திரிவிக்கிரமன், வாமநன், சிரீதரன், இருடீகேசன், பற்பநாபன், தாமோதரன்" என்கிறதிருத்வாதசநாமத்தைப் பேசியநுபவித்து ஹ்ருஷ்டராய், அத்தையிப்படி நன்றாகவருளிச்செய்த. சிறப்பு - நன்றி. (வீசுபுகழ்மாறன்) ஸம்பந்திஸம்பந்திகளளவும் வைஷ்ணவத்வமேறிப்பாயும்படியான வைபவத்தால் வந்த ப்ரசுரமான - யஶஸ்ஸையுடையரான வாழ்வாருடைய.

(மலரடியேமன்னுயிர்க்கெல்லா முய்கைக்காறென்று) புஷ்பம் போன்ற திருவடிகளே நித்யமான வாத்மாக்களுக்கெல்லா முஜ்ஜீவிக்கைக்கு உசிதோபாயமென்று. (நெஞ்சேயணை) அவர்களிலே யொருவனாய் அம்ஸம்பெறும்படியான வெனக்கு உபகரணமாய் ஸௌமநஸ்ய முள்ளமநஸ்ஸே ப்ரஸந்நஸமமானதிருவடிகளை நீயும் ஸமாஶ்ரயணம்பண்ணு.

"நாராயணனாலே" என்று-அவனுடைய ஸ்வீகாரமே நிரபேக்ஷோபாயமென்றதினநுவாதமான - கேசவனாலென்கிற விப்பதத்திலே - தத்விவரணமாக, "மாதவனென்றதேகொண்டு" என்றும், "எமர்கீழ்மேலெழுபிறப்பும் மேவும்தன்மயமாக்கினான்" என்றும், "என்னைக்கொண்டு" என்றும், தன்பேறானமைக்கு, "விட்டிலங்கு செஞ்சோதி" என்றும், "அம்மான்றிரிவிக்கிரமனை - எனக்கேயருள்கள்செய்ய-எனக்கென்ன-விதிசூழ்ந்தது" * என்றும், "தொழும்மனமேதந்தாய்" என்றும், "என்னைத்திமனம் கெடுத்தாய்" என்றும், "உன்னையென்னுள் வைத்தனையென்னிருடிகேசனே" என்றும், "ஏற்பரனென்னையாக்கிக் கொண்டெனக்கே தன்னைத்தந்த கற்பகம்" என்றும், "தாமோதரனை" என்றுமருளிச்செய்த சந்தைகளுமநுஸந்தேயங்கள். (கஎ)

மூ.—அணைந்தவர்கடம்முடனேயாயனருட்காளாம்
குணந்தனையேகொண்டுலகைக்கூட்ட—இணங்கிமிக
மாசிலுபதேசம் செய்மாறன் மலரடியே
வீசுபுகழெம்மாவீடு. (௧௮)

பதவுரை.

அணைந்தவர்கள் தம்முடனே	ஸர்வேஸ்வரனைக்கிட்டி யடிமை செய்கிற நித்யஸூரிகளுடனே
ஆயன் அருட்கு ஆளாம்	கண்ணனுடைய கிருபைக்குவிஷயமாம்படியாக
குணந்தனையேகொண்டு	மோக்ஷப்ரதத்வமாகிற குணமொன்றையேகொண்டு (திருத்தி)
உலகை	நித்யஸம்ஸாரிகளை
கூட்ட	(நித்யஸூரிகளோடு) சேர்க்க
மிக இணங்கி	மிகவும் பொருந்தி
மாசு இல்	குற்றமற்ற
உபதேசம்	உபதேசத்தை
செய்	செய்தருளின
மாறன்	ஆழ்வாருடைய
மலர் அடியே	திருவடித்தாமரைகளே
வீசுபுகழ்	விக்யாதமான கீர்த்தியையுடைய
எம்மாவீடு	ஸர்வப்ரகாரத்தாலும் மேன்மையுடைய மோக்ஷம். (௧௮)

அவ;—பதினெட்டாம்பாட்டு. (அணைந்தவர்கள் தம்முடனே) இதில் - மோக்ஷப்ரதத்வத்தையுபதேசித்த பாசுரத்தை அநுவதித்தருளிச்செய்கிறார். அது எங்ஙனேயென்னில்; இப்படி ஈஸ்வரன் ஸபரிகரமாக விஷயீகரித்து விடுகிற மாத்ரமன்றிக்கே முக்தப்ராப்யமான போகத்தைத் தமக்கும் தம்பரிகரத்துக்கும் தருவானாகப்பாரிக்கிற படியைக்கண்டு எல்லார்க்கும் தம்மோடே யொரு ஸம்பந்தம் ஸித்திக்கும்படி ஸம்ஸாரிகளுக்கு அவனுடைய மோக்ஷப்ரதத்வத்தையுபதேசிக்க, அவர்கள் அத்தைக்காற்கடைக்கொள்ள ஸ்வலாபத்தைப்பேசி த்ருப்தராகிற * அணைவதரவணையிலர்த்தத்

தை "அணைந்தவர்கள் தம்முடனே" என்றருளிச்செய்கிறாரென்கை.

வ்யா;-(அணைந்தவர்கள் தம்முடனே) *அணைவதரவணைமிற்படியே ஸ்ரீபூமிநீளாநாயகனும் அநந்தபோக(ஸாம) பர்யங்கத்திலேயெழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனைக்கிட்டியடிமை செய்கிற அநந்தகருடமுகரானஸூரிஸங்க(ஞ)ங்களோடே கூட்டவென்னுதல்; அன்றிக்கே, "கேசவன்தமர்" என்னும்படி கீழே அந்தரங்கரானவர்கள் † தங்களோடே கூட்டவென்னுதல். தம்முடனே யென்கிறது - ஆழ்வார் தம்முடனே யென்னவுமாம், (தம்முடனே-அணைந்தவர்கள்) "எமர்" என்று தாமபிமாநிக்கும்படியாகத் தம்மோடேயந்வயமுண்டாம்படியானவர்களென்னுதல்.

(ஆயனருட்காளாம் குணந்தனையே கொண்டு) "எப்பொருட்கும் - இணைவனும்" என்று ஆஶ்ரிதஸுலபனாயவதரித்த க்ருஷ்ணனுடைய க்ருபைக்கு விஷயமாம்படியாக. மேலும் "என் கண்ணனை நான்கண்டேனே" என்றாரிறே. ஏவம்விதனானவனுடைய மோக்ஷப்ரதத்வமாகிற குண மொன்றையுமே கொண்டென்னுதல். அன்றிக்கே, "குணங்களையேகொண்டு" என்று பாடமானபோது-"வீடு முதலாம்" என்கிறமோக்ஷப்ரதத்வாதி குணங்களையே யுபாயாந்தரநிரபேக்ஷமாகத் திருத்துகைக்குப்பரிகரமாகக்கொண்டென்னுதல். அவ்வவதாரத்திலேயிறே இடைச்சி, இடையன், தயிர்த்தாழி, கூனி, மாலாகாரர் பிணவிருந்து, வேண்டடிசிலிட்டவர்கட்கெல்லாம் மோக்ஷம் கொடுத்தது. "இணைவனுமெப்பொருட்டும் வீடு முதலாம்" என்று- அவதாரஸாமாந்யமாய், வேடன், வேடச்சி, பக்ஷி, குரங்கு, சராசரங்களுக்கும் மோக்ஷம் கொடுத்தமையுண்டா யிருக்கவும், "ஆயனருட்கு" என்றத்தைப்பற்ற - க்ருஷ்ணாவதாரத்திலே யூன்றிச் சொல்லிற்று. "மஹ்யோகாநந்நாந் - கச்சலோகாநநுத்தமாந்" (௧) என்றிறே பெருமாள் பெரிய உடையாருக்கு ப்ரஸாதித்தது. இப்படியவதாரத்திலே மோக்ஷப்ரதத்வாதி குணங்களைக்கொண்டு திருத்தி.

(உலகைக்கூட்டவிணங்கிமிக) நித்யஸம்ஸாரிகளை நித்யஸூரிகளோடே கூட்டமிகவுமிணங்கி-மிகவும்பொருந்தி. அவர்கள் தூர்க்

(௧) ரா-ஆ-௬௮-௩௦. † (பா) ன் தங்களோடே.

மூ:—எம்மாவீடும் வேண்டாவென்றனக்குன்றாளிணையே
அம்மாவமையுமெனவாய்ந்துரைத்த—நம்முடைய
வாழ்முதலாமாறன் மலர்த்தாளிணைசூடிக்
கீழ்மையற்று நெஞ்சே கிளர். (௧௧)

கதியை ஸஹிக்க மாட்டாமல் அவர்களோடே இணைக்குப் பார்வை போலே ஸஜாதீயராயிணங்கி. [ஆயனருட்காளாம் குணங்களையே கொண்டுலகை - அணைந்தவர்கள் தம்முடனே கூட்ட - மிக விணங்கி] என்றந்வயம். (மிக - இணங்கிமாசி லுபதேசம் செய்மாறன்) க்யாதிலாபபூஜாதிதோஷரஹிதமாயிருக்கும் ஸாத்தோபதேசத்தை மிகவுமடுத்தடுத்துப்பண்ணும்பரிசுத்தஜ்ஞாநரான வாழ்வார். "இணைவனாமெப்பொருட்கும் வீடுமுதலாம்" என்றும், 'பிறவிக்கடல் நீந்துவார்க்கு புணைவன்" என்றும் "புலனைந்துமேயும் பொறியைந்து நீங்கி நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர் - பலமுந்து சீரில் படிமினோவாதே" என்றுமிறே யுபதேசித்தருளிற்று. (மாசி லுபதேசஞ்செய்மாறன் மலரடியே) ஏவம்விதோபதேஷ்டாவான ஆழ்வாருடைய புஷ்பஹாஸஸுகுமாரமான திருவடிகளே. (வீசுபுகழெம்மாவீடு) "பரமே வ்யோமந் - பரமேவ்யோமந்" (௧) என்று விக்யாதமான யஶஸ்ஸையுடைய ஸர்வப்ரகார விலக்ஷணமோக்ஷம், ஆழ்வார்க்கு * செம்மாபாதமிறே எம்மாவீடு, இவர்க்கு மாறன் மலரடியாயிற்று; (௨) *விஸ்ருஜ்ய ஸர்வம் ... ஸ்ரீமத்ததங்க்ரியுகளமிறே. (௧௮)

பதவுரை.

அம்மா	'ஸ்வாமிந்!'
எம்மா வீடும்வேண்டா	எல்லாவகையாலும் மேலான மோக்ஷமும் வேண்டா,
என்றனக்கு	அடியேனுக்கு
உன்தாளிணையே	தேவரீருடைய திருவடிகளே
அமையும் என	போதும், என்று
ஆய்ந்துஉரைத்த	ஆராய்ந்து அருளிச்செய்தவரும்

---

(௧) தை-அ-௧. (௨) ஸ்தோ-௩;

நம்முடைய வாழ்முதலாம்மா றன்	நம்முடைய வாழ்ச்சிக்குக் காரண பூதரான ஆழ்வாருடைய
மலர்த்தாளிணை	திருவடித்தாமரைகளை
சூடி	பிரஸாவஹித்து
சிற்மை அற்று	அநபுருஷார்த்தங்களில்விருப்ப மற்று
நெஞ்சே	மனமே!
கிளர்	மேன்மேலுங் கிளரக்கடவை (ககூ)

அவ;—பத்தொன்பதாம்பாட்டு. (எம்மாவீடும்) இதில்-ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணின பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்; பிறர்க்கு "அவன் மோக்ஷப்ரதன்" என்னு மத்தை யுபதேசிக்கிற வளவில், முதல், நடுவு, இறுதி, இவர் மோக்ஷத்தை ஸ்லாகித்துக்கொண்டு பேசுகையாலே, 'இவருக்கு மோக்ஷத்திலே அபேக்ஷையாயிருந்தது" என்றீஸ்வரன் அத்தைக்கொடுக்கப்புக, தமக்குஉகப்பாகத்தரும் மோக்ஷமும் அஹங்கார கர்ப்ப(மஹூ) மாகையாலே "அபுருஷார்த்தம்" என்று அத்தைக் கழித்து; 'பரமபதஸ்தனுய் ஸுகிக்கவுமாம், ஸம்ஸாரஸ்தனுய் துஃகிக்கவுமாம், எனக்கு அதிலொருநிர்ப்பந்தமில்லை,தேவர்க்குறுப்பாமதுவே எனக்குவடிவாம்படி பண்ணி யருளவேணுமென்று ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிற * எம்மாவீட்டிலர்த்தத்தை "எம்மாவீடும் வேண்டா" என்று துடங்கி யருளிச்செய்கிறுரென்கை.

வ்யா;-(எம்மாவீடும் வேண்டா,வென் றனக்குன் றுளிணையேயம்மாவமையுமெனவாய்ந்துரைத்த)எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷமும்வேண்டா; ஶேஷபூதனுன வெனக்கு 'யாவஞ்சரணௌ- ஶிரஸாயாஸ்யாமி - யாவந்நசரணௌ - ஶிரஸாதாரயிஷ்யாமி" (க) என்னும்படி ஶேஷியானதேவருடைய அங்க்ரியுகளமே யமையுமென்று உபயாநுகூணமாக முக்தியையாராய்ந்து தலைசேர நிஷ்கர்ஷித்தருளிச்செய்த. வாய்ந்தென்று-இவ்வர்த்தத்திலே பொருந்தியென்றுமாம். இது - * எம்மாவீட்டையடியே துடங்கி அடியொத்திணட்டி ;

(க) ரா-அ-கூஅ-அ.

மூ.—கிளரொளிசேர் கீழுரைத்த பேறுகிடைக்க
வளரொளிமால் சோலைமலைக்கே-தளர்வறவே
நெஞ்சைவைத்துச்சேருமெனும் நீடுபுகழ் மாறன்றாள்
முன்செழுத்துவோமெம்முடி. (உ௦)

"நின் செம்மாபாதப்புத்தலைசேர்த்து" என்று தொடங்கி, 'உன்பொன்னடிச்சேர்த்து" என்றிறே தலைக்கட்டித்தாளிருப்பது. "தாளிணையே" என்கையாலே -"தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்றது உசிதம்; திருமுடி-யைத்திருவடிகளுக்குப்பாதபீடமாக்குகிறது அத்யந்தபாரதந்த்ர்யமிறே (நம்முடையவாழ்முதலாமாறன்) நம்முடைய ஸ்வரூபாநுரூபமான ஸம்பத்துக்கடியாமாழ்வார். ஆழ்வாருடைய வாழ்வுக்கடி "தனியேன் வாழ்முதலே" என்கிறவிவர்வாழ்வுக்கு; இவருடைய வாழ்வுக்கடி ஆழ்வாராயிருக்கும். பூவைத்தாளிணைசூடி)(க)"கோலமாமென்சென்னிக்குன்கமலமன்னகுலைகழலே" 'பாதபற்புத்தலைசேர்த்து" என்கிறபடியே செவ்விப்பூச்சூடுவாரைப்போலே பூப்போன்ற அடியிணையைச்சூடி. (கீழ்மையற்று நெஞ்சேகிளர்) ததிதரஸேவையாகிற தாழ்ச்சியற்று ஆழ்வார் ஸேவையாலே ஸத்தைபெற்று மநஸ்ஸே மயங்காமல் மேன்மேலனக்கிளர்ந்துபோரு. (௧௯)

பதவுரை.

கிளர் ஒளிசேர்	அதிசயமான ஒளியையுடையதும்
கீழ் உரைத்த	கீழேசொல்லப்பட்டதுமான
பேறு	புருஷார்த்தம்
கிடைக்க	கிடைப்பதற்காக
வளரொளிமால் சோலைமலைக்கே	நாளுக்குநாள் வளர்ந்து வருவதான ஒளியை யுடையபெருமான் வர்த்திக்கிறதிருமாலிருஞ்சோலை மலைக்கே
தளர்வு அறவே	தளர்ச்சியில்லாமல்
நெஞ்சைவைத்து	மநஸ்ஸை வைத்து [த
சேரும் எனும்	போய்ச்சேருங்க ளென்றருளிச்செய்

(க) திருவாய்-௪-௫-௬.

நீடுபுகழ்	பெரும்புகழையுடைய
மாறன்	ஆழ்வாருடைய
தாள்முன்	திருவடிகளின் முன்பே
எம்முடி	எம்முடைய தலையை
சேலுத்துவோம்	வைக்கக்கடவோம். (௨௰)

அவ;—இருபதாம்பாட்டு (கிளரொளிசேர்) இதில் - "ஸர்வ ப்ரகாரத்தாலும் திருமலையை யாச்ரயிக்கையே புருஷார்த்த ஸாதநம்" என்றுபதேசம் பண்ணுகிறபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அன்றிக்கே ஸ்வயம் புருஷார்த்தமாக வநுபவிக்கிற ப்ரகாரத்தை யநுவதித்தருளிச் செய்கிறாரென்றுமாம். எங்ஙனேயென்னில்; * எம்மா வீட்டில் ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறவளவில் "ஒல்லை" "ஒல்லை" என்று இவர் த்வரிக்கப்புக்கவாறே, இவர் த்வரைக்கநுகுணமாக இங்கேயிவ்வுடம்போடே கிட்டியடிமை செய்யலாம்படி தெற்குத் திருமலையில் தான் நிற்கிறபடியை இவர்க்குக்காட்டிக்கொடுக்க, அதையநுஸந்தித்து அவனிலுமவனுகந்து வர்த்திக்கிற தேசமே ப்ராப்யமென்று நினைத்து, திருமலையாழ்வாரைப் பெரியவாதரத்தோடே யநுபவித்து ப்ரீதராய், ஸம்ஸாரிகளையும் அங்கே யாச்ரயிக்கும்படி உபதேசம்பண்ணுகிற * கிளரொளியிளமையிலர்த்தத்தை "கிளரொளிசேர்" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

வ்யா;-(கிளரொளிசேர் கீழுரைத்தபேறுகிடைக்க) அதிசயமான ஔஜ்ஜ்வல்யத்தை யுடைத்தாய் கீழுக்தமான * எம்மாவீட்டில் ப்ராப்யமானது லபிக்கைக்காக. (வளரொளியால் சோலைமலைக்கே) "பயிலும் சுடரொளிமூர்த்தியை" (க) என்னும்படி, கிளரொளிமாயோனாய், நாள் செல்ல நாட்செல்ல வளர்ந்து வாரா நின்றுள்ள வொளியையுடைய ஸர்வேச்வரன் வர்த்திக்கிற திருமாலிருஞ் சோலைமலைக்கே. (தளர்வறவே நெஞ்சை வைத்துச் சேருமெனும்) பகவத்ஸ்மரணராஹித்யமாகிற வநர்த்தமின்றிக்கே அவன் வர்த்திக்கிற திருமலையிலே மநஸ்ஸை வைத்தாச்ரயியுங்கோளென்றருளிச் செய்யும்.

(க) தி-வாய்-௩-௭-௧.

தளர்வு-மஹோஜ்ஜ்வலப்பல்யம். (அதலே) அதின்றிக்கேயென்ற படி இஷ்டப்ராப்யமான (*பாதபற்புக்கு, *தென்னனுயர் பொருப்பை ப்ராபகமாக விதித்தபடி. இது * வன்முட்சியமயமாகையாலே ஆஸ்ரயிக்கைக்கடியுடைத்து. 'சான்கொள் வீடுதரும் தடங்குன்றமே' இப்படி (நெஞ்சை வைத்துச்சேருமெனும்) நெஞ்சை வைத்துச் சேருமென்கிறதுக்கு மூலம்-"கிளரொளியிளமை" என்கிறபாட்டு. "மாகஸம்ஸாரத்தை மாறுவதற்குமுன்னே" என்றிறே அதுக்கர்த்தமருளிச் செய்தது. "உய்த்துணர்வென்னு மொளிகொள் விளக்கு" (க) என்னக்கடவதிறே. சேருமென்றது-'கிளரொளியிளமை கெடுவதன்முன்னம்' எனகிற முதற்பாட்டு ப்ரதாநமாய், 'போதவிழ்மலையே புகுவது பொருளே" என்னுமளவு மருளிச்செய்ததை.

அதாவது -"சார்வதுசதிரே, "எத்தியெழுவதுபயனே" 'அயன்மலையடைவதுகருமமே" 'திருமலையதுவேயடைவதுதிறமே" "நெறிபடவதுவே நினைவது நலமே" 'ப்ரதக்ஷிணஞ்சகுர்வாணா ஸ்ரீதுகடுபஹாமிநீ - ப்ரதக்ஷிணஞ்ச குர்வாணஸ்சித்ரகூடம்மஹாகிரிம்" (உ)என்னும்படி "வலம்செய்துநாளும் மருவுதல் வழக்கே" 'தொழக்கருதுவதே துணிவதுசூதே" 'போதவிழ்மலையேபுகுவதுபொருளே" என்று -திருமலையோடு, அத்தோடுசேர்ந்த அயன்மலையோடு, புறமலையோடு, திருப்பதியோடு, போம் வழியோடு, 'போகக்கடவோம்"என்று துணிந்த துணிவோடுவாசியற ப்ராப்யாந்தர்க்கதமாய்ஸ்வாநுபவகர்ப்ப(மஹா)பரோபதேசமுகேநவநுபவித்துஇனியராகிறப்ரகாரமும் இவர்க்கிப்பாட்டிலேவிவக்ஷிதம். 'அந்தர்க்கதகுணோபாஸநத்தை மதித்துப்பெருக்கிமூழ்கியமூங்கிழ்மைவலம்குதுசெய்திளமைகெடாமல்செய்யும்க்ஷேத்ரவாஸஸங்கீர்த்தநாஞ்ஜலி ப்ரதக்ஷிணாதிசிந்தநாத்யங்க யுக்தமாச்சுகிறரிண்டாம்பத்தில்" (ங)என்றிறேநாயனருபாயபரமாகவருளிச்செய்தது; ஆகையால், திருமலையை ப்ராப்யதயாவும் ப்ராபகதயாவு மாஸ்ரயிக்கும்படி யருளிச்செய்யக்குறையில்லையிறே. (நெஞ்சைவைத்துச் சேருமெனும் நீடுபுகழ்மாறன்தாள்)இப்படிபாரார்த்தம்கண்டு பரோ

(க) ௩-திருவ-௧௪. (உ) ரா-அ-௯௩-௩. (ங) ஆசார்யஹ்ரு

மூ.—முடியார் திருமலையில் மூண்டுநின்றமாறன்
அடிவாரந்தன்னிலழகர்-வடிவழகைப்
பற்றிமுடியுமடியும் படிகலனும்
முற்றுமநுபவித்தான முன். (உக)

பதேசம் பண்ணுகையாலே நெடுகிப்போருமதாய், அத்தாலே திவ்யமான பராங்குசையுடைய ஆழ்வார் திருவடிகளில், (முன்செலுத்துவோமெம்முடி) அவர் திருவடிகளின்முன்பே நம்முடைய தலைசேரும்படி நடத்துவோம். "ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா" (க)என்னக்கடவதிறே இனி அவரடியறியவேயிறே வேண்டுவது. அன்றிக்கே ஆழ்வார் திருவடிகள் நம்சென்னியிலே சேருவதற்குமுன்னமே நாம்முற்பாடராய் முடியைச்செலுத்துவோமென்றுகவுமாம். (உ0)

பதவுரை.

முடி ஆர்	கொடுமுடிகள் நிறைந்த
திருமலையில்	திருமலையிலே
மூண்டு நின்ற	மண்டி அநுபவித்த
மாறன்	ஆழ்வார்
அடிவாரம்தன்னில்	திருத்தாழ்வரையிலே
அழகர்	அழகருடைய
வடிவு அழகைப்பற்றி	திவ்யவிக்ரஹ ஸௌந்தர்யத்தைப் பற்றி
முடியும்	கிரீடமும்
அடியும்	சிலம்பும்
படிகலனும்	திருமேனியிலுள்ள மற்ற ஆபரணங்களுமாகிய
முற்றும்	முழுமையும்
முன்	முற்காலத்தில்
அநுபவித்தான்	அநுபவித்தார். (உக)

அவ:—இருபத்தோராம்பாட்டு. (முடியார்திருமலையில்) இதில் திருமலையிலே கந்தேஸ்தரான அழகருடைய வழகை, முழுதுமநுபவித்த பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார்.

(க) ஸ்தோ-ர.

அது எங்ஙனேயென்னில்; கீழ் - அயன் மலையோடு புறமலையோடு திருப்பதியோடு உத்தேஸ்யமாகத் திருமலையாழ்வாரையநுபவித்துக்கொண்டு வருகிற * மருளில் வண் குருகூர்வண் சடகோபனான ஆழ்வார் (௧) "வடமாமலையுச்சி" என்கிறபடியே அம்மலையிலே யொருகொடி முடியென்னலாம்படியாயும், அதுக்கவயவமாயிருப்பதொரு கல்பகதரு பஹுஸாகமாகத் தழைத்துப்பூத்தாப்போலேயுமாயிருக்கிற (உ) * மேலிரும் கற்பகமான அழகருடைய திவ்யாவயங்களுக்கும் திருவணிகலன்களுக்கு முண்டான ஸௌ(ஸு)ந்தர்யத்தையும், வேதவைதிக புருஷர்களாலு மளவிடவொண்ணாதபெருமையையும், அத்தையும் விளாக்குலைகொள்ளும்படியான ஆஸ்ரிதவாத்ஸல்யத்தையுமநுபவித்து விஸ்மிதராகிற * முடிச்சோதியிலர்த்தத்தை "முடியார் திருமலையில்" என்று தொடங்கியருளிச்செய்கிறார்.

வ்யா;—(முடியார் திருமலையில் மூண்டு நின்று மாறன்) "விராஜதே வ்ருக்ஷ, ச்ருங்கஸிகரம் தஸதாதுபி:। பூஷிதோ பூபதிரிவ கிரீடேநார்கவர்சஸா - "விராஜதேவ்ருக்ஷாக்ரேஸ்சஸிகரம் தஸதாதுபி: । பூஷிதோபூபதிரிவகிரீடேநார்க்கவர்ச்சஸா" என்கிறபடியே * விண்முதல் நாயகன் நீண்முடியோடொத்த * மதிதவழ்குடுமிதொடக்கமான கொடுமுடிகளாலே மிக்கிருப்பதாய், (௩) "ஆயிரம் பைந்தலையவநந்தன்" என்னும்படியான திருமலையாழ்வாரிலே மண்டியநுபவித்த வாழ்வார். (அடிவாரந்தன்னிலழகர் வடிவழகைப்பற்றி) திருமலையில் திருத்தாழ்வரையிலே * மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையான வழகர் திவ்யாத்மஸ்வரூபம், திவ்யகுணம் முதலாயுள்ளவை யெல்லாம் குமிழிருக்கும்படி அவர் திவ்ய விக்ரஹஸௌந்தர்யத்தை யநுபா(ஸா)வ்ய விஷயமாகப்பற்றி. அத்தையநுபவிக்குமிடத்தில்.

(முடியுமடியும் படிகலனும் முற்று மநுபவித்தான் முன்) "முடிச்சோதியாயுனதுமுகச்சோதி மலர்ந்ததுவோ, அடிச்சோதி நீ நின்ற தாமரையாயலர்ந்ததுவோ, படிச்சோதி யாடையொடும் பல்கலனும் நின் பைம்பொற்கடிச்சோதி கலந்ததுவோ திரு

(௧) தி-மொ-௭-௰-௩ (உ) பெரி-தி-௪-௩-௧௧. (௩) பெ-ரி-தி-௪-௩-௰.

மூ.—முன்னமழகரெழில் மூழ்குங்குருகையர்கோன்
இன்னவனெவன்னவெனக்கரிதாய்த்-தென்ன
சரணக்குறையின் கலக்கத்தைக்கண்ணன்
ஒருமைப்படுத்தானொழித்து. (உஉ)

மாலே கட்டுரையே'' என்று - அபரிச்சேத்யமாம்படியை யருளிச்செய்ததைத யடிமொழிகின்படி. (க) 'ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் - ஸௌகுமார்யம் ஸுவேஷதாம் - ரூபம் ஸம்ஹநநம் லக்ஷ்மீம் - தத்ருசுர்விஸ்மிதாகாரா:'' * என்னக்கடவதிறே; (முடியுமடியும்) கிரீடாதிநூபுராந்தமாக வநுபவித்தபடி. (படிகலனும்) நடுவுள்ளவையாய்ப்படியிலேயுள்ள திருவாணிகலன்களென்னுதல்; படிந்தஸங்க(வ)டிதமானவையென்னுதல். முடிகொண்டான்வெள்ளக்கால்களாய்ப்பின்பு பெருவெள்ளமாய் நட்டாறுய்ச்சுழித்து அரையாற்றுக்கடியானபடி.

இப்படி * ஸௌந்தர்ய ஸாகரதரங்கதாடந தரளிசித்தவ்ருத்தியாய். (முற்று மநுபவித்தான் முன்) முழுதுமநுபவித்தார் முற்காலத்திலேயென்னுதல், முன்னமுன்ன மநுபவித்தாரென்னுதல். முற்றுமென்கிறது-''முடிச்சோதி'' என்கிற பாட்டிலுக்தமானவையெல்லாமென்னுதல்; மற்றும் ''கட்டுரைக்கில்-சுட்டுரைத்த நன்பொன்னுன் திருமேனியொளியொவ்வாது'' என்றும், ''பரஞ்சோதி'' என்றும், 'நின்மாட்டாயமலர்புரையுந்திருவுருவம்'' என்றும், ''மலர்கதிரின் சுடருடம்பாய்'' என்றும், ''போதுவாழ்புனந்துழாய்முடியிஞய்பூவின்மேல்மாதுவாழ்மார்பிஞய்'' என்றும், ''மாசூணச்சுடருடம்பாய்'' என்றும், ''உன் சுடர்ச்சோதி'' என்றும்-முதற்பாட்டின் விவரணமாகவருளிச்செய்தவையாகவுமாம்.

பதவுரை.

முன்னம்	முன்னமே
அழகர்	அழகருடைய
எழில்	வடிவழகிலே
மூழ்கும்	அழுந்தின
குருகையர்கோன்	ஆழ்வார்

(க) ரா-ஆ-கஅ.

இன்ன அளவு என்ன	'இவ்வளவென்று பரிச்சேதிக்க
எனக்கு	(மயர்வற மதிநலமருளப்பெற்ற) எனக்கும்
அரிது ஆய்த்து என்ன	கஷ்டமாயிற்று' என்றருளிச்செய்ய,
கரணக்குறையின் கலக்கத்தை	கரண ஸங்கோசத்தாலுண்டான கல்மஷத்தை (அஜ்ஞாநத்தை)
கண்ணன்	எம்பெருமான்
ஒழித்து	தவிர்த்து (௨௨)
ஓ நமைப்படுத்தான்	அந்தமஸ்ஸை ஒருநீராக்கினான்.

அவ.—இருபத்திரண்டாம்பாட்டு. (முன்னமழகர்) இதில் - "ஸௌந்தர்யாதிகள் † முகந்து கொண்டநுபவிக்கவொண்ணாமைக்கு ஹேது-கரணஸங்கோசம்'' என்று கலங்க, அந்தக் கலக்கத்தை அவன் தீர்த்தபடியைப்பேசின பாசுரத்தை யநுவதித் தருளிச் செய்கிறார்.

எங்ஙனேயென்னில்; கீழ் அழகருடைய அழகு முதலானவற்றை யநுபவிக்கப் புக்கவிடத்தில் விளாக்கொலை கொண்டநுபவிக்க வொண்ணாதொழிய, "அதுக்கடி-விஷயபௌஷ்கல்யம்'' என்றறியமாட்டாமல் "கரணஸங்கோசம்'' என்றநுஸந்தித்து, "இஸ்ஸங்கோசமற்றுத்தன்னையநுபவித்து வாழுகைக்கு உடலாக அவன் பண்ணின ஸ்ருஷ்ட்யவதாராதிகளைத்தப்பி அநர்த்தப்பட்ட நான் இனி அவனைக்கிட்டுகையென்றொரு பொருளுண்டோ'' என்று ஶோகபரவஶராய்க்கூப்பிட்ட * முந்நீர் ஞாலத்தினர்த்தத்தை "முன்னமழகரெழில்'' என்று தொடங்கி யருளிச்செய்கிறார்.

வ்யா.—(முன்னமழகரெழில் மூழ்கும்) முந்துறமுன்னம் ஸ்வரூபகுணாதிகளிலகப்படாதே, அழகருடைய வழகிலே யாயிற்றகப்பட்டது. மூழ்குகையாவது - அந்த ஸௌந்தர்ய ஸாகரத்திலே ஆழங்காற்பட்டமுழுகுகை. இப்படி ஸௌந்தர்யஸாகரத்திலே மக்நரான வாழ்வார். (இன்னவளவென்ன) இவ்வளவென்று பரிச்சேதிக்க. (எனக்கரிதாய்த்தென்ன) * மயர்வறமதிநலமருளப்பெற்ற வெனக்கரிதாயிற்றென்றருளிச்செய்ய. "திருமாலே

† (பா) முகந்துகொண்டு.

௨௯.—ஒழிவிலாக் காலமுடனாகி மன்னி
வழுவிலா வாட்செய்ய மாலுக்கு—எழுசிகர
வேங்கடத்துப் பாரித்த மிக்க நலமுடைய மாறன்
பூங்கழலை நெஞ்சே புகழ். (௨௯)

காட்டுமாயே" என்று—அவனோட்டைச் சேர்த்தியாலே எல்லையில் ஞானத்தனாய் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனானவனைக் கேட்கையாலே, "நமக்குப் பரிச்சேதிக்கவரிது" என்னுமிடந்தோற்றுகிறது.

(காணக்குறையின் கலக்கத்தை) அவனநுபவ பரிகரமாகக் கொடுத்த கரண ஸங்கோசத்தால் வந்த காலுஷ்யத்தை. அஜ்ஞதையை. அதாவது—"அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழியுழல்வேன்" "வினைகளை வேரறப் பாய்ந்தெந்நாள் யானுன்னை யினிவந்து கூடுவன்" "பன்மாமாயப் பல்பிறவியிற் படிகின்றயான் தொல்லைவல்வினைத் தொடர்களை முதலரிந்து நின்மாதாள் சேர்ந்து நிற்பதென்று கொலோ" "பொல்லா வாக்கையின் புணர்வினையறுக்கலறு சொல்லாயானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே" என்றிப்பாஸுரங்களிலருளிச் செய்தவை. (௧) "ஜ்ஞாதிபக்ஷவிநாசம் க்ருத்வா ... ஸம்யதி: லங்காமுந்மூலிதாம் க்ருத்வா கதா த்ரக்ஷ்யதி மாம் பதி:" இறே. இப்படி கரணஸங்கோசமடியாக வந்த கண்கலக்கத்தை. (கண்ணொருமைப்படுத்தாளொழித்து) (௨) "ஸாஸநம் - மாஸக:" என்று—ஆச்ரிதருடைய சோகநிவர்த்தகனான க்ருஷ்ணன் அக்கரணஸங்கோச நிபந்தனமாய் வந்த துக்கத்தைப் போக்கிக்கொடுத்து, அக்கரணங்களைக் கொண்டநுபவிக்கும்படி திருவுள்ளத்தை ஒருதலைக்கும்படி பண்ணினான். "கலைப்பல் ஞானத்தென் கண்ணனைக் கண்டுகொண்டு நிலைப்பெற்றென்னெஞ்சம் பெற்றது நீடுயிர்" என்றத்தை நினைத்தருளிச்செய்தபடி. கரணஸங்கோசமுடைய திர்யக்குக்களும் பரிசர்யை பண்ணும்படியான பெரிய திருமலையில் நிலையைக் காட்டி ஸமாதானம் பண்ணினானாயிற்று. (௨௯)

பதவுரை.

ஒழிவிலாக்காலம்	ஸர்வகாலங்களிலும்
உடனாகிமன்னி	கூடவேயிருந்து

(௧) ரா-ஸு-௨௬-௪. (௨) கீ-௧௮ ௬௬.

மாலுக்கு	எம்பெருமானுக்கு
வழு இலா ஆள்செய்ய	குற்றமற்ற கைங்கர்யம் பண்ண
எழுசிகரம்	ஓங்கின சிகரங்களையுடைய
வேங்கடத்து	திருமலையிலே
பாரித்த	உத்ஸாஹித்து
மிக்கநலம்சேர்	அதிக ஆநந்தமடைந்த
மாறன்	ஆழ்வாருடைய
பூங்கழலை	அழகிய திருவடிகளை
நெஞ்சே	மனமே!
புகழ்	புகழ்வாயாக. (உ௩)

அவ.—இருபத்துமூன்றாம்பாட்டு. (ஒழிவிலாக்காலம்) இதில் கைங்கர்யத்தில் பெரியபாரிப்பைப் பேசினபடியை யநுவதித்தருளிச் செய்கிறார்.

எங்ஙனேயென்னில்; இப்படிப்ராக்ருதிஸம்பந்தத்தினுடையகொடுமையையநுஸந்தித்து ஶோகாவிஷ்டரானவிவருடையஶோகத்தை மாற்றுகைக்காகத்தான் வடக்குத்திருமலையிலே நிற்கிற நிலையைக் காட்டிக்கொடுக்க, "நிலைப்பெற்றென் நெஞ்சம்பெற்றதுநீடுயிர்" என்று அநுஸந்தித்திட்டு, தம்முடைய ஸ்வரூபம் பெற்றவாறே "ஸ்வரூபாநுரூபமாகவடிமைசெய்து வாழவேணும்" என்றுசீலாதிகனை திருவேங்கடமுடையான் திருவடிகளிலே வழுவிலாவடிமைசெய்து வாழப்பாரிக்கிற * ஒழிவில்காலத்தின் தாத்பர்யத்தை "ஒழிவிலாக் காலம்" என்று தொடங்கி யருளிச்செய்கிறார்.

வ்யா.—(ஒழிவிலாக்காலமுடனாய்மன்னி) ஸர்வதேஶஸர்வகால ஸர்வாவஸ்தைகளையும் நினைக்கிறது. (வழுவிலாவாட்செய்யமாலுக்கு) அடிமையிலொன்றும் நழுவுதலின்றிக்கே ஸர்வவித கைங்கர்யங்களும் ஸர்வேஶ்வரனுக்குச்செய்யவேணுமென்று. (எழுசிகரவேங்கடத்துப்பாரித்த) எழுச்சியையுடைத்தான சிகரங்களையுடைய திருமலையிலேபாரித்து.(க) 'பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே | அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதஶ்ச தே' பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே | அஹம் ஸர்வம்

(க) ரா-அ-௩க-உ௫.

கரிஷ்யாமி ஜாக்ரதஸ்ஸ்வபதஸ்சதே" என்று-இருச்சி . . டத்திலே இருவருமான சேர்த்தியிலே அனைத்தடிமையும் செய்யவேணுமென்றாசைப்பட்ட இளையபெருமாளைப்போலே, இவரும் * அலர்மேல் மங்கையுறைமார்வனாய் * ஓங்குவேங்கடம் மேவி * தாழுங்கின்ற * சென்னியோங்குதண் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே யெப்பேர்ப்பட்ட வடிமைகளும் செய்யவேணுமென்று உத்ஸாஹித்த.

(மிக்கநலம் சேர்மாறன்) (க) "அநாக (ஸ)க்ஷஸ்ய - அநுரக்தஸ்ச பக்தஸ்ச" என்று - * ஆராவன்பிளையவனைப்போலே (உ) "ஆராவன்பிலடியேன்" என்னும்படி- நிரவதிக ப(ஸ)க்தியுக்தரான வாழ்வார். (பூங்கழலை நெஞ்சேபுகழ்) அவர் * பூவார்கழல்களிலே யடிமைசெய்தாப்போலே, மநஸ்ஸே! நீயும் அபி(வி)ராமமாய், புஷ்பம் போலே ம்ருதுளமாயிருக்கிற அவர்சரணங்களைஸ்துதித்துப்போரு. அவர் விஷயத்திலேவாசிகமான வடிமையைச்செய்யப்பார். உத்தர வாக்யத்தில்ப்ரதிபாதிக்கிற கைங்கர்யந்தான் ததீயபர்யந்தமாயாயிற்றிருப்பது.

இத்தால் - 'ஒழிவில் காலமெல்லாம்'' என்ற முதற்பாட்டிலர்த்தத்தை யருளிச்செய்தபடி. மேல் "சிந்துபூமகிழும்" என்று - காயிககைங்கர்யத்தையும், "தெண்ணிறைச்சுனைநீர் திருவேங்கடம்" என்று - மாநஸமான வடிமையையும், "ஈசன்வானவர்க்கு" என்று-வாசிகமானவடிமையையும் சொல்லி, "வேங்கடத்துறைவார்க்குநம" என்று - ஸ்வபோ(ஜ)க்த்ருத்வநிவ்ருத்தி சொல்லி, "சமன்கொள் வீடுதரும் தடங்குன்றம்" என்று அக்கைங்கர்யத்தை திருமலையாழ்வாரே தந்தருளுவரென்றும், "திருவேங்கடமாமலையொன்றுமே தொழநம்வினையோயும்' என்று அந்தக்கைங்கர்யவிரோதி நிவ்ருத்தியையும் திருமலையாழ்வாரே பண்ணியருளுவரென்றும், இப்படி முதற்பாட்டிலர்த்தத்தை விவரித்தருளினவைகளும் இவர்க்கு விவக்ஷிதம். (உகு)

(க) ரா-அ-கூச-கஉ. (உ) திவாய்-ரு-கO-உ.

மூ.—புகழொன்று மாலெப்பொருள்களுந்தானய்
நிகழ்கின்றநேர் காட்டி நிற்க—மகிழ்மாறன்
எங்குமடிமைசெயவிச்சித்து வாசிகமாய்
அங்கடிமைசெய்தான் மொய்ம்பால். (உச)

பதவுரை.

புகழ் ஒன்றும் மால்	கீர்த்திபொருந்தினஸர்வேஶ்வரன்
எப்பொருள்களும் தானய் நிகழ்கின்ற	எல்லாப்பொருள்களுந்தானேயாய் விளங்குகின்ற
நேர்காட்டிநிற்க	நேர்மையைக்காட்டிநிற்க,
மகிழ்மாறன்	வகுளாபரணனான ஆழ்வார்
எங்கும் அடிமைசெய இச்சித்து	எவ்விடத்தும்தொண்டுசெய்யவிரும்பி
அங்கு	விரும்பின அவ்வண்ணமே
மொய்ம்பால்	மயர்வற மதிநலமருளப்பெற்ற சீர்மையினல்
வாசிகமாய் அடிமைசெய்தான்	வாசிககைங்கர்யம்பண்ணினர் (உச)

அவ.—இருபத்து நாலாம்பாட்டு. (புகழொன்றுமால்) கீழ் பாரித்த கைங்கர்யத்துக்கநுகுணமாக அவன்ஸர்வாத்மபா(ஹா)வத்தைக்காட்ட, அத்தைப்பேசியடிமைசெய்த பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார்.

எங்ஙனேயென்னில்; கீழிவர் (க) "ஸஹம்வைஸம்கரிஷ்யாமி- அஹம் ஸர்வம்கரிஷ்யாமி' என்றுபாரித்தபடியேஸர்வாத்மபாவத்தைக்காட்டியடிமை கொள்வதாக வொருப்பட்ட ஸர்வேஶ்வரனுக்கு, உத்யோகமாத்ரத்திலே வயிறுநிறையும் அவன்ப்ரக்ருதிக்கும், வாசிகத்துக்கு மேற்பட்டவடிமைசெய்யமாட்டாத தம்ப்ரக்ருதிக்குஞ்சேர வாசிகமாக வடிமை செய்து தலைக்கட்டுகிற * புகழுநல்லொருவனிலர்த்தத்தை "புகழொன்றுமால்' என்று தொடங்கி யருளிச்செய்கிறார்.

வ்யா.—(புகழொன்றுமால்) கீழ் * எண்ணில்தொல் புகழ் வானவரீசனய் 'புகழுநல்லொருவன்" என்று-ஸர்வைஸ்ஸ்துத்யனுமது ஸத்ருஶமாய்ச் சேரும்படியான ஸர்வேஶ்வரன். *பெருழி

(க) ரா-அ-௩௧-௨௫.

லேழுங் காவல் பூண்டபடியாலே புகழும் பொருந்தியிருக்கு மிறே. அன்றிக்கே, இவனையடிமை கொள்ளுமையால்வந்த * அந்தமில் புகழ்பொருந்தின வென்றுமாம். (எப்பொருள்களுந்தானாய் நிகழ்கின்ற நேர்காட்டிநிற்க) ஸமஸ்த வஸ்துக்களும் தானென்னும்படி ஸர்வஶப்த வாச்யனாய் வர்த்திக்கிற ப்ரகாரப்ரகாரி (ஸா) பாவத்தைப் ப்ரகாஶிப்பித்துக்கொண்டு இவர்க்கு ஜ்ஞாந ஸாக்ஷாத்காரமாம்படி நிற்க.

அதாவது- "பொருவில் சீர்பூமி யென்கோ" என்று தொடங்கி யருளிச்செய்த பூதங்கள், "குன்றங்களனைத்து மென்கோ மேவுசீர் மாரியென்கோ" என்றது தொடக்கமான பௌ(ஸா)திகங்கள், "சாதிமாணிக்கமென்கோ" இத்யாதியில்—உஜ்ஜ்வலமானமாணிக்யாதிகள், "அச்சுதன் - அச்சுவைக்கட்டியென்கோ" இத்யாதியில் - ரஸவத்பதார்த்தங்கள், "நான்கு வேதப்பயனென்கோ, சமயநீதி நூலென்கோ நுடங்கு கேள்வியிசையென்கோ" என்றுசா(ஶா)ஸ்திர ஶப்தராஶிகள், "வானவராதி" இத்யாதியில்-மோக்ஷாதிபுருஷார்த்தங்கள், "ஒளிமணிவண்ணன்" இத்யாதியில்-ஜகத்ப்ரதானரான ப்ரஹ்ம ருத்ராதிகள், இவற்றுக்கடைய காரணமான "யாவையும் யவரும் தானே" என்கிற - ப்ரக்ருதி புருஷர்கள், இவற்றையடைய விபூதியாகவுடையனாய், இவற்றிலே அந்தராத்மதயா வ்யாபித்து, "தோய்விலன்" என்று தத்க(தோ)தோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கிறபடியையுமென்கை. (க) "ஜகத்ஸர்வம் ஶரீரம் தெ ஸ்தைர்யம் தெ வஸுதாதலம்। அத்பிஃ கொபஃ ப்ரஸாதஸ்தெ ஸொமஃ ஶ்ரீவத்ஸலக்ஷண - ஜகத் ஸர்வம் ஶரீரந்தே ஸ்தைர்யந்தே வஸுதாதலம்। அத்பிஃகோபப்ரஸாதஸ்தே ஸோமஶ்ரீவத்ஸலக்ஷண என்னும்படியே" இப்படி "புகழு நல்லொருவனென்கோ, பொருவில் சீர்பூமியென்கோ" என்று தொடங்கி, "நான்முகக்கடவுளென்கோ" என்னுமளவும் ஸமஸ்த வஸ்துக்களும் தானென்னும்படி ப்ரகாரமாக வர்த்திக்கிற ப்ரகாரியைக் காட்டிக்கொண்டு நிற்க.

(மகிழ் மாறன்) வகுளத(ய)ரான ஆழ்வார். (எங்குமடிமை செய விச்சித்து) ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே யடிமை செய்யவிச்

(க) பா-யு-௧௨௦-௨௩.

மூ — மொய்ம்பாருமாலுக்கு முன்னடிமை செய்துவப்பால்
அன்பாலாட்செய்பவரையாதரித்தும — அன்பிலா
மூடரைநிந்தித்து மொழிந்தருளு மாறன்பால்
தேடரியபத்திநெஞ்சே செய். (உரு)

சித்து. (வாசிகமாயங்கடிமை செய்தான்) அப்படியாசைப்பட்ட அவ்விஷயத்திலே - "என்கோ" "என்கோ" என்று வாசிகமாகவடிமை செய்தார். (மொய்ம்பால்) (க) "யகூதஃஷவைஃா - யஆத்மதாபலதா" (உ) 'வலந்தரும்' "நிலைப்பெற்றென்னெஞ்சம் பெற்றது நீயிரே" என்று - அவன் தந்த ஆத்மபலத்தாலே ஸத்தையுண்டாகுகிற ஸம்ருத்தியை யபேக்ஷிப்பது. மொய்ம்பு - மிடுக்கு, "கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" என்றும், '(ந) "வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" என்றும், (ச) 'கண்ணாயே மூலதக்த முபிரியவெங்கார்வண்ணனை விண்ணோர் தாம் பரவும் பொழில் வேங்கடவேதியனை" என்றும், "தாய் தந்தையுயிராகின்றாய் - பாகின்றதால் புகழ் மூவுலகுக்கும் நாதனே பரமா தண் வேங்கடமேகின்றாய்' என்றும், 'திருவேங்கடத்தானுக்கு என் கட்பாசம் வைத்தபரஞ்சுடர்ச்சோதிக்கு" என்றும், (ரு) "அம்பரம்" இத்யாதியாலும் - அவனுடைய வுபயவிபூதி நிர்வாஹகத்வத்தையும் அந்தர்வ்யாப்தியையும் ஸர்வகாலவர்த்தித்வத்தையுமருளிச் செய்கையாலே, வ்யாப்த்யநுஸந்தாநரூப வாசிக கைங்கர்யம் * திருவேங்கடத்தென்னானை யென்னப்பனெம்பெருமானுக்கேயிறே பேறுமுபபாது "அதனைப்பற்றவிறே" "அங்கடிமைசெய்தான்" என்றிவரருளிச்செய்தது. (உசு)

பதவுரை.

மொய்ம்பு ஆரும் — மிகுந்த ஆற்றலையுடைய ஸர்வேச்வரனுக்கு

முன் அடிமைசெய்த உவப்பால் — முன்னே வாசிககைங்கர்யம் பண்ணின ஸந்தோஷத்தினால்

(க) (உ) தி-மொ-க-கo. (ந) ச-திருவ-சரு. (ச) தி-மொ-கஎ.
(ரு) தி-மொ-ஆ-அ.

அன்பால் ஆட்செய்பவரை	பக்தி பூர்வகமாகக் கைங்கர்யம் பண்ணுமவர்களை
ஆதரித்தும்	கொண்டாடியும்
அன்பு இலா	பக்தியில்லாத
மூடரை	மூர்க்கர்களை
நிந்தித்தும்	வைதும்
மொழிந்தருளும்	(அவர்களுக்கு ஹிதோபதேசமுக்திகளை) அநுசரிச்செய்த
மாறன்பால்	ஆழ்வார் விஷயத்தில்
நெஞ்சே	மனமே!
தோடரியபத்தி	அத்யுத்கடமான பக்தியை
செய்	பண்ணக்கடவை, (௨௫)

அவ.—இருபத்தஞ்சாம்பாட்டு. (மொய்ம்பாரும்) அடிமை செய்வாரை ஸ்துதித்தும், செய்யாதாரை நிந்தித்தும் போருகிறபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார்.

எங்ஙனேயென்னில்; இப்படி வாசிகமாக வடிமைசெய்யப்பெற்ற ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே, இவ்வடிமையைக் காற்கடைக்கொண்டு உடம்பைவளர்த்துக்கொண்டுதிரியும் கழணிமிண்டரைப் பொடிந்தும், பகவத்குணாநுபவத்தாலேவந்த களிப்புக்குப்போக்குவிட்டு ஆடுவதுபாடுவதா யடிமைசெய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கொண்டாடியும் ஹ்ருஷ்டராய்ச்செல்லுகிற*மொய்ம்மாம்பூம்பொழிலினர்த்தத்தையருளிச்செய்கிறார் "மொய்ம்பாருமாலுக்கு" இத்யாதியாலே.

வ்யா.—(மொய்ம்பாருமாலுக்கு) ஸமஸ்த ஜகதாகாரதயாஶக்தியால் ஸம்ருத்தனான ஸர்வேஶ்வரனுக்கு ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வங்களாலேயிறே பொய்கைமுதலைச் சிறைவிடுவித்துக் கைம்மாவுக்கருள் செய்தடிமை கொண்டதும். (முன்னடிமை செய்துவப்பால்) முன் - *புகழுநல்லொருவனிலே வாசிகமாகவடிமை செய்த அந்த ஹர்ஷத்தாலே, (அன்பாலாட்செய்பவரை யாதரித்தும்) பக்தியாலே கைங்கர்யம் பண்ணுமவர்களையாதரித்தும். அதாவது- "ஓதியுணர்ந்தவர்" என்றும், "முனிவின்றியேத்திக்குனிப்பார்முழு

மூ—செய்யபரத்துவமாய்ச் சீரார்வியூகமாய்த்
துய்யவிபவமாய்த் தோன்றிவற்றுள்—எய்துமவர்க்கு
இந்நிலத்திலர்ச்சாவதார மெளிதென்றான்
பன்னுதமிழ்மாறன் பயின்று. (உகூ)

துணர் நீர்மையினர்'' என்றும், ''ஆர்வம் பெருகிக்குனிப்பாரமரர் தொழப்படுவார்'' என்றுமாதரித்தும். (க) 'மாயந்திகேசித் த்யாயந்திகேசிந் நிந்திகேசித் - காயந்திகேசித் ப்ரணமந்திகேசிந் நியந்திகேசித்'' என்றதிறே. (அன்பிலா மூடரை நிந்திக்கும் மொழிக்கருளும்) * பக்தியிலாதபாவிகளான வஜ்ஞரை யநாதரித்து நிந்த்தித்தும். அதாவது - ''எழுந்தும் பறந்தும் துள்ளாதார் தம்மால் கருமமென்'' என்றும், ''மண்கொளுலகிற்பிறப்பார் வல்வினை மோதமலைந்து'' என்றும், 'அலைகொள்நரகத்தழுந்திக்கிடந்துழைக்கின்றவம்பர்'' என்றும், ''தம்பிறப்பால் பயனென்னே சாதுசனங்களிடையே'' என்றும், ''என்சவிப்பார் மனிசரே'' என்றும், 'உத்தமர்கட்கென்செய்வார்''என்றிறே அருளிச்செய்தது. (உ)'ஈமல்லை ஈஸல்ய-மார்க்கம்ப்ரதர்ஸய''என்னும்படியிறே அதிலுட்புகாதாரை யநாதரித்தபடி.

(மாறன்பாவித்யாதி) இப்படி அஜ்ஞானவர்களை நிந்தித்து அவர்களை அஸத்கர்மங்களினின்றும் நிவர்த்திப்பிக்கப் பார்த்த வாழ்வார் விஷயத்திலே பெறுதற்கரிதான பக்தியை மநஸ்ஸே பண்ணு. (உரு)

பதவுரை.

செய்ய பரத்துவமாய்	விலக்ஷணயமான பரத்வமாய்
சீர் ஆர்வியூகமாய்	மேன்மைபொருந்திய வ்யூஹமாய்
துய்யவிபவமுமாய்	பரிஶுத்தமான விபவமுமாய்
தோன்று இவற்றுள்	காணப்படுகிற இவற்றினுள்
எய்துமவர்க்கு	ஆஶ்ரயிக்குமவர்களுக்கு
இந்நிலத்தில்	இவ்விபூதியிலே
அர்ச்சாவதாரம்	அர்ச்சாவதாரமானது

(க) ரா-ஸு-சுக-கச,

எளிது என்றான் — ஸுலபமென்றருளிச்செய்தார், (அவர்யாரென்னில்)

பயின்று பன்னுதமிழ் மாறன் — வேதங்களோடே செறிந்து ஆராயப் படுவதான தமிழ் வேதத்தையே நிருபகமாக வுடையரான ஆழ்வார். (உசு)

அவ:—இருபத்தாறும்பாட்டு. (செய்யபரத்துவமாய்) இதில்-அர்ச்சாவதார பர்யந்தமான ஸௌலப்யத்தை ஸம்ஸாரிகளைக்குறித்து உபதேசிக்கிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; "தாமேவிழுவாரைத் தடிகொண்டடிக்கையன்றோ நாமும் கைவிடுகை" என்றுமுன்புதம்மாலே பொடியப்பட்ட நாட்டாரிழவுபொறுக்கமாட்டாத க்ருபாதிசயத்தாலேமீண்டும் அவர்களுக்கு அவன்ஸௌலப்யத்தையுபதேசிக்கைக்காக பரவ்யூஹவிபவங்களையடைவே யருளிச்செய்துகொண்டு சென்று; நீங்களுகந்தபடியே யுகந்தருளப்பண்ண அத்யந்தஅப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தோடொக்க விரும்பும்படியான ஆஸ்ரயத்தாலே உங்களோடே புரையறக்கலந்து ஸர்வாபேக்ஷிதங்களையுங் குறைவற வுபகரிக்குமர்ச்சாவதாரத்திலேயாம் பெரியுங் கொள்கிற *செய்யதாமரைக்கண்ணனில் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் "செய்யபரத்துவமாய்" இத்யாதியாலேயென்கை.

வ்யா.—(செய்யபரத்துவமாய்) (க) "[illegible] - பர: பராணாம் பரம:" என்றுஇதரவிலக்ஷணமானவழகிய பரத்வமாய். (சீரார் வியூகமாய்) (உ) "ஏஷ நாராயணஸ்ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:-ஏஷநாராயணஸ்ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:" என்னும்படியிறே வ்யூஹமிருப்பது, "சீர்" என்று-குணமாதல், ஐஸ்வர்யமாதல் (துய்ய விபவமாய்) ப்ரத்யக்ஷாநுபவயோக்யமான தூய்மையை யுடையவிபவமாய். "செய்யதாமரைக் கண்ணன்" "அமரர்குல முதல்" என்னும், "கடங்கடற்கிடந்தான்" என்னும் "அரவமேறியலைகடலமரும் துயில்கொண்ட வண்ணல்" என்னும், "தென்னிலங்கையெரியெழச் செற்றவில்லி" என்னும் "யாதவர் நாயகன்றன்

(க) வி-பு-க-உ-கஉ (உ) ஹரிவம்ஶே ககடு-சுஉ,

மூ—பயிலுந் திருமால் பதந்தன்னினெஞ்சம்
தயலுண்டு நிற்குந்ததியர்க்கு-இயல்வுடனே
யாளாளுர்க்காளாகு மாறனடியதனில்
ஆளாகார் ஜன்மம் முடியா. (௨௭)

னை" "குரவைகோத்தகுழகனைமணிவண்ணனைக் குடக்கூத்தனை" என்றுமிறே பரத்வாதிகளை யருளிச்செய்தது. (தோன்றிவற்றுள்) இப்படிதேசகாலாதி(யி)காரிநியமங்களையுடைத்தாய், ப்ரமாணங்களாலேப்ரத்யக்ஷிக்கலாம்படியிருக்கிறவிவற்றில்வைத்துக்கொண்டு.

(எய்துமவர்க்கிந்நிலத்தில்)இவ்விபூதியிலே கிட்டியாஶ்ரயிக்குமவர்களுக்கு. (அர்ச்சாவதாரமெளிதென்றான்) ஸௌலப்யத்தாலே அர்ச்சாவதாரம் ஸமாஶ்ரயணத்துக்கு, சக்ஷுர்விஷயமுமாய், நித்யஸந்நிதியுமுண்டாகையாலே அதிஸுலபமென்கிறார். "நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள்கடல்வண்ணன்" என்றத்தை நினைக்கிறது. (௧) "எளிவரும் இணைவனுமென்றவைபரத்வமாம்படி அவனாகும் ஸௌலப்ய(ஞ்)காஷ்டையைக்காட்டி" என்றாரிறே. (௨) "ஸ்ரீத்யக்தேந விஷ்ணோஸ்ஸ்ருஷ்டோ நரவராத்மஜ: - ஸ்ரீமத்யாயதநே விஷ்ணோஶ்ஶிஶ்யே நரவராத்மஜ:" என்றும், (௩) "நாராயணஜுஹாவாஜ்யம் -நாராயணமுபாகமத்" என்றும்-விபவத்தாலே அர்ச்ச்யமானவேற்றமுண்டாயிறேயிருப்பது. இப்படியர்ச்சாவதார வைபவத்தையருளிச்செய்தவர்தாம் இன்னாரென்கிறார் (பண்ணுதமிழ்மாறன்பயின்றென்று). அதாவது—சேதநரோடேசெறிந்து ஆராயப்படுமதான த்ரவிடத்தையே நிரூபகமாக வுடையரானவாழ்வார், (௪) "பண்ணியதமிழ்" என்னும்படி ப்ரமாண சரமத்தைவெளியிட்டாப்போலே, ப்ரமேயசரமமான அர்ச்சாவதார†மெளிதென்று வெளியிட்டருளினாரென்கை. (௨௮)

பதவுரை.

பயிலும்	ஆஶ்ரித ஸங்கஸ்வபாவனான
திருமால்	ஶ்ரிய:பதியினுடைய
பதம் தன்னில்	திருவடிகளில்

(௧) ஆசார்யஹ்ரு. (௨) ரா-அ-௬-௪. (௩) ரா-அ-௬-௧.
(௪) தி-வாய்-௨-௭-௩. † இனிதென்று.

நெஞ்சம் தயலுண்டு நிற்கும்	மனம்பதிந்து நிற்கிற
ததியர்க்கு	பாகவதர்களுக்கு
இயலுடனே ஆளானார்க்கு	முறையே அடிமையாயிருக்குமவர்களுக்கு
ஆளாகும்	அடிமைசெய்யப்பெற்ற
மாறன்	ஆழ்வாருடைய
அடி அதனில்	திருவடிகளில்
ஆள் ஆகார்	அடிமைசெய்பவர்களுடைய
சன்மம்	பிறவி
முடியா	நசிக்கமாட்டாது. (உஎ)

அவ.—இருபத்தேழாம்பாட்டு. (பயிலும் திருமால்) இதில் - ததீயரைப்பத்தும்பத்தாக உத்தேஶ்யராக வநுஸந்தித்த பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்; கீழ்-ஸௌலப்ய காஷ்ட்டையை யுபதேசிக்க, அத்தையும்காற்கடைகொள்ளுகையான ஸம்ஸாரிகளோட்டை ஸஹவாஸத்தால் வந்த வெக்காய மாறும்படி, தனக்குப்பாதரேகைபோலே பரதந்த்ரரான ஸ்ரீவைஷ்ணவர்களை அவன் காட்டக்கண்டு அவர்கள் திருவடிகளிலே தலையைமடுத்து அவர்கள் தான் அவன்படிகளிலே பலபடியாக மண்டியிருக்கிறபடியைக்கொண்டாடி, அவர்களெல்லை நிலத்திலே சென்றினியராகிற * பயிலுஞ்சுடரொளியின் தாத்பர்யத்தை "பயிலும் திருமால்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை. (க) "மஹாத்மாநோ மாம்... கச்சதாமாதுலகுலம்" ஐதிவத் - இதிவத்.

வ்யா.—(பயிலுந்திருமால்) ஆஶ்ரித ஸங்கல்பஸ்வபாவனான ஸ்ரீயஃபதியினுடைய திருவடிகளிலே. இத்தால் - "திருநாரணன்" என்றத்தைச்சொல்லுகிறது. பயிலும்திருவென்று - எம்பெருமானோடே ஸர்வகாலமும் ஸம்ஶ்லிஷ்டையான ஸ்ரீயென்னவுமாம். பதந்தன்னில் நெஞ்சம் தயலுண்டு நிற்கும் ததியர்க்கென்றது - "பாதம் பணிய வல்லாரை" என்றபடி; நெஞ்சம் தயலுண்டுநிற்கையாவது - திருவடிகளில் போக்யதையை யநுஸந்தித்து ஸஹாநுராகயுக்த - ஸ்நேஹார்த்த்ரதாயுக்த சித்தராய் தங்கிஷ்ட்ட

(க) ரா-அ-க-க.

மூ.— முடியாதவாசைமிக முற்றுகரணங்கள்
அடியார் தம்மைவிட்டவன்பால் - படியாவொன்
றொன்றின் செயல் விரும்ப வுள்ளமெலாந்தாம் விரும்பத்
துன்னியதே மாறன்றன் சொல். (உஅ)

ராயிருக்கை யென்றபடி. (க) "உன்னித்தாமரைக்கட்கண்புருகி நிற்குமது" என்னக்கடவதிறே. அன்றிக்கே தயலென்று - தையலாய், திருவடிகளிலே பக்தபாவராயிருக்குமவர்களென்றாகவுமாம். ததியர்க்கென்று - தத்ஸம்பந்தமே நிரூபகமாயுள்ளவர்களுக்கென்கிறது. "பயிலுந்திருவுடையார்" என்றும், "தாளுந்தடக்கையும் கூப்பிப்பணியுமவர்" என்றும், "பாதம்பணியவல்லார்" என்றும், "திருநாரணன் தொண்டர்" என்றுமிப்புடைகளிலே நிரூபகமாயிருக்கை.

(இயல்வுடனே யாளானார்க்காளாகும் மாறனடியதனில்) வடிவழகிலும் ஆயுதாபரணாதிகளினொப்பனையழகிலும் தோற்றடிமையாயிருக்குமவர்களாகையே ஸ்வரூபமென்றிருக்குமாழ்வார் திருவடிகளில். (ஆளானார்) அடிமையானார். (சன்மம் முடியா) ஜந்மம் பிறவாது. (௬) "அமர்கிழ்மேலெழு பிறப்பும் விடியா வெந்நரகத்தென்றும் சேர்தல் மாறினர்" என்னும்படி ஆழ்வார் ஸம்பந்தமுடையவர்களுக்கிறே ஸம்ஸார ஸம்பந்தம் முடிவது. * இவையுமோர் பத்துசொன்னாலிறே சன்மம்செய்யாமே இலங்குவான் யாவருமேறுவது, அல்லாதார்க்கு ஸித்தியாதிறே; ஆகையால் ததீயசேஷத்வத்தின் எல்லைநிலத்திலே நிற்கிறவாழ்வார் திருவடிகளை யாஸ்ரயிக்கவே ஜந்மஸம்ஸார (ஸம்)பந்த நிவ்ருத்திபூர்வகமாகவே மோக்ஷஸித்தியாமென்றபடி. (உஎ)

பதவுரை.

முடியாத ஆசைமிக	ஆராதகாதல் அதிசயிக்க
முற்றுகரணங்கள்	ஸர்வேந்த்ரியங்களும்
அடியார்தம்மைவிட்டு	பாகவதர்களைவிட்டு
அவன்பால் படியா	அந்த ஸர்வேஸ்வரனிடத்தில் படிந் [து,

(க) தி வாய்-எ-க-௧௦
† (பா) பக்தபாவராய் ஸ்தப்தராய் நிற்குமவர்.

ஒன்று ஒன்றின் செயல் விரும்ப - ஒரு கரணம் ஒரு கரணத்தின் வ்ருத்தியை ஆசைப்பட

உள்ளது எல்லாம் தாம் விரும்ப - கரணங்களின் விடாய் முழுதும் தாம் உடையராகையாலே விரும்ப

மாறன் தன் சொல் - ஆழ்வாருடைய ஸூக்தியானது

அன்றியது - நெருக்கி முற்றது. (உஅ)

அவ.—இருபத்தெட்டாம்பாட்டு. (முடியாதவாசைமிக) இதில் கரணங்களும் தாமும் பெருவிடாய்ப்பட்டுப் பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; * பயிலும் சுடரொளியிலே -உத்தேஸ்யராக வநுஸந்திக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்வரூபத்துக்கு நிரூபகத்வேந ப்ரஸ்துதமான பகவத் ஸௌந்தர்யாதிகள்விடாய்க்கு உத்தம்பகமாய், அத்தாலேவிடாய்கரைபுரண்டு, அநுபாவ்யமான பூஷணாயுத விக்ரஹ குணசேஷ்டிதாதிகளைச்சொல்லி, தாமும் தம்முடைய கரணக்ராமமுமாய்முழுமிடறுசெய்து கூப்பிடுகிற * முடியானேயிலர்த்தத்தை ஸங்க்ரஹித்தருளிச் செய்கிறார் "முடியாதவாசைமிக" இத்யாதியாலேயென்கை.

வ்யா.—(முடியாத வாசைமிக) * மயர்வற மதிநலமருளுகையாலே அடியேதொடங்கிவருகிற * ஆராதகாதலானது அநுபவாலாபத்தாலே யதிஸயிக்க, கீழே - பாகவதஸ்வரூப நிரூபணத்துக்குஉடலாக பகவத்குணங்கள்ப்ரஸ்துதமாக, அத்தாலேபக்தியபி(வி)வ்ருத்தியாக. (முற்றுகரணங்கள்) பாஹ்யாப்யந்தரஸகலகரணங்களும். "முடியாதவாசைமிகு-முற்று" "கரணங்கள்" என்று கரணவிசேஷணமாகவுமாம். (அடியார் தம்மைவிட்டு) "எம்மையாளும் பரமர்" "எம்மையாளுடைநாதர்" என்றும், "எம்மையாளுடையார்கள்" "எம்பெருமக்கள்" "எம்மையளிக்கும்பிராக்கள்" "எம்மைச்சன்மசன்மந்தரங்காப்பர்" "எம்மைநாளுய்யக்கொள்கின்ற நம்பர்" "எந்தொழுகுலந்தாங்கள்" "அடியாரெம்மடிகள்" "அடியார் தம்மடியாரடியோங்

கள்" என்று - இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் சேஷிகளாக வநுஸந்திக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களைவிட்டு. (அவன்பால்படியா) படிந்து; புருஷார்த்தகாஷ்டையைக் கொலைக்கும்படியான வவனிடத்திலே யவகாஹித்து. கரணங்களும் தாமும் தத்விஷயத்திலே ப்ரவணராய். (க) "மாமைதந்த்ரஸ்ராகாஹிகம்ஹிமைத: | ஸம்ஸ்ப்ருஶ்யம்ஸகாரோஹ்ய- காத்ரைஸ்ஸோகாபிகர்ஶிதை: | ஸம்ஸ்ப்ருஶ்யம் ஸகாமாஹம்" என்னும்படியாக (ஒன்றொன்றின் செயல் விரும்ப வுள்ளதெலாம் தாம்விரும்ப) "நெஞ்சமே நீணகராகவிருந்தவென் தஞ்சனே" "வாசகமேயேத்தவருள் செய்யும் வானவர் தம்நாயகனே" "கைகளாலாரத்தொழுதுதொழுதுன்னை" "கண்களாற்காணவருங்கொல்" என்று - வாக்பாணி சக்ஷுஸ்ஸ்ரோத்ரங்களான விந்த்ரியங்களை மநோவாக்பாணி சக்ஷுர்வ்ருத்திகள் ஆசைப்படும்படியாகிற இந்த்ரியவ்ருத்தி நியமமின்றிக்கே அவனை யநுபவிக்க வேண்டும்படியானபெருவிடாயை யுடையவாய்; (உள்ளதெல்லாம் தாம்விரும்ப) கீழ்ச்சொன்ன கரணங்களின் விடாயைக் கரணியானதாமொருவரு முடையராய் அவனையநுபவிக்கவாசைப்பட. அதாவது - "உன்னையேயவிவின்றியாதரிக்குமெனதாவி" என்றும் "பாவியேன்நெஞ்சம் புலம்பப்பலகாலும்கூவியும் காணப்பெறேனுனகோலம்" என்றும், "உன்னையெந்நாள் கண்டுகொள்வன்" என்றும், "உன்னையெஞ்ஞான்று பொருந்துவன்" என்றும், "உன்னையே இருந்திருந்தெத்தனைகாலம் புலம்புவன்" என்றுமிறே யிவருடையப்ராவண்ய மிருக்கும்படியென்கை. (துன்னியதே மாறன்றன் சொல்). இப்படிகரண க்ராமத்தினுடையவும்கரணியான வாழ்வார் தம்முடையவும்ஆர்த்த்யதிஶயத்தையுடைத்தான வாழ்வார் ஸூக்தியான வித்திருவாய்மொழி, "மிடைந்தசொல்" என்னும்படி ஸப்தநிபிடமாயிருந்தது. துன்னுதல் - நெருக்கம். (௨௮)

(க) ஜ௪-௯௨-௩௦-௧௮.

மூ.—சொன்னாவில் வாழ்புலவீர் சோறுகூறைக்காக
மன்னுதமானிடரை வாழ்த்துதலா-லென்னாகும்
என்னுடனேமாதவனையேத்துமெனும் குருகூர்
மன்னருளால் மாறும் சன்மம். (உகூ)

பதவுரை.

சொல் நாவில் வாழ்புலவீர்	நாக்கில் கவநசாதுரியமுடைய பண்டிதர்களே!
சோறுகூறைக்காக	சோற்றுக்கும் துணிக்குமாக
மன்னுத மானிடரை	அல்பாயுஸ்ஸுக்களான மநுஷ்யர்களை
வாழ்த்துதலால்	கவிபாடிப் புகழ்வதனால்
என் ஆகும்	எனனபயனும்?
என்னுடனே	என்னுடன்கூடி
மாதவனை	ஸ்ரியஃபதியை
ஏத்தும் எனும்	ஏத்துங்களென்று பரோபதேசம் பண்ணின
குருகூர்மன்	திருக்குருகூர்க்கு நிர்வாஹகரான ஆழ்வாருடைய
அருளால்	க்ருபையாலெ
சன்மம்மாறும்	பிறவி ஒழியும். (உகூ)

அவ.—இருபத்தொன்பதாம்பாட்டு. (சொன்னாவில்) இதில்-அஸேவ்யஸேவையநர்த்தமென்றும், பகவத்ஸேவை ப்ராப்தமென்றும் பேசுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; * முடியானேயில் முடியாதவாசையை யுடையராய்க்கூப்பிட்டவர், "தம்கூப்பீட்டுக்குத் துணையாவாருண்டோ?" என்று லௌகிகரைப்பார்த்த விடத்தில்அவர்கள்பகவதர்ஹகரணங்களைக்கொண்டுக்ஷுத்ரமநுஷ்யர்களைக்கவிபாடித்திரிகிறபடியைக் கண்டு, அதுபொறுக்கமாட்டாமல், "இப்படி வகுத்தவிஷயத்தை விட்டுஅப்ராப்த விஷயத்தைக் கவிபாடுகையீடல்ல" என்று அவர்

ஏதுக்கு? ஓம் மறுளிச்செய்ய. இவையும் அவர்கள்படியிலே; இவை யும், அவர்களைவிட்டு வலைப்படுத்தச்சொல்லி ப்ரீதராகிற *சொன் ஞல் விரோதத்தினர்க்கத்தைக் கொடுத்து ''சொன்னுலே'' இத்யா தியாலே யருளிச்செய்கிறுரென்கை.

வ்யா. —(சொன்னுல் வாழ்புலவீர்) பகவத்ஸ்தோத்ரம் பண் ணுகைக்குப் பரிகரமான நாக்கைக்கொண்டு அவனை ஸ்துதித்து ஜீவிக்கிற புலவீர்காள்! நீங்கள் விசேஷஜ்ஞரல்லிகோளோ? (சோறு கூறைக்காக மனுஷ்யமானிட்டரை வாழ்த்துதலாவென்னுதும்) அப ஹூச்சாதாதிகளையுள்ள க்ஷுத்ர ப்ரயோஜநத்துக்காக க்ஷயிஷ்ணுக் களான க்ஷுத்ரமனுஷ்யரைக் கவிபாடி ஸ்தோத்ரம் பண் ணுகையாலென்ன ப்ரயோஜநம் ஸித்திக்கும்? த்ருஷ்டாத்ருஷ்ட பலங்களிலொன்றும் ஸித்தியாது, அநர்த்தமே ஸித்திக்குமென்ற படி. ''என்றுமெத்தனை நாளைக்குப்போதும் புலவீர்காள் மன்று மனிசரைப்பாடிப்படைக்கும் பெரும்பொருள்'' என்றருளிச்செய்த தை நினைக்கிறது. (க) ''ஸோஹஸஹஸ்ரஹஸ்தாதாரௌ - கோஸ்மு ஸ்ப்ரதாரம்'' (உ) ''ஸஹஸ்ரநயிலென நாஞ்ஜீயஹஸௌதந் ஹூதி நூஸு - ஸர்வாநர்த்த நோத்ருஷ்ட்வா ஸமேத்யப்ரதிநந்த்யச'' என்னும்விஷயமன்றே.

(என்னுடனே மாதவனையேத்து மெனும்) ''திருவேங்க டத்தென்னுனை யென்னப்ப னெம்பெருமானுளனுகவே - என் னுவிலின்கவி யாதொருவர்க்கும் கொடுக்கிலேன்'' என்றும், ''ஓராயிரம் பேருமுடைய பிரானையல்லால் மற்றியான்கிலேன்'' என்றும், ''பாடிப்போய்க்காயம் கழித்தவன்றாளிணைக் கீழ்புகுங்காத லன்மாயமனிசரையென்சொல்லவலலேனெனவாய்கொண்டே'' என் றும், ''வாய்கொண்டு மானிடம்பாடவந்த கவியேனல்லேன்'' என்றும் ''உலகம்படைத்தான் கவி'' என்றும் - தம்முடைய வங்யவிஷயப்ரவ்ரு த்தி நிவ்ருத்தியையும் ஸ்வவ்ருத்தியான பகவத்ஸ்தோத்ர ப்ரவ்ரு த்தியையும் முன்னிட்டு, ''(௩) திருமங்கையாள் கவியானையென்னோடே கூட *என்திருமாலான ஸ்ரிய:பதியை * ''கவிசொல்ல வம்மின்'' என்று பரோபதேசம் பண்ணி, பரோபதேச நிரபேக்ஷமா

(க) ரா-யு-உக-எ. (உ) ரா-அ-கசு-உஎ. (௩) தி-வி-சஅ.

† தொகுத்து.

மூ—சன்மம்பலசெய்து தானிவ்வுலகளிக்கும்
நன்மையுடைமால் குணத்தை நாடோறும்—இம்மையிலே
ஏத்துமின்பம்பெற்றே னெனுமாறனையுலகீர்
நாத்தழும்ப வேத்துமொருநாள். (௱)

கத்திருந்தின தம்படியையும் பேசினவராய். (குருகூரித்யாதி) திருநகரிக்கு நாதரான வாழ்வாரருளாலே அந்யஸேஷத்வத்துக்கடியான ஜந்மம் கழியும். ✻ கண்டுசன்மம் கழிக்கவேண்டிற்று ஆழ்வார்க்கு. இவர்களுக்கு (க) "சூழ்பிறப்பும் மருங்கே வரப்பெறுமே" என்றவாழ்வாரருளாலே பிறவிப்பெருங்கடல் சுவறிற்று. மாறுகையாவது - ஸவாஸநமாகப்போகை. "இவையுமோர் பத்தேற்கும் பெரும்புகழ் சொல்லவல்லார்க்கில்லை சன்மமே" என்றிறே இத்திருவாய்மொழிக்கு பலஶ்ருதியும். (உக)

பதவுரை.

உலகீர்	"இவ்வுலகிலுள்ளவர்களே!
சன்மம்பல செய்து	அநேக அவதாரங்களைச்செய்தருளி
தான் இவ்வுலகு அளிக்கும்	தானே இவ்வுலகங்களை ரக்ஷிக்கிற
நன்மையுடை	நன்மைபொருந்திய
மால்	ஸர்வேஶ்வரனுடைய
குணத்தை	கல்யாணகுணங்களை
நாடோறும்	எப்போதும்
இம்மையிலே	இந்த ஜந்மத்திலே
ஏத்தும் இன்பம்பெற்றேன்	துதிப்பதனாலுண்டான ஆநந்தத்தை அடைந்தேன்"
எனும் மாறனை	என்றருளிச்செய்த ஆழ்வாரை
ஒருநாள்	ஒருநாளாயினும்
நா தழும்ப	நாக்கு தழும்பேறும்படி
ஏத்தும்	ஸ்தோத்ரம் பண்ணுங்கள்.

அவ—முப்பதாம்பாட்டு. (சன்மம்பலசெய்து) இதில்-ப
உபகரணனுவெனக்கொரு குறைகளுமில்லை யென்ற பாசு

யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; இதரரைக்க விபாடுகைக்கு அநர்ஹகரணனுமாத்ரமன்றிக்கே, பகவத்விஷயத்தைக் கவிபாடுகைக்கர்ஹகரணனாகவும்பெற்றேன்; எனக்கினிவேண்டுவதுண்டோவென்று ஹ்ருஷ்டராகிற*சன்மம்பலபலவினர்த்தத்தை ஸங்க்ரஹித்தருளிச்செய்கிறார். "சன்மம்பலசெய்து" இத்யாதியாலேயென்கை.

வ்யா.—"சன்மம் பல பல செய்து" என்கிற பாட்டு இத்திருவாய்மொழிக்கு உயிர்ப்பாட்டாகையாலே அத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (சன்மம்பலசெய்தென்று) "சன்மம் பலபலசெய்து" என்றும் (க) "பஹூநி மே வ்யதீதாநி - பஹூநிமேவ்யதீதாநி" (உ) "பஹுதா விஜாயதே - பஹுதாவிஜாயதே" என்றுஞ்சொல்லுகிறபடியே அஸங்க்யாதமான வவதாரங்களைப் பண்ணி. (சன்மம்பல செய்து தான்) அகர்மவஶ்யனான தான்" (௩) கௌஸல்யா ஜநயத் - கௌஸல்யா ஜநயத்" (ச) "ஜாதோஹம் யத்தவோதராத் - ஜாதோஹம் யத்தவோதராத்" என்னும்படி ஆஶ்ரிதார்த்தமாக வஸங்க்யாதமான வவதாரங்களைப்பண்ணி. (இவ்வுலகளிக்கும்) தன்வாசியறியாதஇஸ்ஸம்ஸாரிகளை ரக்ஷிக்கும். ரக்ஷணந்தான் - விரோதிநிரஸந பூர்வகமாயிறே யிருப்பது. (ரு) "குணவாந் கஶ்சவீர்யவாந் - குணவாந் கஶ்சவீர்யவாந்" இறே. விரோதிகளைப்போக்கி ஈரக்கைபாலேதடவி ரக்ஷிக்கும் நன்மையுள்ளது ஸர்வேஶ்வரனுக்கிறே. (சா) "நஹி பாலந ஸாமர்த்ய்ம்ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம் - நஹிபாலந ஸாமர்த்த்யம்ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம்" "உலகில் வன்மையுடைய வரக்கரசுரரை மாளப்படைபொருத நன்மையுடையவன்சீர்" என்றத்தைச் சொல்லுகிறது (இவ்வுலகளிக்கும்நன்மையுடையமால் குணமென்று). "சீர்பரவப்பெற்றநான்" என்றத்தை (மால்குணத்தை நாடோறுமிம்மையிலேயேத்துமின்பம்பெற்றேன்) என்கிற [illegible]ஒருதேசவிசேஷத்திலே (எ) "விபந்யவ: - விபந்யவ:" "வானோர்பரவும்" என்று ஸ்துதித்து, (அ) "ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந் ஸஹ ப்ரஹ்மணா - ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந் ஸஹப்ரஹ்மணா" என்றநுபவிக்கும் குணங்களை இவ்விபூதியிலே ஸ்தோத்ரம் பண்ணுகையாலுண்டான வானந்தத்தைப் பெற்றேன். "குறைவு முட்டுப் பரிவி

[illegible] (உ) யஜு-தை-௩-கஎ (௩) ரா-பா-கஅ-௧௦ (ச) வி-பு-ரு-௩-௧ச.

மூ.—ஒருநாயகமாயுலகுக்குவானோர்
இருநாட்டிலேறியுய்க்குமின்பம்—திரமாகா
மன்னுயிர்ப்போகந்தீதுமாலடிமையே யினிதாம்
பண்ணி யிவைமாறனுரைப்பால். (௩௧)

டர் துயர் துன்பமல்லல் துக்கந்தளர்வுக்கேடுகளின்றி அம்ருதாநந்தமக்நரானவர்'' என்றிறே ஆசார்யஹ்ருதயத்திலுமருளிச்செய்தது.

(ஏத்துமின்பம் பெற்றேனெனுமாறனை யுலகீர் நாத்தழும்ப வேத்துமொருநாள்) இப்படி அவன் கல்யாணகுணங்களை ஸ்துதிக்கப் பெற்றேனென்றருளிச் செய்தவாழ்வாரை, லௌகிகராயுள்ளவர்களே! நாத்தழும்பேறும்படி ஸ்துதியுங்கோள்; அதுதான் பலநாள் வேண்டா, ஒருநாளமையும். (௧) "வீவில்காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன் வீவிலின்பம் மிகவெல்லை நிகழ்ந்தனன் மேவியே" (௨) "பகலிராப்பரவப்பெற்றேன்" என்கிற நிர்ப்பந்தம்வேண்டா நாத்தழும்பவேத்து (மொருநாள்) ஸக்ருத்ஸேவிக்கவமையும், ஸர்வதாஸரஸமாயிருக்கும். (௩) "நாவினால் நவிற்றின்பமெய்தினேன்" என்னும் விஷயமிறே. (௩௦)

பதவுரை,

உலகுக்கு	இந்தலோகத்துக்கெல்லாம்
ஒருநாயகமாய்	ஏகாதிபதியாய்
உய்க்கும் இன்பம்	அநுபவிக்கு மின்பமும்
வானோர்	தேவர்களுடைய
இருநாட்டில்	பெரிதான ஸ்வர்க்கலோகத்திலே
ஏறி	ஏறி
உய்க்கும்	அநுபவிக்குமின்பமும்
திரம் ஆகா	நிலைநிற்கமாட்டா;
(அன்றியும்)	
மன் உயிர்போகம்	நித்யமான ஆத்மாநுபவமும்
தீது	பொல்லாங்கு;
மால் அடிமையே	பகவத்சேஷத்வமே

---

(௧) தி-வாய்-௪-௫-௩. (௨) தி-வாய்-௬-௪-௫. (௩) கண்ணி-௨.

இனிது ஆம்	போக்யமாயிருக்கும்;
இவை	என்ற இவ்வர்த்தங்கள்
மாறன் பன்னி உரைப்பால்	ஆழ்வார் ஆராய்ந்து அருளிச்செய்கையாலே (அறியப்பட்டன வென்று சேஷபூரணம்.) (௩௧)

அவ;—முப்பத்தோராம்பாட்டு. (ஒருநாயகமாய்) இதில்-ஐஸ்வர்யாதிகளினல்பாஸ்திரத்வ தோஷத்தைப்பேசின ஒருநாயகத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; "சீர் பரவப்பெற்றநான்" என்று-கீழ், பகவதநுபவத்தாலே ஹ்ருஷ்டரான வாழ்வார், அந்தஹர்ஷத்தாலே இவ்விஷயத்தையொழிய ஐஸ்வர்யாதிகளிலே மண்டிக்கிடக்கிறவர்களைக்குறித்து, மீளவும், இவற்றினுடைய அல்பாஸ்திரத்வாதி தோஷங்களையறியாதே இவற்றிலே மண்டுகிறார்களென்று இவற்றின்தோஷங்களைப்பரக்கப்பேசாநின்றுகொண்டு, பரமபுருஷார்த்தபூதனை ஸ்ரிய:பதி திருவடிகளையாஸ்ரயியுங்கோளென்று பிறர்க்கு உபதேசித்துச் செல்லுகிற*ஒருநாயகத்தினர்த்தத்தை ஸங்க்ரஹித்து, "ஒருநாயகமாய்" இத்யாதியாலேயருளிச் செய்கிறாரென்கை.

வ்யா.—(ஒருநாயகமாயென்றுதொடங்கி) 'உலகுக்கு-ஒருநாயகமாய்- உய்க்குமின்பமும்,வானோரிருநாட்டிலேறியுய்க்குமின்பமும் திரமாகாது" என்கிறார். "ஒருநாயகமாயோடவுலகுடனாண்டவர்" என்றத்தை நினைக்கிறது. ஸார்வபௌ(ஹௌ)மராய் (க) "ராஜ்ஞ ஸஹ்யாதவைத்ருஸ்ய-பாண்டரஸ்யாதபத்ரஸ்ய" என்று ஏகாதபத்ரமாக நாட்டை நடத்துகிறவத்தால் வருகிறஸுகமும், "எனைத்தோருகங்களு மிவ்வுலகாண்டு கழிந்தவர்" என்றும், 'வாழ்ந்தார்கள் வாழ்ந்தேநிற்பரென்பதில்லை" என்றுஞ்சொல்லுகையாலே அஸ்திரமாயிருக்கும். வானோரிருநாட்டிலேறியுய்க்குமின்பமாவது-தேவர்களுக்கு வாஸஸ்தாநமாய்ஐஹிகபோக(ஸௌம)விலக்ஷணமான ஸ்வர்க்காத்யநுபவம். அதுவும் (திரமாகா) (உ) 'தே தம் புக்த்வா ஸ்வர்க்கலோகம் விசாலம் க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி'தேதம்

(க) ரா அ ௨-௭ (உ) கீ-௯-௨௧.

மூ.—பாலரைப்போல் சீழ்கிப்பர னளவில்வேட்கையால்
காலத்தால் தேசத்தால் கைகழிந்த—சால
வரிதானபோகத்திலாசை யுற்று நைந்தான்
குருகூரில் வந்துதித்தகோ. (௬௨)

புக்த்வாஸ்வர்க்கலோகம் விசாலம் க்ஷீணேபுண்யேமர்த்யலோகம் விஶந்தி" என்கிறபடியே அஸ்திரமாயிருக்கும். "குடிமன்னுமின் சுவர்க்க மெய்தியும் மீள்வர்கள்" என்றதைப்பின் சென்றபடி. (இருநாட்டிவித்யாதி) ஸுக்ருதவிஶேஷத்தாலே ப்ராபித்தாலும் ஸ்திரமாகாது. இது - * ஆப்ரஹ்மபவநம் புநராவ்ருத்தியென்னு மதுக்குமுபலக்ஷணம். (மன்னுயிர்ப்போகம்தீது). "இறுகலிறப்பு" என்று ஸங்கோசரூபமோக்ஷமாகையாலே அதுவும் தோஷயுக்த மாயிருக்கும். மன்னுயிர்ப்போகமென்கையாலே - நித்யமான வாத்மாநுபவம் கீழிலவைபோலே அஸ்திரபோகமன்றிக்கே நித்ய போகமாயிருந்ததேயாகிலும், பரப்ரஹ்மாநுபவத்தைக்குறித்துச் சிற்றின்பமாயிருக்குமாகையாலே - தீதென்றது.

(பன்னியிவைமாறனுரைப்பால் - மாலடிமையே யினிதாம்) இவற்றினல்பாஸ்திரத்வாதி தோஷங்களை யாராய்ந்து ஆழ்வாரருளிச்செய்கையாலே, ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுடைய தாஸ்யமே ஸரஸமாயிருக்கும். "திருநாரணன்றாள் காலம்பெறச்சிந்தித் துய்மினோ" என்றும், "செம்மின்முடித்திருமாலை விரைந்தடிசேர்மினோ" என்றும், "கடிசேர் துழாய் முடிக்கண்ணன் கழல்கள்நினைமினோ" என்றும், "பனைத்தாள் மதகளிறட்டவன்பாதம் பணிமினோ" என்றும் "மணிமின்னுமேனி நம்மாயவன்பேர்சொல்லி வாழ்மினோ" என்றும், "ஆழ்ந்தார்கடற்பள்ளியண்ணலடியவராமினோ" என்றும், "பணங்கொளரவணையான் திருநாமம்படிமினோ" என்றும், "கொடிமன்னுபுள்ளுடையண்ணல்கழல்கள்குறுகுமினோ" என்றும் "மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில் வீடஃதே" என்றும் "அஃதேயுய்யப்புகுமாறு" என்று மருளிச்செய்தவை யெல்லாவற்றையும் நினைத்து "மாலடிமையேயினிதாம்" என்றருளிச்செய்தது.

பதவுரை.

குருகூரில் — திருநகரியில்
வந்து உதித்த — வந்து அவதரித்த

கோ	ஸ்வாமியான ஆழ்வார்
பாலரைப்போல்	(விரும்பினபொருள் உடனே வேணுமென்று அழுகிற) பாலர்களைப்போல
சீழ்கி	சிணுங்கி
பரன் அளவில் வேட்கையால்	எம்பெருமான் பக்கலிலுள்ள ஆசையாலே
காலத்தால் தேசத்தால் கைகழிந்த	காலதேசங்களாலே கைகழிந்துபோன
சால அரிதான	மிகவும் துர்லபமான
போகத்தில்	கைங்கர்யாநுபவத்தில்
ஆசை உற்று	ஆசை அதிகரிக்கப்பெற்று
நைந்தான்	வருந்தினார். (௩௨)

அவ.—முப்பத்திரண்டாம்பாட்டு (பாலரை)இதில்-தேஶகால விப்ரக்ருஷ்டமான வவன் படிகளைத் தத்தத் தேஶ கால விஶிஷ்டமாம்படி யநுபவிக்கவேணுமென்றுதரித்த பாசுரத்தையநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; மூன்றுகளையும் பறித்துச்சங்காயமும் வாரினபயிர் ஶதஶாகமாகப் பணைக்குமா போலே, "வீடு மின் முற்றவும்" "சொன்னால் விரோதம்," "ஒருநாயகம்" என்கிற மூன்று திருவாய்மொழியிலே ஸம்ஸாரிகளைக்குறித்து உபதேசித்தவிடத்தில்அவ்வுபதேசம் அவர்கள்திருந்துகைக்குடலன்றிக்கே, தமக்குரஸாந்தரங்களாலே யபிபூ(ஹூ)தமாய்க்கிடந்த * முடியானேயில் விடாய்க்கு உத்தம்ப(ஹ)கமாய், பக்தி ஶதஶாகமாகப் பணைக்க, அத்தாலே தேசகால விப்ரக்ருஷ்டங்களான வவன்படிகளை இப்போதே கண்டநுபவிக்கவேணுமென்னுமபேக்ஷைபிறந்து, அபேக்ஷித்தபடி யநுபவிக்கப்பெறாமையாலே தாம்நோவுபட்டுச்செல்லுகிறபடியை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிற * பாலனாயேழுலகினர்த்தத்தை யருளிச்செய்கிறார் "பாலரைப்போல்" இத்யாதியாலே யென்கை.

வ்யா.-(பாவைரைப்போல் சீழ்கி) ப்ராப்தாப்ராப்த விவேகம் பண்ணவறியாதபாலர், தேஶத்தாலே விப்ரக்ருஷ்டமான அம்புலியம்மானையும், காலத்தாலேகைகழிந்துபோனப (ஹ)லாதிவஸ்துக்களையும் "அப்போதேகொடுவந்துதரவேணும்" என்று (க) "பாலஸ்ய ருதிதம்பலம்" என்னும்படி ரோதநத்தை முன்னிட்டபேக்ஷிக்குமாபோலே, இவரும் தேஶகால விப்ரக்ருஷ்டமானபராவஸ்தாத்யநுபவங்களை அப்போதேபெறவேணுமென்று (உ) "அழுவன்தொழுவன்" என்னும்படி பாலர்செய்யுமத்தைச் செய்து. (ந) "ஸ்வீகாரீம் ஸகாலஸ்யாத் வநாத்ப்ரத்யாகதம்புநஃ- அபிதாநீம்ஸகாலஸ்ஸ்யாத் வநாத்ப்ரத்யாகதம்புநஃ" என்றிறே ஆசையுடையார் பவிஷ்யத்காலத்தை ஸமகாலமாக வபேக்ஷித்தபடியிருப்பது; அப்படியே இவர்பூதகாலத்திற்படிகளை யபேக்ஷிக்கிறார். (பானளவில்வேட்கையால்) ஸர்வஸ்மாத்பரனிடத்தில்பரபக்தியாலே.

(பரன்) "பாதங்கள்மேலணிபைம்பொற்றுழாயென்றேயோது மாலெய்தினள்" என்றத்தை நினைக்கிறது. காலத்தால் தேசத்தால் கைகழிந்தவையாவன - தேஶவிப்ரக்ருஷ்டமான பரவ்யூஹங்களும், காலவிப்ரக்ருஷ்டமான விபவமும். பரவிஷயபக்தி ஏகதேஶமாய், "ஆவிஸ்யன்னவசம் செய்யுமண்ணலார் தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே மாலுமால்" என்றுதொடங்கி, "கண்ணன் கழல்துழாய் பொன் செய் பூண் மென்முலைக்கென்று மெலியும்" என்று - விபவப்ராவண்யமிறே விஞ்சவருளிச்செய்தது. அவையாவன - "குரவைபிணைந்தவர் நல்லடி" என்றும், "தேவர்கள் மாமுனிவரிறைஞ்சநின்றசேவடி" என்றும், "குடக்கூத்தனார் தாளிணை" என்றும், "அகலிடங்கிடந்தவர் பாதங்கள்" என்றும், "திருமாதினைத்தடங்கொள்தார் மார்பினில் வைத்தவர்தாள்" என்றும், "இலங்கைநகரம்பரியுய்த்தவர் தாளிணை" என்றும், "கண்ணன் கழல்" என்றுமிப்படி விபவத்தை யடிவிடாமலிருக்கிறபடி இது வென்கை.

ஸம்ப்ரோதஸாயியையும் பீயூஷஹாரியையும் (ச) "ஸ்மேர யஶாயீஹமவாந ஸ்வீய ஸ்ரீஷாஹரணத்வரா - ஸம்ப்ரோதஸாயீ பகவாந் பீயூஷாஹரணஸ்ததா" என்றுவிபவங்களோடேயிறே ஸஹ

(க) (உ) தி-அ-தி. (ந) ரா-அ-உச-கூள.

மூ.-கோவானவீசன் குறையெல்லாந்தீரவே
ஓவாதகாலத்துவாதிதனை-மேவிக்
க்கழித்தடையக்காட்டிக் கலந்த குணமாறன்
வழுத்துதலால் வாழ்ந்ததிந்தமண். (௩௩)

படித்தது; இங்கும் - "மடந்தையை வண்கமலத்திருமாதினைத்தடங் கொள் தார்மார்பினில் வைத்தவர்" என்று - (க) *‡விண்ணவரமுதுணவமுதில்வரும் பெண்ணமுதை ஸ்வீகரித்தபடி சொல்லிற்று.

(சாலவரிதானப்போகத்தி லாசையுற்றுநைந்தான்) இப்படி "தேசகாலங்களால் †கைகழிந்திருக்கிறது தத்கால வர்த்திகளுக்கும் தத்ரஸ்தரானவர்களுக்குமேயிறே அநுபாவ்யமாயிருப்பது" என்றறியாமல், அபிநிவேசாதிஶயம் மறுபாடுருவும்படி யவகாட(ஐ)மாய், அத்தையப்போதே பெறுமையாலேஸிதிலரானார். இதுக்கடி- *குருகூரில் வந்துதித்த கோவாகையாலே. திருவயோத்யையில் பிறப்புராமபக்தியை ஜநிப்பிக்குமா போலே, திருநகரியில்பிறப்பும்பராபி(ஹி)நிவேசத்தைப்பிறப்பிக்குமிறே.(கோ)ராஜா. ஶ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் ராஜாவென்றபடி. இவ்விடம் அராஜகமாகாமைக்காயிற்று ஆழ்வாரங்குநின்றும் போந்து ஆவிர்ப்ப(ஊ)வித்தது. (௩௨)

பதவுரை.

கோவான ஈசன்	ஸர்வஶேஷியான எம்பெருமான்
குறைஎல்லாம்தீரவே	எல்லாக்குறைகளும் தீரும்படி
ஓவாதகாலத்து	விச்சேதியாமல் நடந்து செல்லுகிற காலத்தில்
உவாதிதனை	அதிசமான உபாதியை
மேவி கழித்து	இவரோடு சேர்ந்து கழித்து,
அடையக் காட்டி	கீழ் அபேக்ஷித்த அபதாநங்களையெல்லாம் ஸாக்ஷாத்கரிப்பித்து
கலந்த குணம்	(தம்முடன்) கலந்த குணத்தை
மாறன் வழுத்துதலால்	ஆழ்வார் துதிக்கையாலே
இந்தமண்	இவ்வுலகம்
வாழ்ந்தது	வாழ்த்தைபெற்றது. (௩௩)

(க) தி-மொ-கூ-க-உ. † "திருவடிகளில் திருத்துழாய்" அதிகபாடம்.

அவ. முப்பத்து மூன்றாம்பாட்டு. (கோவானவீசன்) இதில்-காலோபாதியைக் கழித்து அநுபவிப்பித்த படியை யருளிச்செய்கிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். -அதெங்ஙனே யென்னில்; இப்படி தேசகால விப்ரக்ருஷ்டங்களான தன்படிகளை யநுபவிக்கவேணுமென்றாசைப்பட்டவிவர்க்கு, * காலசக்கரத்தானாகையாலேகாலோபாதி(யி)யைக்கழித்துவர்த்தமானகாலம்போலேயாக்கிக் கொடுத்து, இவர்ஸத்தையே தனக்கெல்லாமாம்படியிருக்கிற தன்ப்ரணயித்வகுணத்தையும்அவனநுபவிப்பிக்கவே, எல்லாம் பெற்றாராய், இந்தப்ரணயித்வ குணத்தையு மநுபவித்து அந்தப்ரீதி ப்ரகர்ஷத்தாலே அத்தையே பேசிச்செல்லுகிற *கோவைவாயாளினர்த்தத்தை ஸங்க்ரஹித்தருளிச் செய்கிறார் "கோவானவீசன்" இத்யாதியாலேயென்கை.

வ்யா,-(கோவானவீசன்) "ஆழ்வாரைத்தரிப்பிக்கவே ஜகத்துஉஜ்ஜீவிக்கும்" என்று ஸர்வநிர்வாஹகனான ஸர்வேஶ்வரன். (குறையெல்லாம் தீரவே)கீழ்த்திருவாய்மொழியிலே தேசகாலாதீதபோக்யவஸ்துவையநுபவிக்கப் பெறாத துக்கத்தாலேவந்தஸங்கோசமெல்லாம்நிவ்ருத்தமாம்படி,*காலசக்கரத்தானாகையாலே) ஒவாதகாலத்துவாதிதனை)விச்சேதியாமல் நடந்துசெல்லுகிற காலத்தில்அதீதமானவுபாதியை. (மேவிக்கழித்து) (க) "அகாலகாலஸ்ய - அகாலபலிநஃ" என்னும்படி இவரோடே சேர்ந்து அந்தக்காலோபாதியைக் கழித்து.

(அடையக்காட்டி) கீழபேக்ஷித்தவபதானங்களைக் காட்டியென்னுதல்; அன்றிக்கே, "பூசும்சாந்து" "கண்ணியெனதுயிர்" இத்யாதிகளிலே - கரணங்களும் கரணியானவிவர்ஸத்தையும் தனக்கு அங்கராகாபரணாபாதிகளானபடியையும் காட்டினபடியாகவுமாம். "உன்னைமுற்றுமகத்தடக்கி யாவியல்லல் மாய்த்ததே" என்று-என்னுயிரானது நிர்த்துக்கமாயிற்றென்றருளிச்செய்யும்படி (கலந்தகுணம்) "உன்னதென்னதாவியுமென்னதுன்னதாவியும்,இன்ன வண்ணமேநின்றாயென்றுரைக்க வல்லேனே" என்றிப்படி

(க) நா-யு கஉக-கஅ.

௯௪. மண்ணுலகில் முன்கலந்து மால்பிரிகையால்மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல்பித்தேறி-எண்ணிடில்முன்
போலிமுதலான பொருளையவனாய்நினைந்து
மேல்விழுந்தான் மையல்தனின்வீறு. (௯௪)

ஏகத்தத்வமென்னலாம்படி, லோகத்தகுணம் - ஸம்ச்லேஷித்த ப்ரணயித்வகுணத்தை.

(மாறன்வழுத்துதலால்) ஆழ்வார், ஸத்தை பெற்று "யானுமெம்பிரானை யேத்தினேன்யானுய்வானே" என்று இப்படிகிழ் வ்யஸநம் தீர்ந்து ஸ்தோத்ரம்பண்ணுகையாலே. (வாழ்ந்ததிந்தமண்) இந்த ஜகத்திலுள்ளாரும் ஸத்தைபெற்று வாழ்ந்தார்கள்; "வையம் மன்னிவீற்றிருந்து" என்றிறே பலஸ்ருதி. அன்றிக்கே, (க) "விஷ்ணுநாவோ ணவதீ - விஸ்வம்பராபண்யவதீ" என்று ஆழ்வார் கால்தரித்திருக்கையாலே பூமி பாக்யவதியாய் வாழ்ந்ததாகவுமாம். (௯௩)

பதவுரை.

மண் உலகில்	இவ்விபூதியிலே
மால்	எம்பெருமான்
முன்கலந்து	முன்னே கூடி
பிரிகையால்	பிரிந்ததனால்
மாறன்	ஆழ்வார்
பெண்நிலைமையாய்	பெண்தன்மையை யுடையராய்
காதல் பித்து ஏறி	பக்தியாலே பித்து தலைமண்டைகொண்டு
எண்ணிடில்	எண்ணுமிடத்தில்
முன்போலி முதலானபொருளை	முன்னே உபமானவஸ்துக்கள் முதலியவற்றை
அவனாய் நினைந்து	அவனாகவே நினைத்து
மையல் தனின்வீறு	வ்யாமோஹாதிஸயத்தாலே
மேல்விழுந்தான்	மிகவும் அபிநிவிஷ்டரானார். (௯௪)

---

(௬)

அவ॰ — முப்பத்து நாலாம்பாட்டு. (மண்ணுலகில்) இதில் - ஸத்ருஶ பதார்த்தங்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையும் அவனாக ப்ரமித்துப்பேசின பாசுரத்தையநுவதித்தருளிச் செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; கீழ் "காதல் மையலேறினேன்" என்று - ப்ரணயித்வகுணத்தை யநுபவித்து விளைந்த ப்ரீதிப்ரகர்ஷம் ஆஶ்ரயத்தையு மழிக்கும்படி கரைபுரளப்பெருக, அத்தையரையாறுபடுத்துகைக்காக அவன்போகிற்க, பிரிந்தது அவனையாகையாலே அவஸந்நராய் ராமகுணங்களுக்கிட்டுப்பிறந்த பரதாழ்வான் ஒரு வேடன் வாயிட்டு ராமசரித்ரத்தைக் கேட்டு தரித்தாப்போலே இவ்வாழ்வாரும் அவனோடு ஸத்ருஶபதார்த்தங்களையும் ஸம்பந்திபதார்த்தங்களையுமவனென்று பிச்சேறும்படி தமக்குப்பிறந்த அவஸ்தாவிஶேஷத்தை அந்யாபதேஶத்தாலே பேசின * மண்ணையிருந்து துழாவியினார்த்தத்தை "மண்ணுலகில்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.-(மண்ணுலகில் முன்கலந்துமால் பிரிகையால்) பூலோகமான இவ்விபூதியிலே முன்னம் * கோவைவாயாளிலே பெரும்பேறான ஸம்ஶ்லேஷத்தை யுண்டாக்கி ஸர்வேஶ்வரன் விஶ்லேஷிக்கையால். (மாறன்பெண்ணிலைமையாய்) ஆழ்வார் அபலையினுடைய அவஸ்தையையடைந்து. (காதல்பித்தேறி) "என்பெண்கொடியேறிய பித்தே" என்னும்படி பக்தியாலே காதல்பித்தேறி. (௧) "ஸ்வவிஷஹோரசேத - க்வசிதுத்ப்ரமதே" இத்யாதிப்படியே சித்தவிப்ர(ஹ்ர)மம் பிறக்க.

(எண்ணிடில்) அந்தப்பித்தேறின ப்ரகாரத்தை நிரூபிக்கில்·அன்றிக்கே, (பித்தேறியெண்ணிடில்) பித்தேறின ப்ரகாரத்தோடே தாம் நிரூபிக்கப்புகில். (முன்போலிமுதலானபொருளைபவனாய் நினைந்து) அதாவது — * மண்ணையிருந்து தொடங்கி, * அயர்க்குமளவும் ப்ரதிபாதிக்கப்படுகிற முன் கண்ட ஸத்ருஶ பதார்த்தங்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையும் அவனாகவே ப்ரதிபத்தி பண்ணி யென்கை. இதெத்தாலே யென்னில்; (மையல்தனின் வீறு - மேல்விழுந்தான்) வ்யாமோஹாதிஶயத்தாலே அவற்றிலே அபி(ஸி)நிவிஷ்ட—

(௧) ஶ்ரீ-ஆ-௯௦-௯-௯.

மூ.—வீற்றிருக்குமால் விண்ணில் மிக்கமயல்தன்னை
யாற்றுதற்காத்தன் பெருமையானதெல்லாம்—தோற்றவந்து
நன்றாகலக்கப்போற்றிநன்குகந்து வீறுரைத்தான்
சென்றதுயர்மாறன் தீர்ந்து. (௫௫)

ரானார். இவருடைய வபிநிவேசாதிசயமிருந்தபடி யென்னென்று
ஜீயருக்கும் இதுகண்டு ஸஹிக்கவொண்ணாதபடியாயிற்று.

ஸத்ருசபதார்த்தங்களும் ஸம்பந்தி பதார்த்தங்களுமாவன;- ஸத்ருசபதார்த்தம் விண், கடல், ஞாயிறு, செந்தீ, தண்காற்று, ஒன்றிய திங்கள், நின்றகுன்றம், நன்று பெய்யும்மழை, கூத்தர், நீறுசெவ்வேயிட, திருவுடைமன்னர், உருவுடை வண்ணங்கள், கருவுடைத்தேவில்கள், விரும்பிப்பகவர், கரும்பெருமேகங்கள்; ஸம்பந்தி பதார்த்தங்களாவன - நாறுதுழாய், வாமனன்மண், கோமளவான் கன்று; ஸம்பந்திபதார்த்த ஸத்ருசங்கள் - போமிளநாகம், வாய்த்த குழலோசை, ஆய்ச்சியர் வெண்ணெய்" என்றுவிப (ஸூ)ஜித்தாயிற்று ஆத்தானருளிச் செய்யும்படி. (௫௪)

பதவுரை.

விண்ணில்	பரமபதத்தில்
வீற்றிருக்கும்	எழுந்தருளியிருக்கிற
மால்	எம்பெருமான்
மிக்கமயல்தன்னை	(ஆழ்வாருடைய) அத்யந்த வ்யாமோஹத்தை
ஆற்றுதற்கா	தணிவிக்கைக்காக
தன் பெருமையானதெல்லாம் தோற்றவந்து	தன்குணவிக்ரஹாதி வைபவங்களெல்லாம் ப்ரகாசிக்க இங்கே வந்து
நன்று கலக்க	(தம்முடன்) நன்றாகக்கலக்க,
போற்றி நன்கு உகந்து	ஸர்வேச்வரனைக்கண்டு வணங்கி மிகவும் களிப்படைந்தவராய்
மாறன்	ஆழ்வார்
சென்றதுயர் தீர்த்து	நிகழ்ந்த துக்கங்களை ஒழிந்து

வீறு உரைத்தான் (உபயவிபூதியிலும் தாம் வ்யாப்தனான ஸர்வேஶ்வரனுடைய பெருமையை அருளிச் செய்தார். (௩௫)

அவ.—முப்பத்தஞ்சாம்பாட்டு. (வீற்றிருக்குமால்) இதில்—அப்ராக்ருத விபூதியிலஸாதாரணாகாரத்தைக் காட்ட வநுபவித்து ஹ்ருஷ்டராகிற படியைப் பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; * வல்வினைதீர்க்கும் கண்ணனான ஸர்வேஶ்வரன், ஸத்ருஶஸம்பந்தி வஸ்துக்களையு மவனாக வநுஸந்திக்கும்படி பிறந்த இவருடைய பித்து ஶமநமாகத் தீரும்படி விலக்ஷணஸ்வரூபகுண விக்ரஹ விபூஷணாயுதபத்நீ பரிஜநவிஶிஷ்டனாய்க்கொண்டு பரமபதத்திலே வ்யாவ்ருத்தி தோற்றவிருக்கிறமேன்மையும், லீலா விபூதியிலுள்ளாரெல்லாரையும் ஸ்ருஷ்ட்யநுப்ரவேஶாதிகளாலே ரக்ஷிக்கிறவளவன்றிக்கே மநுஷ்யாதிரூபேண வந்தவதரித்து ரக்ஷித்துக்கொண்டு போருகிறபடியையும்இவர்க்குக்காட்டிக்கொடுத்து, ஸர்வேஶ்வரன் இவரோடேவந்துபூர்ணஸம்ஶ்லேஷம்பண்ணிபருள, அத்தைக்கண்டு *சூழ்விசும்பணிமுகிலுக்கு மேல் அங்கேசென்றால் பண்ணுகிறமங்களாஶாஸநத்தை, இங்கேயிருந்து அவனுடைய வுபயவிபூத்யைஶ்வர்யத்துக்கும் மங்களாசாஸநம்பண்ணி க்ருதக்ருத்யராய், "உபயவிபூதியிலுமென்னோடொப்பாரில்லை" என்று ஹ்ருஷ்டராகிற *வீற்றிருந்தேழுலகில் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் "வீற்றிருக்குமால் விண்ணில்" இத்யாதியாலே யென்கை.

வ்யா;-(விண்ணில்-வீற்றிருக்குமால்) (க) "ஆஸீநஃ காஞ்சநே திவ்யே ஸவ ஸிம்ஹாஸநே ப்ரபுஃ - ஆஸீநஃ காஞ்சநே திவ்யே ஸஸிம்ஹாஸநே ப்ரபுஃ" (உ) "ராமஸ் ஸத்ரமயே ஶ்ரீமாந் ஸஹஸீதாம் ப்ரவேஶயத் - ராமம் ரத்நமயே பீடே ஸஹஸீதம் ப்ரவேஶயத்" என்றும், (௩) "வஸிஷ்டோ வாமதேவஶ்ச ஜாபாலிரத காஶ்யபஃ - வஸிஷ்டோ வாமதேவஶ்ச பரிவார்ய மஹாத்மாநம் மந்த்ரிணஸ் ஸமுபாவிஶந்" என்றும்சொல்லுகிற படியே * வானக்கோனாய்* விண்ணோர் பெருமானாய் * மையகண்

(க) ரா-அ-௪-உ௫. (உ) ரா-யு-௧௨௮-௧௯, ௩)

ஞான் மலர்மேலுறை வாளுறைமார்பனாய் * வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்லவெழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரன். (மிக்க மயல் தன்னை) ஆழ்வாருடைய அத்யந்தவ்யாமோஹத்தை. "மயற்பெருங்காதலென் பேதைக்கென்செய்கேன்வல்வினையேனே" என்று பெற்றவர்களும் பேசிக்கைவிடும்படியான மிக்கமயல்தன்னை. (ஆற்றுதற்கா) தைப்பிடித்த தான் இத்தையாற்றுகைக்காக.

(தன் பெருமையான தெல்லாம் தோற்றவந்து) கீழில் ப்ரமமெல்லாமாறும்படி "பூவின்மிசை நங்கைக்குமின்பன்," "தூவியம் புள்ளுடையானடலாழி யம்மான்றன்னை" என்று பிராட்டியோடும் நித்யஸூரிகளோடும் கூடியிருக்கிற இருப்பையும் "ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானை" "என்று-உபயவிபூத்யைஶ்வர்யயுக்தனாயிருக்கிற படியையும்," வீயில் 'சீரண்மலர்க்கண்ணன் விண்ணோர் பெருமான்றன்னை" என்னும்படி குணவிக்ரஹாதிவைலக்ஷண்யம் முதலான வைபவமெல்லாம் ப்ரகாஶிக்க இங்கேவந்து. (நன்றுகலக்க) "மேவி நின்று தொழுவார் வினை போகமேவும்பிரான்" என்னலாம்படி இவருடனே ஸம்ஶ்லேஷிக்க;

(போற்றிநன்குகந்து) ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேஶ்வரனைக் கண்டு * போற்றியென்றேகைகளாரத்தொழுது மங்களாஶாஸனம் பண்ணி, "வீவில்காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன் வீவின்மிகவெல்லை நிகழ்ந்தனன் மேவியே" என்று மிகவும் ஹ்ருஷ்டராய். அந்தப்ரீத்யுத்த(ஊ)தியாலே (வீறுரைத்தான்) "வானக்கோனைக்கவி சொல்லவல்லேற்கினிமாறுண்டே" "இனியாவர் நிகரகல் வானத்தே" என்று-தாம் உபயவிபூதியிலும் வ்யாவ்ருத்தரானபடியைப்பேசினார். (சென்றதுயர் மாறன் தீர்ந்து) நிவ்ருத்ததுஃக்கரானவாழ்வார். விஶ்லேஷவ்யஸநமென்னுதல், "வெய்ய நோய்கள் முழுதும் வியன் ஞாலத்து வீயவே" என்றும், "காற்றின்முன்னம் கடுகிவினைநோய்கள் கரியவே" என்றும் சொல்லுமவையாதல். (சென்றதுயர் - தீர்ந்து - மாறன்-நன்குகந்து வீறுரைத்தான்) நடந்து சென்றதுஃக்கம்தீர்ந்த ஆழ்வார் அத்யந்தம் ப்ரீதராய் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே தம்முடைய பெருமையைத் தாமே பேசினாராயிற்று.

மூ.- தீர்ப்பாரிலாத மயல்தீரக் கலந்தமால்
ஓர்ப்பாதுமின்றி யுடன் பிரிய — நேர்க்க
வறிவழிந் தற்றுருமறக் கலங்கப்பேர்கே
ட்டறிவுபெற்றான் மாறன் சீலம். (௧௬)

பதவுரை.

தீர்ப்பார் இலாத	தீர்ப்பவர்களில்லாத (ஒருவராலும் தீர்க்கமுடியாத)
மயல் தீர	பெரியகாதல் தீரும்படி
கலந்தமால்	கூடின ஸர்வேஶ்வரன்
ஓர்ப்பு ஆதும் இன்றி உடன் பிரிய	ஆராய்ச்சி சிறிது மில்லாமல் உடனே பிரிய,
உற்றாரும் அறக்கலங்க	(அதைக்கண்ட தாய் முதலிய) உறவினரும் மிகவும் கலங்கிக்கிடக்க
நேர்க்க	முன்னிலுங்காட்டில் விசேஷமாக
அறிவு அழிந்து	சைதந்யமழிய,
பேர்கேட்டு	(எம்பெருமானுடைய) திருநாமங்களை (கட்டுவிச்சி முதலானோர் சொல்லக்கேட்டு)
மாறன்	ஆழ்வார்
அறிவுபெற்றான்	ஸத்தை பெற்றான்;
சீலம்	இது ஆழ்வாருடைய குணமாயிருந்தது. (௧௬)

அவ.—முப்பத்தாறும்பாட்டு. (தீர்ப்பாரிலாத) இதில்- ப்ரணயித்வ குண விஶிஷ்டவஸ்துவை ப்ரத்யக்ஷமாக வநுபவிக்கப் பெறாமல் ப்ரக்ருதி விக்ருதியாய்மோஹித்துக்கிடக்க; ப்ரேமபரவஶர் ப்ரதிக்ரியைபண்ணத்தேட, அத்தை ப்ரபுத்த (வை-ஸ) ஸஹ்ருத்துக்கள் "இது அநநுரூபம்" என்றறிந்து அநுரூபமான நிதாநத்தையும் தத்பரிஹாரத்தையும் விதிக்கிற பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார்.

அம்தூய்மையினை யென்னில்; மேலுண்டான வநுபவம் மாநஸாநுபவமாத்ரமாய், பாஹ்யகரண யோக்யமல்லாமையாலே தந்தசையைத் தாமறியாதபடி மோஹித்துக்கிடக்க, பரிஸரவர்த்திகளானவரிவர்

அத்தைக்கலங்கி (க) * ஸவாஸநோ தேவாந் ஸ்ருஷ்டி - ஸர்வாந்தேவாந்த ஸம்பந்தியிற்படியேபரிவின்கனத்தாலேபரிஹரிக்கவொருப்பட, இவர்ப்ரக்ருதியறிந்த ஸ்ரீமதுரகவிப்ரப்ருதிகளானப்ரபுத்த(வைஷ்ணவ)ஸுஹ்ருத்துக்கள் அத்தைவிலக்கி உசிதபரிஹாரத்தைவிதித்துச்சொல்லுகிறபடியை; கலந்துபிரிந்ததலைமகளறிவழிவுகண்டுகலங்கிப்பரிவின் கனத்தாலே, தேவதாந்தரபரையாய்ப்ரதிபந்நபாஷிணியானகட்டுவிச்சிபாசுரங்கொண்டு வெறியாட்டாலே பரிஹரிக்கத்தேடுகிறதாய்மாரைநோக்கி, இவள் ப்ரக்ருதியறியுமுயிர்த்தோழியானவள் நோயின் நிதாநத்தை நிரூபணத்தாலே யறிந்தாளாகக்கொண்டு, "க்ருஷ்ணனடியாக வந்தநோவுக்கு, அவனைக்கொண்டே பரிஹரிக்குமதொழியநீங்கள் செய்கிறவை பரிஹாரமல்ல, தேவதாந்தரஸ்பர்ஶத்துக்கும் தத்ஸம்பந்திஸ்பர்ஶத்துக்கும் * தேர்ப்பாகனூரான * வண்டுவராபதிமன்னனையாஶ்ரயித்து * மாயன்றமரடி நீறுகொண்டணியுங்கோள்" என்றுவெறிவிலக்கின பாசுரத்தாலே யருளிச்செய்கிற * தீர்ப்பாரையாமினியில் தாத்பர்யத்தை "தீர்ப்பாரிலாத மயல்தீரக்கலந்தமால்" என்று தொடங்கியருளிச்செய்கிறார்.

வ்யா.— (தீர்ப்பாரிலாதமயல் தீரக்கலந்தமால்) * மண்ணையிருந்து துழாவில் * மயற்பெருங்காதலான துதிர, * வீற்றிருந்தேழுலகிற்கலந்த ஸர்வேஶ்வரன். (ஓர்ப்பாதுமின்றி யுடன் பிரிய) பிரிகைக்கு ஹேது நிரூபண மத்யல்பமுமாராயாமல், பெருக்காறுவற்றி யடிசுடுமாபோலவும், அபிஷேகமஹோத்ஸவம் குலைந்த அரண்ய ப்ரவேஶமானாப்போலவும், உடனேபிரிய. (உ) "பேதைநின்னைப்பிரியேனினி" என்னுதல், (ங) "பொருட்கோபிரிவென" என்னுதல் செய்யாமல், கலந்தகலவி கனவென்னலாம்படி அஶங்கிதமாகவகல. (நேர்க்கவறிவழிந்து) (ச) "ஶத்ருக்னோ நஷ்டஸம்ஜ்ஞ: ஶத்ருக்னோநந்தரஸ்திதः" என்னும்படி பரதாழ்வான் நின்றாப்போலே நில்லாமோஹித்தாப்போலே மோஹித்து. நேர்க்கவறிவழிகையாவது - * மண்ணையிருந்துழாவியிற்காட்டிலு மறிவுகலங்கி, அங்கு காணவும் கேட்கவும் பேசவும் பின்செல்லவும் க்ஷமையாயிருந்தாள், இங்கு - * குவளைத்தடங்கண்ணும் கோவைச்செவ்வாயும்பயந்து

(க) ர-அ-உ-ருஉ. (உ) தி-மொ-சு-ங-ங. (ங) தி-வி-கக. (ச) ரா-அ-அஎ.ச.

* மதியெல்லாமுள்கலங்கி மயங்கிபிறே கிடக்கிறது. (உற்றுரு மறக்கலங்க) (க) "யேதா³ஸாராமேவு ஸம்ஹ்ருஷ்டோ வ்யதி² தே ஸம்ப்³ரு வேதஸ: — யே ஜ்ஞாநமஸ்யஸம்ஹ்ருத்ஸர்வேதே மூடசேதஸ:" என்னும்படி, அத்தைக்கண்ட அன்னையரும் தோழியரும் தொடக்கமானாரும் மிகவுமறிவுகலங்கிக்கிடக்க, ஸ்ரீகௌஸல்யையாரைப் போலே மங்களாஸாஸநபரையானமாதா,(உ)"ஸ்யாம் வேதாநுஜ்ஞாதிராஸ்ய ஸ்யாத்ருஷிந:-ஸர்வாந்தேவாந்நமஸ்யந்தி ராமஸ்யார்த்தேயஸஸ்விந:" என்னும்படியே எத்தையாகிலும்செய்துஇவளை மீட்கத்தேட,

அவ்வளவிலே தேவதாந்தரபரையாயிருப்பாளொரு கட்டுவிச்சி அதுக்குப்பரிஹாரமாகச்சொல்லுகிற* ஆடும் கள்ளுமிறைச்சியும் கருஞ்சோறும் செஞ்சோறுமாகிற நிந்த்யத்ரவ்யங்களாலே * இளந்தெய்வத்துக்கிழைத்தாடும் நிஹீநதைகளைக்கண்டு இவள் ப்ரக்ருதியறியுமுயிர்த்தோழியானவள் அத்தைநிஷேதித்து "தேர்ப்பாகனார்க்கிவள் சிந்தைதுழாய்த்திசைக்கின்றதே" என்று-நோய்க்கு நிதா(ஈா)நத்தையும், அதுக்குப்பரிஹாரமாக*சங்குசக்கரமென்றிசைக்கும்படியையும், * மாயப்பிரான் கழல் வாழ்த்துதலையும், * பெருந்தேவன்பேர்சொல்லும்படியையும், "களிறட்டபிரான் திருநாமத்தால் தவளப்பொடிக்கொண்டு நீரிட்டிடுமின்" என்றும், "மாயன்றமாடி நீறுகொண்டணிய முயலில்" என்றும், "வணங்கீர்கள் மாயப்பிரான்றமர் வேதம்வல்லாரை" என்றும், "வேதம்வல்லார்களைக் கொண்டு" என்றும், "ஊழ்மையில் கண்ணபிரான் கழல்வாழ்த்துமின்" என்றும், "வண்டுவராபதிமன்னனையேத்துமின்" என்றும் சொன்னபடியைக்கேட்டு, * தொழுதாடித் தூமணிவண்ணனுக்காட்செய்து நோய்தீர்ந்த ப்ரகாரத்தை - பேர்கேட்டறிவுபெற்றுனென்கிறது. (மாறன்சீலம்) ஆழ்வார் ஸ்வபாவமிதுவாயிற்று. (ரு) * செவிக்கினிய கீர்த்தியைக் கேட்டு ஸத்தயா பாத(பா ய)கமாகவும், (ச) "செவிக்கின்பமாவதுவும் செங்கண்மால் நாமம்" என்கிற (ரு) * கேசவன் கீர்த்தியைக்கேட்டு ஸத்தை பெறவுமாயிறே யிருப்பது. (கசா)

(க) ரா-அ-சக-உ0. (உ) ரா-அ-உ-ருஉ, (ங) தி ச-கூகூ.
(ச) ச-திருவ-சுகூ. (ரு) தி-வர்ய-எ-ரு-கூ

மூ.—சிலமிருகண்ணன் றிருநாமத்தாலுணர்ந்து
மேலவன்றன்மேனிகண்டு மேவுதற்கு—சால
வருந்தியிரவும்பகலு மாறாமற்கூப்பிட்டு
இருந்தனனே தென்குருகூரேறு. (௩௭)

பதவுரை.

தென்குருகூர் ஏறு	திருநகரிக்குத் தலைவரான ஆழ்வார்,
சிலம் மிருகண்ணன்	மிகுந்த கல்யாணகுணங்களையுடையனான கண்ணபிரானுடைய
திருநாமத்தால்	திருநாமத்தினால்
உணர்ந்து	மோஹம் நீங்கித்தெளிவுபெற்று
மேல்	தெளிந்தபிறகு
அவன் தன்மேனிகண்டு மேவுதற்கு	அவனுடையவிக்ரஹத்தைக்கண்டு கிட்டி அநுபவிப்பதற்கு
சாலவருந்தி	மிகவும் வருத்தப்பட்டு
இரவும் பகலும்	அஹோராத்ரமும்
மாறாமல் கூப்பிட்டிருந்தனன்	இடைவிடாமல் கூவிக்கொண்டிருந்தார். (௩௭)

அவ.—முப்பத்தேழாம்பாட்டு. (சிலமிருகண்ணன்) இதில் - திருநாமத்தாலுணர்ந்தவர் நாமியானநாராயணனை யநுபவிக்கப் பெறாமையாலே அதிப்ரலாபமாய் ப்ரலாபிக்கிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; கீழ் (க) "[illegible] - வர்ஷேணபீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ" என்னுமாபோலே, தோழிசொன்ன ம்ருதஸஞ்ஜீவினியான திருநாமப்ரஸங்கமே ஶிஶிரோபசாரமாக ஸ்வஸ்தராயுணர்ந்தவநந்தரம், பிறந்தவுணர்த்திபெற்றுக் குடலன்றிக்கே க்லேஸாநுஸந்தானத்துக்குடலாய் அத்தாலே நோவுபட்டு; ஆபத்ஸகனாய், தந்நிதான பரிஹாரங்களையுள்ளபடி யறியும் ஸர்வஜ்ஞனாய், கார்யம் செய்கைக்குறுப்பான வுறவையுமுடையனாயிருக்கிறவன் ரக்ஷியாதொழிகையாலே ஆர்த்தி நிரம்பினகடல் கையெடுத்துக் கூப்பிடுமாபோலே, "அவனைக்காணவேணும்" என்று கேட்டாருடைய

(க) ரா-ஸு-௨௧-௬.

ஜீர்ப்பண்டமாம்படி கூப்பிடுகிற * சீலமில்லாச்சிறிய னிலர்த்தத்தை யருளிச்செய்கிறார் “சீலமிகுகண்ணன் திருநாமத்தாலுணர்ந்து” இத்யாதியாலேயென்கை.

வ்யா.—(சீலமிகுகண்ணன் திருநாமத்தாலுணர்ந்து) ப்ரணயினிகளோடே கலந்த ஸீலாதிக்யத்தையுடைய க்ருஷ்ணன்றிருநாமத்தை “வண்டுவராபதிமன்னன்” என்று தோழி சொல்லக்கேட்டு மோஹந்தெளிந்து, (மேலவன்றன்மேனிகண்டு மேவுதற்கு) உணர்ந்தவனந்தரம் அவன் விக்ரஹத்தைக் கண்டுகிட்டி யநுபவிக்கைக்கு. அதாவது-“கோலமேனிகாண” என்றும், “என்கண்காண” என்றும், “பாவியேன்காணவந்து” என்றும், “உன்றோள்கள்நான்கும் கண்டிட” என்றும், “உன்னைக்காண்பான்” என்றும், “நானுன்னைக்கண்டுகொண்டே” என்றும், “கண்டுகொண்டு” என்றும், “எங்குக்காண்பன்” என்றும், “தக்கஞானக்கண்களாலேகண்டு தழுவுவனே” என்றுமிப்படி பத்தும்பத்தாக வபேக்ஷித்து.

(சாலவருந்தி) மிகவும்வருந்தி. அதாவது - “நாராயணா” என்றும், “கூவிக்கூவி” என்றும், “வையங்கொண்ட வாமனாவோ” என்றும், “தாமோதரா” என்றும், “ஆணிசெம்பொன்மேனி யெந்தாய்” என்றும், “அப்பனேயடலாழியானே” என்றும், “நீக்கமின்றியெங்கும் நின்றாய்” என்றும், “நறுந்துழாயின் கண்ணியம்மா” என்றும், “வண்டுழாயின் கண்ணிவேந்தே” என்றும், “சக்கரத்தண்ணலே” என்றுமிப்படி பஹுப்ரகாரமாக ப்ரயாஸப்பட்டு. (௧)“ஹாராமே ஸாக்ருண-ஹாராம ஹாலக்ஷ்மண” என்றும் (௨) “நசைவஜேவவிராராகே ஜீதாஸ - நசைவதேவீவிரராம கூஜிதாத்” என்னுமாபோலே (இரவும் பகலும் மாறுமல்கூப்பிட்டிருந்தனளை தென்குருகூரேறு) “காலந்தோறும்” என்றும், “நள்ளிராவும் நன்பகலும் நானிருந்தோலமிட்டால்” என்றும், “கூவிக்கூவி நெஞ்சுருகி” என்றும், “சக்கரத்தண்ணலேயென்று தாழ்ந்து” என்றுமிப்படிதிவாராத்ரவிபாக(ஸாம)மறஸர்வகாலத்திலுங்கூப்பிட்டோவாமலிருந்தாராழ்வார்; இதென்னாகப்புகுகிறதோவென்று இவர் நெஞ்சுருகி நோவுபட்டருளுகிறார். (தென்குரு

(௧) ரா-ஸு-௨௮-௮. (௨) ரா-அ-௬௦-௨௫.

மூ.—ஏறுதிருவுடைய வீசனுகப்புக்கு
வேறுபடிலென்னுடைமை மிக்கவுயிர் — தேறுங்கால்
என்றனக்கும் வேண்டாவெனுமாறன்றாளை நெஞ்சே
நந்தமக்குப்பேறாகநண்ணு. (௧௮)

கூரேறு—இருந்தனனே) "இனித்திருநகரியிலாழ்வார் ப்ராதாந்ய மெங்ஙனே நடக்கக்கடவதோ" என்று ஶங்கிக்கும்படியா யிருக்கிறது. (௧௭)

பதவுரை.

ஏறு திருவுடைய	தன் திருமார்பில் ஏறப்பெற்ற பெரிய பிராட்டியாரை யுடையனான
ஈசன்	ஸர்வேஶ்வரனுடைய
உகப்புக்கு வேறுபடில்	திருவுள்ள வுகப்புக்கு (உறுப்பாகாமல்) வேறுபட்டால்
என் உடைமை	என் ஆபரணாதிகளும்
மிக்க உயிர்	இவற்றினும் உயர்ந்த ஆத்மாவும்,
தேறுங்கால்	ஆராயுமிடத்தில்
என்றனக்கும் வேண்டா எனும்	எனக்கும்வேண்டியதில்லையென்று வெறுத்துரைத்த
மாறன்	ஆழ்வாருடைய
தாளை	திருவடிகளை
நெஞ்சே	மனமே!
நந்தமக்கு	நமக்கு
பேறு ஆக நண்ணு	ப்ராப்யமாக விரும்பு. (௧௮)

அவ.—முப்பத்தெட்டாம்பாட்டு. (ஏறுதிருவுடையவீசன்) இதில்-இவ்வாற்றாமைக்குஉதவாமையாலேஅவனுக்குறுப்பல்லாத வாத்மாத்மீயங்களில்தாம் நசையற்றபடியைப்பேசினபாசுரத்தாலே யருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; கீழ் * சீலமில்லாச் சிறியனில் ஓலமிட்டழைத்த விடத்திலும் வந்து முகங்காட்டக் காணாமையாலே, "ப்ராப்தனாய் ஶீலவானாய் விரோதி நிரஸநஸமர்த்தனாயிருக்கிற ஸர்வேஶ்வரன் இத்தசையில் முகங்காட்டாமைக்

கடி இத்தலையை வேண்டாதொழிகையிறே, அவனுக்கு வேண்டாத வென்னாத்மாத்மீயங்களாலெனக்கொரு கார்யமில்லை" என்று அவற்றில் நசையற்றபடியை அந்யாபதேசத்தாலேயருளிச்செய்கிற * ஏறாளுமிறையோ னின்னர்த்தத்தை "ஏறுதிருவுடைய வீசனுகப்புக்கு" என்றுதொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.---(ஏறுதிருவுடையவீசன்) பிராட்டி ஏகாயனையாகையாலே (க) "நஹிமேஜீவிதேநார்த்த:- நஹிமேஜீவிதேநார்த்த" இத்யாதியாலே அத்தலைக்குறுப்பல்லாத வாத்மாத்மீயங்களில் நசையற்றபடிசொன்னாள்; இவர் மிதுநாயகராகையாலே "திருமகளும் கூறாளுந்தனி யுடம்பன்" என்றும், "மலர்மாதுறைமார்பன்" என்றும், "படநாகத்தணைக்கிடந்த பருவரைத்தோள் பரம்புருடன்" என்றும் இப்படி ஸ்ரியஃபதியாயிருக்கிற ஸர்வேஸ்வரனுடைய வுகப்புக்குப் புறத்தியான மாமைமுதலான வுடைமையோடு உயிரோடுவாசிபற வேண்டாவென்கிறார்.

ஏறுதிருவுடைய வீசனென்று - ஸ்ரிய:பதித்வத்தால் வந்த ஸர்வேஸ்வரத்வம் சொல்லுகிறது. (ஏறுதிரு) (உ) "யஸ்யைஷா வக்ஷஸ்தலே ஹரே:- யஸ்யைஷா வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:" என்று - ஆருடஸ்ரீகனிறே. ஏவம்விதனானவனுடைய (உகப்புக்குவேறுபடக்) அதாவது - சந்தநகுஸும தாம்பூலாதிகளைப்போலே அவனுக்கிஷ்ட விநியோகார்ஹமா யிருக்கையன்றிக்கே ஸ்வார்த்ததைக் குறுப்பாயிருக்குமாகில். அத்தையாயிற்று (௩) "தவஸேஷபூத வித்வதேஷ: - தவஸேஷத்வ விபவாத்பஹிர்ப்பூதம்" என்றது.

(என்னுடைமை) அதாவது - "மணிமாமை, மடநெஞ்சால், நிறைவினால், தளிர்நிறத்தால், அறிவினால், கிளரொளியால், வரிவளையால், மேகலையால், உடம்பினால்" என்று-ஆத்மாத்மீயங்களாயுள்ளவை, (மிக்கவுயிர்) இவற்றில் விலக்ஷணமாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய் பகவச்சேஷமாய், ஸ்ரீவத்ஸம் ஸ்ரீகௌஸ்துபம்போலே எம்பெருமானுக்கு போக்யமாயிருப்பதொரு ஆத்மஸ்வரூபமென்று. (தேறுங்கால்) பரப்ரீதிவிஷயமாயிருக்கிற வாகாரத்தை நன்றாகத்தெளியுங்கால். (௪) "நாரணன்றன் வாடாதமலரடிக்கீழ்

(க) ரா-ஸு-உக-ரு. (உ) வி-பு-க-க-௪0ரு (௩) ஸ்தோ-ர(௪)தி-வாய்-க-௪-௯

௯௯ —நண்ணாது மாலடியை நானிலத்தே வல்வினையால்
எண்ணாராத் துன்பமுறு மிவ்வுயிர்கள்—தண்ணிமையைக்
கண்டிருக்க மாட்டாமற் கண்கலங்கு மாறனருள்
உண்டெமக்குற்ற துணை யொன்று. (௯௯)

வைக்கவே வகுக்கின்று" என்றும், "தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே" என்றும், (க) "உன்றன் றிருவுள்ள மிடர் கெடுந் தோறும்" என்றும் இப்படித் தெளியவாராய்ந்தால் அத்தலைக்குறுப் பாயே யிருக்கவேணும்; இப்படி யன்றிக்கே வேறுபட்டதாகில் ஸ்வார்த்ததைக்குறுப்பாகில். (என்றனக்கும் வேண்டா) பரதந்த்ரனை யெனக்குத்தானும் வேண்டா. (எனு மாறன்றனை நெஞ்சே நமக்குப் பேறாகக்கொண்ணு) என்றிப்படியருளிச்செய்யு மாழ்வார் திருவடிகளை, நெஞ்சே! நமக்கு ப்ராப்யமாம்படியடை. நமக்கு இந்த்ரபதங்களொன்றும் வேண்டா, ஆழ்வார் திருவடிகளே ப்ராப்யமென்று ப்ராபி. (௯௮)

பதவுரை.

மால் அடியை	எம்பெருமான் திருவடியை
நண்ணாது	ஆஶ்ரயியாமல்
நானிலத்தே	இப்பூலோகத்தில்
வல்வினையால்	க்ரூரமான பாபகர்மங்களாலே
எண் ஆராத் துன்பம் உறும்	அளவற்ற துக்கத்தை அநுபவிக்கிற
இவ்வுயிர்கள்	இவ்வாத்மாக்களுடைய
தண்ணிமையை	தாழ்வை
கண்டு இருக்கமாட்டாமல்	கண்டு ஆறியிருக்கமாட்டாமல்
கண் கலங்கும்	திருக்கண்களும் (திருவுள்ளமும்) கலங்கியருளின
மாறன்	ஆழ்வாருடைய
அருள்	க்ருபையானது
நமக்கு உற்ற துணை ஒன்று உண்டு	நமக்கு அடுத்ததொரு துணையாயிராநின்றது. (௯௯)

(க) தி-வாய்-௧௦-௯-௧.

அவ.—முப்பத்தொன்பதாம்பாட்டு. (நண்ணுதுமாலடியை) இதில் - ஸம்ஸாரிகளுடைய வர்த்தத்தைக்கண்டு வெறுத்தபாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார்.

அதெங்ஙனேயென்னில்; இப்படி ஆத்மாத்மீயங்களில் நசையற்றவிடத்திலும், அவைபோகாமையாலே விரஹவ்யஸநத்தை யித்து "தம்மிழவுக்குக் கூட்டாவாருண்டோ" என்று ஸம்ஸாரிகளைப் பார்த்தவிடத்தில் அவர்கள் பகவத்விஷயத்தைக் காற்கடைக்கொண்டு இதரவிஷயங்களினுடைய லாபாலாபங்களே பேறும் இழவுமாய் நோவுபடுகிறபடியைக்கண்டு அதுபொறுக்கமாட்டாமல் ஸர்வேஶ்வரனைப்பார்த்து "ரக்ஷகனை நீ யுளனாயிருக்க இவைநோவுபடுகை போருமோபிரானே" என்று விஷண்ணராய், "இவர்கள் நோவைப் போக்குதல், இதுகண்டு பொறுக்கமாட்டாதவென்னை முடிக்கல் செய்தருளவேணும்" என்ன "இவர்களுக்கிச்சையில்லாமையாலே உம்மோபாதிநாமும் நொந்து காணுமிருக்கிறது" என்ன, "ஆனால் இவர்கள் நடுவில் நின்றும் என்னை வாங்கவேணும்" என்ன, இவர்க்கிலே ஸந்தீரும்படி, பிராட்டியுந் தானுமாகத் திருநாட்டிலே யிருக்கிற இருப்பை அவன் காட்டிக்கொடுக்க, அத்தைக்கண்டநுபவித்து க்ருதார்த்தராகிற * நண்ணுதார் முழுவலிப்ப விலர்த்தத்தை "நண்ணுது மாலடியை" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.-(நண்ணுதுமாலடியை) ஆஶ்ரிதவ்யாமுக்த(ஞ்)னை ஸர்வேஶ்வரன் திருவடிகளை யாஶ்ரயியாமல். ஆத்மாத்மீயங்களிலும் தாம் நசையற்ற விடத்திலும் அவனைக்கிட்டப்பெறாமல், ஸம்ஸாரிகளில் தம்மிழவுக்குக் கூட்டாவாருண்டோவென்று பார்த்து நானிலத்தே வல்வினையாலித்யாதியாலே வெறுத்தருளிச்செய்கிறாரென்கிறார். (நானிலத்தே) நாலுவகைப்பட்ட பூமியிலே. அதாவது - குறிஞ்சி நிலமான திருமலைகளிலும், முல்லைநிலமான திருக்கோட்டியூர் திருமோகூர் தொடக்கமான ஸ்தலங்களிலும், மருதநிலமான கோயில் பெருமாள்கோயில் தொடக்கமான ஸ்தலங்களிலும், நெய்தல் நிலமான திருவல்லிக்கேணி திருப்புல்லாணி திருவல்லவாழ் திருவண்வண்டூர் தொடக்கமான ஸ்தலங்களிலும், ஸுலபனாயிதே அவ

னிருப்பது; அந்தவெள்ளப்பமே ஹேதுவாக அவன் திருவடிகளை யாச்ரயியாதே. (நானிலத்தே தவல்வினையாலெண்ணாத் துன்ப முறுமிவ்வுயிர்கள்) இப்படி விலக்ஷணமான பூமியிலே பகவதாச்ரயணம்பண்ணி உஜ்ஜீவியாமல் (௧) "மாலைத்தாம் வாழ்த்தாதிருப்பதிதுவன்றே மேலைத்தாம் செய்யும்வினை" என்னும்படி ப்ரபல கர்மங்களாலே அஸங்க்யாதமான துக்கத்தை மிகவுமடைந்து போகிறவிவ்வாத்மாக்கள். (௨) "[illegible] । [illegible] நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதேரவௌ । ஆத்மநோ நாவபுத்யந்தே மநுஷ்யாஜீவிதக்ஷயம்" என்னும்படி.

(கண்ணிமையைக் கண்டிருக்கமாட்டாமல்) இவர்களநர்த்தத்தைக் கண்டாற்றமாட்டாமல். அதாவது—"எண்ணாத் துயர் விளைக்குமிவை யென்னவுலகியற்கை" "ஏமாறிக்கிடந்தலற்றுமிவை யென்னவுலகியற்கை" "கண்டாற்றேனுலகியற்கை" "தமமுடுமிவை யென்னவுலகியற்கை" "ஏங்கிநன்மேல் வெந்நரகமிவையென்னவுலகியற்கை" "அறப்பொருளையறிந்தோராரிவை யென்னவுலகியற்கை" "கொடுவுலகங்காட்டேலே" இத்யாதிகளாலே இதின் கொடுமையைப் பலகாலுமருளிச்செய்து. (கண்கலங்குமாறன்) திருக்கண்களுந் திருவுள்ளமும் கலங்கிப்போருமாழ்வார். அதாவது—"கூயேகொள்ளடியேனைக் கொடுவுலகங்காட்டேலே" "வாங்கெனை" "கூட்டரியதிருவடிக்களென்ஞான்று கூட்டுதியே" என்றுகூப்பிட்ட பின்பு, எம்பெருமானாலே "கூட்டரியதிருவடிக்கட்கூட்டினை" "அடைந்தேனுன்திருவடியே" என்னும்படி ஸமாஹிதராய், ஸம்ஸாரிகள் நோவுக்குநொந்தருளிச்செய்தவாழ்வார். (அருளுண்டு நமக்குற்றதுணையொன்று) இப்படி ஈச்வரனுங்கூடக்கைவிட்ட ஸம்ஸாரிகளையுமகப்பட விடமாட்டாமல் ஈச்வரனோடே மன்றாடுமாழ்வாருடையவருள், அந்தரங்கமான ரக்ஷையாக நமக்கொன்றுண்டு, வேறொரு ரக்ஷகாந்தரந்தேடவேண்டா, தானே ரக்ஷகமாயிருக்கும். (௩) "அருள்கொண்டாயிரமின்றமிழ்ப்பாடினானருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கதே" என்னக்கடவதிறே. (௩௯)

(௧) பெரி-அ-௪௪ (௨) ரா-அ-௧௦௫-௨௪ (௩) கண்ணி-அ.

மூ-ஒன்றுமிலைத்தே விவ்வுலகம் படைத்தமால்
அன்றியென வாருமறியவே—நன்றாக
மூதலித்துப்பேசியருள் மொய்ம்மகிழோன்றாடொழவே
காதலிக்கு மென்னுடையகை. (௪௰)

பதவுரை.

இவ்வுலகம்படைத்த	இந்தலோகங்களை ஸ்ருஷ்டித்த
மால் அன்றி	ஸர்வேச்வரனல்லாமல்
தேவு ஒன்றும் இலை என	வேறுதெய்வமொன்றுமில்லை யென்று
ஆரும் அறிய	யாவருமுணரும்படி
நன்றாக மூதலித்து	நன்றாய் நிரூபித்து
பேசியருள்	அருளிச்செய்த
மொய்மகிழோன்	பெருமையுள்ள வகுளாபரணருடைய
தாள்தொழவே	திருவடிகளை நோக்கி அஞ்ஜலி செய்வதன்பொருட்டே
என்னுடையகை	என்கைகள்
காதலிக்கும்	ஆசைப்படும். (௪௰)

அவ—நாற்பதாம்பாட்டு. (ஒன்றுமிலைத்தேவு) இதில் - ஸம்ஸாரிகளாச்ரயணத்துக்குறுப்பாக அர்ச்சாவதாரே பரத்வத்தை யருளிச்செய்த பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; * நண்ணாதாரில்-ஈச்வரனுங்கூட "திருத்தவொண்ணாது" என்று கைவிட்ட ஸம்ஸாரிகளைத் திருத்தவொருப்பட்டு, ப்ரமாணாந்தரவிலக்ஷணமாய் நித்ய நிர்த்தோஷமான வேதாந்த வாக்யங்களாலும், ஸத்ஸம்ப்ரதாயங்களாலும், இதிஹாஸ ப்ரஸித்தமான ஜகந்நிர்வாஹ திவ்யசேஷ்டிதங்களாலும், ஸம்ஸாரிகளுடைய தேவதாந்தரபரத்வ ப்ரதிபத்தியை அடியறுத்து, "ஸ்ரியப்பதியான நாராயணனே ஜகத்காரணபூதன்" என்று த்ருடதரமாகவுபபாதித்து, இப்படி ஸர்வஸ்மாத்பரனானவன் "அரியன்" என்று கைவாங்க வேண்டாதபடி திருநகரியிலேவந்து ஸந்நிஹிதனானபின்பு அவ

யாஶ்ரயியுங்கோளென்று பரோபதேசே ப்ரவ்ருத்தராகிற-*ஒன்றுந் தேவிலர்த்தத்தை "ஒன்றுமிலத்தேவு" என்றுதொடங்கி யருளிச் செய்கிறாரென்கை.

வ்யா.-(ஒன்றுமிலத்தேவித்யாதி) (இவ்வுலகம்படைத்தமாலன்றி - தேவு - ஒன்றுமில்லை - என) ஸர்வஸ்ரஷ்டாவான ஸர்வேஶ்வரனையொழிய, கார்யபூதரில் காரணத்வத்தால் வந்தபுகரையுடையவர்களொருவருமில்லையென்று - அதாவது - "ஒன்றுந்தேவும்" என்று தொடங்கி, "நான்முகன்றன்னொடு தேவருலகோடுயிர் படைத்தான்- ஆதிப்பிரான் நிற்க மற்றைத்தெய்வம் நாடுதிரே" என்றும், "நாடுநீர் வணங்குந்தெய்வமுமும்மையுமுன்படைத்தான் வீடில்சீர்புகழாதிப் பிரான்" என்றுமருளிச்செய்த காரணத்வ ப்ரயுக்தமான சங்கைகளைக்கடாக்ஷித்தபடியென்கை. (ஆருமறியவே நன்றாக மூதலித்துப் பேசியருள்) அதாவது - எங்களையும் கல்வியில்லாத ஸ்த்ரீபாலருமறியும்படி; (௧) "ஸுவ்யூஹ்யேப்ஸு - த்வமப்ரமேயஶ்ச" (௨) "தஜ் ஸ[illegible] பரமோதாதா ஸங்க ஸந்தேஹதாதா" என்று தாராந்தரங்களிற் கூறும்படியானாப்போலே, "பரந்ததெய்வமும்" என்றுதொடங்கி "கண்டுந்தெளியகில்லீர்" என்றும், "பேசநின்ற சிவனுக்கும்" என்றுதொடங்கி "கபாலநன்மோக்கத்துக்கண்டுகொண்மின்" என்றும், "இலிங்கத்திட்ட புராணத்தீரும்" என்றுதொடங்கி "பொலிந்துநின்றபிரான்கண்டீர்" என்றும், "போற்றிமற்றோர் தெய்வம்" என்று தொடங்கி "ஆற்றவல்லவன் மாயங்கண்டீர்" என்றும், "ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்து" என்றுதொடங்கி "பல்படிகால் வழியேறிக்கண்டீர்" என்றும், "புக்கடிமையினால்- நக்கபிரானுமன்றுய்யக்கொண்டது நாராயணனருளே" என்றும், "விளம்புமாறுசமயமும்" என்றுதுடங்கி "உளங்கொள் ஞானத்துவைம்மின்" என்றும், "உறுவதாவது - நீள்குடக்கூத்தனுக்காட்செய்வதே" என்றும் - பேசநின்றதேவதாந்தர ஸாமாந்யத்தோடே [illegible]த்வாதிகளையும், * இலிங்கத்துவிளம்பும் பாஹ்யகுத்ருஷ்டிமத நிரோதிஷ்டதையையும் சொல்லி, "ஓடி-கண்டீர்" "கண்டுந்தெளியகில்லீர்" "அறிந்தோடுமின்" "ஆட்செய்

மூ.—கையாரும் சக்கரத்தோன் காதலின்றிக்கே யிருக்கப்
பொய்யாகப்பேசும் புறனுரைக்கு—மெய்யான
பேற்றையுபகரித்த பேரருளின் றன்மைதனைப்
போற்றினனே மாறன் பொலிந்து. (௪௧)

வதே - உறுவதாவது" என்றுவிரக்திபூர்வகமாக வாஶ்ரயணம் ருசிக்கும்படி யருளிச்செய்தவையென்கை.

(மூதலித்துப்பேசியருள் மொய்ம்மகிழோன்) அதாவது-இனிபரத்வ விஷயமாகப்பரோபதேஶம்பண்ண வேண்டாதபடி நன்றாகவே சேதநர் திருந்தும்படி "திருக்குருகூரதனுள் நின்றவாதிப்பிரான்" "அதனுட்பரன்," "அதனுளீசன்" "அதனுட்பொலிந்துநின்ற பிரான்" "அதனுளாடுபுட்கொடியாதிமூர்த்தி" என்று - அர்ச்சாவதாரத்திலே பரத்வத்தை யுபதேசிக்கையாலே, பரத்வ விஷயஸந்தேகம் தீர்ந்து திருந்தக்கண்டு, சாந்தினவழுகிய திருமகிழ் மாலையும் ஸம்ருத்த(ஐ)மாய் அதுவே நிரூபகமாம்படியான வாழ்வாரென்கை. "நாட்கமழ் மகிழ்மாலைமார்பினன் மாறன் சடகோபன்" என்றத் தைப்பின் சென்றபடி.

(மூதலித்துப்பேசியருள் மொய்ம்மகிழோன் தாள் தொழவே காதலிக்குமென்னுடையகை) எம்பெருமான் திருவடிகளுக்காட் சேர்த்தருளுகையாலே பகவத்கைங்கர்ய(ஶ்ரீ)தபீதளாம்ருதமய திடகாவகாஹந ஸம்ப்ராப்தாத்ம ஸ்வரூபகாத்ர நிரதிஶய ஸுகந்தவிகஸத்கேஸர ஸாலங்க்ருத வகுளஸ்ரஜரான வாழ்வார் திருவடிகளை (௧) "ஸகஜநாபிராமம் ஸ்ரீ ரகுநாதஸ்ரீய ஸ்யமஜம் ஸுரணாபி ஜேந்யர்-வகுளாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா" என்று பணிக்கையிலே பக்திபண்ணுகின்றன வென்னுடைய ஹஸ்தங்களானவை. காதலிக்கை - கௌதூஹலிக்கையாகவுமாம். * முடியானேயில் கரணங்களின்படியாயிற்று, தம் கரணங்கள் * குருகூர்நம்பிமொய்ம்புகழ்களிலே காதலிக்கும்படியுமென்கிறார். இத்தால் - பரோபதேசம்பண்ணி யுஜ்ஜீவிப்பிக்கு மாழ்வார் திருவடிகளிலே பற்ற வடுப்பதென்றதாயிற்று. (௪௦)

பதவுரை.

கைஆரும் சக்கரத்தோன் — திருக்கை நிறையும்படி திருவாழியைத் தரித்ததுவே நிரூபகமான எம்பெருமான்,

காதல் இன்றிக்கே இருக்க	(தன்விஷயத்தில் ஆழ்வார்க்கு) பக்தியில்லாமலே யிருக்க
பொய்யாகப்பேசும்	கபடமாகப்பேசுகின்ற
புறவுரைக்கு	வஞ்சகவார்த்தைகளுக்கு
மெய்யானபேற்றை	ஸத்யமான புருஷார்த்தத்தை
உபகரித்த	உதவிசெய்தருளின
பேர்அருளின் தன்மைதனை	மஹாகருணையின் நிலைமையை
மாறன்	ஆழ்வார்
பொலிந்து	விளங்கிநின்று
போற்றினன்	அருளிச்செய்தார். (சக)

அவ,—நாற்பத்தோராம்பாட்டு. (கையாரும) இதில் - ஸம்ஸாரிகளையும் திருத்தும்படியாக ஸர்வேஶ்வரன் பண்ணின நிர்ஹேதுக விஷயீகாரத்திலே வித்த(ஃ)ராகிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனே யென்னில்; ஸ்வப்ராப்தி ஸாதநங்களிலிறங்காமல் துர்விஷயங்களிலேமண்டி இவ்வர்த்தத்தை யுணரவுமறியாதே அத்யந்தமுபேக்ஷ்யனாய் ஸம்ஸாரிகளிலந்யதமனான வென்னை, இவையொன்றும் பாராமல் நிர்ஹேதுகமாக வங்கீகரித்துத் தன் திருவடிகளிலே ஶேஷத்வத்தையுமறிவித்துக்கைங்கர்யத்தாலல்லது செல்லாதபடிபண்ணிப்பிறரையும் திருத்தும்படியான சதிரையுமுண்டாக்கி, என்பக்கலிலே வ்யாமுக்த(ஃ)னாயென்னோடே வந்து கலந்தானென்று ப்ரீதராகிற-*கையார் சக்கரத்தினர்த்தத்தை,“கையாரும்சக்கரத்தோன்” என்றுதொடங்கியருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(கையாரும்) “கையார் சக்கரத்தென் கருமாணிக்கமே” என்றுதொடங்கி “விதிவாய்க்கின்றுகாப்பாரார்” என்னுமளவும் கடாக்ஷித்தருளிச்செய்தபடி. (கையாரும் சக்கரத்தோன்) திருக்கை நிறையும்படி திருவாழியை த(ய)ரித்ததுவேநிரூபகமானவன். (காதலின்றிக்கே யிருக்க) ஸ்வவிஷய ப(ஃ)க்தியின்றிக்கேயிருக்க. (கையாரும் சக்கரத்தோன் காதலின்றிக்கேயிருக்கப் பொய்யாகப்பேசும் புறவுரைக்கு) “நான்னெடும் சக்கரத்துன்னையே யவிவின்றியாதரிக்குமெனதாவியே” என்னும்படி.

தத்விஷயத்திலே ப்ரேமமுண்டாகவேண்டியிருக்க, இவ்வழகைக் கண்டிருக்கவும் ததநுகுணமான வக்ருத்ரிம ப்ரேமமின்றிக்கே, க்ருத்ரிமப்ரேமத்தாலே இவற்றைப்பேசியநுபவிக்கிறபடியைக் கண்டு, போட்கனாயிருக்கிற மித்ரபா(ஸா)வத்தையேபார்த்து அந்த அஹ்ருதயமான வுக்திக்கு. பொய்யாகப்பேசும் புறனுரையாவது- "பொய்யேகைம்மைசொல்லிப் புறமே புறமேயாடி" என்றும், "என்றென்றேசிலகூத்துச்சொல்ல" என்றும், "புறமேசிலமாயம் சொல்லி" என்றும், "உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனம்" என்று மிப்புடைகளிலே சொன்னவை. ஏவம்விதமான மித்ரபா(ஸா)வ மாத்ரமான மித்யா(ல்)ஜல்பிதங்களுக்கு (மெய்யானபேற்றையுப கரித்த) யதாஜ்ஞாநமுடையார் பெறும் ஸத்யமானபேற்றை உபகரித்த.

அதாவது - "மெய்யேபெற்றொழிந்தேன்" "என்னுள் கலந்தொழிந்தான்" "உன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்" "முறை முறையாக்கை புகலொழியக்கண்டு கொண்டொழிந்தேன்" "எம்பிரானுமென்மேலானே", "மாலரிவந்தினனுளடியேன்மனத்தே மன்னினார்" "அடியேனெடுமாலனே" "ஆறெனக்குடையான் - என்னைமுற்றவுங்காணுன்" என்றும் பேசும்படியான விப்பேற்றையெ ன்றபடி.

இத்தையுபகரிக்கைக்கடியேதென்ன (பேரருளென்கிறது). அதாவது-"விதிவாய்க்கின்று காப்பாரார்" "எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும்" "ஆவாவென்றருள் செய்து" "தானேயின்னருள் செய்து" என்றருளிச்செய்தவையென்கை. (பேரருளின்றன்மை தனைப்போற்றினனேமாறன் பொலிந்து) அதாவது இரும்பைப்பொன்னுக்குமாபோலே, நித்யஸம்ஸாரிகளுக்கும் நித்ய ஸூரிகள் பேற்றையுபகரிக்கு மெய்பெருமானுடையநிர்ஹேதுக க்ருபாப்ரவாஹத்தின் ஸ்வபாவத்தை† ப்ரீதியாலே யருளிச்செய்தா ராழ்வாரென்கை. (௧) "க்ருபயா பர்யபாலயத்" என்னுமாபோலே. (௯௧)

---

(௧) ரா-ஸு-௩௮-௩௪. † (பா) யநுஸந்தித்து ஆழ்வார் அபி(ஸி) வ்ருத்தியையுடையராய்.

௬௨.—பொலிகபொலிகவென்று பூமகள்கோன்தொண்டர்
மலிவுதனைக்கண்டுகந்து வாழ்த்தி—உலகில்
திருந்தாதார்தம்மைத் திருத்தியமாறன் சொல்
மருந்தாகப் போகும்மனமாசு. (௬௨)

பதவுரை.

பொலிக பொலிக என்று	'வாழ்க! வாழ்க!!' என்று,
பூமகள்கோன் தொண்டர்	ஸ்ரியப்பதியின் அடியார்களினுடைய
மலிவுதனைக்கண்டு	ஸம்ருத்தியைக்கண்டு
உகந்து	ஸந்தோஷித்து
வாழ்த்தி	மங்களாசாஸநம் பண்ணி,
உலகில்	இவ்வுலகத்தில்
திருந்தாதார்தம்மை	திருந்தாமலிருப்பவர்களை
திருத்திய	திருத்தியருளின
மாறன்	ஆழ்வாருடைய
சொல்	ஸ்ரீஸூக்தியாகிய
மருந்தாக	ஔஷதமடியாக
மனமாசுபோகும்	மநஸ்ஸின் களங்கம் ஒழியும். (௬௨)

அவ.—நாற்பத்திரண்டாம்பாட்டு. (பொலிக பொலிக) * ஒன்றுந்தேவில் - தாம்திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மங்களாசாஸநம்பண்ணியும் திருந்தாதாரைத் திருத்தியும் செல்லுகிற பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறாரிதில்-அதெங்ஙனே யென்னில்; கீழ், * ஒன்றுந்தேவிலே - தாம்பண்ணின பகவத்பரத்வோபதேசத்தைக்கேட்டு; ஸம்ஸாரம் பரமபதவிபாக (ஸாம்ய)மறும்படி நாடாகத்திருந்தின பாகவதஸம்ருத்தியைக்கண்டு ஹ்ருஷ்டராய், தாம் திருத்தத்திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மங்களாசாஸநம் பண்ணியும், திருந்துகைக்கு யோக்யதையுடையாரையுபதேசித்துத்திருத்தியும், திருந்தாதாரையுபேக்ஷித்தும் செல்லுகிற * பொலிகபொலிகயிலர்த்தத்தை—"பொலிகபொலிக" என்று தொடங்கி யருளிச்செய்கிறாரென்கை,

வ்யா.—(பொலிக பொலிகவென்று பூமகள்கோன்றொண்டர் மலிவுதனைக்கண்டுகந்து வாழ்த்தி) (க) "ஜயது திவ்யெளா ஸௌமித்ரிர் மஹாபலஃ। ராஜாஜயதி வைதேஹீ ராகவேணாபிபாலிதா:- ஜயத்யதிபலோராமோ லக்ஷ்மணஶ்சமஹாபலஃ। ராஜாஜயதி ஸுக்ரீவோராகவேணாபிபாலிதஃ" என்னும்படி, பூமகள்கோன் தொண்டர் மலிவுதனைக்கண்டுகந்து-பொலிகபொலிகவென்று வாழ்த்தி. பூமகள்கோன்தொண்டர் மலிவாவது-"கடல் வண்ணன் பூதங்கள்மண்மேல் மலியப்புகுந்து" என்றும், "மாதவன்பூதங்கள் மண்மேல் பண்டான் பாடிநின்றாடி" என்றும், "கடல்வண்ணன் பூதங்கள்மண் மேலிரியப்புகுந்து" என்றும், "தடங்கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைப்பூதங்களேயாய்" என்றும், "இவ்வுலகத்து வைகுந்தன் பூதங்களேயாய்" என்றும், "பகைபசிதீயனவெல்லாம் நின்றிவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான்றமர்போந்தார், ஞாலம்பரந்தார்" என்றும், "மேவித்தொழுமடியாரும் பகவரும் மிக்கதுலகே" என்றுமிப்படி - நித்யஸித்தர் ஸ்வேதத்வீபவாஸிகள் முதலான திருமாலடியாரெங்கும் திரண்டஸம்ருத்தி. நித்யஸித்தர்க்கும் ஸ்வேதத்வீபவாஸிகளுக்கும் ஸமாநராய்த் திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களென்றுமாம்.

(கண்டு)(உ)"தமர்கள் கூட்டம்-ர ளும் வாய்க்கநங்கட்கு" என்னும்படியான தம்கண்களாலே கண்டு. (உகந்து) "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம்" என்று ஹ்ருஷ்டராய். (வாழ்த்தி) அந்தஸம்ருத்திக்கு 'பொலிகபொலிக' என்று மங்களாஶாஸனம்பண்ணி. (உலகில் திருந்தாதார் தம்மைத்திருத்தியமாறன்சொல் மருந்தாகப்போகும் மனமாசு) * ஒன்றுந்தேவிலுபதேஶத்திலுந் திருந்தாதே யொதுங்கியிருந்தவர்களைக்குறித்து, "கண்ணனல்லால் தெய்வமில்லை" என்றும், "எவ்வுலகுக்குந் தன்மூர்த்தி நிறுத்தினான்தெய்வங்களாகவத்தெய்வநாயகன்றானே" என்றும், 'ஒக்கத்தொழுகிற்றிராகில் கலியுகமொன்று மில்லையே" என்றுமிப்படி—பரத்வோபதேஶம்பண்ணித் திருத்தியும், அதிலும் திருந்தாதவர்களைக்குறித்து, "அரக்கரசுரர்பிறந்திருள்ளிரேலுய்யும் வகை

(க) ரா-ஸு-சஉ-நரு. (உ) தி-வாய்-அ-கo-அ.

மூ.—மாசறுசோதிகண்ணன் வந்துகலவாமையால்
ஆசைமிகுந்து பழிக்கஞ்சாம—லேசறவே
மண்ணில் மடலூரமாறனெருமித்தான்
உண்ணடுங்கத்தான்பிறந்தவூர். (௪௩)

யில்லை தொண்டீருழிபேர்த்திடுங்கொன்றே"என்று-தேடித்தடவிப் பிடித்து ப்ரத்யாபுரஸ்ஸரமாகத் திருத்தியும் சொல்லுகிற ஆழ்வார் ஸ்ரீஸூக்தி வைலக்ஷண்யமடியாக மநோமாலின்யம் நிவ்ருத்தமாய். ஸ்ரீவைஷ்ணவ ஸஜாத்யபுத்தியும், தேவதாந்தரங்களிடத்தில் பரத்வபுத்தியுமிறே – மநோமாலிந்யமாவது; (௧) "மனைசகமலறக் கழுவி" என்றிறே யருளிச்செய்தது.

(௨) "விஷயப்ரவணபலங்கள் கைக்கூடினவர் அடிமைபுக்காரை யுமாட்செய்வாரையுங்காண, லோகத்யோந்தரங் கரின் றும் போக்கிகவர்குழாங்களைக்கண்டு காப்பிட்டு ப்ரஹ்லாதவிபீஷணர் சொற்கேளாதவரக்கராசுரர் போல்வாரைத் தடவிப்பிடித்து, தேச காலநிரோஷம்போக எங்குமிடங்கொண்டவர்களை மேவித்தொழுது உஜ்ஜீவியுங்கோள். நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தினவனைமேவிப்பரவு மவரோடொக்கத்தொழில் யுகதோஷ மில்லையாமென்று விஷ்ணுபக்திபரராக்கி" என்றிறே யருளிச் செய்தது. (௪௨)

பதவுரை.

மாசு அறு சோதி	களங்கமற்றஜ்யோதிஸ்ஸையுடைய ஞன
கண்ணன்	எம்பெருமான்
வந்து கலவாமையால்	வந்து கூடாமையாலே
ஆசை மிகுந்து	ஆசை அதிகரித்து
பழிக்கு அஞ்சாமல்	(நாட்டாருடைய)பழிப்புக்கு பயப் படாமல்
ஏசு அற	ஏசும்படியான எல்லையை மீறி

---

(௧) தி-வாய்-௪-௬-அ (௨) ஆசார்யஹ்ரு-௪.

தான்பிறந்த ஊர்	தான் அவதரித்த ஊரிலுள்ளோர்
உள்ளுருக	மனம்நடுங்கும்படி
மண்ணில் மடலூர	பூமியில் மடலூர்வதற்காக
மாறன் ஒருமித்தான்	ஆழ்வார் யத்நித்தார். (சஙு)

அவ;—ஏற்பத்துமூன்றாம்பாட்டு. (மாசறுசோதிகண்ணன்) இதில் - ஸுப்ரஸித்தமான வடிவழகை யநுபவிக்கப்பெறாமல் மடலெடுக்கிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார்.

அது எங்ஙனேயென்னில்; இப்படிப் பிறரைத் திருத்தி அவர்களுக்கு மங்களாஶாஸநம் பண்ணிக்கையொழிந்த பின்பு, (க) "மெலியும் சுடரொளிமூர்த்தி மாயப்பிரான்கண்ணன்" என்று - அவன் ஸௌந்தர்யாதிகளை யநுஸந்தித்து, பழையதம்மிழவுலையெடுத்து, "வழியல்லாவழியிலே யிழிந்து இரண்டுதலையையு மழித்தாகிலும் அவனோடே கலக்கக்கடவோம்" என்று ப்ராப்யருசி பாரவஶ்யத்தாலே முன்னடிதோன்றாமல் கண்கலங்கிச் செல்லுகிற தம்தசாவிசேஷத்தை, அவனோடே கலந்து பிரிந்து ஆற்றாமையாலே கண்ணுஞ்சுழலையிட்டு, நாடாகப்பழிசொல்லும்படி-"அவனுக்கவத்யத்தை விளைந்து இரண்டு தலையையுமழிக்கக்கடவேன்' என்று மடலூருகையிலே யொருப்பட்டுச் சொல்லுகிறாளொருபிராட்டி பேச்சாலே யருளிச்செய்கிற-*மாசறுசோதியிலர்த்தத்தை "மாசறு சோதிகண்ணன்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா;-(மாசறுசோதிகண்ணன்வந்து கலவாமையாலாசைமிகுந்து) "மலியுஞ்சுடரொளிமூர்த்தி மாயப்பிரான் கண்ணன்" என்றும், "என்செய்யவாய் - மாசறுசோதி - மணிக்குன்றம்" என்றும், "நங்கண்ணன்" என்றும் சொல்லும்படி அத்யாகர்ஷகமான வடிவையுடைய க்ருஷ்ணன், தன் ஸ்வரூபத்துக்குச்சேரத் தானே மேல்விழுந்துவந்து அநுபவிப்பியாமையாலே அபிநிவேஶமதிஶயித்து, அதாவது "பாசறவெய்தி" என்றும், "என்செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்க்க" என்றும், "பேர்த்துமபிர்ந்து மவனோடன்றியோர் சொல்லிலேன்" என்றும், "காதல் கடல் புரையவிளைவித்த" என்றும், "கொடியவென்னெஞ்சமவனென்றே கிடக்கும்" என்றும், "மணிவண்ணன் வாசுதேவன் வலையுள்-அகப்பட்டேன்" என்றும், "தலையில்வணங்கவுமாங்கொலோ" என்றும், "எந்நாள்கொலோ யாமுறுகின்றது" என்று மருளிச்செய்தவை யென்கை.

(க) தி-வாய்-ரு-உ-கக.

இப்படிஆசையதிஶயிக்கையாலே,(பழிக்கஞ்சாமல்)ஊரார், தாயார்தொடக்கமானார் இவள் மடலூரவொருப்படுகிற படியைக்கண்டு "இதுகுடிப்பழியாய்த்தலைக்கட்டும்" என்று நிஷேதிக்க, ஏவம்விதமான பழிக்குப்பணைக்கு மவளாகையாலே அஞ்சாதே, அப்பழிச் சொல்லேதா(யா)ரகமாக. அதாவது - (௧) "ஸீதே தஸ்மாத் து:கமதோ வநம் - ஸீதே தஸ்மாத் துஃகமதோவநம்" என்று வநத்தை நிஷேதித்து அருளிச்செய்ய, (௨) "அக்ரதஸ்தே கமிஷ்யாமி - அக்ரதஸ்தே கமிஷ்யாமி" என்றும் (௩) "யாநஶக்யா புராத்ரஷ்டும் பூதைராகாஶகைரபி । தாமத்ய ஸீதாம் பஶ்யந்தி ராஜமார்க்ககதா ஜநா: - யாநஶக்ய, புராத்ரஷ்டும் பூதைராகாஶகைரபி । தாமத்யஸீதாம்பஶ்யந்தி ராஜமார்க்ககதாஜநா:" என்றும் சொல்லுகிற படியே "ஊரவர்கவ்வை தோழீயென்செய்யும்?" என்றும் "என்செய்யுமூரவர்கவ்வைதோழீயினி நம்மை" என்றும், "தீர்ந்தவென்றோழீ யென்செய்யுமூரவர்கவ்வையே" என்றும், "ஊரவர்கவ்வையெருவிட்டன்னை சொல்நீர் மடுத்து" என்றும், "அன்னையென்செய்யுமே" என்றும் "அன்னையென்செய்யிலென் ஊரென்சொல்லிலென் தோழீமீர்!" என்றும், அவர்கள்நிஷேதவசநங்களையொருசரக்கறச்சொன்னவையென்கை.

(பழிக்கஞ்சாமலேசறவே) அபவாதப்(ஸ)க்தியின்றிக்கே யேசு மெல்லைகடந்து. அன்றிக்கே எல்லாரும் து:கிக்கவென்றுமாம். அன்றிக்கே, "ஏசவே" என்று பாடமாய் - பழிசொல்லவுஞ்சொல்லி ஏசவென்றாகவுமாம். (மண்ணில் மடலூரமாறனொருமித்தானுள்நடுங்கத்தான் பிறந்தவூர்) அதாவது - "குதிரியாய் மடலூர்துமே" "நாடுமிரைக்கவே-யாமடலூர்ந்தும்" என்றும்-ஜகத்க்ஷோப(ஹ)ம் பிறக்கும்படி இஜ்ஜகத்திலே மடலூர ஆழ்வாரொருப்பட்டார்; தாமவதரித்தவூரிலுள்ளார் இஸ்ஸாஹஸ ப்ரவ்ருத்தியைக் கண்டுஹ்ருதயம் கம்பிக்கும்படியாக, "இப்படிஉத்யோகித்த விது ஏதாய்விளைகிறதோ" என்று தாமும் அவ்வூரிலவதரித்தவராகையாலே இவரும் தளும்புகிறார். (௪௩)

(௧) ரா-அ-௨௮-௮. (௨) ரா-அ-௨௭-௬௦. (௩) ரா-அ-௩௩-௮.

மூ.—ஊரநினைந்தமட லூரவு மொண்ணுதபடி
கூரிருள் சேர்கங்குலுடன் கூடிநின்று—பேராமல்
தீதுசெய்ய மாறன்றிருவுள்ளத்துச் சென்றதுயர்
ஓதுவதிங் கெங்ஙனேயோ. (சச)

பதவுரை.

ஊரநினைந்த	தாம் ஊர்வதாக நினைத்துத் தொடங்கின
மடல்	மடலை
ஊரவும் ஒண்ணுதபடி	ஊரவுங்கூடாதபடியாக,
கூர் இருள்சேர்கங்குல்	மிகுந்த இருள்செறிந்த இரவானது
உடன்கூடிநின்று	தன் பரிவாரத்தோடே சேர்ந்து நின்று
பேராமல்	இட்ட அடிபெயராமல்
தீதுசெய்ய	உபத்ரவிக்க,
மாறன்	ஆழ்வாருடைய
திருவுள்ளத்துச் சென்றதுயர்	திருவுள்ளத்தில் நேர்ந்த் வ்யஸநத்தை
இங்கு ஓதுவது	இங்கெடுத்துச் சொல்வது
எங்ஙனே	எப்படி முடியும்;
ஓ	அந்தோ!; (ஜச)

அவ.—நாற்பத்துநாலாம்பாட்டு. (ஊரநினைந்தமடலித்யாதி) இதில் - இரவுநெடுமையாலே நோவுபடுகிற நாயகி பாசுரத்தாலே பேசுகிறபடியை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; இப்படி "ஸ்வபர ஸ்வரூபங்களை அந்யதாகரித்து வழியல்லாவழியிலே யிழிந்தும் அவனைப்பெறவேணும்" என்னும்படி மூட்கவடியிடுகிற ப்ராப்யத்வரையும் கலங்கி, ஸ்வயத்நரூபமான உபாயாந்தரங்களிலே மூளுகைக்குறுப்பான தெளிவையழுக்கிக் கிளருகிறவஜ்ஞாநமாகிற வல்லிருளாலேபோக்கிட மற்றுத்தெருட்டாடுகிற தம்தசையை, பரிவாற்றாளாய் மடலெடுக்கையிலே யுத்யோகித்தவளவிலே தைவயோகத்தாலே ஸூர்யனஸ்தமித்து மத்யராத்ரமாய்ஸப்தாதிகளில் நெஞ்சுபாலிபாயாமையாலே விஸ்லேஷவ்யஸநமொரு

மடைசெய்ய; காலமும் விடியாதொழிய, படலடைக்கைபோய் ஊழி கைகேட்டமான வளவில், அதுக்கிடையாமல், இப்படியிரவு நெடுமையாலே ஈடுபட்டுப்பேசுகிற பிராட்டி பாசுரத்தாலே யருளிச் செய்கிற - * ஊரெல்லாந்துஞ்சியிலர்த்தத்தை, "ஊரநினைந்தமடல்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(ஊரநினைந்தமடல்) (க) "குதிரியாய்மடலூர்தும்" என்று - ஊரநினைந்தமடல். (ஊரவுமொண்ணாதபடி). ஆதித்யனு மஸ்தமித்து, ப்ரியஞ்சொல்லுவார் ஹிதஞ்சொல்லுவார் பழிசொல்லுவாரெல்லாரு முறங்குகையாலும், இருள்வந்து மூடுகையாலும் மடலூரவுங்கூடாதபடியாக. (கூரிருள்சேர் கங்குலுடன் கூடிநின்று பேராமல் தீதுசெய்ய) அதுக்குமேலே, அத்யந்தாந்த(ஃ)காரத்தோடே ராத்ரியானது கூட்டுப்படையோடேகூடி நின்று இட்டவடி பேராமல், தீதுசெய்ய - பொல்லாங்கையுண்டாக்க.

அதாவது-ராவணமாயைக்கஞ்சி (உ) "ஸீதாயா வேண்யுத்க்ரதநம் க்ருஹீத்வா-ஸீதாதவேண்யுக்ரதநம் க்ருஹீத்வா" என்றும், (ங) "விஷஸ்ய தாதா ந ஹி மேஸ்தி கஶ்சிச் சஸ்த்ரஸ்ய வா வேஶ்மநி ராக்ஷஸஸ்ய - விஷஸ்யதாதாநஹிமேஸ்திகஸ்சிச் சஸ்த்ரஸ்ய வாவேஸ்மனி ராக்ஷஸஸ்ய" என்றும் சொல்லுகிறபடியே, "ஊரெல்லாந்துஞ்சியுலகெல்லாம் நள்ளிருளாய் நீரெல்லாந்தேறியோர் நீளிரவாய் நீண்டதால்" என்றும், "மாவிகாரமாயோர்வல்லிரவாய் நீண்டதால்" என்றும், "ஓயும்பொழுதின்றி யூழியாய்நீண்டதால்" என்றும், "ஒண்சுடரோன் வாராதொளித்தான்" என்றும், "முன்னின்றாயூழிகண்புதைய மூடிற்றால்" என்றும் "கங்கிருளினுண்டுளியாய்ச் சேட்பாலதூழியாய்ச் செல்கின்ற கங்குல்வாய்" என்றும், "ஓரிரவேழூழியாய்" என்றும் "வீங்கிருளினுண்டுளியாய்" என்றும், "செல்கின்றகங்குல்வாய்," என்றிப்படி தமஸ்ஸோடே கூடின ராத்ரிபோராமல்நின்று துஃக்கத்தை யுண்டாக்குமென்றபடி.

இப்படியாகையாலே (மாறன்றிருவுள்ளத்துச்சென்ற துயரோதுவதிங் கென்கொலோ) என்கிறார். மாறன் திருவுள்ளத்துச் சென்றதுயராவது - "பாரெல்லா முண்டநம் பாம்பணையான்

(க) தி-வாய்-ரு-ங-க. (உ) ரா-ஸு-உஅ-கஅ. (ங) ரா-ஸு-உஅ-கச.

மூ.—எங்ஙனேநீர் முனிவதென்னை யினிநம்பிபழகு
இங்ஙனேதோன்றுகின்றதென் முன்னே — அங்ங
னுருவெளிப்பாடாவுரைத்த தமிழ்மாறன்
கருதுமவர்க்கின்பக்கடல். (சரு)

வாராளுல் ஆறெல்லே வல்வினையேன் ஆவிகாப்பாரினியே'' என்றும், ''ஆவிகாப்பாரினியார்'' என்றும், ''நீயும்பாங்கல்லை காண் நெஞ்சமே - மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண் பிறந்தே'' என்றும், ''என்பெரிய சிந்தைநோய் தீர்ப்பாராரென்னை யே'' என்றும், ''பேரென்னைமாயாதால் வல்வினையேன் பின்னின் றே'' என்றும், ''இந்நின்ற நீளாவிகாப்பாராரிவ்விடத்தே'' என்றும், ''தீப்பாலவல்வினையேன் தெய்வங்காளென் செய்கேனோ'' என்றும், ''எனதாவி மெலிவிக்கும்'' என்றும், ''நெஞ்சிடர் தீர்ப்பாரினியார் நின்றுருகுகின்றேனே'' என்று மருளிச்செய்தவை யாயிற்று, ஆழ்வார் திருவுள்ளத்திலே யநுவர்த்தித்த துக்கம். அது தான் அவரே பேசிலல்லது அந்யர்க்குப்பேசமுடியாதிறே. அதுதான் வாசாமகோசரமா யாயிற்றிருப்பது. ஆகையாலே பேசிமுடியாதத்தை இங்கெங்ஙனேபேசுவதென்றீடுபடுகிறார். எங்ஙனேயோவென்று - வார்த்தைப்பாடாதல். (சச)

பதவுரை.

நீர்	(பந்துக்களே) நீங்கள்
இனி என்னை எங்ஙனே முனிவது	இனிமேல் என்னைக் கோபிக்கக்கூடுமோ?
நம்பிஅழகு	திருக்குறுங்குடி நம்பியின் வடிவழகானது
என் முன்னே	என் கண்ணெதிரில்
இங்ஙனே தோன்றுகின்றது	இதோ ப்ரத்யக்ஷமாய்த் தோற்றாநின்றது;
அங்ஙன்	அவ்வாறாகிய
உருவெளிப்பாடா உரைத்த	உருவெளிப்பாடென்னுந்துறையாகச் சொன்ன

தமிழ்மாறன்	தமிழ்வேதத்தைவெளியிட்டருளின ஆழ்வார்
கருதுமவர்க்கு	தம்மை த்யாநிப்பவர்களுக்கு
இன்பக்கடல்	ஆநந்த ஸாகரமாயிருப்பர்.

அவ:-நாற்பத்தைந்தாம்பாட்டு(எங்ஙனே) இதில்-உருவெளிப்பாட்டாலேபேசுகிறபாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்;(க "உறங்குவான்போல்யோகுசெய்தபெருமான்"என்று ரக்ஷகனுடைய குணஜ்ஞாநத்தாலேமீளவும்தெளிவுகுடிபுகுந்து, (உ) "நம்பியைத்தென் குறுங்குடிநின்ற" என்று முன்பு அநுபூதமானநம்பியுடையவழகுநெஞ்சிலேஒருபடிப்பட ப்ரகாசிக்கையாலும், யதாமநோரதம் அவ்வழகைக் கண்ணால்கண்டநுபவிக்கப்பெறாமையாலும் ப்ரீத்ய ப்ரீதிஸமமாய்ச் செல்லுகிறதம்தசையை, நாயகனோடேகலந்து பிரிந்துஉருவெளிப்பாட்டாலே உருவநோவுபட்டுச்செல்லுகிற பிராட்டிபேச்சாலே யநுஸந்திச்செய்கிற - * எங்ஙனேயோவிலர்த்தத்தை "எங்ஙனேநீர் முனிவது" என்றுதொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.-(எங்ஙனே நீர்முனிவதென்னை) இவ்வாற்றாமைக்குஊற்றுவாயான நீங்கள்இவ்வபிநிவேசமுடையவென்னைப் பொடிவதெங்ஙனே.-"எங்ஙனேயோவன்னைமீர்காளென்னைமுனிவதுநீர்"என்றத்தைப்பின் சென்றபடி. (இனி-எங்ஙனேநீர்முனிவது) திருக்குறுங்குடி நம்பியை நான்கண்டபின் - இனிமுனியக்கூடுமோ? அதுக்குமுன்னேயன்றோ முனியவேண்டுவது; அதுக்குமேலே (௩) "வஜ்ரகாஞ்சநஸந்நிபம் ராஜீவலோசநம் - சந்த்ரகாந்தாநநம் ராமமதீவ ப்ரியதர்ஶநம்" என்னும்படி ருசிஜநகலாவண்ய விபவமானது(௪)"ஸௌவர்ண வக்ஷா ஸோ ராமஃ- அஸௌ புருஷ ருஷப:-ராமஃ" என்னும்படி உருவெளிப்பாடாய், (நம்பியழகிங்ஙனே தோன்றுகின்றதென்முன்னே)குணவிக்ரஹஸௌந்தர்யாதிகளால்பூர்ணரானநம்பியுடைய ஆயுதாபரணவயவ ஶோபைகளானது,அதுகண்டுஉகக்கிறவென்முன்னே ப்ரத்யக்ஷமாகத்தோன்றுகின்றது.

---

(௧) தி-வாய்-௫-௪-௧௧. (௨) தி-வாய்-௧-௧௦-௯. (௩) ரா-ஆ-௩-௨௮.
(௪) ரா-ஸு-௨௮-௨௦.

மூ.—கடல்ஞாலத்தீசனை முன்காணாமல் நொந்தே
உடனவனுகரிக்கலுற்று—திடமாக
வாய்ந்தவனாய்த்தான்பேசும் மாறனுரையதனை
ஆய்ந்துரைப்பாராட்செய்ய நோற்றார். (௪௬)

அதாவது-'சங்கினோடும் நேமியோடும் "மின்னுநூலுந்தண்டமும்" "வென்றிவில்லுந்தண்டும்வாளும்" "பூந்தண்மாலைந் தண்டுழாயும் பொன்முடியும் வடிவும்" "தொக்கசோதித்தொண்டைவாயும்" "கோலநீள்கொடிமூக்கும்" "நிறைந்தசோதிவெள்ளஞ்சூழ்ந்த நீண்ட பொன்மேனியோடும்" "செய்ய தாமரைக்கண்ணும்" "சென்னிநீண்முடியாதியாயவுலப்பிலணிகலத்தன்" "எழுவதோருருவென்னெஞ்சுளெழும்" என்றும் இப்படியடிதொடங்கி முடியளவுமநுபவித்த ப்ரகாரத்தை.

(அங்ஙனுருவெளிப்பாடாவுரைத்த) அப்படியே "உருவெளிப்பாடு" என்கிறதுறையிலே வைத்தருளிச்செய்த (தமிழ்மாறன்) (க) *த்ராவிடப்ரஹ்மதர்ஶியானவாழ்வார். நம்பிவிஷயமாக *எங்ஙனேயோவையருளிச்செய்த வாழ்வாரென்றபடி. (கருதுமவர்க்கின்பக்கடல்) அபிநிவேஶத்துடனநுபவிப்பார்க்கு ஆநந்தஸிந்துவாயிருப்பர். 'சென்னிநீண்முடியாதியாய வுலப்பிலணிகலத்தன் கன்னல் பாலமுதாகிவந்தென்னெஞ்சங்கழியான்" என்று-ஆழ்வார் தமக்கு அவ்வாகாரம் இனிதாயிருக்குமாபோலே, அவர் ஸம்பந்திகளானவர்களுக்கும் ஆழ்வார் அப்படியிருப்பரென்றபடி. (௪௫)

பதவுரை.

கடல் ஞாலத்து	கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில்
ஈசனை	எம்பெருமானை
முன்காணாமல்	கண்முன்னே காணப்பெறாமல்
நொந்து	க்லேஶப்பட்டு
உடனே அநுகரிக்கல் உற்று	அவனைத்தாம்அநுகரித்து த(ரி)ரிக்கப்பார்த்து
திடமாக வாய்ந்து	த்ருடாத்யவஸாயயுக்தராய்,
அவனாய் தான் பேசும்	அவனாகவேதான் அநுகரித்துப் பேசுகிற

மாறன்	ஆழ்வாருடைய
உரையதனை	ஸ்ரீ ஸூக்திகளை
ஆய்ந்து உரைப்பார்	வைபவமறிந்து அநுஸந்திப்பவர்கள்
ஆட்செய்ய	அவ்வாழ்வார்க்கு அடிமைசெய்ய
நோற்றார்	நோன்பு நோற்றவராவர்கள். (சகூ)

அவ.—நாற்பத்தாறும்பாட்டு. இதில் - அநுகாரத்தாலே த(ய)ரிக்கப்பார்க்கிறபாசுரத்தையநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; (க) *எங்ஙனேயோவில் - ப்ரீத்யப்ரீதிஸமமாய்ச்சென்றவிடத்தில்: ப்ரீத்யம்ஸம்தலையெடுத்து த(ய)ரிக்கைக்கு யோக்யதை யுண்டாயிருக்க, பாக்யஹாநியாலே அப்ரீத்யம்ஸமே தலையெடுத்து, பெற்றல்லது தரிக்கவொண்ணாதபடி ஆற்றாமைகரைபுரண்டு, கோபிமார் க்ருஷ்ணனை யநுகரித்து தரித்தாப்போலே இவரும்உபயவிபூதிநாதனையநுகரித்து த(ய)ரிக்கப்பார்க்கிறபடியைக்கண்டு கண்கலங்கினபரிவர்ஸந்நிஹிதர்க்குவிஷண்ணராய்ச்சொல்லிச்செல்லுகிறக்ரமத்தை; நாயகனைப்பிரிந்தாற்றாமையாலே தத்ப்ரகாரங்களை யநுகரித்து தரிக்கப்பார்க்கிற தலைமகளின்நிலையை வினவவந்தவர்களுக்குத்திருத்தாயார் 'ஸர்வேஸ்வரனாவிஷ்டனானானோ" என்றுக்லேஸத்தாலே சொல்லிச்செல்லுகிற துறையிலே வைத்தருளிச்செய்கிற *கடல்ஞாலத்திலர்த்தத்தை "கடல் ஞாலத்தீசனை" என்று தொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(கடல் ஞாலத்தீசனை) கடல்சூழ்ந்தபூமியிலுள்ளோர்க்கு நியந்தாவாய், அத்தாலே ஸர்வநிர்வாஹகனான ஸர்வேஸ்வரனை; (முன் காணாமல்நொந்தே) ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரம்பண்ணாமல்நொந்து. அதாவது (உ) "சோதிவெள்ளத்தினுள்ளே யெழுவதோருருவென்னெஞ்சுளெழும்' என்றும், (௩) "அறிவரியபிரானை" என்று மருளிச்செய்த மாநஸ ஸாக்ஷாத்காரமாத்ரமொழிய, ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரமில்லையென்றபடி. அத்தாலே அவஸந்நராய். (உடனவனுகரிக்கலுற்று)அநந்தரமாக கோபிமார் க்ருஷ்ணனை அநுகரித்து த(ய)ரித்தபடியை யாராய்ந்துதாமுமநுகரித்து தரிப்ப

(க) தி-வாய்-ரு-ரு. (உ) தி-வாய்-எ-ரு-கம. (௩) தி-வாய்-ரு-ரு-கக.

மூ.—நோற்றநோன்பாதியிலே னுன்றனைவிட்டாற்றகில்லேன்
பேற்றுக்குபாயமுன்றன் பேரருளே—சாற்றுகின்றேன்
இங்கென்னிலையென்னுமெழில் மாறன்சொல்வல்லார்
அங்கமரர்க்காராவமுது. (சஎ)

தாகத் திருவுள்ளத்திலேயுற்று. (திடமாகவாய்ந்து) த்ருடாத்யவஸாயயுக்தராய். "வாழ்ந்தவழுதிவளநாடன்" என்னும்படியா (ஹா)வபந்தத்தோடேகிட்டி. (அவனுக்கான் பேசும்) அதாவது-"கடல் ஞாலம்" "கற்கும்கல்வி" "காண்கின்ற" "செய்கின்ற" "திறம்பாமல்" "இனவேய்" "உற்றார்கள்" "உறைக்கின்ற" "கொடியவினை" "கோலங்கொள்" "கூந்தல்" என்கிற விவையாதியாகப்பத்தும்பத்தாக - ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்கள், ஸகலவித்யாவேதநமும் வித்யாப்ரவர்த்தகத்வாதிகளும், காரணமான பூதபஞ்சகங்களும், காலத்ரயத்திலுண்டான க்ரியாஜாதங்களும், ஜகத்ரக்ஷணப்ரமுகமான சேஷ்டிதங்களும் கோவர்த்தநோத்தரணம்முதலானக்ருஷ்ணசேஷ்டிதங்களும், எம்பெருமான் ஆஶ்ரிதாநாஶ்ரித விஷயங்களிலிருக்கு மிருப்பையும், ஜகத்ப்ரதாநரான ப்ரஹ்மருத்ராதி ப்ரகாரித்வமும், அகர்மவஶ்யத்வ ப்ரமுகமானவை, ஸ்வர்க்க ப்ரமுகமானவையாய், இப்படி உக்தங்களானவையெல்லாம் நானிட்டவழக்கென்று, (க) "யானேயென்னை வாய்ந்தேறப்பேசி" என்னும்படி அவனுகவநுகரித்த ப்ரகாரத்தையருளிச்செய்யும்.

(மாறனுரையதனை) ஆழ்வாரருளிச்செய்த திவ்யஸூக்தியானத்தை. (ஆய்ந்துரைப்பார்) "ஆய்ந்த தமிழ்மாலை யாயிரத்துள்ளிவையு மொருபத்து" என்று இதின் வைபவத்தையாராய்ந்தநுஸந்திப்பார். (ஆட்செய்யநோற்றார்) "திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்கள்" என்னும்படி ஆழ்வார்க்கடிமைசெய்ய நோற்றாரவர். (உ) "வண்டமிழ் நூறகநோற்றேனடியார்க் கின்பமாரியே" என்றிறே அவரிருப்பது. (ங) "ஸுஹ்ருஸ்ஸாரவணம் ஸமிஜ் ஸஸைந்யம் ஸஹஸோரஸவம் - அஹத்வாராவணம் ஸங்க்யே ஸபுத்ரம் ஸஹபாந்தவம்" "கொடியானிலங்கை செற்றேனேயென்னும்" என்னக்கடவதிறே. (சசு)

பதவுரை.

நோற்ற — மோக்ஷஸாதநமாக அநுஷ்டிக்கப் பட்ட

(க) ஆசார்யஹ்ரு. (உ) தி-வாய்-சு-இ-௬௦. (ங) ரா-யு-கக-உக.

நோன்புஆதி	கர்மாத்யுபாயங்களில்
இலேன்	அந்வயமில்லாதவனாயிராநின்றேன்;
உன்றனை விட்டு	உன்னைவிட்டு
ஆற்றகில்லேன்	தரிக்கமாட்டுகிறிலேன்;
பேற்றுக்கு	புருஷார்த்தத்திற்கு
உபாயம்	உபாயமாக
உன்றன்	உன்னுடைய
பேர் அருளே	மஹாக்ருபையையே
சாற்றுகின்றேன்	ப்ரசுரப்படுத்தாநின்றேன்;
இங்கு	இவ்வர்த்த விஷயத்தில்
என்நிலை	என்னுடைய நிஷ்டை (இதுவாயிருந்தது)
என்றும்	என்றருளிச்செய்த
எழில்மாறன்	(ஶேஷத்வகாஷ்டையாலே) அழகுபெற்ற ஆழ்வாருடைய
சொல்	அருளிச்செயலை
வல்லார்	ஓதவல்லவர்கள்
அங்கு	ஸ்ரீவைகுண்டத்தில்
அமரர்க்கு	நித்யஸூரிகளுக்கு
ஆர் அமுது	நித்யாபூர்வமான அம்ருதமாகப்பெறுவர். (௪௭)

அவ.—நாற்பத்தேழாம்பாட்டு. (நோற்றநோன்பாதி) இதில்-வானமாமலை திருவடிகளிலேவணங்கி ப்ரவணராய்ஶரணம்புக்கபடியைப்பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; அப்ரீதியாலே யநுகரித்து தரிக்கவேண்டும்படி அபிநிவேஶமதிஶயித்துச்செல்லாநிற்கச்செய்தேயும் ஸ்வாமிமதம்பெறுமையாலே அவஸந்நராய்; இப்படி யநுபவருசி ரூபமான தம்மபிநிவேஶத்தை ஸாதநமாகக்கருதி, "அது முற்றினவாறே கார்யம் செய்கிறோம்" என்றீஶ்வரன் நினைத்திருந்தானாகக்கொண்டு, பேற்றுக்குறுப்பாக ஶாஸ்த்ரஸித்தமான கர்மாத்யுபாயங்களில் தமக்கு மறந்தும் அந்வயமில்லாமையைச் சொல்லிக்கொண்டு, "அவனடியிலேகாட்டின உபாயமொழிய வேறொருபாயமில்லை" என்று; ஸம்

ஷாரி ஸம்ரக்ஷணார்த்தமாகப் பிராட்டியாரோடும் நித்ய பரிகரத்தோடுங்கூடச் சிரீவரமங்கையிலே வந்தெழுந்தருளியிருக்கிறவனான மாமலை திருவடிகளிலே, வேரற்றமரம்போலே புகலற்றுவிழுந்து சரணம்புகுகிற *நோற்றநோன்பி லர்த்தத்தையருளிச்செய்கிறார்- “நோற்றநோன்பாதியிலேன்” என்று தொடங்கியென்கை.

வ்யா.—(நோற்றநோன்பாதியிலேன்) இத்தால் - மோக்ஷஸாதநமாக ஶாஸ்த்ரஸித்தமான கர்மாத்யுபாயங்களில் எனக்கந்வயமில்லை. (க)“ஸாவணோநா, ஶுவ வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர: | த்வய்யாஹமநுஜோ ராஜா விஸீஷண இதிஶ்ருத: ராவணோநாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர: | தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதி ஶ்ருத:” இத்யாதிகளைமுன்னிட்டுச் சரணமடைந்தாப்போலே, “நோற்றநோன்பிலேன்” என்கிறபாட்டைக்கடாக்ஷித்தருளிச்செய்தபடி. (உன்றன்னைவிட்டாற்றகில்லேன்) தா(யா)ரகனுமாய் போக்யனுமாயிருக்கிற வுன்னைவிட்டு தரிக்கமாட்டுகிறிலேன். இவ்வாற்றாமையெனக்கு ஸ்வரூபமித்தனை

ஆனால்பேற்றுக்கு ஸாதநமென்னென்னில் (பேற்றுக்குபாயமுன்றன் பேரருளே) மோக்ஷோபாயம் *அரவினணைமேறி வீற்றிருந்து *சிரீவரமங்கை வாணனாய் *கருளப்புட்கொடி சக்கரப்படைவானநாடனாய், இப்படி *அமரர்களதிபதியாயிருக்கிற தேவர் அடியிலேயருளின நிர்ஹேதுககிருபையே. அதாவது - பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி” என்றும் “தமியேனுக்கருளாய்” என்றும், “வந்தருளியென்னெஞ்சிடங்கொண்ட” என்றும், “அருளாயுய்யுமாறெனக்கு” என்றும், “ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்” என்றுமருளிச்செய்தவையென்கை. மற்றுமுண்டான பாட்டுக்கள்- அருளைக்கடியான வவன்படிகளையும் அதுக்குடலாகத் தம்படிகளையுமருளிச்செய்தவையாயிருக்கும்.

(பேற்றுக்குபாயமுன்றன் பேரருளேசாற்றுகின்றேன்) “ஆகையாலேஅவன் நிர்ஹேதுகக்ருபையேஸாதநம்” என்னுமதுவெல்லாருமறியும்படி பறையறைந்து சாற்றுகின்றேனென்கிறார். (இங்கென்னிலையென்னும்) இவ்விடத்தில் - இவ்வர்த்தவிஷயத்தில், என்னை ... [illegible]

மூ.—ஆராவமுதாழ்வாராதரித்தபேறுகளைத்
தாராமையாலே தளர்ந்துமிகத்—தீராத
வாசையுடனாற்றாமை பேசியலமர்ந்தான்
மாசறுசீர் மாறனெம்மான். (௪௮)

கிஞ்சந்யத்தை முன்னிடுகையே பரதந்த்ரனான வாத்மாவுக்கு ஸ்வரூபமென்னும், (எழில்மாறன்) ஶேஷத்வ பாரதந்த்ர்யங்களாகிற ஆத்மபூஷணத்தாலே அபி(ஹி)ராமராயிருக்கிற வாழ்வாருடைய வுபாய நிஷ்கர்ஷகமான வித்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார். (அங்கமரர்க்காராவமுது) அவ்விடத்தில் * அளப்பரியவாரமுதை யநுபவிக்கிற நித்யஸூரிகளுக்கு நித்யாபூர்வமானவம்ருதமாகப்பெறுவர். "சிரீவரமங்கைமேயபத்துடன் வைகல்பாடவல்லார் வானோர்க்காராவமுதே" என்றத்தையருளிச்செய்தபடி. (௪௭)

பதவுரை.

ஆராவமுதாழ்வார்	(திருக்குடந்தை) ஆராவமுதன்
ஆதரித்தபேறுகளை	(ஆழ்வார்) ஆசைப்பட்ட புருஷார்த்தங்களை
தாராமையாலே	தலைக்கட்டியருளாமையாலே
மிகதளர்ந்து	மிகவும் வருந்தி
தீராத ஆசையுடன்	பெற்றல்லது முடியாத அபிநிவேசத்தோடே
ஆற்றாமைபேசி	தம்முடைய க்லேசத்தைக்கூறி
அலமர்ந்தான்	நிலைதளும்பினார்; (அவர்யாரெனில்;)
மாசு அறு சீர்	குற்றமற்ற குணங்களையுடையவரும்
எம்மான்	நமக்கு ஸ்வாமியுமான
மாறன்	ஆழ்வார். (௪௮)

அவ.—நாற்பத்தெட்டாம்பாட்டு. (ஆராவமுதாழ்வார்) அகிஞ்சநராய் ஆர்த்தியோடே ப்ரபத்திபண்ணியிருக்கச்செய்தேயும் ஆரா

† ஆராவமுது - ஆராவமுதன், ஆழ்வார் ஆதரித்த - ஆழ்வார்

வமுதாழ்வார் "இவர் நம்மாழ்வார்" என்றபிமானித்து அபேக்ஷிதம் செய்யாமையாலே யலமர்ந்து ஆர்த்தராயருளிச்செய்த பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; சிரீவர மங்கை வாணன்றிருவடிகளிலே சரணம்புக்கவிடத்திலும் அங்குத்தம்மபே க்ஷிதங்கிடையாமையாலே, "ஆஶ்ரிதரக்ஷண தீக்ஷிதனான ஸர்வேஶ்வரன் நங்கார்யம் செய்யாமையில்லை, எங்கேகார்யம் செய்யநினைத் திருக்கிறானென்று தெரியாது" என்று "திருக்குடந்தையிலே ஆராவமுதாழ்வார் திருவடிகளிலேசெல்லவே நம்மபிமதம் ஸித்திக்கும்" என்று மநோரதித்துச்சென்றவிடத்தில், அவரெழுந்திருத்தல் இருத்தல் உலாவியருளுதல் இன்சொல்லுச்சொல்லுதல் குளிரநோக்குதல் ஆரவணைத்தல் செய்தருளக்காணாமையாலே, பிராட்டியும் அவனுமான சேர்த்தியுமுண்டாய், நமக்கபேக்ஷயுமுண்டாயிருக்க, அபிமதம்பெறுதொழிவோமே?" என்று துடித்து "இவ்வளவிலும் திருவடிகளே யுபாயமென்னும் துணிவுகுலையாதொழியப் பெற்றோமிறே" என்று வருந்தி தரித்தாராய்த் தலைக்கட்டுகிற * ஆராவமுதி லர்த்தத்தை யருளிச்செய்கிறார் "ஆராவமுதாழ்வார்" என்றுதொடங்கி யென்கை.

வ்யா.--(ஆராவமுதாழ்வார்) (௧) "ஸஹவைதேஹ்யாவிஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" - ஸஹபத்ந்யாவிஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்று கூட்டுத்தேடி யநுபவிக்கவேண்டும்படி நிரதிஶயபோக்யராய் (௨) "ஶ்ரீமாந் ஸுஸுகஸுப்த: ஶ்ரீமாந் ஸுகஸுப்த:" என்னும்படி * ஏரார் கோலந்திகழக்கிடந்த வாராவமுதாழ்வார். (ஆதரித்தபேறுகளை) இவரபேக்ஷித்த புருஷார்த்தங்களை. அதாவது - "கிடந்தாய் கண்டேன்" "அம்மாமலர்க் கண்வளர்கின்றானே" "காணவாராயே" என்கிறவிடங்களிலபேக்ஷிதமானத்தை. (௨) "குடந்தையுட்கிடந்த வாறெழுந்திருந்து" என்கிறபடியே எழுந்திருக்கவேணும்; * குடந்தைத்திருமாலான தேவர் (௩) "தாமரைமங்கையும் நீயும்" என்னும்படி இருவருங் கூட விருந்தருளவேணும்; * தாமரைக்கண்களாலே நோக்கியருளவேணும்; (௪) * பவளம்போல் கனிவாய் சிவப்பநீகாணவரவேணு

(௧) ரா-அ·கூ-க. (௨) ரா-ஸு- (௩) தி-ச·கூக.

மூ.-மாநலத்தால் மாறன் றிருவல்லவாழ்புகப்போய்த்
தானிளைத்து வீழ்ந்தவ்வூர் தன்னருகில்—மேனலங்கித்
தன்பமுற்றுச்சொன்ன சொலவுகப்பார் தங்களுக்குப்
பின்பிறக்கவேண்டாபிற. (௪௧)

மென்றுப்போலேசிலபரிமாற்றங்களை யபேக்ஷிக்க; அது அப்போதே பெறுமையாலே.

(தளர்ந்துமிக) 'ஆகாசத்தைநோக்கி யழுவன்றொழுவன்' என்னும்படி அத்யவஸந்நராய். (தீராதவாசையுடன்) அபிநிவேசமபோவது அநுபவத்தாலே யாகையாலே, அநுபவம் பெறுமல்முடியாத அபிநிவேசத்தோடே, (ஆற்றாமை பேசியலமந்தான) அதாவது - "அடியேனுடலம் - நோயலைந்துகரைய வுருக்குகின்ற" என்றும் "என்னான்செய்கேன்" என்றும் "உன்னைக் காண்பான் நானலப்பாய்" என்றும் "தூராக்குழிதூர்த்தெனை நாளகன்றிருப்பன்" என்றும் "தரியேனினி" என்றும் "உனக்காட்பட்டு மடியேனின்னமுழல்வேனோ" என்றும் பேசினவையென்கை. இத்தசையிலும் "உனதாள்பிடித்தே செலக்காணே" என்றும் "களைகண்மற்றிலேன்" என்றும் இவர்க்கத்யவஸாயமிருக்கும்படி இதுவாயிற்று. (மாசறுசீர்மாறனெம்மான்) இவ்வளவான தசையிலும் உபாயாந்தரங்களில்கண்வைக்கையாகிற மாசின்றிக்கே யிருக்கிற அத்யவஸாயஜ்ஞாநாதி குணங்களையுடையரான வாழ்வார் தம்மையடைந்த ப்ரபந்நஜநமான நமக்குஸ்வாமி. அன்றிக்கே, ஆற்றாமை பேசியலமந்தானென்று - க்ரியையாதல். (௪௰)

பதவுரை.

மாறன்	ஆழ்வார்
மாநலத்தால்	பெரியப்ரேமத்தோடே
திருவல்லவாழ்புகப் போய்	திருவல்லவாழென்னும் திருப்பதியில் ப்ரவேசிக்க எழுந்தருளி (அநுபவிக்கப்பெறுமல்)
அவ்வூர்தன் அருகில்	அவ்வூர் புறச்சோலையிலே
தானிளைத்து வீழ்ந்து	தாம் இளைத்து விழுந்து
மேல்நலங்கி	அதுக்குமேலே(தோழிமார்களுடை

துன்பமுற்று	வருந்தமுடைந்து
சொன்ன	அருளிச்செய்த
சொலவு	ஸ்ரீஸூக்திகளை
கற்பார்தங்களுக்கு	அப்யஸிக்கவல்லவர்களுக்கு
பின்	அப்யாஸத்திற்குப்பிறகு
பிற	திருவடிகளுக்கு அயலான ஜந்மத்தில்
பிறக்கவேண்டா	பிறவிநேரிடாது. (௪௮)

அவ:- நாற்பத்தொன்பதாம்பாட்டு. (மாநலத்தால்) இதில்-திருவல்லவாழேறச்செல்ல, புறச்சோலையில் போக்யதையாலே நலிவுபட்டுப்பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனே யென்னில், பெரியவாற்றாமையோடே திருக்குடந்தையிலே புக்கவிடத்திலும்தம்மபேக்ஷிதங்கிடையாமையாலே அங்குநின்றும் புறப்பட்டு. ''திருவடிகளேயுபாயம்' என்று துணிந்த துணிவுகைகொடுத்துநடத்தத்திருவல்லவாழேறப்போய், முட்டப்போக மாட்டாமல் தளர்ந்து ஊரில் புறச்சோலையிலே கிடந்து, அங்குண்டான வேதகோஷவைதிகக்ரியாகோலாஹலம் செவிப்பட, மதுமல்லிகை தொடக்கமான போக்யதையை யநுஸந்திக்கையாலும், உள்ளேப் புக்கநுபவிக்கப் பெறாமையாலும் தமக்குண்டான ஈடுபாட்டை, நாயகனிருப்பிடத்தே செல்லுவதாகப் புறப்பட்டுப்போய்க்கிட்டி யநுபவிக்கப்பெறாமையாலே நடுவேகிடந்து நோவுபட்டு, ''அங்கே புக்கு அவனைக்கண்டுஸ்தோத்ரம் பண்ணப்பெறுவதென்றோநாம்'' என்று தன்தளர்த்தியைப் பாங்கிமாருக்கு உரைக்கிறநாயகிபாசுரத்தாலேயருளிச்செய்கிற - ✻மானேய் நோக்கிலர்த்தத்தை- ''மாநலத்தால்'' என்றுதொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா:- (மாநலத்தால் மாறன்) பெரியப்ரேமத்தாலே ஆழ்வார், (திருவல்லவாழ்புகப்போய்)ப்ரேமப்ரேரிதராய்ப்ரவேசிக்கைக்காகப் போய். (தாளிணைத் துவீழ்ந்தவ் வூர் தன்னருகில்) அவ்வூர் தன்னருகில் - தாளிளைத்துவீழ்ந்து. உள்ளேபுக்கநுபவிக்கப்பெறாமல்ஊரின்புறச்சோலையிலே, ப(வ)லஹாநியாலும் அங்குத்தை போக்யதையாலும் நகரஸம்ப்ரமங்களாலும் கால்நடை தாராமல் தளர்ந்து வீழ்ந்து. (மேல்நலங்கி) அதுக்குமேலே தோழி

மார் விஶேஷ வசநங்களாலும் கலங்கி. (துன்பமுற்று) பக்ஷதலாப க்ஷாரீர மாயாதிருவின அபக்கத்தையுடையராய். (சொன்னசொலவு) அருளிச்செய்த திவ்யஸூக்திகள்.

அதாவது (௧) 'ஶுத்தவெளமலிகவஹ - பத்மவெளகந்திகவஹம்' (௨) "ஶுத்தகௌமாலவலுநஷ- பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டஃ" இத்யாதிப்படியே "வைகலும் வினையேன்மெலியவாளர் வண்கமுகூர் மதுமல்லிகைகமழும் தேனார்சோலைகள்சூழ்" என்றும், "பொன்திகழ் புன்னைமகிழ் புதுமாதவிமீதணவித் தென்றல் மணங்கமழும்" என்றும், "பச்சிலைநீள்கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்" என்றும், "பாங்குரல் வண்டினொடு பசுந்தென்றலுமாகி யெங்கும் செண்சினையோங்குமரச் செழுங்கானல்" என்றும், "ஓதநெடுந்தடத்துள்ளுயர் தாமரைசெங்கழுநீர்" என்றும், "மாடுறுபூந்தடம்" என்றும், "மழலைவரிவண்டுகளிசைபாடும்" என்றும் - விஶேஷதசையில் அநுகூலதையில் பரிமளம் அஸஹ்யமாய்க்கால் கட்டுகிறபடியையும், மற்றுமுண்டான போக்யதைகளுமப்படியாகையையும்; "வினையேன்மெலியப்பாடுநல்வேத வொலிபரவைத்திரைபோல் முழங்க" என்றும், "மாடுயர்ந்தோமப்புகைகமழும்" என்றும், "நல்லவந்தணர் வேள்விப்புகை மைந்நலங்கொண்டுயர் விண்மறைக்கும்" என்றும் - வைதிகக்ரியாகோலாஹலங்களும்; "தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழநின்றதிருநகரம்" என்றும் நகரஸம்ப்ரமங்களும்; நாயகன் வேதப்ரதிபாத்யனாகையாலும் வைதிக கர்மஸமாராத்யனாகையாலும் ஸ்மாரகத்வேந பாத(வாய)கமாயிற்று; நகரஸம்ப்ரமம், தானும் ஸம்ப்ரமத்துடனே புகப்பெறாமையாலே பாத(வாய)கமாயிற்று;

அதுக்குமேலே "என்றுகொல் தோழிமீர்காளெம்மைநீர் நலிந்தென் செய்தீரோ" என்றும், "இச்சலும் தோழிமீர்காளெம்மைநீர் நலிந்தென்செய்தீரோ" என்றும்—ப்ரியபரைகள் ஹிதபரைகளாய் நிஷேதிக்கையாலும், தனக்கோடுகிற த்வரையாலே அதுவும் ஶைதில்யஜநகமாயிற்று; "கோனாரையடியேனடிக்கூடுவதென்றுகொலோ" "நின்றபிரானடி நீறடியோங்கொண்டு சூடுவது -

(௧) ரா-கி-௧-௧௦௨. (௨) ரா-கி-௧-௭௧.

மூ.—பிறந்துலகங்காத்தளிக்கும் பேரருட்கண்ணாவுன்
சிறந்த குணத்தாலுருகுஞ்சீலத்—திறந்தவிர்ந்து
சேர்ந்தநுபவிக்கு நிலைசெய்யென்றசீர்மாறன்
வாய்ந்தபதத்தே மனமேவைகு. (௫௦)

என்றுகொல்'' "[illegible]பிரான் கழல்காண்டுங்கொல் நிச்சலுமே'' "நம்பிரானைநுகன்னலமே'' "என்னலங்கொள் சுடரையென்றுகொல் கண்கள் காண்பதுவே' "மாண்குறட்கோலப்பிரான் மலர்த்தாமரைபாதங்கள் - காண்பதெஞ்ஞான்றுகொலோ'' "நிலந்தாவிய நீள் கழலை - நாடொறும் வீடின்றியே தொழக்கூடுங்கொல்'' "யாங்கண்டுகைதொழக்கூடுங்கொலோ'' 'நல்லருள்நம்பெருமான் நாராயணன் நாமங்கள் -தொல்லருள் நல்வினையால் சொலக்கூடுங்கொல்'' என்று இப்படித்திருவடிகளைத் தொழுகையும்திருநாமத்தாலே ஸ்துதிக்கையும் ப்ரார்த்யமாகையாலும் ஸௌசில்யம் மிக்கிருக்குமிறே; இப்படியாகையால் மேல்நலங்கித் துன்பமுற்றுச்சொன்ன சொலவிவையாயிற்று. இத்தசையிலும், "அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்'' என்றிறே இவரத்யவஸாயம் குலையாமலிருக்கும்படி.

(துன்பமுற்றுச்சொன்ன சொலவுகற்பார்தங்களுக்கு) இப்படி விஸ்லேஷவ்யஸநயுக்தராயருளிச்செய்த ஸூக்தியான இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார்க்கு. (பின்பிறக்கவேண்டா) இதின் அப்யாஸாநந்தரம் ஜந்மபரிக்ரஹம்பண்ணவேண்டா. ஜந்மத்தைமுடித்தேவிடும். பிற என்று - அவ்யயம்; அன்றியே திருவடிகளுக்கசலான ஜந்மமெடுக்கவேண்டாவென்றாகவுமாம். "பின்புகற்க்கவேண்டாபிற'' என்றபோது - இத்தையொழியவேறொன்றையப்யஸிக்கவேண்டாவென்றபடி. (௪௯)

பதவுரை.

பிறந்து	(பலயோநிகளில்) அவதரித்து
உலகம்	லோகங்களை
காத்தளிக்கும்	ரக்ஷித்தருளுகின்ற
பேர் அருள்	மஹத்தான க்ருபையையுடைய
கண்ணா	கண்ணபிரானே !

உன்	"உன்னுடைய
சிறந்தகுணத்தால்	கல்யாணகுணாநுஸந்தாநத்தினால்
உருகும் நிலத்திறம் தவிர்ந்து —	மனமுருகும் இயல்வைவிட்டு
சேர்ந்து அநுபவிக்கும் நிலை	உன்னைக்கிட்டியநுபவிக்கும் நிலைமையை
செய்என்ற	அருள்" என்று வேண்டின
சீர்மாறன்	ஸ்ரீ சடகோபனுடைய
வாய்ந்தபதத்தே	ஒன்றுக்கொன்று ஒத்திராநின்ற திருவடிகளில்
மனமே	நெஞ்சே!
வைகு	நீ தங்கியிரு. (௫௦)

அவ.—ஐம்பதாம்பாட்டு. (பிறந்துலகம்) இதில் - "அவதார சேஷ்டிதங்களை தரித்துநின்றநுபவிக்கும்படி பண்ணவேணும்" என்று பேசினபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; கீழ் - ஸ்தாநத்ரயத்திலும் தம்மபேக்ஷிதங் கிடையாமையாலே, "அர்ச்சாஸ்தலங்களில் ஆஶ்ரிதர் நினைவுக்கீடாக ஆலோகாலாபாலிங்கநாதிகளான வநுபவவிஶேஷங்களை யுபகரித்தருளக்கடவோமல்லோம்" என்று அவன் ஸங்கல்பித்தருளுகையாலே யாயிருக்கும் நம்மபிமதம் ஸித்தியாதொழிந்தது; அவன் ஸங்கல்பம் குலையும்படி அங்கு நிர்ப்பந்திக்கக்கடவோமல்லோம், ஆஶ்ரிதர் நினைவறிந்து முகங்கொடுத்தநுபவிப்பித்தவவதாரத்திலே செல்லுவோம்" என்று க்ருஷ்ணாவதாரத்திலே யநுபவிப்பதாகச் செல்ல, அதுவும் கைகழிந்து தாம் பிற்பாடராய் அத்தாலேநொந்து, "அவ்வவதார குணசேஷ்டிதங்களையாகிலும் அநுஸந்தித்து தரிப்போம்" என்று பார்த்தவிடத்தில், அவையும் விஶ்லேஷதஶையிலே யநுஸந்திக்கையாலே ஶைதில்யத்தைவிளைக்க, நான் தரித்துநின்று உன்குணசேஷ்டிதங்களை யநுஸந்திக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்று ஶரணம்புகுகிற *பிறந்தவாற்றிலர்த்தத்தை "பிறந்துலகங்காத்தளிக்கும்" என்றருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(பிறந்துலகங்காத்தளிக்கும் பேரருட்கண்ணா) (௧) "மண்ணின்பாரம் நீக்குதற்கே வடமதுரைப்பிறந்தபிறவியை "பிறந்தவாறும்" என்றிறெம்படி. பவதரித்தும், "மற்றும் * கள்ளவேடத்தைக் கொண்டுபோய்ப் புறம்புக்கவாறும்,(௨) * சீராற்பிறந்து சிறப்பால்வளரா"தே அன்றே பிறந்து அன்றே வளர்ந்து ∴ அடியை மூன்றையிரந்தவாறும், அம்ருதமதனார்த்தமாக வரவிர்ப்பவித்து * கூடிநீரைக்கடைந்தவாறும்" என்றிப்படி பூபாரநிர்ஹரணார்த்தமாகவும் த்ரிபுரதஹனார்த்தமாகவும் த்ரைலோக்யாஹரணார்த்தமாகவும் அம்ருதமதனார்த்தமாகவு மவதரித்து ஜகத்தைரக்ஷித்து போக்கிப்போரும் கிரவதிகக்ரு(பை)ஹவானான க்ருஷ்ணனே!. இதே "நல்லருள்நம்பெருமான்" என்றாரிறே, அப்படி கிரவதிகத(யா)யாவானான.

(உன் சிறந்தகுணத்தாலுருகும் சீலத்திறந்தவிர்ந்து) உனக்கநுரூபமான கல்யாணகுணாநுபவத்தாலே த்ரவீபூதனும் ஸ்வபாவப்ரகாரம் கிவ்ருத்தமாய்; (சேர்ந்தநுபவிக்கும் கிலசெய்) உன்னைக் கிட்டியனுபவிக்கும்படியாக ஸ்தை(ஸௌ)ர்யத்தைச் செய்தருளவேணும். அதாவது - "பிறந்தவாறு" என்று தொடங்கி "நிறந்தனூடுபுக்கெனதாவியைநின்றுநின்றுருக்கியுண்கின்ற," "என்னையுன் செய்கைநைவிக்கும்" "பையவேநிலையும் வந்தென்னெஞ்சையுருக்குங்களே" "வெள்ளநீர்ச்சடையானும்" என்று தொடங்கி, "என்னுரையுருக்கியுண்ணுமே" "உண்ணவானவர்கோனுக்கு" என்று தொடங்கி, "என்னெஞ்செரிவாய்மெழுகொக்குகின்றே"(௩) "த்ரிவுஷ - திஷ்டக்தம்" (௪) "த்ரவீநஷ - ஆஸீநம்" (௫) "ப்ரதிபிம்ப ப்ரதிபிம்பய" என்னும்படி, "நின்றவாறும்" இத்யாதி - "நின்று நின்றுநினைகின்றேனுன்னை யெங்ஙனம் நினைகிற்பன்," "ஐஞ்சு ... [illegible] ...டங்கி "எண்கொள் சிந்தையுள்நைகின்றேன்" "திருவுருவுகிடந்தவாறும்" என்று தொடங்கி, "என்னெஞ்சம் ... நெக்கநுவிசோருங்கண்ணீர்." "அடியை மூன்றையிரந்தவா" என்று தொடங்கி, "என்னெஞ்சம் நின்றனக்கே கரைந்துருகும்"

(௧) தி-வாய்-௬-௧-௰. (௨) பெ-திருவ-௧௬. (௩) ரா-கி-௧௬-௨௫ (௪) ரா-அ-௧௬ ௨௫. (௫) ரா-யு-௧௬-௧.

மூ.—வைகல் திருவண்வண்டூர் வைகுமிராமனுக்கென்
செய்கைதனைப்புள்ளினங்காள்செப்புமெனக்-கைகழிந்த
காதலுடன் தூதுவிடுங்காரிமாறன்கழலே
மேதினியீர் நீர்வணங்குமின். (௫௧)

"கூடி நீரைக் கடைந்தவாறும்" என்று தொடங்கி, "ஊடுபுக்கெனதாவியை யுருக்கியுண்டிடுகின்ற" என்றும் சொல்லப்படுகிறவை இவ்ருத்தமாய்; "உன்னையென்றுகொல்சேர்வதுவே," "உன்னையென்று தலைப்பெய்வனே" "ஆவியேற்கொன்றுநன்குரையாய்" "என்செய்கேனடியேனே" "கொடிய வல்வினையேனுன்னையென்று கொல் கூடுவதே," "நின்றன்னைநாடும் வண்ணம் சொல்லாய் நச்சுநாகணையானே" என்று தரித்துநின்று உன்னை யநுபவிக்கப்பெறுவேனென்றவையென்கை.

(சேர்ந்தநுபவிக்கும் நிலைசெய்யென்று சீர்மாறன்) "நாகணைமிசைநம்பிரான் சரணேசரண்நமக்கு" என்று-தாம் தரித்துநின்றநுபவிக்கும் ப்ரகாரம்பண்ணி யருளவேணுமென்று அர்த்தித்த, ஜ்ஞாநாதிகுணங்களையுடையரான ஆழ்வாருடைய (வாய்ந்தபதத்தே) பரஸ்பர ஸத்ருஶமாய்ப் பொருந்தியிருக்கிறதிருவடிகளிலே. (மனமேவைகு) மநஸ்ஸே தங்கிப்போரு. அவர்க்கு * நாகணைமிசை நம்பிரான் சரணேசரணானாப்போலே, உனக்கும் ஆழ்வார் திருவடிகளே ப்ராப்தமென்று சென்றங்கே தங்கிப்போரு. (௫௦)

பதவுரை.

மேதினியீர்	இப்பூமியிலுள்ளவர்களே!
திருவண் வண்டூர்	"திருவண்வண்டூரில்
வைகல்	எப்பொழுதும்
வைகும்	எழுந்தருளியிருக்கிற
இராமனுக்கு	சக்ரவர்த்தித் திருமகனுக்கு
புள்இனங்காள்	பறவைக்கூட்டங்களே!
என்செய்கைதனை	என்னுடைய தசையை
செப்புமென	அறிவியுங்கள்" என்று
கைகழிந்த காதலுடன்	மிகுந்த ஆசையோடே
தூதுவிடும்	(பறவைகளைத்) தூது விட்ட

காரி மாறன் [illegible]
கழலே [illegible]
சீர்வணங்குமின் [illegible] வணங்குங்கள். (ருக)

அவ.—ஐம்பத்தோராம்பாட்டு. (வைகல்) இதில் - ஆற்றாமையாலே தூதுவிடுகிற ஆழ்வார் பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார் - அதெங்ஙனேயென்னில், அது கூடாமல் ✻ தோற்றநாவிலும் - அபேக்ஷமாயிருக்கிற ஸாதனமாகிற ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம்பண்ணியிருக்கச்செய்தேயும், அவன் ஜகத்ரக்ஷணவ்யாஜமாக காரியம்செய்யாதொழிய, அத்தாலே தம்முபேக்ஷிதங்கிடையாமல் மிகவும்தளர்ந்து, "ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷித்திருக்கிறவனுகையாலே, நம்மார்த்தியை யறிவிக்கவே தப்பாமல் நங்காரியம் செய்யும்; திருவண்வண்டூரிலைஶ்வர்யத்திலேகால்தாழ்ந்து நம்மை மறந்தானித்தனை" என்றநுஸந்தித்து, க(வை)டகரையிட்டு - (க) "நந்தொஜயம் - நத்பஜேயம்" என்று தஶரதாத்மஜனுக்குத் தந்தசையை யறிவித்துச் செல்லுகிறபடியை, நாயகன் வருமளவும் கண்டாறியிருக்க மாட்டாமலாற்றாமையாலே நாயகனைக்குறித்துத் தூதுவிடுகிற நாயகிபாசுரத்தாலே யருளிச்செய்கிற ✻ வைகல் பூங்கழிவாயிலர்த்தத்தை "வைகல் திருவண்வண்டூர்" என்றுதொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(வைகல் திருவண்வண்டூர் வைகுமிராமனுக்கு) "தேறுநீர்ப்பம்பைவடபாலைத் திருவண்வண்டூர், மாறில் போரரக்கன் மதிள் நீறெழச்செற்றுகந்த ஏறுசேவகனார்" என்றதை நினைக்கிறது. இராண்டாம் தூதுக்குவிஷயம்விபவமிறே. (உ) "வ்யவஸாயஜ்ஞோ ரக்ஷணஸ்தைர்யம் பம்போத்தரே தர்ஶிதம்" என்றாரிறே. திருவண்வண்டூரிலே பிறபட்டாரை ரக்ஷிக்கைக்குஸர்வகாலமும் நித்யவாஸம்பண்ணுகிற சக்ரவர்த்தித்திருமகனுக்கு ஜநகதுலஶார்தூலி (ந) 'ஜீவந்தீம்- ஜீவந்தீம்". என்று ஆள் விட்டதும் [illegible] பர்வதத்திலே வர்த்திக்கிறவரைக் குறித்[illegible]

(என் செய்கை [illegible]
தனைப் [illegible],
அதாவது - "[illegible] தன்மையைக்

(க) ரா-யு-கஅ-ந. (உ) ஆசார்யஹ்ருதயம் - ந. (ந) ரா-ஸு-நக-௩௦.

மூ,—மின்னிடையார் சேர்கண்ணன் மெத்தெனவந்தானென்று
தன்னிலைபோய்ப்பெண்ணிலையாய்த்தான்றள்ளி-உன்னுடனே
கூடேனென்றூடுங்குருகையர்கோன்றொழுவே
நாடோறும் நெஞ்சமே நல்கு. (ருஉ)

கைகள் கூப்பிச்சொல்லீர்" என்றும், "பாதம் கைதொழுதுபணி யீரடியேன்றிறமே" என்றும், "திறங்களாகியெங்கும் செய்களூடு ழல் புள்ளினங்காள் - அடியேனிடரை - இறங்கிநீர் தொழுதுபணி யீர்" என்றும், "மடவன்னங்காள்-உடலம்நைந்தொருத்தி யுருகு மென்றுணர்த்துமினே" என்றும், "உடன்மேயுமடவன்னங்காள் - அடியேனுக்குப் போற்றுமினே" என்றும்,"புன்னைமேலுறைபூங்குயி ல்காள்-மாற்றங்கொண்டருளியுரையீர் மையல்தீர்வதொருவண்ண மே" என்றும், "அடையாளந்திருந்தக்கண்டு - எனக்கொன்றுரை யொண்கிளியே" என்றும், "கருந்திண்மாமுகில்போல்திருமேனிய டிகளை - திருந்தக்கண்டெனக்கொன்றுரையாயொண் சிறுபூவாய்" என்றும், "அடிகள் கைதொழுதலர்மேலசையுமன்னங்காள்- கொடி யவல்வினையேன்றிறங்கூறுமின்வேறுகொண்டே" என்றுமிப்புடை களிலே அர்த்தித்தபடியனைவர்க்குமறிவித்தவையென்கை.

(கைசூழ்ந்தகாதலுடன் தூதுவிடும்) "என்னையுமுளனென்மின்களே" என்று- தாம்வந்துநோக்கவிடுக் ஸத்தையில்லை; இப்போதுவந்து நோக்குகைக்கீடான ஸத்தாமாத்ரங்கிடக்கிறதென்னுங்கோளென் கையாலே கைகழிந்த காதலுடன் தூதுவிட்டபடியிதுவாயிற்று. (காதலுடன் தூதுவிடுங்காரிமாறன்சமலே மேதினியீர் நீர்வணங்கு மின்) ஆற்றாமையோடே தம்பேற்றுக்கு க(வ)டகரையர்த்திக்கிற வாழ்வார் திருவடிகளை, உங்கள்பேற்றுக்கு, பூமியிலுண்டானவர்க ளே! நீங்கள் வணங்கிவழிபடுங்கோள். அவர் (௧) "மாநிலத்தெ வ்வுயிர்க்கும்" என்னுமாபோலே, இவரும் இருந்தே குடியாக உபதேசிக்கிறார். (ருக)

பதவுரை.

மின் இடையார்	மின்னற்கொடிபோன்ற இடையை யுடைய மாதரை

---

(௧) தி-வாய் ௧-௩-௭.

சேர்	சேர்ந்த
கண்ணன்	கண்ணபிரான்
மெத்தெனவந்தான் என்று	விளம்பித்து வந்தானென்று
தன்நிலைபோய்	தம்முடைய ஆகாரம் குலைந்து
பெண்நிலையாய்	கோபிமாருடைய ஆகாரத்தையுடையராய்
தான் தள்ளி	(தங்களுடைய ஸங்கேதஸ்தலத்திற்கு வந்த கண்ணனைப்) பிடித்துத் தள்ளி
உன்னுடனேகூடேன் என்று	உன்னோடுசேரமாட்டேனென்று
ஊடும்	(ப்ரணயரோஷத்தாலே) பிணங்கின
குருகையர்கோன்	ஆழ்வாருடைய
தாள்தொழ	திருவடிகளை வணங்குவதற்கு
நெஞ்சமே	மனமே!
நாள்தோறும் நல்கு	நித்யம் உபகரிக்கவேணும். (ருஉ)

அவ. — ஐம்பத்திரண்டாம்பாட்டு. (மின்னிடையார்) இதில்- ப்ரணயரோஷத்தாலே † யூடின பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்; தம்மாற்றாமையாலே * நோற்ற நாலிலும் சரணம்புக்குச் சூதுவிட்டு, இத்தனையும் செய்தவிடத்தும் அவன் வரக்காணாமையாலே ப்ரணயரோஷம் தலையெடுத்து "அவன் வந்தாலும் இனி அவனோடுகலப்போமல்லோம்" என்று பரிஸரவர்த்திகளான ஸுஹ்ருத்துக்களோடேதாம் துணிந்திருக்க, அவனும் "ஸ்ரீகஜேந்த்ராழ்வானை முதலானவாச்ரிதராபத்திலே முற்பாடனாய்ச் சென்று ஆபத்தைப் போக்கி ரக்ஷித்ததாம் ஆழ்வாருக்குப் பிற்பாடரானோமே" என்று பிற்பாட்டுக்குப்போரநொந்து, தம்முடனே கலப்பதாகப் பதறி நடந்துவந்து, வடிவழகாலும் சேஷ்டிதங்களாலும் | தன் செல்லாமையாலும் தம்முடைய நிலைத்தீர்த்துத் தம்முடனே கலந்தபடியை, க்ருஷ்ணன் வரவுதாழ்க்கையாலே அவனோடே யூடி, "இனிக்கூடோம்" என்றிருந்த இடைப்பெண்களை, ஸௌந்தர்யாதிகளாலும் தன் செல்லாமையாலு மூடலைத்தீர்த்து க்ருஷ்ணன் தன்னுடனே சேர்த்துக்கொண்ட வ்ருத்தாந்தத்தின்மேலே வைத்தருளிச்செய்கிற * மின்னிடை மடவாரிலர்த்தத்தை "மின்

† (பா) உண்டான.

னிடையார் சேர்கண்ணன்" என்று தொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(மின்னிடையார் சேர்கண்ணன் மெத்தனவந்தானென்று) மின்னிடைமடவாருடனே சேர்ந்த க்ருஷ்ணன் அங்குத்தை விலம்பபரதையாலே ஆற்றாமைக்குதவவாராமல் மந்தகதியாய் வந்தானென்று. அவன் தங்களிடத்திற்பண்ணும் ப்ரதிவேஸத்தை அந்யதாகரித்துத் தங்களாற்றாமையாலே அவன் பகற்றந்தையுமஸத்கல்பமாக்குகிற. "மின்னிடைமடவார்கள் நின்னருள் சூடுவார்முன்புநானதஞ்சுவன்" என்றத்தைக்கடாக்ஷித்தருளிச் செய்தபடி. (தன்னிலைபோய்ப்பெண்ணிலையாய்) அதாவது - "குருகூர்ச்சடகோபன்" என்கிற வாகாரங்குலைந்து கோபிமாருடைய வாகாரத்தை யுடையராய்.

(தான்தள்ளி) தாங்கள் கழகமிருக்கிற ஸங்கேத ஸ்தலத்திலே புகுருவதாக அவனருகேவர, "போகுநம்பி" "குழலூதுபோயிருந்தே," "போயிருந்துநின் புள்ளுவமறியாதவர்க்குரைநம்பி" "எம்மை நீகழறேலே" "எங்குழலு பூவையொடுங் கிளியோடுங் குழகேலே," "கழகமேறேல்நம்பி" "கன்மமன்றெங்கள்கைகயிற்பாவை பறிப்பது" "உனக்கேலும் பிழைபிழையே" என்று அவனுக்கவகாசமறும்படி (க) "ப்ரணயாஞ்ஞாஜிதாநாஞ்ஞ பரிவிக்ஷேபராகவம் - ப்ரணயாச்சாபிமாநாச்ச பரிசிக்ஷேபராகவம்" என்றாற்போலேயும்;

அவனும், "உன்றாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய் முறுவலுமாகுலங்கள்செய்ய" என்றும், "நின்செய்யவாயிருங்கனியுங் கண்களும்விபரீதமிந்நாள்" என்றும், "வன்மமேசொல்லியெம்மைநீ விளையாடுதி" என்றும், "உகவையால் நெஞ்சமுள்ளுருகி யுன்றாமரைத் தடங்கண் விழிகளினகவலைப் படுப்பானழித்தாயுன்றிருவடியால்" என்று மென்னும்படி ஸ்மிதவீக்ஷணங்களாலும்' பாவகர்ப்ப(ஸாவஹஸ)மானவுக்திகளாலும்சேஷ்டிதங்களாலுமூடலைத்தீர்த்துச் சேரவிட்டு, "கூத்தவப்பன்றன்னைக் குருகூர்ச்சடகோபனேத்திய தமிழ்மாலை" என்னும்படி கூடினபடியையு மருளிச்செய்கையாலே. "உன்னுடனே கூடேனென்றூடுங்குருகையர்கோன்" என்றருளிச் செய்ததிலே - கூடினபடியுமிவர்க்கு விவக்ஷிதம். மேலே (உ) "நல்லவலத்தால் நம்மைச்சேர்த்தோன்" என்றிறேயருளிச்செய்யப்

(க) ரா-அ-௩௦-௨. (உ) ௫௯.

ரு.-நல்லவலத்தால் நம்மைச்சேர்த்தோன் முன்னண்ணாரை
வெல்லும் விருத்தவிபூதியனென்று—எல்லையறத்
தானிருந்து வாழ்த்துந்தமிழ்மாறன் சொல்வல்லார்
வானவர்க்குவாய்த்தகுரவர். (ருங)

புகுகிறது; அதுக்குச்சேர இங்கேகூட வேணுமிறே. (ஊடுங்குரு கையர்கோன்றாள்தொழவே நாடோறும் நெஞ்சமேநல்கு) அவனல் பம் தாழ்த்துக்கூடும்படியான ப்ரேமத்தையுடைய வாழ்வார் திரு வடிகளை நித்யஸேவை பண்ணும்படி மநஸ்ஸே நீயுந்நித்யமாகஸஹ காரியாயுபகரி. நல்குதல் - கொடுத்தல். (க) "ஊநவ - மநஸ" இறே. (ருஉ)

பதவுரை.

முன் நண்ணாரை வெல்லும் நல்லவலத்தால்	பூர்வஶத்ருக்களை வெல்லுமவனாய் (லீலோபகரணங்களைப் பறித்தல் முதலிய(நல்ல)† வன்மையாலே
நம்மைச்சேர்த்தோன்	நமது ஊடலை நீக்கிக்கூடவிட்டனை க்க்ருஷ்ணன்
விருத்த விபூதியன்என்று	விருத்த(ஸ)விபூதிகத்வத்தையுடையவனென்றுபேசி
எல்லை அற	முடிவில்லாமல் கிற
தான்இருந்து வாழ்த்தும்	தானிருந்து ஸ்தோத்ரம் பண்ணு
தமிழ்மாறன்	தமிழ்வேந்தராகிய வாழ்வாருடைய
சொல்வல்லார்	ஸ்ரீஸூக்திகளை ஓதவல்லவர்
வானவர்க்கு	நித்யஸூரிகளுக்கு
வாய்த்தகுரவர்	பொருந்தினஆசார்யராவர்கள்(ருங)

அவ.—ஐம்பத்துமூன்றும்பாட்டு. (நல்லவலத்தால்) இதில் - விருத்த(ஸ)விபூதியுக்தனாயிருக்கிற படியைப்பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார், எங்ஙனேயென்னில்;

கீழ் "அல்லோம்" என்றிருந்தநம்மை "ஆவோம்" என்னப் பண்ணினவவனுடையவச(வ)டித க(ட)டநாஸாமர்த்யத்தை யநு ஸந்தித்து விஸ்மிதரானவிவர்க்கு, "இதொன்றுகண்டோ நீரிப்படி

(க) வி பு சு எ உஅ. † உபாயத்தாலே

விஸ்மிதராகிறது, நாட்டில் நன்னில் தான் சேராதபதார்த்தங்க ளெல்லாவற்றையும் நம்முடனே சேர்த்துக்கொண்டு திருவிண்ணக ரிலே நிற்கிறபடிபாரீர்'' என்று அவன் தன் விருத்தவிபூதியோகத் தைக்காட்ட, அத்தையநுஸந்தித்து ஹ்ருஷ்டராய்ச்செல்லுகிற - * நல்குரவும் செல்வமர்த்தத்தை ''நல்லவலத்தால்'' இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா;—(நல்லவலத்தால் நம்மைச்சேர்த்தோன்) அதாவது- வீலோபகரணங்களை யெடுத்தும் பறித்தும் கழகமேறியும் வழிமறி த்தும் சிற்றிலழித்தும் * முற்றத்தூடுபுகுந்துமுறுவல் செய்து வார்த்தை சொல்லியு மிப்படியாயிற்று இவருடலைத் தீர்த்துக் கூட விட்டது. இவர் ''இதோரக(வ)டித க(வ)டநாஸாமர்த்த்ய ஶக்தி யிருந்தபடியென்'' என்று பார்த்து ''முன்நண்ணுரை வெல்லும்'' என்று - அத்தைமுதலிக்கிறார். அதாவது- * பும்ஸாம்த்ருஷ்டி சித்தாபஹாரியாய் * ஸாக்ஷாந்மந்மதமந்மதனை தன் ஸந்நிதி யிலே ''கிட்டோம்''என்றிருந்தநம்மை ஸ்த்ரீத்வாபி(ஶி)மாநத்தைக் குலைத்து ஊடுகையைத்தவிர்த்துக் கூடப்பண்ணினபடியென்கை. முன் நண்ணாராய்-கிட்டாதாராயிருக்கிற நம்மை - நல்லவலத்தால்- சேர்த்தோனென்றந்வயமாகவுமாம். அன்றிக்கே '' முன்நண்ணார் '' என்று - பூர்வஶத்ருக்களாய், அவர்களை * நின்றிலங்குமுடியனு மித்யாதிப்படியே வென்றாப்போலே நம்மை நல்லவலத்தால்சேர்த்த தென்றாகவுமாம்,

'' இப்படி சேராதத்தைச்சேர்ப்பதே!'' என்றிவரீடுபட, ''இதொன்று கண்டோ நீராஶ்சர்யப்படுகிறீர், லோகத்தில் பரஸ் பரவிருத்த(ஸ)ங்களாயிருக்கிறவிபூதியைச்சேர்த்துக்கொண்டு திரு விண்ணகரிலே நிற்கிறபடிபாரீர்'' என்று விருத்த(ஸ)விபூதியுக்தனு யிருக்கிறபடியைக்காட்ட (விருத்தவிபூதியனென்று) அதாவது- ''நல்குரவும்செல்வமும்,'' ''கண்டவின்பந்துன்பம்'' ''நகரமுநாடுக ளும்'' ''புண்ணியம்பாவம்'' ''கைதவம் செம்மை'' ''மூவுலகங்களு மாயல்லனாய் '' '' பாஞ்சுடருடம்பாயழுக்குப் பதித்தவுடம்பாய்'' ''வன்சரண்சுராக்காயசுரர்க்கு வெங்கூற்றமுமாய்'' '' நிழல்வெய் யல்''இத்யாதி பாட்டுக்களிலே-(க) ''ஸுஹ்ரு: ஶத்ரவ: ஶீதோஷ்ண

(க) [illegible]

மூ;—குரவைமுதலாங்கண்ணன் கோலச் செயல்கள்
இரவுபகலென்னுமின்றும்—பரவுமனம்
பெற்றேனென்றே களித்துப்பேசும் பராங்குசன்றன்
சொற்றேனினெஞ்சே தூவள். (ருச)

ஸௌரிஃ-அக்நிஃ கோபஃ ப்ரஸாதஸ்தே ஸோமஃ" என்னும்படியான விருத்த(ஐ)விபூதிகத்வத்தைப்பரக்கப்பேசி.

(எல்லையறத்தானிருந்துவாழ்த்தும்) அதாவது - "பல்வகையும் பரந்தபெருமானென்னையாள்வானை" என்றும், "கண்டுகொள்வதற்கரிய பெருமானென்னை யாள்வான்" என்றும், "திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் புகர்கொள்கீர்த்தியல்லாலில்லையாவர்க்கும் புண்ணியம்" என்றும், "கண்ணநின்னருளே கண்டுகொண்மின்கள்" என்றும், "திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் வரன்கொள்பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன்சரண்" என்றும், "திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரானென் சரணென்கண்ணனென்னையாளுடை யென்னப்பன்" என்றும், "என்னப்பனெனக்காய்" என்றுதொடங்கி, "திருவிண்ணகர்ச்சேர்ந்தவப்பன் தன்னொப்பாரில்லப்பன் தந்தனன் றனதாள் நிழல்" என்றும், "திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான் கழல்களன்றி மற்றோர்களைகணிலம்" என்றுமிப்படி யிதுக்கென்னச்சமைந்திருந்து நிரவதிகஸ்தோத்ரங்களாலே ஸ்துதித்தருளும்.

(தமிழ்மாறன் சொல்வல்லார்) ஸர்வஸுலபமான த்ராவிட பாஷைக்கு தேஶிகரான வாழ்வார் திவ்யஸூக்தியான வித்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார். (வானவர்க்கு வாய்த்தகுரவர்) அவனுடையவிபூதியை ததீயத்வாகாரேணவநுபவிக்கிற நித்ய ஸூரிகளுக்கு அவ்வநுபவ விஷயமான வித்திருவாய்மொழியை இவர்களிங்கே யிருந்தநுஸந்திக்கையாலே, அவர்களுக்கநுரூபமான வாதரணீயராவர். "திருவிண்ணகர்பத்தும் வல்லார்கோணையின்றி விண்ணோர்க்கென்றுமாவர் குரவர்கள்" என்றத்தை யருளிச்செய்தபடி. (ருரு)

பதவுரை.

கண்ணன்	ஸ்ரீக்ருஷ்ணனுடைய
குரவைமுதலாம்	திருக்குரவைகோத்தது முதலிய
கோலச்செயல்கள்	திவ்யசேஷ்டிதங்களை

இரவுபகல் என்னுமல்	ராத்ரிகாலம் பகற்காலமென்று பாராமல்
என்றும்	எப்போதும்
பரவும்மனம்பெற்றேன் என்று	துதிக்கும்படியான மநஸ்ஸைப்பெற்றேனென்று
களித்துப்பேசும்	செருக்கிப்பேசின
பராங்குசன்தன்	ஆழ்வாருடைய
சொல்தேனில்	ஸ்ரீஸூக்தியாகிற தேனில்
நெஞ்சே	மனமே!
துவள்	அவகாஹிக்கக்கடவாய். (௫௪)

அவ.—ஐம்பத்துநாலாம்பாட்டு. (குரவைமுதலாம்) இதில் க்ருஷ்ணனுடைய நிகில திவ்யசேஷ்டிதங்களையநுபவித்தருளிச் செய்தபடியை யநுவதித் தருளிச்செய்கிறார். அதெங்ஙனே யென்னில்; "மாசறுசோதி" "மானேய்நோக்கு" "பிறந்தவாறு" என்கிற திருவாய்மொழிகளிலே, "சேணுயர் வானத்திருக்கும்" "நாராயணன் நாமங்களே-தொல்லருள்நல் வினையால் சொலக் கூடுங்கோல்" "உருக்கியுண்டிடுகின்ற நின்றன்னை நாடும்வண்ணஞ்சொல்லாய்" என்று தூரஸ்தனென்றும், நாநீர்வரத்திருநாமஞ் சொல்லக் கூடவற்றேயென்றும் தரித்துநின்றுகுணாநுபவம்பண்ண வல்லேனும்படி பண்ணவேணுமென்றும் தாமாசைப்பட்ட வகைகளெல்லாம்ஸித்திக்கும்படி தான்க்ருஷ்ணனாய் வந்தவதரித்துச்செய் தருளின நிகில திவ்யசேஷ்டிதங்களையும், தத்ஹேதுவான திவ்யகுணங்களையு மநுபவவிஷயமாம்படி காட்டிக்கொடுக்க, அவற்றைக்கட்டடங்க தரித்துநின்று மண்டியநுபவித்து ப்ரீதராய்ச் செல்லுகிற * குரவையாய்ச்சியரிலர்த்தத்தை "குரவைமுதலாம்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.- (குரவைமுதலாங்கண்ணன் கோலச்செயல்கள்) அதாவது - * குரவையாய்ச்சியரோடு கோத்ததும், * கேயத்தீங்குழலூதிற்றும், * நிகரில் மல்லரைச்செற்றதும், * நோவவாய்ச்சியுரலோடார்க்கவிரங்கிற்றும், * வேண்டித்தேவரிரக்கவந்து பிறந்ததும், *

இகல்கொள் புள்ளைப்பிளந்ததும், *மனப்பரிப்போடழுக்குமானிட சாதியிற்றான்பிறந்து தனக்குவேண்டுருக்கொண்டதும், * நீணிலத்தொடுவான் வியப்பநிறைபெரும்போர்கள்செய்து வாணனையாயிரந்தோள் துணித்ததும், *கலக்கவேழ்கடலேழ் மலையுலகேழுங்கழியக் கடாயுலக்கத்தேர்கொடு சென்றமாயமும், * மண்மிசைப்பெரும்பாரம் நீங்க ஓர் பாரதமாபெரும்போர்பண்ணி மாயங்கள் செய்தது முதலாகவெல்லாவற்றையும் நினைக்கிறது, (குரவைமுதலாங்கண்ணன்கோலச் செயல்களென்று).

முந்துறக்குரவைமுதலாகக் காட்டினது திருக்குரவையிலாராவாரத்தையநுபவித்து (ய)தரிக்கைக்காக. * வேண்டித்தேவரிரக்கவந்து பிறந்தவ்ருத்தாந்தத்தை முந்துறமுன்னங் காட்டாதொழிந்தது - * பிறந்தவாற்றிலே ஆழ்ங்காற்பட்டு ஆறுமாஸம் மோஹித்தாப்போலே மோஹிப்பரென்று. (கண்ணன் கோலச்செயல்கள்) ஸ்ரீவால்மீகி (க) 'காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் - காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம்'' என்று-ரகுவரசரிதத்தையே முழுதுமநுபவித்தாப்போலே, இவரும் க்ருஷ்ணனுடைய நிகிலதிவ்ய சேஷ்டிதங்களையநுபவித்தபடி. *தேவக்கோலப்பிரான் செய்கையிறே.

(இரவுபகலென்றுமல்) ராத்ரிபகலென்னுமல். காலநியதியன்றிக்கே (என்றும்பரவுமனம் பெற்றேனென்றே களித்துப்பேசும்) ஸர்வகாலத்திலும்ஸ்துதிக்கும்படியானமநஸ்ஸைப்பெற்றேனென்று ஹர்ஷபாரவஶ்யத்தாலே கர்வித்துப்பேசும். அதாவது - ''மாயவினைகளையேயலற்றி யிரவுநன்பகலுந்தவிர்கிலமென்ன குறைவெனக்கே'' என்றும், ''நேயத்தோடுகழிந்தபோதெனக் கெவ்வுலகம் நிகரே''என்றும், ''நகரவைகல்வைகப்பெற்றேனெனக்கென்னினி நோவதுவே'' என்றும், ''மேவக்காலங்கள் கூடினேனெனக்கென்னினிவேண்டுவதே'' என்றும், ''ஈண்டுநானலற்றப் பெற்றேனெனக்கென்ன விகலுளதே'' என்றும், ''பகலிராப்பரவப்பெற்றேனெனக்கென்னமனப்பரிப்பே'' என்றும், ''நினைக்கும் நெஞ்சுடையேனெனக்கினியார் நிகர்நீணிலத்தே'' என்றும், ''என்னப்பன்றன்மாயங்களே காணுநெஞ்சுடையேனெனக்கினியென்ன கலக்கமுண்டே'' என்

(க) ரா-பா-௪-௭.

மூ.—துவளறுசீர்மால்திறத்துத் தொன்னலத்தால்நாளும்
துவளறுதன்சீலமெல்லாஞ் சொன்னான்—துவளறவே
முன்னமநுபவத்தின்மூழ்கிநின்றமாறனதில்
மன்னு முவப்பால் வந்தமால். (௫௫)

றும், "மால்வண்ணனை மலக்குநாவுடையேற்கு மாறுளதோவிம்மண்ணின்மிசையே" என்றும், "நண்ணிநான் வணங்கப்பெற்றேனெனக்கார்பிறர் நாயகரே" என்றும் பேசினவையென்கை. (௧) "உருகாமல் தரித்துநம்நண்ணிவணங்கப்பலித்தவாறே" என்றிறேநாயனாருமருளிச்செய்தது.

(களித்துப்பேசும் பராங்குசன்றன்) "வலக்கையாழி யிடக்கைச்சங்க மிவையுடைமால்வண்ணனை மலக்குநாவுடையேன்" என்கையாலே - ஸர்வஸ்மாத்பரனை வஶீகரிக்கு மங்குஶமாயுள்ளவரென்கிறத்தைப் பற்றச்சொல்லுகிறது. (௨) "கவீஶம் சக்ரஹஸ்தேப சக்ரம்" கவீஶம்சக்ராஹஸ்தேப சக்ரம்" என்றதிறே. திருநாவுடையபிரான்தாஸர் குமாரராகையாலே, அடியறிந்து - பராங்குஶனென்கிறார். (பராங்குசன்றன்சொற்றேனில் நெஞ்சேதுவள்) (௩) "வால்மீகேர்வதநாரவிந்தகளிதம் ராமாயணாக்யம்மது - வால்மீகேர்வதநாரவிந்தகளிதம் ராமாயணாக்யம்மது" என்றும், (௪) "ஶ்ரீகுகமுகாதம்ருதத்ரவஸம்யுதம் பிபத பாகவதம் ரஸம் - ஶ்ரீகமுகாதம்ருதத்ரவஸம்யுதம்பிபதபாகவதம்ரஸம்" என்றும் சொல்லுமாபோலே, * அமுதமென்மொழியாகையாலும், (௫) "தேனேயின்னமுதே" என்று பேசப்படுமவன் விஷயமாகையாலும் தேன்போலே யினிதாயிறே யித்திருவாய்மொழிதானிருப்பது. மனஸ்ஸே! அல்பஸாரமானவற்றிலே புக்கலமாவாதே ஸாரக்ராஹியாய், ஸாரதமமான விதிலே ஸக்தமாய்ப்போரு. (௬) "என்னெஞ்சென்னும் பொன்வண்டு" என்னக்கடவதிறே. (௫௪)

பதவுரை.

துவள் அற (அந்யபரதையாகிற) குற்றமின்றி
முன்னம் அநுபவத்தில் மூழ்கி முன்னமே பகவதநுபவத்தில படிந்து
நின்றமாறன் நின்ற ஆழ்வார்

(௧) ஆசார்யஹ்ரு. (௨) (௩) (௪) (௪) பாக-௧-௧-௩,
(௫) தி-வாய்-௫-௧-௨, (௬) இரா-நூ-௧௦௦.

அதில்மன்னும் உவப்பால் வந்தமால்	அந்த அநுபவத்திற்பொருந்தி கிறக ப்பெற்ற ஆநந்தத்தாலுண்டான வ்யாமோஹத்தினால்
துவள்அறுசீர்	குற்றமற்ற கல்யாணகுணங்களையுடைய
மால்திறத்து	எம்பெருமான் விஷயத்தில்
தொல்நலத்தால்	ஸ்வாபாவிக பக்தியாலே
நாளும்	நாடோறும்
துவள்அறு	அவ்விஷயத்தில் சலித்தலில்லாத
தன்சீலம் எல்லாம்	தமது ஸ்வபாவங்களை யெல்லாம்
சொன்னான்	அருளிச்செய்தார். (௫௫)

அவ.—ஐம்பத்தைந்தாம்பாட்டு. (துவளறுசீர்) இதில் - பகவத்விஷயத்தில் ப்ராவண்யத்தை யருளிச்செய்தபடியையநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனே யென்னில், கீழ்-தம்முடைய த்ருஷ்ணையாலே க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களை மண்டியநுபவிக்கப்புக்கவிடத்தில், குடிக்கின்ற தண்ணீர் விக்கிப் பாரவஸ்யத்தை விளைக்குமாபோலே அவை ஸௌசில்யத்தை விளைக்க, அத்தாலே கலங்கி, அடியேபிடித்துத்தமக்கு பகவத்விஷயத்தில்கரணத்ரயத்திலுமுண்டான ப்ராவண்யாதிஶயத்தை அந்யாபதேஶத்தாலே யருளிச்செய்கிற *துவளில் மாமணிமாடத்திலர்த்தத்தை "துவளறுசீர்" என்று தொடங்கியருளிச்செய்கிறானென்கை.

வ்யா.—"துவளறவே முன்னமநுபவத்தில் மூழ்கின்றமாறனதில் மன்னுமுவப்பால் வந்தமால் துவளறுசீர்மால்திறத்தில் தொன்னலத்தால்நாளும் துவளறுதன் சீலமெல்லாம் சொன்னான்" என்றந்வயம். (துவளறவே) *மயர்வறமதிநலம் பெறுகையாலே யென்னுதல், அந்யபரதையாகிற குற்றமறுகையாலே யென்னுதல். (முன்னமநுபவத்தில் மூழ்கின்றமாறன்) முந்துறமுன்னம் (௧) *பொய்நின்ற ஞானந்தொடங்கி இவ்வளவுமநுபவத்திலே யவகாஹித்தவாழ்வார்.

அதாவது-(௨ "திகரிலவன்புகழ்பாடியிளைப்பிலம்பகலுமிரவும் படிந்துகுடைந்தே" என்றும், (௩) "பரமன் பவித்திரன் சீர்செடி

---

(௧) தி-வி-௧. (௨) தி-வாய் ௧-௭-௧௦. (௩) தி-வாய்-௨-௩-௯.

யார் நோய்கள்கெடப் படிந்து குடைந்தாடி அடியேன் வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே" என்றும், (௧) "சீர்தரன் செய்யதாமரைக்கண்ணனென்றென்றிராப்பகல் வாய்வெரீஇ" என்றும், (௨) "துயரமில் சீர்க்கண்ணன் மாயன் புகழ்துற்றயான்" என்றும், (௩) "வீவில்சீரன் மலர்க்கண்ணன் விண்ணோர் பெருமான்றன்னை வீவில் காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன்" என்றும், (௪) "தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான் கண்டபின்" என்றும், (௫). "புகர்கொள் சோதிப்பிரான்றன் செய்கைநினைந்து புலம்பியென்றும் நாகரவைகல் வைகப்பெற்றேன்" என்றுமிப்படியாயிற்று * அந்நாள் தொடங்கியிந்நாடோறும் * இணையடிக்கே அன்புசூட்டி, அன்பு * பாலேபோல்சீரில் பழுத்தபடி. இப்படிகுணாநுபவத்தாலே தமக்கு * மாறும் * நிகருமின்றி நித்யமத(ச)முதி(த)தராய் * மாலேறி.

(துவளறுசீர்மால்திறந்துத் தொன்னலத்தால்) ஆஸ்ரிதர்க்கநுபாவ்யமாகையாலே குற்றமற்றுஹேயப்ரத்யநீகமான கல்யாணகுண யுக்தனான ஸர்வேஸ்வரன் விஷயத்தில் ஸ்வாபாவிகப(ஸ)க்தியாலே. (நாளுந்துவளறுதன் சீலமெல்லாம்சொன்னான்) நாள்தோறும் தாம் அவ்விஷயத்தில் ப்ராவண்யத்தையுற்றிருக்கிற தம்முடைய ஸ்வபாவமெல்லாமருளிச்செய்தார். (௬) "ராமேதி ராமேதி ஸதைவ புத்யா விசிந்த்ய வாசா ப்ருவதீ - ராமேதி ராமேதிஸதைவ புத்யா விசிந்த்யவாசாப்ருவதீ" என்றும், (௭) "ஏகஸ்ய ஸஞ்சிந்தயதோ ராமமேவானுபஸ்யதி - ஏகஸ்தஹ்ருதயானாம் ராமமேவானுபஸ்யதி" என்றும் சொல்லுமாபோலே.

அதாவது - "தாமரைத்தடங்கணென்றும் குவளையொண்மலர்க்கண்கள் நீர்மல்கநின்றுநின்று குமிறுமே" என்றும், "தேவதேவபிரானென்றேநியியும் வாயொடுகண்கள்நீர்மல்கநெக்கொசிந்து கரையுமே" என்றும "விரைகள் பேய்த்ததுமே பிதற்றிநெடுங்கண்ணீர்மல்கநிற்குமே" என்றும், "கண்ணபிரானென்றே பெயற்கமொன்றுமிலனுகந்தகந்துண்மகிழ்ந்து குழையுமே" என்றும், "அன்றுதொட்டுமையாந்திவள் நுழையும் சிந்தையளன்னைமீர்

(௧) தி-வாய்-௨-௭-௧. (௨) தி-வாய் ௩-௧௦-௬. (௩) தி-வாய்-௪-௫-௩.
(௪) தி-வாய்-௫-௫-௫. (௫) தி வாய் ௬-௪-௩ (௬) ரா ஸு ௩௨ ௧௧
(௭) ரா ஸு ௧௬ ௨௫

மூ.—மாலுடனே தான்கலந்து வாழப்பெருமையால்
சாலநைந்துதன் னுடைமைதானடையக்—கோலியே
தானிகழவேண்டாமற் றன்னைவிடல் சொன்மாறன்
ஊனமறுசீர் நெஞ்சேயுண். (ருசு)

தொழுமத்திசையுற்றுநோக்கியே'' என்றும், ''வைகல் நாடொறும் வாய்க்கொள்வாசகமும் மணிவண்ணனுமமே யிவளன்னைமீர்'' என்றும், ''அவன் சின்னமுந்திருநாமமுமிவள் வாயனகள் திருந்தவே'' என்றும், ''இருந்திருந்தரவிந்தலோசன வென்றென்றேநைந்திரங்குமே'' என்றும், ''துலைவில்லிமங்கலமென்று தன்கரங்கள் கூப்பித் தொழுமவ்வூர்த்திருநாமம் கற்றதற்பின்னையே'' என்றும், ''துலைவில்லிமங்கலம் சென்னியால் வணங்குமவ்வூர்த்திருநாமம் கேட்பதுசிந்தையே'' என்றும், ''சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர் சடகோபன்'' என்றும் - இப்படித்தமக்கு த்ரிவிதகரணத்தாலுமுண்டான ப்ராவண்யஸ்வபாவத்தை யெல்லாமருளிச்செய்தாரென்கை. ''இத்திருவாய்மொழி - ஆழ்வார் ப்ரக்ருதி சொல்லுகிறதென்று நம்முதலிகளெல்லாரும் போரவிரும்பி யிருப்பர்கள்'' என்றிறே ஈட்டிலே யருளிச்செய்தது. (ருரு)

பதவுரை.

மாலுடனே	எம்பெருமானோடே
தான்கலந்துவாழப்பெருமையால்	தான்கூடிவாழப் பெருமையாலே
சாலநைந்து	மிகவும் தளர்ந்து
தன் உடைமைதான் அடையக் கோலி தான் இகழவேண்டாமல்	தன் ஆத்மாத்மீயங்களையடையத்தான், விட உத்யோகிக்கவேண்டினாற்போலன்றிக்கே
தன்னைவிடல் சொல்மாறன்	தன்னடையே அவைமுற்கோலித் தம்மைக் கட்டடங்கவிட்டகலும் படியை அருளிச்செய்த ஆழ்வாருடைய
ஊனம்அறுசீர்	குறைவற்ற கல்யாணகுணங்களை
நெஞ்சே	மனமே
உண்	அநுபவிப்பாயாக. (ருசு)

அவ.—ஐம்பத்தாறும்பாட்டு. (மாலுடனே) இதில் - தமக்குள்ளதடையக்கைவிட்டுப் போனபடியைப்பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; கீழ்ப்பிறந்த ஸம்ஶ்லேஷம் மாநஸஸம்ஶ்லேஷமாத்ரமாய் பாஹ்யகரணயோக்ய மல்லாமையாலே, "சென்னியால் வணங்குமவ்வூர்த் திருநாமம் கேட்பது சிந்தையே" என்கிறபடியே மிகவுமவஸந்நராய் அத்தாலே மோஹித்துக்கிடக்க; * ஏறாளுமிறையோனில் தாம்விடப்பார்த்த ஆத்மாத்மீயபதார்த்தங்களடங்கலும் தன்னடையே விட்டுக்கழன்று ஶிதிலமாய்ச் செல்லுகிறபடியை, திருத்தாயார், தன்மகள்வலயா(ழி)திகள் போயிற்றென்று அவனுரிச்சூறை கொண்ட ப்ரகாரத்தைப்பேசின பாசுரத்தாலே சொல்லிக்கூப்பிடுகிற * மாலுக்குவையத்திலர்த்தத்தை "மாலுடனே தான்கலந்து" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(மாலுடனே தான்கலந்துவாழப் பெறுமையால்) ஆஶ்ரிதவ்யாமுக்த(ஞு)ஞன ஸர்வேஶ்வரனுடன் ஸம்ஶ்லேஷித்து ஸத்தைபெற்று உஜ்ஜீவியாமையால். கீழ் - "அடிமைசெய்வார் திருமாலுக்கு" என்றாரிறே அத்தையடியொற்றினபடி. (சாலநைந்து) மிகவுமவஸந்நராய். தம்தசை தாம்பேசமாட்டாதே திருத்தாயார் பேசும்படியாகத் தளர்ந்து. (தன்னுடைமைதானடையக் கோலியே தானிகழவேண்டாமல்) * ஏறாளுமிறையோனில் அவனுக்குறுப்பல்லாத ஆத்மாத்மீயங்களடையத்தாம் விடவுத்யோகிக்க வேண்டிற்றுப்போலன்றிக்கே. (தன்னைவிடல்சொல் மாறன்) தன்னடையே அவைமுற்கோலித்தம்மைக் கட்டடங்கவிட்டகலும்படியை யருளிச்செய்தவாழ்வார்.

அதாவது - (க) "உத்தரீயம் தயா த்யக்தம் ஶுபாந்யாபரணாந்யபி-உத்தரீயம் தயாத்யக்தம் ஶுபாந்யாபரணாந்யபி" என்னும்படி, "ஏலக்குழலியிழந்தது சங்கே" "என்மங்கை யிழந்ததுமாமை நிறமே" "என்பிறங்கிருங்கூந்தலிழந்தது பீடே" "என்பாடுடையல்குலிழந்தது பண்பே" "என்கண்புனைகோதை யிழந்தது கற்பே" "என்விற்புருவக்கொடிதோற்றதுமெய்யே" "என்தையலிழந்தது

(க) பா-கி-௬-௧௦.

மூ.—உண்ணுஞ்சோறுதி யொருமூன்று மெம்பெருமான்
கண்ணனென்றே நீர்மல்கிக்கண்ணிணைகள்—மண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன்பால்போமாறன்
பொன்னடியே நந்தமக்குப்பொன். (ருள)

தன்னுடைச்சாயே" "என்வாசக்குழலியிழந்ததுமாண்பே" "என் பூண்புனை மென்முலைதோற்றதும்பொற்பே" "என்கற்புடையாட்டியிழந்ததுகட்டே" என்றருளிச்செய்ததைவை யென்கை.

(தன்னைவிடல்சொல்மாறன்) "கட்டெழில் தென்குருகூர்ச் சடகோபன்சொல்" என்றருளிச்செய்த வாழ்வாருடைய (ஊனமறு சீர்நெஞ்சேயுண்) சிருக்கூனமாவது - ஸ்வார்த்தமாயிருக்கை. அப்படியன்றிக்கே பாரநுபவயோக்யமாயிருக்கை-ஊனமற்றிருக்கை. இப்படி த்ரவ்யமான கல்யாணகுணத்தை நெஞ்சேயுண். (ச) "ஓவாத்தொழில்சார்ங்கன்றொல் சீரை நன்னெஞ்சேயோவாதவுணவு" என்று ஆழ்வார் அவன்குணங்களைப் புஜிக்குமாபோலே நீயுமாழ்வாருடைய பக்த்யாதிகுணங்களை பு(ஸா)க்தமாகபுஜி.

பதவுரை.

உண்ணுஞ்சோறு ஆதி	உண்ணுஞ்சோறு முதலான
ஒருமூன்றும் §	மூன்றுதா(யா)ரகபதார்த்தங்களும்
எம்பெருமான் கண்ணனே என்று	எம்பெருமானாகிய ஸ்ரீக்ருஷ்ணனே யென்று
கண் இணைகள் நீர்மல்கி	இரண்டுகண்களிலும் நீர்ததும்பப் பெற்று
மண் உலகில் மன்னு	இந்நிலவுலகத்தில் நிலைபெற்ற
திருக்கோளூரில்	திருக்கோளூரில் எழுந்தருளியிருக்கிற
மாயன்பால்போம்	ஸர்வேஶ்வரனிடஞ்சென்ற
மாறன்	ஆழ்வாருடைய
பொன்அடியே	அழகியதிருவடிகளே
நந்தமக்கு பொன்	நமக்கு தநமாகும். (ருள)

அவ.—ஐம்பத்தேழாம்பாட்டு. (உண்ணுஞ்சோறு) இதில் - திருக்கோளூரேறப்போனபடியை யருளிச்செய்ததை யநுவதித்

(க) பெரி-திருவ-எஅ. § சோறு நீர் வெற்றிலை

தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; திருத்தாயார் "மாலுக்கு வையமளந்தமணாளற்கு' என்றுதொடங்கி "பொற்பமைநீண்முடி பூந்தண்டுழாயற்கு" என்று-ஆபாதமௌளிபர்யந்த பர்யவஸிதங்களானவவன் திருநாமங்களைச் சொல்லிக்கூப்பிட்டுப் பரவசையாய்க்கிடந்துறங்க, ம்ருதஸஞ்ஜீவிநியான திருநாமத்தைக்கேட்டுப் பெண்பிள்ளையுணர்ந்தெழுந்திருந்து அவனிருக்கிற திருக்கோளூரேறப்போக, அநந்தரம் திருத்தாயாருணர்ந்து படுக்கையில் பெண்பிள்ளையைக்காணப் பெறாமையாலே, "தன்வயிற்றிற்பிறப்பாலும் இவள்தன்ஸ்வபாவத்தாலும் திருக்கோளூரேறப் போனாள்" என்று சோகிக்கிற அந்தத்திருத்தாயார் பாசுரத்தாலே ஸ்வதசையை யருளிச்செய்கிற * உண்ணுஞ்சோற்றிலர்த்தத்தை உண்ணும் சோறுதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

(உண்ணும் சோறுதியொருமூன்றுமெம்பெருமான் கண்ணனென்றே நீர்மல்கிக்கண்ணிணைகள்) "உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங்கண்ணன்" என்கிறமுதற்பாட்டு ப்ரகாரமாய் அத்தைப்பின் சென்றருளிச்செய்தபடி.

(உண்ணுஞ்சோறுதியொருமூன்றும்) அந்நாதியான தா(யா)ரகாதி த்ரயமும். (ஒருமூன்றும்) அத்விதீயமாயிருக்கிற மூன்றும், (எம்பெருமான் கண்ணனென்றே) எனக்குஸ்வாமியான க்ருஷ்ணனென்றே யநுஸந்தித்து, (நீர்மல்கிக்கண்ணிணைகள்) பா(ஹா)வநா ப்ரகர்ஷத்தாலே கண்ணிணைகள் நீராலே நிறைந்து, க்ருஷ்ண த்ருஷ்ணை க்ருஷ்ணாநுபவத்தாலேயிறே சமிப்பது, (மண்ணுலகில்-திருக்கோளூரில் மன்னுமாயன்பால் போமாறன்) இவ்விபூதியிலே திருக்கோளூரிலே நித்யவாஸம்பண்ணுகிற, ஸௌந்தர்ய சீலாதிகளாலாஸ்சர்யபூதனை வைத்தமாநிதிபால் போமாழ்வார். * இறந்தால் தங்குமூர் விண்ணூராகையாலே விசேஷிக்க வேண்டா; நாட்டார் பொருந்தி யிருக்குமூர் இவர்க்கு நெருப்பாயிருக்கையாலே "மண்ணினுள் - புகுமூர் திருக்கோளூர்" என்றிறே விசேஷிக்க வேண்டுவது. (உ) "ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி" - ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய" இத்யாதிவத் தாளுகந்தவூரிறே இவர்க்கு

(உ) ரா-ஸு-௧௯-௧௧.

மூ. — பொன்னுலகுபூமியெல்லாம் புள்ளினங்கட்கேவழங்கி
என்னிடரைமாலுக்கியம்புமென—மன்னுதிரு
நாடுமுதற்றாது நல்கிவிடுமாறனையே
நீடுலகீர் போய்வணங்குநீர். (ருஅ)

மண்ணினுள்புகுமூர்.* திருக்கோளூரில் பூவியல் பொழிலும் தடமும் அவன்கோயிலுங்கண்டாலிறே இவராவியுள் குளிருவது. (க) "பாலை கடந்தபொன்னே - கண்ணன் வெஃகாவுது-எப்பாலைக்கும் சேமத்ததே" என்னக்கடவதிறே.

மன்னுதிருக்கோளூரில் மாயன்பால் போகையாவது - "ஊரும் நாடுமுலகமுந்தன்னைப்போலவனுடைய பேருந்தார்களுமேபிதற்ற-போருங்கொல்" என்றும், "திருமால் திருநாமங்களே கூவியெழுமென்பாவைபோய்" என்றும், "செல்வமல்கியவன் கிடந்ததிருக்கோளூர்க்கே மெல்லிடைநுடங்கவிளமான் செல்லமேவினள்" என்றும், "ஆவியுள்குளிர வெங்ஙனேயுகக்குங்கொல்" என்றும் "தென்றிசைத்திலதமனையத்திருக்கோளூர்க்கேசென்று" என்றும், "செல்வமல்கியவன்கிடந்த திருக்கோளூர்க்கேயொல்கி யொல்கி நடந்து" என்றும், "கசிந்தநெஞ்சினளாய்க்கண்ணநீர் துளும்பச்செல்லுங்கொல்" என்றும், "என்கண்ணனுக்கென்றீரியா யிருப்பாளிதெல்லாங் கிடக்கவினிப்போய்" என்றும் "திருக்கோளூர்க்கே நேரிழைநடந்தாள்" என்றும் * மனைக்குவான்பழியும் நினையாதே செல்லவைத்தபடி இதுவாயிற்று. இத்தால் - வழியிலுள்ளவர்களையும் வாழ்வித்து அவனையும்வாழ்வித்துத் தானும் வாழும்படிபோனாளென்றதாயிற்று. இப்படியெல்லாரையும் வாழ்வித்துக்கொண்டு வைத்தமாநிதியை நாடிநடந்து போம்மாறன். (பொன்னடியேநந்தமக்குப்பொன்) அவர்க்குவைத்தமாநிதி யடியாயிருக்கும், நமக்குவைத்தமாநிதி ஆழ்வாரடியாயிருக்கும். "கைம்முதலிழந்தாருண்ணும் நிதியினுபத்ஸகத்வம் புகுமூரிலே ஸம்ருத்த(ஊ)ம்" என்றிறே ஆசார்யஹ்ருதயத்திலே யருளிச்செய்தது. (ருஎ)

பதவுரை.

பொன் உலகு	நித்யவிபூதியென்ன
பூமி	லீலாவிபூதியென்ன

(க) திருவி-உசு.

எல்லாம் புள்ளினங்கட்கே வழங்கி	ஆகிய இவையெல்லாவற்றையும் பறவைக்கூட்டங்களுக்கே கொடுத்து
என் இடரை	"என் துக்கத்தை
மாலுக்கு	எம்பெருமானுக்கு
இயம்பும் என	சொல்லுங்கள்" என்று
மன்னு திருநாடு முதல்	நித்யவைகுண்டம் முதலான இடங்களில்
தூதாகவிடும்	தூதாக இச்சித்தனுப்பின
மாறனையே	ஆழ்வாரையே
நீடுலகீர்	பெரிய உலகத்தீர்களே!
நீர்போய் வணங்கும்	நீங்கள்போய் வணங்குங்கள். (௫அ)

அவ.—ஐம்பத்தெட்டாம்பாட்டு. (பொன்னுலகு) இதில் - ஆர்த்திபாரவஶ்யத்தாலே தூதுவிட்ட பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; * உண்ணுஞ்சோற்றில் ஆற்றாமையோடே "திருமாலானவைத்தமாநிதி திருக்கண்ணும் செவ்வாயுங்கண்டநுபவிக்கவேணும்" என்றுத்வராபரவஶராய்ப் புறப்பட்டு, முட்டப்போகமாட்டாமல் "எங்ஙனே புகுங்கொல்" என்றதுவே பவித்துத்தளர்ந்து விழுந்து நோவுபடுகிற தசையை அவனெழுந்தருளியிருக்கிற பரமபதாதிகளிலே போயறிவியுங்கோளென்று பரிஸரவர்த்திகளான க (வ) டகரைத் தாமர்த்திக்கிற ப்ரகாரத்தை தூதப்ரேஷணவ்யாஜத்தாலே யருளிச்செய்கிற* பொன்னுலகாளீரிலர்த்தத்தை * பொன்னுலகாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(பொன்னுலகுபூமியெல்லாம் புள்ளினங்கட்கேவழங்கி) முதற்பாட்டை முடியக்கடாக்ஷித்தருளிச்செய்தபடி. (பொன்னுலகுபூமியெல்லாம்) (க) "மஹாலோகாந் - கச்சலோகாந்" என்னும்படி, நித்யவிபூதி, லீலாவிபூதி எல்லாவற்றையும். (புள்ளினங்கட்கேவழங்கி) பக்ஷபாதமுடைய பக்ஷிஸமூஹங்களுக்கே தம்முடைய ரக்ஷணார்த்தமாகவுபகரித்து. (உ) * வண்சடகோபனை

(க) ரா-ஆ-கஅ-௩௦. (உ) தி-வாய்-உ-ச-கக.

யாலே மோக்ஷாதி புருஷார்த்தங்களை வழங்கவல்லராயிருக்கை. (வழங்கியென்னிடரை மாலுக்கியம்புமென) உபயவிபூதியையு மூபஹாரமாத்ரமாக வுபகரித்து, பிரிவாலுண்டான என்னுடைய பரிவை ஸர்வேஶ்வரனுக்கறிவியுங்கோளென்று. என்னிடரை - என் து:கத்தை.

அதாவது - "என்னிலைமை" என்றும் "மெய்யமர்காதல்" என்றும், "பாசறவெய்தி" என்றும், "பேர்த்துமற்றோர்களைகண்வினையாட்டியேன் நானொன்றிலேன்" என்றும், "இன்னவாறிவள் காண்மின்" என்றும் சொன்னவிவையென்கை, (என்னிடரைமாலுக்கியம்புமென) அதாவது – "என்னலங்கொண்டபிரான்றனக்கென்னிலைமையுரைத்து" என்றும், "மெய்யமர்காதல் சொல்லி" என்றும் "யாமிதுவோதக்கவாறென்ன வேண்டும்" என்றும், "எங்குச்சென்றாகிலுங் கண்டிதுவோதக்கவாறென்மினே" என்றும், "கற்பியாவைத்தமாற்றஞ்சொல்லிச் செல்மின்கள்" என்றும், "மதுசூதற்கென் மாற்றஞ்சொல்லி" என்றும், "மாசறுநீலச்சுடர் முடிவானவர்கோனைக் கண்டேசறு நும்மையல்லால் மறுநோக்கிலளென்று சொல்" என்றும், "விண்ணவர்கோனைக்கண்டு வார்த்தைகள்கொண்டருளியுரையீர்" என்றும், "மந்திரத்தொன்றுணர்த்தியுரையீர்" என்று மருளிச்செய்தவையென்கை.

(மன்னுதிருநாடு முதற்றூதுநல்கிவிடும்) திருநாடுமுதலாவது - (க) "மூன்றுந்தூதுக்கு விஷயம் பரத்வத்வயம்" என்கையாலே - திருநாடும் தெஞ்சநாடும்விஷயம். "மாமதுவார்தண்டுழாய் முடிவானவர்கோனைக்கண்டு" என்றும், "மாசறுநீலச்சுடர் முடிவானவர்கோனைக்கண்டு" என்றும், "கார்த்திரள்மாமுகில்போல் கண்ணன் விண்ணவர்கோனைக்கண்டு" என்றும், "எங்குச்சென்றாகிலுங்கண்டு" என்றும் - பரத்வாந்தர்யாமித்வ விஷயதூதப்ரேஷணமாயிருக்குமித்திருவாய்மொழி. தூதுநல்கி விடுகையாவது - விருப்பத்தோடேவிடுகை. "தன்மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றிநல்கான்" என்று ஐகரஸ்யம் பற்றாசாகவிடுகையென்றபடி.

(க) ஆசார்யஹ்ரு.

மூ.—நீராகிக்கேட்டவர்நெஞ்சழியமாலுக்கு
மேரார்விசும்பிலிருப்பரிதா—ஆராத
காதலுடன் கூப்பிட்டகாரிமாறன் சொல்லை
யோதிடவேயுய்யுமுலகு. (௫௯)

(மன்னு திருநாடுமுதல் தூதுநல்கிவிடும் மாறனையே) நித்ய மான திருநாடுமுதலான ஸ்தலங்களிலே ஆதரத்தோடே தூதுவிடு மாழ்வாரையே, (நீடுலகீர்போய் வணங்குநீர்) ப்ரவாஹரூபேண நித்யமான ஜகத்திலே வர்த்திக்கிறவர்களே! நீங்கள் தூதுவிடுகையாகிற வருத்தமின்றிக்கே நீங்களே நடந்துசென்றுபோய் ஸேவியுங்கோள். திருநாடுபோலே நெடுகியிராதே; திருநாட்டில் திருநகரி கிட்டிற்றுயிறே யிருப்பது. நீங்கள் புருஷகாரநிரபேக்ஷமாக வாழ்வாரையாம்ரயியுங்கோள். (௫௮)

பதவுரை.

கேட்டவர்கள் நெஞ்சு	கேட்டவர்களுடையமனம்
நீர் ஆகி அழிய	நீர்ப்பண்டமாயழியும்படியாகவும்
மாலுக்கும்	ஸர்வேஶ்வரனுக்கும்
ஏரார்விசும்பில்இருப்புஅரிதா	அழகும்க்கிருந்துள்ளபரமபதத்தில் இருக்கை அரிதாம்படியாகவும்
ஆராதகாதலுடன்	தணியாத அன்புடனே
கூப்பிட்ட	அழைத்த
காரிமாறன்சொல்லை	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை
ஓதிடவே	அப்யஸிக்கவே
உலகுஉய்யும்	உலகம் உஜ்ஜீவிக்கும். (௫௯)

அவ.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு (நீராகி) இதில் - கேட்டாரடைய நீராம்படி கூப்பிட்ட பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; தம் ஆர்த்தத்வநிகேட்டு க(வ)டகர் கால்நடைதந்துபோக மாட்டாமல் தளைப்பட்டுக்கிடக்கிறபடியைக் கண்டு, "அறிவிலிகளானவிவர்களீடுபட்டபடி கண்டால் ஸர்வஜ்ஞன் கேட்டால் பொறுக்கமாட்டாமல் சடக்கென வந்துமுகங் காட்டும்" என்றறுதியிட்டு, திருநாட்டிருப்புமடி கலங்கும்படிமுழு

மூ.—உலகுய்யமால் நின்றவுயர்வேங்கடத்தே
அலர்மகளைமுன்னிட்ட வன்றன்—மலரடியே
வஞ்சரணாய்ச்சேர்ந்த மகிழ்மாறன்றாளிணையே
உன்சரணாய் நெஞ்சமேயுள். (௬௦)

மிடறுசெய்து கூப்பிடுகிற * நீராய் நிலனாயிலர்த்தத்தை ''நீராகிக் கேட்டவர்கள் நெஞ்சழிய'' என்றுதொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(நீராகிக்கேட்டவர்கள்) கேட்டவர்கள் நீராய் நெஞ்சழியும்படியாகவும். அசேதநங்களோடு சைதந்யலேசமுடையாரோடு பரமசேதநனோடு வாசியற, கேட்டாரெல்லாரும் நீர்ப்பண்டமாய் நெஞ்சழியும்படி. பாவைகளோடு பக்ஷிகளோடு ரக்ஷகனோடு வாசியறவெல்லாரும் த்ரவத்ரவ்யமாய் ஸஹ்ருதயஸாதில்யம் பிறக்கும்படி.

(பாவைக்குமேரார் விசும்பிலிருப்பரிதா) ஸர்வேஶ்வரனுக்கும் * அந்தாமமான பரமபதத்திலிருப்புப் பொருந்தாதபடியாகவும்; விண்மீதிருப்பரிதாம்படி. (ஆராதகாதலுடன் கூப்பிட்ட) (௧) ''கௌஸல்யா ஸாநா ஜாநகீ -க்ரோஶந்தீம் ராமராமேதி'' என்னும்படி ஸமீயாதவபி(ஹி)நிவேஶத்துடனுக்ரோஶம்பண்ணின. அதாவது-''வாராய்'' ''நடவாய்'' ''ஒருநாள் காணவாராய்'' ''ஒளிப்பாயோ'' ''அருளாயே'' ''இன்னங்கெடுப்பாயோ'' ''தளர்வேனோ'' ''திரிவேனோ'' ''குறுகாதோ'' ''சிறுகாலத்தையுறுமோ வந்தோ'' என்றார்த்தியோடே கூப்பிட்டவையென்கை. (ஆராதகாதலுடன் கூப்பிட்டகாரிமாறன்சொல்லே) அத்யபி(ஹி)நிவேஶத்தாலே ஆர்த்தியைதர்ஶிப்பித்த அபி(ஹி)ஜாதரான வாழ்வார் திவ்யஸூக்தியை, (ஓதிடவேயுய்யுமுலகு) இத்தையப்யஸிக்கவே ஜகத்து உஜ்ஜீவிக்கும். ஜகத்திலுண்டான சேதநருஜ்ஜீவிப்பர்களென்றபடி. (௫௯)

பதவுரை.

உலகு உய்ய	லோகம்உஜ்ஜீவிக்க
மால்நின்ற	ஸர்வேஶ்வரன் எழுந்தருளியிருக்கிற

---

(௧) ரா-ஆ-௫௨-௪௦.

உயர்வேங்கடத்தே	உயர்ந்த திருமலையில்
அலர்மகளைமுன்னிட்டு	பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாக முன்னிட்டு
அவன்தன்	அந்தஸர்வேஶ்வரனுடைய
மலர்அடியே	திருவடித்தாமரைகளையே
வன்சரணாய்சேர்ந்த	உறுதியான உபாயமாகப்பற்றின
மகிழ்மாறன்	வகுளாபரணருடைய
தாளிணையே	திருவடிகளையே
நெஞ்சமே	மனமே!
உன்சரணாய்	உனக்கு உபாயமாக
உள்	நினைப்பாயாக. (கூ0)

அவ.-அறுபதாம்பாட்டு. (உலகுய்யமால் நின்ற) இதில் - திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம்புக்க பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனே யென்னில், கீழ்-ஆர்த்தி பாரவஶ்யத்தாலே கூப்பிடுகிறவிவர் ப்ராப்யாந்தரமான ஐஶ்வர்ய கைவல்யங்களைக் காற்கடைக்கொண்டு ஶ்ரிய:பதிதிருவடிகளில் பண்ணுமடிமையே பரமப்ராப்யமென்றறுதியிட்டு, அந்தப்ராப்யத்தைப் பெறுகைக்காக, தேஶகாலாதி விப்ரக்ருஷ்டங்களான ஸ்தலங்களை விட்டு * கானமும் வானரமும் வேடுமானார்க்கு முகங்கொடுத்துக்கொண்டு ஸௌலப்யஸாம்ராஜ்யம் பண்ணுகிற திருவேங்கடமுடையான் திருவடிகளிலே, (க) "ஸஹ ராத்ய: ஸப்ராத்" இத்யாதிப்படியே பிராட்டியை முன்னிட்டு, ஶரண்யகுணபூர்த்தியையும் ஶரணவரணோத்யுக்தரான தம்வெறுமையையு மநுஸந்தித்துக்கொண்டு பூர்ணப்ரபத்தி பண்ணுகிற *உலகமுண்டபெருவாயவிலர்த்தத்தை "உலகுய்யமால்நின்ற" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா. — (உலகுய்யமால் நின்றவுயர் வேங்கடத்தே) (உ) "தென்னியீயாங்குதண்டிருவேங்கட முடையா யுலகுதன்னை வாழநின்றநம்பி" என்று சொல்லுகிறபடியே, லோகமாகவுஜ்ஜீவித்து வாழும்படி ஸர்வேஶ்வரன் நின்றருளின திருமலையிலே. "திலதமுலகுக்காய்நின்றதிருவேங்கடத்தெம்பெருமானே" என்றதிலேநோக்கு.

(க) ரா-அ-கக-உ (உ) பெரி-தி-ரு-சு-க

(அலர்மகளை முன்னிட்டு) "திருமாமகள் கேள்வா" என்றும், "அலர்மேல் மங்கையுறைமார்பா" என்றும் பெரியபிராட்டியாரைப்புருஷகாரமாக முன்னிட்டு.

(அவன்றன் மலரடியே) * திருவேங்கடத்தானானவன் * பூவார்கழல்களான * நாண்மலராமடித்தாமரையையே. அதாவது- "குலதொலடியேனுனபாதம்" என்றும், "ஆறுவன்பிலடியேனுன்னடிசேர் வண்ணம்" என்றும், "அண்ணலே யுன்னடிசேர" என்றும் 'பூவார்கழல்களருவினையேன் பொருந்துமாறு' என்றும், "திணரார் சார்ங்கத்துனபாதம் சேர்வதடியேன்" என்றும், "எந்நாளுன்னடிகளடியேன் மேவுவதே" என்றும், "உனபாதங்காண" என்றும்" "நோலாதாற்றேனுனபாதம்" என்றும், "அந்தோவடியேனுனபாதமகலகில்லேன்" என்றும், "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று அடியேதொடங்கியடியைத் தொடர்ந்தபடி.

(அவன்றன் மலரடியே வன்சரணாய்ச்சேர்ந்த) திருவேங்கடத்தானவவன்றன்மலரடியே. இத்தால் – "நிகரில் புகழாய்" என்று தொடங்கியநுஸந்திக்கிற வாத்ஸல்யாதிகளும் ஸூசிதம். (அவன்றன் மலரடியேவன்சரணாய்ச்சேர்ந்தமகிழ்மாறன்) "திருவேங்கடத்தானே புகலொன்றில்லாவடியே னுன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே" என்றுதம் வெறுமையை முன்னிட்டு அவன்றிருவடிகளை நிரபேக்ஷாபாயமாகஸ்வீகரித்த ஆழ்வாருடையதிருவடிகளே உனக்கு உபாயமாகஸ்வீகரி. "அகலகில்லேனென்று – பூர்வவாக்யமநுஸந்தித்தார்" என்னும்படி ஸக்ரமமாக ஶரணவரணம் பண்ணுகையாலே, சாத்தின திருமகிழ்மாலையும் ஸம்ருத்த(ம)மாயிற்று. ஶரண்யன் * தண்டுழாய் விரைநாறுகண்ணியனைப்போலே, ஶரணாகதரானவிவரும் மகிழ்மாறனார். அது ஶேஷித்வத்யோதகம். இது ஶேஷத்வத்யோதகம். அவர் பூந்துழாயானடியை யடைந்தாப்போலே, இவரும் "மகிழ்மாறன்றாளிணையேயுன் சரணாய் நெஞ்சமே யுள்" என்கிறார்; நெஞ்சே!, வகுளாபி(ஷி)ராமமான திருவடிகளையுனக்கு உபாயமாக அத்யவஸித்துப்போரு என்கிறார். (௯௦)

மூ,—உண்ணிலா வைவருடனிருத்தியிவ்வுலகி
லெண்ணிலாமாயனெனை நலிய—வெண்ணுகின்று
னென்றுநினைந்தோலமிட்டவின்புகழ் சேர்மாறனென
குன்றிவிடுமேபவக்கங்குல். (௯௧)

பதவுரை.

இவ்வுலகில்	இந்தலோகத்தில்
உள்நிலாவு	உள்ளே இருக்கின்ற
ஐவருடன் இருத்தி	பஞ்சேந்த்ரியங்களாகிற பகைவருடன் இருக்கச்செய்து
எண் இலாமாயன்	அளவற்ற ஆஶ்சர்யகுண சேஷ்டிதங்களையுடைய ஸர்வேஶ்வரன்
எனை நலிய	"என்னை வருத்துவதற்கு
எண்ணுகின்றான்	நினைக்கின்றான்"
என்று நினைந்து	என்றெண்ணி
ஓலம்இட்ட	முறையிட்ட
இன்புகழ்சேர்	இனிய கீர்த்திபொருந்திய
மாறன் என	ஆழ்வார் என்று அநுஸந்திக்கவே
பவக்கங்குல்	ஸம்ஸாரமாகிறகாளராத்ரியானது
குன்றிவிடும்	நசித்துப்போம். (௯௧)

அவ. — அறுபத்தோராம்பாட்டு. (உண்ணிலாவைவர்) இதில்-இந்த்ரியபயாக்ரோஶத்தை யருளிச்செய்த ஸூக்தியை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனே யென்னில்; * உலகமுண்டபெருவாயனிலே-திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஆர்த்திபாவஸராய்ப்பூர்ணப்ரபத்தி பண்ணினவர், "தொடங்கின கார்யம் தலைக்கட்டினல்லது கார்யம் செய்யோம்" என்றிருக்கும் நிரங்குஶஸ்வதந்த்ரனான ஸர்வேஶ்வரன் பழையபடியே தம்மைஸம்ஸாரத்திலே வைக்கக்கண்டு, ஸம்ஸாரமாகிற சிறைக்கூடத்திலே புண்யபாபங்களாகிற விலங்கைப்பூட்டி இந்த்ரியங்களாகிற ப(ஹ)டர் கையிலே "கண்பாராமல் நலியுங்கோள்" என்றுகாட்டிக்கொடுத்து, நம்மெளிவுகண்டு சிரித்துக்கொண்டு திருநாட்டிலேசாஜும் நித்ய

ஸஹரிகளுமாக விருக்கிறானென்றநுஸந்தித்து, தம்முடைய வார்த்த்யதிஸயத்தையும் ரக்ஷகத்வோபயோகியானவவன் குணங்களையும் அவன் முகத்தைப் பார்த்துச் சொல்லாநின்றுகொண்டு, கேட்டார்க்குச் சரிப்பரிதாம்படி கூப்பிடுகிற * உண்ணிலாவிய விலர்த்தத்தை "உண்ணிலாவைவர்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா. — (இவ்வுலகில் - உண்ணிலாவைவருடனிருத்தி) *இருள்தருமாஞாலமான ஸம்ஸாரத்திலே ஆந்தரஸத்ருக்களாய்வர்த்திக்கிறவைந்து இந்த்ரியங்களோடே கூடவிருக்கப்பண்ணி, "ஐம்புலனிவை மண்ணுளென்னைப்பெற்றாலென்செய்யா மற்று நீயும் விட்டால்" என்றதைப்பின் சென்றபடி. (எண்ணிலாமாயன் - இவ்வுலகில் - உண்ணிலாவைவருடனிருத்தி - எனைநலியவெண்ணுகின்றான்) அஸங்க்யாதமானவாஸ்சர்ய ஸக்தியுக்தனான ஸர்வேஸ்வரன், தமோபிபூ(ஹீஸ)தமான விவ்விபூதியிலே, அஹமர்த்தமான வாத்மாவை அறிவழியப்பண்ணுமதான வைந்துமிந்த்ரியங்களுமாத்மாநு(வை)பந்தியென்னலாம்படி பொருந்தியிருக்கும்படியாக்கி துர்ப்பலனானவென்னை, அவற்றைக்கொண்டு விஷயங்களிலே தள்ளிபா(வாயி)திக்கைக்குக் கார்யவிசாரம் பண்ணுகின்றான்.

அதாவது- "உண்ணிலாவியவைவரால் குமைதீற்றியென்னையுன் பாதபங்கயம் நண்ணிலாவகையேநலிவானின்னமெண்ணுகின்றா யெண்ணிலாப்பெருமாயனே" என்றும் "ஓவாராந்திவைவெய்த்திராப்பகல் மோதுவித்திட்டு" என்றும், "ஐவரால் வினையேனை மோதுவித்து" என்றும், "ஐவரைக்காட்டி" என்றும், "ஐவரை நேர்மருங்குடைத்தாவடைத்து" என்றும், "ஐவர்யாவரையும் மயக்கநீவைத்த" என்றும் "சுமடுதந்தாய்" என்றும் - அவனிப்படி ஐவரைக்கொண்டு செய்வித்தானென்று அவன்மேலே பழியிட்டபடியென்கை. (எண்ணிலாமாயனெனை நலியவெண்ணுகின்றானென்று நினைந்து) ஸர்வஜ்ஞனாய் ஸர்வஸக்தியாயிருக்கிற ஸர்வேஸ்வரன், அஜ்ஞனாய் அஸக்தனாய் ஸரணம்புகுந்தவென்னை, நலிந்து போராமலின்னம் நலியவெண்ணுகின்றானென்றெண்ணி. "நலிவானின்னமெண்ணுகின்றா யெண்ணிலாப்பெருமாயனே" என்றத்தைக்காட்டுகிறது.

(நலியவெண்ணுகின்றானென்று நினைந்தோலமிட்ட) பரமத(ஶ)யாளுனவன் நிர்த(ஶ)யரைப்போலே த(ஶ)மிப்பிக்கயத்நம் பண்ணுகின்றானென்றெண்ணியோலமிட்ட. "எண்ணிலாப்பெருமாயனே" "கார்முகில்வண்ணனே" "சோதிநீண்முடியாய்," "வினையேன் வினைதீர்மருந்தே" "விண்ணுளார் பெருமானேயோ" "பத்தினுள்ளாய் பரமீசனே" "கொடியேன் பருகின்னமுதே" "என்னம்மாவென்கண்ணா," "முன்பரவைகடைந்தமுதங்கொண்டமூர்த்தியோ" என்றிப்படி-இந்த்ரியப(ஶ)யத்தாலே, ரக்ஷகத்வாதி குணங்களுக்கு வாசகமான வன்திருநாமங்களைச்சொல்லி; (௧) "ஸாவாத்ரா மாபாவணஸாயகார்த்தா - ஸாகாம்ருகாராவண ஸாயகார்த்தா:" என்றும், (௨) "ஹாராம ஸத்யவ்ரத தீர்க்கபாஹோ ஹா பூர்ணசந்த்ர ப்ரதிமாநவக்த்ர - ஹாராமஸத்யவ்ரத தீர்க்கபாஹோ ஹா பூர்ண சந்த்ர ப்ரதிமாநவக்த்ர" என்றும், ஶாகாம்ருகங்களைப்போலே இவரும் *கண்வாளிக்குடைந்தடைந்தும், (௩) "ஶ்ரீஸிம்ஹேஹ ஸிம்ஹாவ்ருதா - ம்ருகீஸிம்ஹைரிவாவ்ருதா" என்னும்படி ம்ருகஶாபக்ஷியானவள் ராக்ஷஸிகள்மத்யம் அஸஹ்யமாய் அவர்குளிர்ந்த முகத்திலே விழிக்கவாசைப்பட்டுக் கூப்பிட்டாப்போலவும் கூப்பிட்டபடி.

(இன்புகழ்சேர்) நாட்டையவிந்த்ரிய கிங்கரராய் ததலாப(ஸ)த்தாலே கூப்பிட, இவர் இந்த்ரியபராக்ரோஶம்பண்ணுகையாயிற்று-இவர்க்கு இன்புகழ் சேர்ந்தது. (௪) "காமார்த்தாவஹவிந வைஶஸ்யா - காமாத்மதாகல்வபிநப்ரஶஸ்தா" என்னக்கடவதிறே. (௫) "பாதமகலகில்லாத தம்மையகற்றுமவற்றின் நடுவேயிருத்தக் கண்டு, 'நலிவான்' 'சுமடுதந்தாய்' 'ஓ' என்று - ஸாதநபலமான ஆக்ரோஶத்தோடே பழியிட்டு" என்றிறே அழகியமணவாளப் பெருமாள் நாயனாருமருளிச்செய்தது. (இன்புகழ்சேர்மாறனென) கேட்கைக்கினிதாய் ஶ்லாக்யமான யஶஸ்ஸையுடைய வாழ்வாரென்றநுஸந்திக்க. (குன்றிவிடுமே பவக்கங்குல்) இவ்வுக்தியாத்ரத்தாலே ஸம்ஸாரமாகிற காளராத்ரி நசித்துவிடும். இது நிஶ்சயம். குன்றுதல் - குறைதல். ஆழ்வாரைப்போலே "அமுதங்கொண்ட மூர்த்தியோ" என்று கூப்பிடுகையின்றிக்கே, அவர்திருநாமத்தைச் சொல்லவே, * விடியாவெங்நரகான ஸம்ஸாரத்துக்கு விடிவு பிறக்கும். (௬௧)

(௧) ரா-யு-௫௬-௪௫. (௨) ரா-ஸு-௨௮-௧௧. (௩) ரா- (௪) (௫) ஆ-ஷ்ரு-

மூ.—கங்குல்பகலரதி கைவிஞ்சிமோகமுற
வங்கதனைக்கண்டோ ரரங்கரைப்பார்த்து—இங்கிவள்பா
லென்செய நீரென்னுகின்ற தென்னுநிலைசேர்மாற
னஞ்சொலுற நெஞ்சுவெள்ளையாம். (௬௨)

பதவுரை.

கங்குல் பகல்	இரவிலும் பகலிலும்
அரதி கைவிஞ்சி	ஆற்றாமை அதிகமாகி
மோகம்உற	மோஹமடைய,
அங்கு அதனைக்கண்டு	அவ்விடத்தில் அந்த அவஸ்தையைக்கண்டு
ஓர் அரங்கரைப்பார்த்து	ஸ்ரீரங்கநாதனைநோக்கி
இங்கு இவள்பால்	"இவ்விடத்தில் இவள்விஷயத்தில்
என்செயநீர் எண்ணுகின்றது	யாது செய்யநீர் நினைத்திருக்கிறது?"
என்னும் நிலைசேர்	என்று தாய் வினவும்படியான நிலைமையை அடைந்த
மாறன்	ஆழ்வாருடைய
அஞ்சொல்உற	ஸ்ரீஸூக்தியை அநுஸந்திக்க
நெஞ்சு வெள்ளையாம்	மநஸ்ஸு பரிஶுத்தமாம். (௬௨)

அவ.—அறுபத்திரண்டாம்பாட்டு. (கங்குல்பகல்) இதில் - அரதியாயலற்றினபடியைப் பேசினபாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். அதாவது - * உண்ணிலாவியிலார்த்தராய்க் கூப்பிடுகிற தம்மைப்பரிஹரிக்கும்விரகுசிந்தித்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள் நினைவையறிந்து அவர்பரிஹரிக்குமளவு மாறியிருக்க வேண்டியிருக்க, அவர் தம்மை யுபேக்ஷித்தாராகக் கொண்டு கலங்கிமோஹித்து இவர்கிடக்க ; பார்ஶ்வஸ்தரானபரிவர் பெரியபெருமாளுடைய அஶரண்ய ஶரண்யத்வாதி குணங்களைச்சொல்லிக்கொண்டு, இவர்திறத்தில் நீர் நினைத்திருக்கிறதென்னென்று கேட்கிறபடியை, பெரியபெருமாளோடே கலந்துபிரிந்தாளொருபிராட்டி யாற்றாமையாலே யழுவது தொழுவது விழுவதெழுவதலற்றுவதாய்ப்படுகிற ‡ வரதியைத் திருத்தாயார், அவர்

‡ வ்யாகுலதையை.

திருமுகங்களைப் பார்த்துச்சொல்லி ப்ரலாபிக்கிற பாசுரத்தாலே அருளிச்செய்கிற * கங்குலும் பகலிலர்த்தத்தை "கங்குல்பகலரதி" இத்யாதியாலே அருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(கங்குல்பக லரதிசேர்ந்தமோகமுற) அதாவது - (௧) "ஹ்ருஷ்டம் விஸம்ஜ்ஞா - மதாஸக்தசேவ - ப்ருஶம்விஸம்ஜ்ஞா - கதாஸக்தல்பேவ" என்றும், (௧) "விசேஷஸம்ஜ்ஞாம் வ்ருதிமேஷ்யதேவ - சிரேணஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்யசைவ" என்றும், (௨) "ராமோசாசோகபயநந்வெளஹ்ருந்நீ ஸஹஸ்ரேஷ்விதா - ராமம்ரக்தாந்தநயநம் பஸ்யந்தீ ஸுதுஃக்கிதா" என்றும் சொல்லுகிறபடியே, "கங்குலும் பகலுங்கண்டுயிலறியாள்," "இட்டகாலிட்டகைகளாயிருக்கும்," "சிந்திக்குந்திசைக்கும்" இத்யாதிப்படியே திவாராத்ர விபாகமற மறப்பூவதும் தொழுவது மோஹிப்பது ப்ரலாபிப்பது அடைவுகெடப்பேசுவது நெடுமூச்செறிவது அதுதானும் மாட்டாதொழிவதாய் ஸ்தப்தையாயிருப்பதா யிப்படி அரதிவிஞ்சி மோஹத்தை ப்ராப்தையாக. (அங்கதனைக்கண்டு)தன் பெண்பிள்ளையிடத்திலே அத்தசையைக்கண்டு, (ஓரங்கரைப்பார்த்து) ஆர்த்திஹரதையிலே சிந்தித்துப்போருகிற வத்ஸிதியரான பெரியபெருமாளைப்பார்த்து.

(இங்கிவள்பால்) இத்தசையில் இவளிடையாட்டமாக. (என் செய நீரெண்ணுகின்றது) ஆஶ்ரிதரக்ஷணசிந்தை பண்ணுகிறதேவர் ரக்ஷகாபேக்ஷையுடையவிவள் திறத்து எது திருவுள்ளம்பற்றியிருக்கிறது, எடுக்கவோ! முடிக்கவோ! ஒன்றும் தெரிகிறதில்லை. எல்லாதசையிலும் இவள் பேற்றுக்கு (௩) "உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்". என்கிறபடியே அத்தலையில் நினைவேயிறேயுபாயம், இத்தலையிலேயுள்ளதெல்லாமாற்றாமையிலே முதலிடுமத்தனை. "இவள் திறத்தென் செய்கின்றாயே," "இவள் திறத்தென் செய்திட்டாயே," இவள் திறத்தென் சிந்தித்தாயே" என்றதைப் பின்சென்றபடி. (என்செயநீரெண்ணுகின்றதெனநிலைசேர்மாறன்) த்வராஜ்ஞாநத்தாலே தலைமகளென்று பேரையுடைய தாம்மோஹித்துக் கிடக்க, "இந்த மோஹாதிகளுமுபாயமாகாமல் அத்தலையில் நினைவேஸாதநம்" என்னுமத்யவஸாயஜ்ஞாநத்தாலே தாயாரென்று

(௧) ரா-ஸு-௩௨-௮. (௨) ரா-ஸு-௨௬-௩௭. (௩) தி-மொ-௨-௪-௧.

பேறையுடையராய்த் தெளிந்திருந்து தரிக்கும் தசையையடைந்த வாழ்வாருடைய, (அஞ்சொலூற) அழகிதான இத்திருவாய்மொழியை யாதரித்தநுஸந்திக்க. (நெஞ்சுவெள்ளையாம்) உபாயாந்தர விஷயமான மநோமாலிந்யம் நிவ்ருத்தமாய், ததேகோபாயத்வாநுஸந்தாநத்தாலே மநஶ்ஶுத்தி பிறக்கும்.

§ (கங்குல் பகலாதிவ்யாதி, வெள்ளையாம்) உபாயாந்தர விஷயமாக, ஓரரங்கரைப்பார்த்து - ஒருகிறவரங்கரைப்பார்த்து. அதாவது - * ‡ உலகமுண்டபெருவாயனிலே, "அகலகில்லேன்" என்று - பூர்ணப்ரபத்திபண்ணினவிடத்திலும் பலித்ததில்லையென்று, * உண்ணிலாவியிலே, "அப்பனை என்னையாள்வானை" என்று - நின்றவிடத்திலேநிற்கவொட்டாமல் கூப்பிட, * திருவேங்கடத்தென்னானை யென்னப்பன், (க) "அரங்க நகர்மேயவப்பனாய், (உ) "மந்திபாய்" இத்யாதிப்படியே, * பைத்தபாம்பணையானவன் * அரங்கத்தரவினணையானாய் "பைகொள்பாம்பணையாயிவள் திறந்தருளாய்," "இவள்திறத்தென் சிந்தித்தாய்" என்று கேட்கும்படி * உறங்குவான்போல்யோகு செய்து * யோகநித்திரை சிந்தைசெய்து இவர் ரக்ஷணசிந்தைபண்ணிக்கொண்டா றலைக்கக்கிடக்கிறவரைப் பார்த்தென்றபடி.

"தொடங்கினகார்யம் தலைக்கட்டுந்தனையும் பற்றுதுபோலேயிருந்ததுஇவளாற்றாமை; இதுக்கென்செய்வோம்" என்று ஆவராராயப்புக்கார். அங்கு "அலர்மேல் மங்கையுறைமார்பா" என்றத்தை - இங்கு "என்திருமகள் சேர்மார்பனே" என்றார்; "வண்ணமருள்கொள் அணிமேகவண்ணா" என்றத்தை – "முகில்வண்ணன்" என்றார்; "அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்றத்தை "அடியையடைந்தருள் சூடியுய்ந்தவன்" என்றார், (ங) "துளங்கு நீண்முடி" என்றுதொடங்கி (ச) "ஆழிவண்ணநின்னடியிணையடைந்தேன்" என்றிறே ஐக்யமாகவருளிச்செய்தது. (ரு) * தென்னியோங்கு தண்டிருவேங்கடமுடையானையிறே * பொன்னி சூழ் திருவரங்கனைக் கண்வளர்ந்தருளுகிறது. இவர் ரக்ஷண சிந்தைக்குப் பாங்கான தேஶம் பாற்கடல் அரங்கம்போலே.) (சுஉ)

(க) அமல சு. (உ) அமல-ரு. (ங) தி-மொ-ரு-அ-க.
(ச) தி-மொ-ரு-அ-க. (ரு) பெரி-தி-ரு-ச-க.
‡ உலகத்திலகத்திலே. § குண்டலிதம் க்வாசித்கம்.

மூ.—வெள்ளியநாமங்கேட்டு விட்டகன்றபின்மோகம்
தெளியமால்தென்திருப்பேர்சென்றுபுக—உள்ளமங்கே
பற்றிநின்ற தன்மை†பகரும்சடகோபற்கு
அற்றவர்கள்தாமடியார். (சுரு)

பதவுரை.

வெள்ளியநாமம்	போக்யமான பகவந்நாமங்களை
கேட்டு	தாய்சொல்லக்கேட்டு
மோகம்விட்டு அகன்றபின்	மோஹம்விட்டு நீங்கினபின்பு
தெள்ளியமால்	விவேகியானஸர்வேஸ்வரன் (எழுந்தருளியிருக்கிற)
தென்திருப்பேர்	தென்திருப்பேர்நகரில்
சென்றுபுக	போய்ப்ரவேஶிக்க,
உள்ளம் அங்கேபற்றிநின்ற தன்மைபகரும்	தமது திருவுள்ளம் அவ்விடத்திலே ஊன்றிநின்றமையை அருளிச்செய்த
சடகோபற்கு	ஆழ்வார்விஷயத்தில்
அற்றவர்கள்தாம்	அநந்யார்ஹரானவர்கள்
ஆழியார்	கம்பீரஹ்ருதயர்கள். (சுரு)

அவ.—அறுபத்துமூன்றாம்பாட்டு. (வெள்ளியநாமங்கேட்டு) இதில் - தென்திருப்பேரிலே அபஹ்ருதசித்தரானபடியைப் பேசுகிறபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார்.

அதெங்ஙனேயென்னில்; கீழ் - தம்தசைதாம் வாய்விட்டுப்பேசமாட்டாதே மோஹித்துக்கிடந்தவர், பெரியபெருமாளுடைய திருநாமப்ரஸங்கமே ஸிஸிரோபசாரமாக அத்தாலே யாஸ்வஸ்தராயுணர்ந்து, தத்வைலக்ஷண்யாநுஸந்தாநத்தாலே அபஹ்ருதசித்தராய், பெரியபெருமாளெழுந்தருளி யிருக்கிறதென்திருப்பேரிலே போவதாகப்பதறிப்புறப்பட "இப்படிப்பதறுகைநம் ஸ்வரூபத்துக்குச்சேராது, அவர்தாமே வரக்கண்டுநம் ஶேஷத்வத்தை நோக்கிக்கொண்டு பாடாற்றியிருக்கவேண்டாவோ"? என்று பரிஸரவர்த்திகள்நிவாரிக்க, "ஸர்வதா நான் அங்கேபோய்ச்சேருகை தவிரேன்" என்று தம்துணிவை அவர்களுக்குச் சொல்லுகிறபடி

† (பா) பகர்.

யை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிற + வெள்ளைச்சுரிசங்கி லர்த்தத்தை "வெள்ளியநாமம்" இத்யாதியாலே யருளிச்செய் கிறாரென்கை.

வ்யா.—(வெள்ளியநாமங்கேட்டு - மோகம் - விட்டகன்றபின்) பாவநத்வபோக்யத்வ தா(யா)ரகத்வாதி குணங்களையுடைய, முகில் வண்ணரான பெரியபெருமாளுடைய திருநாமங்களைப் பாட்டுந் தோறும் திருத்தாயார் சொல்லக்கேட்டு, கீழ்ல் மோஹமானது விட்டுப்போனபின்பு, (தெள்ளியமால் தென்திருப்பேர் சென்றுபுக) ஆஶ்ரிதரக்ஷணத்திலே விவேகஜ்ஞனை ஸர்வேஶ்வரன் வர்த்திக் கிறதென்திருப்பேரிலே, "தென் திருப்பேரையிற்சேர்வன்நானே" என்றும் "திருப்பேரையிற்சேர்வன்சென்றே" என்றும் சென்று புகுவதாகவொருப்பட, இவ்வதிப்ரவ்ருத்தியைத் தாய்மாரும் தோழிமாரும் தடஸ்தராயுள்ளாருங்கண்டு, "இப்படி ஸாஹஸத்தி லே யொருப்படுகையுக்தமன்று" என்று நிஷேதிக்க, (உள்ளமங்கே பற்றி நின்றதன்மை பகரும்) திருவுள்ளம் தம்மையொழியவும் *முந்துற்றநெஞ்சாய் வீற்றிருந்த விவ்விஷயத்திலே மறுபாடுருவ ஊன்றிநின்றஸ்வபாவத்தை நிஷேதிப்பார்க்கருளிச்செய்யுமாழ்வார்.

அதாவது-"நானக்கருங்குழல் தோழிமீர்காளன்னையர் காளய ற்சேரியீர்காள் நாணித்தனி நெஞ்சங்காக்கமாட்டேன்" என்று தொடங்கி "கண்ணன் செங்கனிவாயின்திறத்ததுவே" என்றும், "செங்கனிவாயின்திறத்ததாயும்" என்றுதொடங்கி "நங்கள் பிரா னுக்கென்னெஞ்சந்தோழீ நாளும் நிறையுமிழந்ததுவே" என்றும், "இழந்தவெம்மாமைத் திறத்துப்போன வென்னெஞ்சினாருமங்கே யொழிந்தார்" என்றுதொடங்கி "அன்னையர்காளென்னையென் முனிந்தே" என்றும், "கண்ணபிரானுக்கென் பெண்மைதோற் றேன்-காலம்பெறவென்னைக் காட்டுமினே" என்றும், "காலம்பெற வென்னைக்காட்டுமின்கள்" "என்றும், "பேரையிற்கே புக்கென் னெஞ்சம் நாடிப்பேர்த்து வரவெங்கும் காணமாட்டேன் — என் னெஞ்சங்கண்டதுவே கண்டேனே" என்றும் "நெஞ்சு நிறைவு மெனக்கிங்கில்லை" என்றும், "நிகரில் முகில்வண்ணன் நேமியானென் னெஞ்சங் கவர்ந்தெனையூழியானே" என்றுமிப்படித் தாமங்கே பத்த

மூ.—ஆழிவண்ணன் தன்விசயமானவை முற்றுங்காட்டி
வாழிதனாலென்று மகிழ்ந்துநிற்க—ஊழிலவை
தன்னையின்றுபோற்கண்டு தானுரைத்தமாறன் சொல்
பன்னுவரே நல்லது கற்பார். (௬௪)

பா(வஸஹா)வரானபடியை யருளிச்செய்தவையென்கை. (௧) "[illegible] - அஸ்யாதேவ்யாமநஸ்தஸ்மிந்" என்னக்கடவதிறே.

அன்றிக்கே, "வெள்ளியநாமங்கேட்டுவிட்டகன்றபின் மோகம் - தெள்ளியமால் தென்திருப்பேர்சென்று புகுந்துள்ள மங்கே பற்றிநின்றதன்மை பகரும்" என்று ஏகவாக்யமாக யோஜிக்கவுமாம். (உள்ளமங்கே பற்றிநின்றதன்மைபகரும் சடகோபற்கு- அற்றவர்கள்தாமாழியார்) இத்திருவாய்மொழிமுகேந தந்திருவுள்ளம் திருப்பேரிலிருப்பிலே அபஹ்ருதமானபடியை யருளிச்செய்தவாழ்வார் விஷயத்திலே, (௨) "தேவுமற்றறியேன்" என்றவர்கள். (தாம்) இப்படியான பெருமையை யுடையதாங்கள். (ஆழியார்) "அவரடிமைத்திறத்தாழியார்" என்னுமவர்களிலும் இவர்களே(௩) * [illegible] - அகாதபகவத்பக்தி ஸிந்தவான நாதமுனிகளைப்போலே (௪) * மிக்கவேதியர் வேதத்தினுட்பொருளையறியவல்லரான அகாத(ய)ஜ்ஞாந ப்ரேமங்களை யுடையார்.

பதவுரை.

ஆழிவண்ணன்	கடல்வண்ணனான எம்பெருமான்
தன்விசயமானவை முற்றும் காட்டி	தன் விஜயபரம்பரைகளை முழுதுங் காட்டி
இதனால் வாழ் என்று	இதனால் வாழ்ந்துபோமென்று (ஆழ்வாரைநோக்கி அருளிச்செய்து)
மகிழ்ந்து நிற்க	ஸந்தோஷித்திருக்க,
ஊழிலவை தன்னை	பழையனவாய்க்கழிந்த அபதானங்களை

---

(௧) ரா-ஸு-௧௫-௫௨. (௨) கண்ணி-௨. (௩) ஸ்தோ-௩. (௪) கண்ணி-௯.

இன்று போல்கண்டு	இன்று நடந்ததைப்போல் ஸாக்ஷாத்கரித்து
தான் உரைத்த	தாம் அநுபவித்ததற்கும் போக்கு வீடாக அருளிச்செய்த
மாறன்சொல்	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை
பன்னுவரே	அநுஸந்திப்பவர்களே
நல்லதுகற்பார்	விலக்ஷணமான ப்ரந்தங்களை அப்யஸிப்பவர்களாவர். (௬௪)

அவ.—அநுபத்தநாரம்பாட்டு. (ஆழிவண்ணன்) இதில் - விஜயபரம்பரைகளைப்பேசினபடியை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனே யென்னில்; "மண்டினிஞாலமுமேழ்கடலும் நீள் விசும்புங்கழியப்பெரிதால்" என்று பக்தபதியைத்தாலே அவளைந்தானவிவர் தளர்த்தியை மாற்றித் தரிப்பிக்கைக்கு 'பேழியசூழ்கடல் தென்னிலங்கை செற்றபிரான்" என்று ப்ரஸ்துதமான வ்யதார சரிதமாயுள்ள, த்ரைவிக்ரமணத்தொடங்கி ஸேவாந்தநோத்தரணபர்யந்தமான விஜயபரம்பரையைப் பரம்பத்தாக வவன் காட்டிக்கொடுக்க, அதைத யநுபவித்து ஹ்ருஷ்டராகிய *ஆழியெழச்சங்கிலர்த்தத்தை - "ஆழிவண்ணன்" இத்யாதியாலே யருளிச்செய்கிறென்கை.

வ்யா.-(ஆழிவண்ணன் தன்விசயமானவை முற்றுங்காட்டி வாழிதனுலென்று மகிழ்ந்துநிற்க) அதாவது - கீழ் (௫) "ஆழிநீர் வண்ணனையச்சுதனை" என்று - ஸ்ரமஹரமான வடிவை யுடையஸர்வேஸ்வரன், தன் விஜயபரம்பரைகளான ஸர்வசேஷ்டிதங்களையும் இவர்க்கு விஷயமாம்படி காட்டி, ஏவம்விதமான விவற்றாலே ஹ்ருஷ்டராய் வாழுமென்றுசொல்லி, அவ்வாகாரங்களைக்காட்டிக்கொடுநிற்க.

(௧) "விரநிவ்ருத்தேவ்ருத்த்ர த்ரக்ஷிவஉஸிதம் - த்ரிவிக்ருத்தமப்யேதத்ப்ரத்யக்ஷமிவதர்ஸிதம்" என்னும்படியே "ஆழியெழ" என்றுதொடங்கி 'அப்பனூழியெழுவலகந்கொண்டவாறே' என்று-த்ரைவிக்ரமணத்தையும்; "ஆறுமலைக்கெதிர்ந்தோடுமொலி" என்றுதொடங்கி "அப்பன் சாறுபடவமுதங்கொண்டநான்றே"

---

(௧) ரா-பா-௪-௧௨.

என்று - அம்ருதமதநவைசித்ரியையும்; "நான்றிலவேழ்மண்ணும்" என்றுதொடங்கி "அப்பனூன்றியிடந்தெயிற்றிற்கொண்டநாளே" என்று - பூம்யுத்த(ஸ)ரண ஶக்தியையும்; 'நாளுமெழு' என்று தொடங்கி 'அப்பனூழியெழுவுலகமுண்டவூணே' என்று - ஜகந்நிக(ம)ரணத்தையும்; "ஊனுடைமல்லர் ததர்ந்தவொலி" என்றுதொடங்கி "அப்பன் காணுடைப்பாரதங்கையறைபோழ்தே" என்று - பாரதஸமராத்புதத்வத்தையும்; "போழ்துமெலிந்தபுன்செக்கரில்" என்றுதொடங்கி "அப்பனூழ்துயர் செய்தசுரரைக்கொல்லுமாறே" என்று - ஹிரண்யவிதாரண க்ரமத்தையும்; "மாறுநிரைத்திரைக்கும் சரங்கள்" என்றுதொடங்கி "அப்பன் நீறுபடவிலங்கை செற்றநேரே" என்று - ராவணநிராகரணத்தையும்; "நேர்சரிந்தான்" என்றுதொடங்கி "அப்பன் நேர்சரிவாணன் திண்டோள் கொண்டவன்றே" என்று - பாணபாஹுவநச்சேதநசேஷ்டிதத்தையும்; "அன்று மண்ணீரெரிகால்" என்றுதொடங்கி "அப்பனன்று முதலுலகம் செய்ததுமே" என்று ஜகத்ஸமஷ்டி ஸ்ருஷ்டியையும்; "மேய்நிரை கீழ்புக" என்றுதொடங்கி "அப்பன் தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே" என்று - கோவர்த்தநோத்த(ஸ)ரணஸாமர்த்யத்தையுங்கண்டநுபவித்து; "குன்றமெடுத்தபிரானடியாரொடு மொன்றிநின்றசடகோபன்" என்றுமகிழ்ந்துகால் த(ய)ரித்து நின்றாராயிற்று.

(க) "நஜாஜிவப்ரஸவிஷஸஹேந - நந்தாமிபஶ்யந்நபிதர் ஸஹேந" என்னக்கடவதிறே. (ஊழிலவைதன்னை) பழையதாய்க் கழிந்தவந்தவபதாநங்களை. (இன்றுபோல்கண்டு) ப்ரத்யக்ஷமாக இன்றுபோலே யநுபவித்து. (தானுரைத்தமாறன்சொல்) தாமநுபவத்துக்குப் போக்குவிட்டருளிச்செய்த வாழ்வார் திவ்யஸூக்தியை. (பன்னுவரே நல்லதுகற்பார்) ஆராய்ந்தநுஸந்திக்குமவர்களே, தங்கள் ப்ரியஹிதங்களுக்குறுப்பாக விலக்ஷண ஶப்தங்களையப்யஸிப்பாரானவர். § தங்கள் ப்ரியஹிதங்களுக்குறுப்பாக ஆழ்வார் திருவடிகளை சரணமென்றறிந்தநுஸந்திக்குமவர்களே, எல்லா[illegible] ஸந்தி[illegible]என்றதாயிற்று. (சுசு)

(க) [illegible] அ-கஉ-கoரு.

§ இது "மாறன்தாள் பன்னுவரே" என்றபாடத்தைப்பற்ற.

௬௫.—கற்றோர் கருதும் விசயங்களுக்கெல்லாம்
பற்றாம் விபவகுணப்பண்புகளை—உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்தமாறன்சொல்
பண்ணிலினிதான தமிழ்ப்பா. (௬௫)

பதவுரை.

கற்றோர்	ஸகலஶாஸ்த்ர தாத்பர்யங்களையுங் கற்றவர்களான ப்ரஹ்மாதிதேவாதிகள்
கருதும்	ஆதரிக்கிற
விசயங்களுக்கு எல்லாம்	விஜயங்களுக்கெல்லாம்
பற்று ஆம்	ஆஶ்ரயமாகிய
விபவகுணப்பண்புகளை	விபவாவதார குண ஸ்வபாவங்களை
உற்று உணர்ந்து	ஆராய்ந்தறிந்து
மண்ணில் உள்ளோர் தம் இழவை	பூமியிலுள்ளவர்கள் பகவதநுபவத்தை இழக்கும்படியை
வாய்ந்து உரைத்த	பொருந்தி அருளிச்செய்த
மாறன் சொல்	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியானது
பண்ணில் இனிதான	பண்ணிசையில் பரமபோக்யமான
தமிழ்ப்பா	த்ராவிட ப்ரஹ்மஸம்ஹிதை. (௬௫)

அவ.—(கற்றோர் கருதும்) இதில் - "விஜயங்களுக்கடியான விபவங்களையிழப்பதே" என்று வெறுத்தபடியை யநுவதித்தருளிச்செய்கிறார். அதாவது - கீழ்ச்சொன்ன விஜயபரம்பரைக்கடியானவிபவகுணங்களை யநுஸந்தித்து "படுக்கைக்கீழே தனம் (புதை) ந்கிடக்கக்கால்வீங்கிச்சாவாரைப்போலே, இம்மஹாநிதியுண்டாயிருக்கவிவர்களித்தையிழந்து அநர்த்தப்படுவதே" என்று ஸம்ஸாரிகளிழவுக்குவெறுக்கிற * கற்பார்ராமபிரானிலர்த்தத்தை "கற்றோர் கருதும்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(கற்றோர் கருதும் விசயங்களுக்கெல்லாம் பற்றாம் விபவகுணப்பண்புகளை யுற்றுணர்ந்து) அதாவது - ஸகலஶாஸ்த்ர தாத்பர்யங்களைக்கற்ற சக்ரவர்த்தி, ஸ்ரீவஸுதேவர், ஸ்ரீஜாம்பவான்,

மஹாராஜர், திருவடிமுதலாயுள்ள வவதார விஜயஹர்ஷிகளானவர்கள் ஆதரிக்கும் விஜயபக்ஷத்தில் எல்லாமாச்ரயமாயுள்ள வவதாரமான விபவகுணஸ்வபாவங்களை ; அவதாரந்தோறும் ததநுகுணமாக குணங்களும் பேதித்திறே யிருப்பது; அவைதானாச்ரித ரக்ஷணாத்தூக்குயப்பாகையாலே; அவற்றின் ஸ்வபாவத்தை யுற்றுணர்ந்து- அவற்றின்படியை மேலெழவன்றிக்கே அந்தரங்கமாக வாராய்ந்து. அதாவது - (௧) "ராமோ ராமோ ராம இதி - ராமோ ராமோ ராமஇதி" என்றும், "கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" என்றும் நடந்தமை கேட்டும் - நாட்டிற்பிறந்தவர் நாரணற்காளன்றியாவரோ" என்றும், "தன்மையறிவாரை யறிந்தும் - கேட்பார்கள் கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ" என்றும், "தோற்றியசூழல்கள்சிந்தித்து- தன்மையறிபவர் தாமவற்காளன்றியாவரோ" என்றும், "கேழற்றிருவுருவாயிற்றுக் கேட்டுமுணர்ந்தவர் - சூழல்கள் சிந்திக்கில் மாயன்கழலன்றிச் சூழ்வரோ" என்றும், "கோட்டங்கை வாமநனாய்ச் செய்தகூத்துக்கள் கண்டும் - கேட்டுமுணர்ந்தவர் கேசவற்காளன்றியாவரோ" என்றும், "கொண்டங்குத்தன்னொடுங்கொண்டுடன் சென்றதுணர்ந்தும் - கண்டுந்தெளிந்தும் கற்றார் கண்ணற்காளன்றியாவரோ" என்றும், "இரணியனாகத்தை யல்லரியுருவாய்ச்செய்த மாயமறிந்தும்-செல்வமுணர்ந்தவர் செல்வன்றன்சீரன்றிக் கற்பரோ" என்றும், "நடந்த நல்வார்த்தை யறிந்தும் - மாயவற்காளன்றியாவரோ" என்றும், "அவன் செய்யும் சேமத்தை யெண்ணித் தெளிவுற்று- மாயவற்காளன்றியாவரோ" என்றுமிப்படிப்பத்தும்பத்தாக வாராய்ந்தென்கை. (பண்ணிலுள்ளோர் தம்மிழவை) "அவன் குணாதிப்படியா யிருக்கவித்தை யிழப்பதே" என்றுபூமியிலுண்டானவர்கள் பகவத்குணாநுபவாலாபத்தை. (வாய்ந்துரைத்த மாறன்சொல்) ஸாலபாய்க்கட்டி நின்று அந்தரங்கமாக வருளிச்செய்தவாழ்வார் திவ்யஸூக்தியானது. (பண்ணிலினிதான தமிழ்ப்பா) நட்டபாடைத்தோடேகூடி, த்ராவிடரூபமான சந்தஸ்ஸு. இப்படி ராகத்தோடேகூடின விதுவுமொரு சந்தஸ்ஸே யென்றிடு பாடாயிருக்கிறது. (௬௫)

---

(௧) ரா-யு-௧௨௮-௧௨,

மூ.—பாமருவுவேதம் பகர்மால்குணங்களுடன்
ஆமழகுவேண்டப்பாடாமவற்றைத்—தூமனத்தால்
நண்ணியவனைக்காண நன்குருகிக்கூப்பிட்ட
வண்ணலை நண்ணுரேழையர். (௬௬

பதவுரை.

பாமருவு வேதம் பகர்	சந்தஸ்ஸுக்களோடு கூடின வேதங்களால் ப்ரதிபாதிக்கப்படுகிற
மால்குணங்களுடன்	பவ்யமான கல்யாணகுணங்களோடேகூடி
ஆம் அழகு வேண்டப்பாடாம் அவற்றை	நன்றான அழகு மேன்மையாகிற‡ அவற்றை
தூமனத்தால் நண்ணி	பரிசுத்தாந்த: கரணஸாக்ஷாத்காரத்தாலேகிட்டி அநுபவித்து
அவனைக்காண	மேற்சொன்ன குணவிஶிஷ்டனானவனை ப்ரத்யக்ஷமாகக்கிட்டி அநுபவிக்க இச்சித்து
நன்கு உருகி	நன்றாயுருகி
கூப்பிட்ட	ஓ என்று கூவின
அண்ணலை	ஸ்வாமியான ஆழ்வாரை
நண்ணார்	ஆஶ்ரயியாதவர்கள்
ஏழையர்	ஏழைகளாவர். (௬௬)

அவ.—அறுபத்தாறும்பாட்டு. (பாமருவு) இதில்-எம்பெருமானுடைய குணங்களைச் சொல்லிக்கூப்பிட்ட பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; * சற்பாரில்-நிரவதிகபோக்யங்களான கல்யாண குணங்களையுடைய வெம்பெருமானுடைய ப்ராப்யத்வம் ப்ராபகத்வம் விரோதிநிவர்த்தகத்வமாகிற விவ்வோஸ்வபாவங்களை யநுஸந்தித்து, "இப்படிகுணாதிகனானவனை யநுபவிக்கவேணும்" என்றாசைப்பட்டுக் கிடையாமையாலே, அம்புபட்டாரைப்போலே கிடந்† தழைக்கின்ற பாமருவு வென்கிலர்த்தத்தை "பாமருவுவேதம்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

‡ (பா) மேம்பட்ட. † (பா) தழைக்கின்ற.

வ்யா. (பாமருவு வேதம் புகழ்மால்குணங்களுடனுமழகுமேண்டப்பாடாமவற்றை) ச(ம)ந்தஸ்ஸூக்களோடே கூடின வேதப்ரதிபாத்யமான குணங்களோடே கூடி நன்றானவழகு மேன்மையாகிற வவற்றை; (தூமனத்தால்நண்ணி)(க)"ஜ்ஞாநஸா விஶுத்தேந மநஸாதுவிஶுத்தேந" என்று மாநஸஸாக்ஷாத்காரத்தாலே கிட்டியநுபவித்து. (அவனைக்காண) கீழ்க்குணவிஶிஷ்டனானவவனை ப்ரத்யக்ஷாநுபவம் பண்ணவேணுமென்று இச்சித்து. (நன்குருகிக்கூப்பிட்ட) நன்றாகவுருகி, அந்தப்ரேமாநுகூலமான வுருகுதலோடே கூப்பிட்ட.

(அண்ணலை நண்ணுரேழையர்) § அதாவது - வேதம் புகழ்மால் குணங்களாவது (உ) "ஸோஶ்நுதே காமாந் - ஸர்வாந் காமாந்" என்கிற கல்யாண குணங்கள்; அவைதான் ப்ராப்யங்களாயும் ப்ராபகங்களாயு மிருக்குமிறே. மோக்ஷதசையில் ப்ராப்யமாய் முமுக்ஷுதசையி லநுபவிப்பார்க்கு அவதாராதிகளில் ப்ராப்திக்கு ப்ராபகத்வமாகிற வுப(ா)யாகாரத்தையு முடைத்தாயிருக்கும்; ஆகையாலே "பாமருமூவுலகும்படைத்த பற்பநாபாவோ" என்றுதொடங்கி "தாமரைக்கையாவோ வுன்னையென்றுகொல் சேர்வதுவே" என்றும், "என்றுகொல் சேர்வதந்தோ" என்றுதொடங்கி "நின்திருப்பாதத்தையான்" என்றும் - ப்ராப்யத்வத்தையும்; "காத்தவெங்கூத்தாவோ" என்றுதொடங்கி "உன்னையெங்குத்தலைப்பெய்வனே" என்றும், "எங்குத்தலைப்பெய்வன் நான்" என்றுதொடங்கி "என்னுடைக்கோவலனே" என்றும், "என்னுடைக்கோவலன்" என்றுதொடங்கி "என்னுடையாருயிராரெங்ஙனே கொல்வந்தெய்துவரே" என்றும், "வந்தெய்துமாறறியேன்" என்றுதொடங்கி "என்திருமார்பனை" என்றும், "என்திருமார்பன்றன்னை" என்றுதொடங்கி "விசும்பாளியைக்காணேனே" என்றும், இப்படியஞ்சுபாட்டாலே - அவனுடைய ப்ராபகத்வத்தையும்: "ஆளியைக்காண்பரியாய்" என்றுதொடங்கி "அடர்த்தானையுங் காண்டுங்கொலோ" என்றும், "காண்டுங்கொலோ நெஞ்சம்" என்றுதொடங்கி "அமரரியேற்றினையே" என்றும், இவ்விரண்டு பாட்டாலும் - விரோதிநிரஸநஶீலத்தையும்; எற்றாரும்

(க) (உ) தை-ஆ. § என்கிறது.

வைகுந்தத்தை யருளும்நமக்காயர் குலத்திற்பிறம்பிள்ளை" என்று மேபரத்வத்தையும்,

இப்படியான (௧) "வைஷமிவோ தந்ருவைகவ்யூணமணாத்மணா: - பஹூவோந்ருபகல்யாணகுணா:" என்கிற விக்குணங்களோடே நன்றான வழகையும். அதாவது - "பற்பநாபாவோ" என்று - (௨) * கொப்பூழிலெழுகமலப்பூவழகையும், "பற்பநாபாவோ, தாமரைக் கண்ணாவோ, தாமரைக்கையாவோ," "செய்யநின்றிருப்பாதம்" என்று - திவ்யாவயவஸௌந்தர்யத்தையும், "காத்தவெங்கூத்தாவோ" என்று-ஸமுதாயஶோபையையும், "பூத்தண்டுழாய் முடியாய்" என்று ஒப்பனையழகையும், "என்பொல்லாக்கருமாணிக்கமே" என்றும் "செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தொருமாணிக்கம் சேர்வதுபோல்" என்றும் - வடிவழகையும், "என்றிருமார்பனையே" என்று - ஶ்ரியஃபதியாகையால் வந்தசேர்த்தி யழகையும், அத்தோடே வேண்டப்பாட்டையும், அதாவது - 'மூவுலகும்படைத்த' என்று - ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வமும், "மூவுலகுமளந்த" என்று - ஸ்ருஷ்டமான ஜகத்தைத்தன் காலின் கீழேயாம்படி யெல்லைநடந்துமீட்டும், அதுக்குமேலே "தாமரைக்கண்ணாவோ" என்று - புண்டரீகாக்ஷத்வத்தால் வந்தமேன்மையையும், "அரன் நான்முகனேத்தும் செய்யநின்றிருப்பாதம்" என்றுஸர்வஸ்மாத்பரத்வத்தையும், "என் மலைமகள் கூறன்றன்னையென்றுமென்னுமகளை யகம்பால்கொண்ட நான்முகனைநின்ற சசிபதியை" என்று-அவர்களுக்கு அந்தராத்மதயாநிர்வாஹகனான படியையும் இவற்றாலே பலித்தவேண்டப்பாடு இவையென்கை.

(தூமனத்தால் நண்ணிபித்யாதி) கீழ்க்கதங்களான விவற்றை (௩) 'தூமனத்தனாய்' என்கிற பரிஶுத்தமான ஜ்ஞாந விஷயமாம்படி யநுபவித்து, எவம்விதனானவனை, ப்ரத்யக்ஷஸாக்ஷாத்காரத்தாலே யநுபவிக்கவிச்சித்து, பக்திபாரவஶ்யத்தாலே த்ரவீபூதராய்க்கூப்பிட்ட "பற்பநாபாவோ" "காத்தவெங்கூத்தாவோ" "விசும்பாளியைக்காணேனோ" என்றிப்படி விஷாத(ஹா)திஶயத்தாலே கூப்பிட்ட, (அண்ணலை நண்ணுமேழையர்) இதரவிஷயத்திலே சபலராய் தத்லாபத்திலே கூப்பிடுகிற ஸம்ஸாரிகள்நடுவே, பகவதலாப

(௧) ரா-அ-௨-௨௬. (௨) நா-தி-௧௧௧-௨. (௩) தி-வாய்-௨-௭-அ.

௬௭.-ஏழையர்கள்நெஞ்சை யிளகுவிக்குமாலழகு
சூழவந்துதோன்றித்துயர் விளைக்க — ஆழுமனம்
தன்னுடனேயவ்வழகைத்தானுரைத்த மாறன்பால்
மன்னுமவர் தீவினைபோம் மாய்ந்து. (௬௭)

(ஸ)தலத்திலே கூப்பிடுகிற ஸர்வாத்மஶேஷியான வாழ்வாரையாஶ்ரயியார்கள். அதுக்கடி-இதரவிஷயசாபல்யமிறே. "இப்படி ஸாபலராய் ப்ராப்தஶேஷியான வாழ்வாரை லபியாதே இதரவிஷய சபலராவதே" என்றுவெறுக்கிறார். (௬௬)

பதவுரை.

ஏழையர்கள்	சபலரான ஸம்ஸாரிகளுடைய
நெஞ்சு	மநஸ்ஸை
இளகுவிக்கும்	உருக்குகின்ற
மால் அழகு	எம்பெருமானுடைய அழகானது
சூழவந்து தோன்றி	எங்குஞ்சூழ்ந்து காணப்பட்டு
துயர் விளைக்க	வருத்தத்தை உண்டாக்க,
ஆழும் மனம் தன்னுடனே	அத்துன்பக்கடலில் ஆழ்ந்த மனத்தோடே
அவ்வழகை	அந்த ஸௌந்தர்யத்தை
தாம் உரைத்த	தாமே அநுபவித்தருளிச்செய்த
மாறன்பால்	ஆழ்வார் விஷயத்தில்
மன்னுமவர்	பொருந்தியிருப்போருடைய
தீவினை	பாவமானது
மாய்ந்துபோம்	நசித்துப்போம். (௬௭)

அ:— அறுபத்தேழாம்பாட்டு(ஏழையர்கள்நெஞ்சை) இதில்- அவனுடைய உத்தமாங்கத்திலழகு ஒருமுகமாய் நலிகிறபடியைப் பேசுகிற ஸந்தையை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்; "மல்குநீலச்சுடர்தழைப்ப" என்றுகீழ் ப்ரஸ்துதமான வெம்பெருமானுடையவழகு திருவுள்ளத்திலே யூற்றிருந்து, அத்தையே யிடைவிடாமல் (ஸ)பாவித்து(ஸா)பாவநா ப்ரகர்ஷத்தாலே அவ்வழகு ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாய்த்தோற்றி, தனித்தனியும் திரளவுமொருமுகஞ்செய்துநலிய, தாம் நலிவுபட்டுச் செல்லுகிறபடியை,

உருவுவெளிப்பாட்டாலே நோவுபடுகிறுளொருபிராட்டி பாசுரத்தாலே யருளிச்செய்கிற * ஏழையராவியிலர்த்தத்தை "ஏழைகள்" இத்யாதியாலே யருளிச்செய்கிறரென்கை.

வ்யா.-(ஏழையர்கள் நெஞ்சையிளகுவிக்கும் மாலழகு)சபலைகளான அபலைகளுடைய மநஸ்ஸை த்ரவிப்பிக்கும் ஸர்வேச்வரனுடைய * ஸமயமாந முகாப்ஜத்தில் நயநஸௌந்தர்யம். (சூழவந்து தோன்றித்துயர்விளைக்க) எங்குஞ்சூழ்ந்து ஸ்ம்ருதிவிஷயமாய் பாதகமாயிறே துக்கத்தைவிளைப்பது. அதாவது (௧)-"வ்ருக்ஷே வ்ருக்ஷே ஹிபச்யாமி - சீரக்ருஷ்ணாஜிநாம்பரம் - வ்ருக்ஷே வ்ருக்ஷே ஹி பச்யாமி - பாசஹஸ்தமிவாந்தகம்" என்னும்படி, 'ஏழையராவி யுண்ணுமிணைக்கூற்றங்கொலோ வறியேன்" என்கிற முதற்பாட்டை யடியொத்தினபடி.

(ஆழுமனந்தன்னுடனே யவ்வழகைத்தானுரைத்த) "வெண்ணெயுண்டான் றிரு மூக்கெனதாவியுள்ளேமாட்டியவல் விளக்கின் சுடராய் நிற்கும்" என்றும், "நீலநெடுமுகில்போல் திருமேனியம்மான் தொண்டைவாயேலுந்திசையுள்ளெல்லாம் வந்துதோன்றும்" என்றும், "கண்ணபெருமான் புருவமவையேயென்னுயிர் மேலன வாயடுகின்றன வென்றுநின்றே" என்றும், "குன்றமெடுத்தபிரான் முறுவலெனதாவியடும்" என்றும், "பைவிடப்பாம்பணையான் றிருக்குண்டலக்காதுகளே கைவிடலொன்றுமின்றியடுகின்றன" என்றும், "பெருயான்றன் றிரு நுதலேகோள் மன்னியாவியடும்" என்றும், இப்படித் தனித்தனியும்; "கோளிழைத்தாமரையும்" இத்யாதிப்படியே ஒருமுகமாகவும்; அதுக்குமேலே, (௨) "செங்கமலப் பூவில் தேனுண்ணும்வண்டேபோல் பங்கிகள்வந்துன் பவளவாய் மொய்ப்ப" என்றும், (௩) "ஆபாதசூடவிக்ஷிப்தா ஆகுஞ்சிதலலாட பர்யந்த விளம்பிதாலகம்" என்றும்சொல்லும்படியாய், 'மாயன் குழல்விள்கின்ற பூந்தண்டுழாய் விரைநாறவந்தென்னுயிரைக்கள்கின்றவாறு" என்று மருளிச்செய்தவையென்கை.

இப்படி துக்கமக்நமான மநஸ்ஸுடனே. (அவ்வழகைத் தானுரைத்தமாறன்பால் மன்னுமவர் தீவினைபோம்மாய்ந்து) நிர

(௧) ரா-ஆ-௩௧-௨௨. (௨) பெரி. தி-௧-௨. (௩) ஸ்தோ-ர

மூ — மாயாமல்தன்னைவைத்த வைசித்திரியாலே
தீயாவிசித்திரமாச்சேர்பொருளோ—டாயாமல்
வாய்ந்துநிற்குமாயன் வளமுரைத்த மாறனைநாம்
ஏய்ந்துரைத்து வாழுநாளென்று. (௬அ)

வதிகபோக்யமான அந்த உத்தமாங்கத்திலே ஸௌந்தர்யத்தை யநுபவித்தருளிச்செய்த வாழ்வார் விஷயத்திலே பொருந்தியிருக்குமவர்களுடைய ப்ரபலப்ரதிபந்தகம் நசித்துநிஶ்ஶேஷமாகப் போம் தீவினை - துஷ்கர்மம். “மாறன்சொல்மன்னுமவர் தீவினை போம்மாய்ந்து” என்றுபாடமானபோது, ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியை மநஸ்ஸிலேபொருந்தி யநுஸந்திக்குமவர்கள் ப்ரதிபந்தகம் நிஶ்ஶேஷமாகப் போமென்றபடி. (௬எ)

பதவுரை.

மாயாமல்தன்னைவைத்த	தமது ஶேஷத்வஸ்வரூபம் நசியாமல் தம்மைவைத்த
வைசித்திரியாலே	விசித்ராகாரதையாலே
தீயாவிசித்திரமா	தீ முதலான பஞ்சபூதங்களும் ஒன்றின் காரியம் ஒன்றுக்கின்றிக்கே வெவ்வேறுருவாய்
சேர்பொருளோடு	சேதநவர்க்கங்களும் அப்படியே வெவ்வேறுருவமாகையாலே விசித்ரமாய்ச்சேர்ந்த பதார்த்தங்களோடே
ஆயாமல்	அவற்றின் தோஷங்களை ஆராயாமல்
வாய்ந்துநிற்கும	அவற்றோடு பொருந்திநிற்கிற
மாயன்வளம்	ஸர்வேஶ்வரனுடைய விபூதிவிஸ்தாரத்தை
உரைத்த	அருளிச்செய்த
மாறனை	ஆழ்வாரை
நாம் ஏய்ந்து உரைத்து	நாம்கிட்டி அவர் திருநாமங்களைச் சொல்லி
வாழும்நாள் என்று	வாழுங்காலம் எக்காலமோ ?(௬அ)

அவ.—அறுபத்தெட்டாம்பாட்டு. (மாயாமல்) இதில் - எம்பெருமான் காட்டின விசித்ரஜகதாகாரத்தை யநுபவித்து விஸ்மிதராயருளிச்செய்த திவ்யஸூக்தியை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனேயென்னில் * ஏழையராவியில் - உருவுவெளிப்பாட்டாலே நோவுபடும்படி யாற்றாமை கரைபுரண்டிருக்கச் செய்தேயும், தம்மையறியாதபடி வைத்து நோக்கிக்கொண்டு போருகிற விவ்வாஸ்சர்யத்தைக் கண்டு இவர் விஸ்மிதராக, "இதொன்று கண்டோநீர் இப்படி விஸ்மயப்படுகிறது," என்று அவன் தன்னுடைய வாஸ்சர்ய ஜகதாகாரத்தைக் காட்டிக்கொடுக்க, அத்தை யநுபவித்து விஸ்மிதராகிற மாயாவாமன னிலர்த்தத்தை "மாயாமல் தன்னைவைத்த" இத்யாதியாலே யருளிச் செய்கிறாரென்கை.

வ்யா.—(மாயாமல் தன்னைவைத்தவை சித்திரியாலே) அதாவது - ஸாரண்யனை வனக்கு அஜ்ஞாநாஸக்திகளாகிற தோஷமின்றிக்கே ஸர்வஜ்ஞத்வாதி குணங்களுண்டாயிருக்க, ஸரணாகதனை யெனக்கு ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களும் ஆர்த்தியுமுண்டாகை யாலே அதிகாரி மாந்த்யமின்றிக்கேயிருக்க வைத்தவிதில் பொருந்தாதவென்னை வைத்து நடத்திக்கொண்டுபோகிறதுக்கு ஹேதுவென்?" என்று-"பாசங்கள்நீக்கி" என்றுதொடங்கி "மாயவனே யருளாய்"என்று அவன்றன்னைக்கேட்க,அவனும் அதுக்கு நிருத்தரனாக "இதொன்றிருந்தபடியென்? என்று இவ்வாஸ்சர்யத்திலே இவர்விஸ்மிதராக, அவனவற்றைக் கண்டுவைத்து "இதோராஸ்சர்யமோ" என்று தன் விசித்ரஜகதாகாரத்தையைக்காட்ட, (தீயா விசித்திரமாச்சேர் பொருளோடு) "மாயாவாமனனே" என்றுதொடங்கி "இவையென்னவிசித்திரமே" என்றத்தைப்பின்சென்றருளிச் செய்தபடி.

தீயாதியாக பஞ்சபூதங்களுமொன்றின் கார்யமொன்றுக்கின்றிக்கே விவிதா(கா)காரமாய் சேதநவர்க்க(மு)ங்களுமப்படியே விவிதாகாரமாகையாலே விசித்ரமாய்ச்சேர்ந்த பதார்த்தங்களோடு, (ஆயாமல் வாய்ந்துநிற்கும் மாயன்) அவற்றின் தோஷங்களையாராயாமல் வாய்ந்துநிற்கும்மாயன். "ஓயாமல் வாய்ந்துநிற்கும்" என்றுபாடமாய், நிரந்தரமாகச்சேர்ந்து நிற்குமென்றாகவுமாம்.

மூ.-என்றனை நீ யிங்குவைத்ததே துக்கெனமாலும்
என்றனுக்கு மென்றமர்க்கு மின்பமதாம்—நன்றுகவி
பாடவெனக்கைம்மாறிலாமை பகர் மாறன்
பாட்டினைவார்க் குண்டாமின்பம். (சுகூ)

பொருந்திநிற்குமாஸ்சர்ய ஶக்தியுக்தனான ஸர்வேஶ்வரன். "மாயா" என்றதைப்பேசினபடி. (வளமுரைத்த) விபூதிவிஸ்தாரத்தை யருளிச்செய்த.

அதாவது - (க) 'வை[illegible]ஸ்ஞ்கா ஜ்ரூ[illegible]நாஸ: - நிகேசாயஸம்ஸாரவஸ: - புராபூக்வாம்ருதார்த்தாந்த: - நக்ரோதவஸமாபந்ந:" என்னும்படி, "அங்கண்மலர்த்தண்டுழாய் முடி யச்சுதனே யருளாய் - பின்னும் வெங்கண் வெங்கூற்றமுமாமிவையென்னவிசித்திரமே" என்றும், "சித்திரத்தேர்வலவா- வித்தகத்தால் நிற்றிநீ' என்றும், "கள்ளவிழ்தாமரைக் கண்கண்ணனே - உள்ளப்பல் யோகுசெய்தி" என்றும், "பாசங்கள் நீக்கியென்னை - இவையென்னமயக்குக்களே" என்றும், "மயக்காவாமனனே - இவையென்னதுயரங்களே" என்றும், "துயரங்கள் செய்யுங்கண்ணா - இவையென்ன சுண்டாயங்களே" என்றும், "என்ன சுண்டாயங்களாலெங்ஙனே நின்றிட்டாய் - இவையென்னவியற்கைகளே" என்றும், "என்னவியற்கைகளால் நின்றிட்டாய் - உலப்பில்லை நுணுக்கங்களே" என்றும், "இல்லைநுணுக்கங்களே - அச்சுதனே - அதுவேயுனக்காம்வண்ணமே" என்றுமிப்படி அவன் விசித்ர விபூதிவிஸ்தாரயுக்தனா யிருக்கிறபடியை யருளிச்செய்தவையென்கை. (மாயன் வளமுரைத்தமாறனை) இப்படி விசித்ரஜகதாகாரனானவன் ஸம்பத்தை யநுபவித்தருளிச்செய்த வாழ்வாரை. (நாமேய்ந்துரைத்து வாழுநாளென்று) நாம்கிட்டி அவர் திருநாமங்களைச்சொல்லி வாழுங்காலமாகவற்றோ? அன்றுமொருநாளாகவற்றோவென்றபடி. சுஅ

பதவுரை.

என்றனை — 'ஸம்ஸாரத்திற்பொருந்ாதவென்னை
நீ இங்குவைத்தது — நீ இவ்விபூதியில் வைத்தது
ஏதுக்கென — ஏதற்காக?' என்று (எம்பெருமானை ஆழ்வார்) கேட்க,

(க) ரா-ஆ-சு-ரு.

மாலும்	எம்பெருமானும்
என்றனக்கும்	"எனக்கும்
என்தமர்க்கும்	என் அடியார்க்கும்
இன்பமதா	போக்யமாக
நன்று கவிபாட என	நல்லகவிகளைப்பாடும் பொருட்டு" என்று விடையருள,
கைமாறு இலாமை	எம்பெருமான் செய்த உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரம் தம்மிடத்தி லில்லாமையை
பகர்	அருளிச்செய்த
மாறன்பாடு	ஆழ்வார்பக்கலில்
ஆனவர்க்கு	கிட்டினவர்க்கு
இன்பம் உண்டாம்	ஆநந்தமுண்டாகும். (௬௯)

அவ,—அறுபத்தொன்பதாம் பாட்டு. (என்றனை நீ) இதில் - அவன் திருவாய்மொழிபாடுவித்தபடியை யநுஸந்தித்து ஈடுபடுகிற பாசுரத்தை யநுவதித் தருளிச் செய்கிறார். எங்ஙனே யென்னில்; "எனக்கு ருசியின்றிக்கே யிருக்க ஸம்ஸாரத்திலே என்னை வைத்தது க்கு ஹேதுவென்?" என்றுகேட்க, "உம்மைக்கொண்டு நமக்கும் நம்முடையார்க்கு மநுபவிக்கலாம்படி விலக்ஷணமான திருவாய்மொழி ப்ரபந்தத்தைப் பாடுவித்துக் கொள்ளவைத்தோங்காணும்" என்று நேர்கொடுநேரான பரிஹாரத்தை அவனருளிச்செய்ய, "வேதங்கள், வ்யாஸாதிகள், முதலாழ்வார்கள், இவர்களுண்டாயிருக்க, அத்யந்த ஹேயனான என்னைக்கொண்டு, வேதங்களாலுமெல்லை காணவொண்ணாத தன்வைபவத்துக்குத் சத்ருசியாக விலக்ஷணமான திருவாய்மொழியைப் பாடுவித்துக் கொண்ட விம்மஹோபகாரத்துக்கு உபய விபூதியிலும் ஸத்ருசமாகச் செய்யத் தக்கதொரு ப்ரத்யுபகார மில்லை" என்று தலை சீய்த்துப்படுகிற * என்றைக்குமென்னையிலர்த்ததத்தை, "என்றனை நீ" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா—(என்றனை நீ யிங்குவைத்த தேதுக்கென) அவன் காட்டினதாகையாலே விசித்ர விபூதியை யநுபவித்து, மீளவும் பூர்வப்ர

க்ருதமான தம்முடைய ஸங்கையை, "பாசங்கள் நீக்கியென்னை யுனக்கே யறக் கொண்டிட்டு நீவாசமலர்த்தண்டுழாய் முடி மாயவனே யருளாய்" என்று கேட்க, (என்றனை நீ) ஸம்ஸாரத்தில் பொருந்தாதவென்னை நீ; ஸம்ஸாரத்தில் பொருந்தாதாரையே ற விடுகைக்கு ஸர்வஶக்தியுக்தனான நீ. (இங்கு) * இருள் தரு மாஞாலமான விவ்விபூதியிலே. (வைத்ததேதுக்கென) ப்ரயோஜந நிரபேக்ஷமாயிருக்க, என்ன ப்ரயோஜநத்தைப் பற்றவைத்த தென்ன,

(மாலுமென்றனக்கு மென்றமர்க்கு மின்பமதா நன்றுகவி பாடவென) திருமாலான வெனக்கினிதாகவும், * திருமாலடியாரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இனிதாகவும், விலக்ஷணமாய் "கவியமுதம்" என்னும்படியானவினிய கவிகளைப் பாடவைத்தோமென்ன; தன்னைக் கவிபாடுகைக்கு, வேதங்களும், அத்தைப் பின்சென்ற வைதிகரான வ்யாஸ வால்மீகி ப்ரப்ருதிகளான பரமருஷிகளும், * செந்தமிழ் பாடுவாராய் (௧) "பெருந்தமிழனல்லேன் பெரிது" என்று ப்ரஶம்ஸிப்பாருமான முதலாழ்வார்களு முண்டாயிருக்க, (கவிபாடவென கைம்மாறில்லாமை) "கவிபாடவைத்தோம்" என்றவிந்த வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லாமையை,

(பகர் மாறன்) அருளிச்செய்த வாழ்வார். அதாவது-"என்றைக்கும் - என்சொல்லி நிற்பனோ" "என்சொல்லி நிற்பன் - என் முன் சொல்லும் மூவுருவாமுதல்வனே" "ஆம்முதல்வனிவனென்று - என் வாய் முதலப்பனை யென்று மறப்பனோ" "செப்பமே செய்து திரிகின்ற சீர்கண்டு - அப்பனையென்று மறப்பன்" "சீர்கண்டு கொண்டு - பார் பாவின் கவிபாடும் பரமரே" "இன்கவிபாடும் பரமகவிகளால் தன்கவி தான் தன்னைப்பாடுவியாது - வன்கவி பாடுமென் வைகுந்த நாதனே" "வைகுந்த நாதன் - என்னாள் சிந்தித்தார்வனோ" "ஆர்வனோ - சீர்பெறவின் கவி சொன்ன திறத்துக்கே" "திறத்துக்கு - உறப்பலவின் கவி சொன்ன உதவிக்கே" "உதவி கைம்மாறென்னுயிர் - [illegible] துவுமொன்றுமில்லை செய்வதிங்கு மங்கே" என்றிப்படி உபகார ஸ்ம்ருத்யதிஶயத்தாலே யீடுபட்டருளிச் செய்தவையென்கை.

---

(௧) உ-திருவ-௭௪.

மூ-இன்பக்கவி பாடுவித்தோனை யிந்திரையோடு
அன்புற்றுவாழ் திருவாறன்விளையில்—துன்பமறக்
கண்டடிமை செய்யக் கருதியமாறன்கழலே
திண்டிறலோர் யாவர்க்குந்தேவு. (௭௦)

(க) "என் சொல்லி எங்ஙன் பார் விண்ணீர் இறப்பெதிர் எதுவுமென்கிறவதிலுபகாரஸ்ம்ருதியோடே" என்றிறே நாயனருளிச்செய்தது. (உ) "ஷட்³விம்ஶஸஹஸ்ராணி ஶ்லோகாநாமுக்தவாந்ருஷி:-சதுர்விம்ஶத்ஸஹஸ்ராணி ஶ்லோகாநாமுக்தவாந்ருஷி:" என்னும்படி, * பாலோடமுதன்னவான * இங்ஙனே சொன்ன வோராயிரமான * உறப்புலவின் கவிகளைப் பாடுவிக்கையாலே யிவர்க் கீடுபாடா யிருக்கிறது. (கைம்மாறிலாமை பகர்மாறன் பாடணைவார்க் குண்டாமின்பம்) இப்படிக்ருதஜ்ஞரான வாழ்வார் பரிஸரவர்த்திகளாம்படி கிட்டுவார்க்கு ஆநந்த முண்டாம். "எங்ஙனே சொல்லினு மின்பம் பயக்குமே" என்கிற நிர்ப்பந்தமும் வேண்டா, கேவலம் கிட்டவமையும். (௬௯)

பதவுரை.

இன்பக்கவிபாடுவித்தோனை	போக்யமான திருவாய்மொழியைத் தம்மைக்கொண்டு பாடுவித்த பெருமானை
இந்திரையோடு	பெரியபிராட்டியாரோடுகூடி
அன்புற்றுவாழ்	மகிழ்ந்து வாழ்கின்ற
திருவாறன் விளையில்	திருவாறன் விளையென்னுந் திருப்பதியில்
துன்பம் அறக்கண்டு	தமது வருத்தந் தீரும்படிகண்டு
அடிமை செய்யக்கருதிய	கைங்கரியம் பண்ண ஆசைப்பட்ட
மாறன்கழலே	ஆழ்வார் திருவடிகளே
திண்திறலோர் யாவர்க்கும்	த்ருடாத்யவஸாயிகளான அனைவர்க்கும்
தேவு	பரதேவதையாகும். (௭௦)

(க) ஆசார்யஹ்ருதயம்-௯௯. (உ) ரா-பா-௪-௨.

அவ,—எழுபதாம்பாட்டு. (இன்பக்கவி) இதில் - திருவாய்மொழி பாடியடிமைசெய்யப் பாரித்த திவ்யஸூக்தியை யநுவதித்தருளிச் செய்கிறார்

என்னவென்னில்; தாம்பாடின திருவாய்மொழி கேட்கைக்காகப் பெரியபிராட்டியாருடனே பேரோலக்கமாகத் திருவாறன் விளையிலே அவன் வந்தெழுந்தருளியிருக்கிறபடியை யநுஸந்தித்து அங்கே சென்று (௧) 'திருமாலவன் கவி' என்றவாயோலைப் படியே அவனுமவளுமான சேர்த்தியிலே திருவாய்மொழியை அவர்களிருவரும் முகந்து திருச்செவி சாத்தும்படி கேட்பித்தடிமை செய்யப் பெறுவதெப்போதோ?" என்று மநோரதிக்கிற * இன்பம் பயக்கவின் அர்த்தத்தை, "இன்பக்கவி பாடுவித்தோனை" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா,—(இன்பக்கவி பாடுவித்தோனை) "இன் கவி பாடியவீசனை," "இன்கவி யென்பித்து," "என் நாமுதல் வந்து புகுந்துநல்லின் கவி," திருந்துநல்லின்கவி, "வண்டமிழ்நல் கவி," "சீர்பெறவின் கவி," "உறப்பலவின் கவி" "பதவியவன்கவி பாடியவப்பன்" என்று நிரதிசய போக்யமான திருவாய்மொழியை யென்னைக்கொண்டு பாடுவித்த உபகாரகனை. (இந்திரையோடன்புற்றுவாழ் திருவாறன் விளையில்) பெரியபிராட்டியாரோடே கூட "திருவாய்மொழி கேட்கைக்குப் பாங்கானவிடம்" என்றாதரத்தைப் பண்ணிவாழ்ந்து கொடுபோருகிற திருவாறன் விளையில். அன்றிக்கே, இந்திரையோடன்புற்றென்று - பெரிய பிராட்டியாரிடத்திலே ஸக்தனென்றுமாம். இத்தால் - "இன்பம் பயக்க" என்கிற முதற்பாட்டைக் கடாக்ஷித் தருளிச்செய்தபடி. (௨) 'ராமஸ்ய ஸீதயா ஸார்த்தம் - ராமஸ்ய ஸீதயா ஸார்த்தம்' (௩) * 'ஸோऽபிஷிக்த: ஸஹ ப்ராத்ரா ராஜ்யம் ப்ராப்ய ஸுதுர்லபம் | ஸ்ருஹ்ருத்பிர் வ்ருத: ஶ்ரீமாந் - ராமஸ்ஸீதாமநுப்ராப்யராஜ்யம் புநரவாப்தவாந் | ப்ரஹ்ருஷ்டமுதிதோலோக:' இறே.

(திருவாறன் விளையில் அன்புடனுறக்கண்டு) * ஏழையராவியல் துக்கமெல்லாம் தீரக்கண்டு (அடிமைசெய்யக்கருதிய) கண்டால் செய்யும் கார்யமான கைங்கர்யம் செய்கையிலே மநோரதிக்கிற. அதாவது - "அன்புற்றமர்ந்து வலஞ்செய்து கைதொ

(௧) ௪-வி ௭-அ. (௨) ரா பா-௭௭-௨௫. (௩) ரா-ஸங்க்ஷேபே.

மூ.-தேவனுறைபதியிற்சேரப்பெருமையால்
மேவுமடியார் வசனுமெய்ந்நிலையும்—யாவையுந்தா
னிலையுஞ்சங்கித்தவை தெளிந்தமாறன்பால்
மாநிலத்தீர் நங்கண்மனம். (எக)

மூநாள்களுமாகுங்கொலோ'' '.மாகந்த நீர்கொண்டு தூவிவலஞ் செய்து கைதொழக் கூடுங்கொலோ'' ''நீடுபொழில் திருவாறன் விளைதொழ வாய்க்குங்கொல் நிச்சலுமே'' ''வடமதுரைப் பிறந்த வாய்க்கு மணிநிறக்கண்ணபிரான்றன் மலரடிப்போதுகள் - எப்பொழுதும் மனத்தீங்கு நினைக்கப்பெற-வாய்க்குங்கொல்நிச்சலுமே'' ''மதிள்திருவாறன் விளையுலகமலி புகழ்பாட' ''திருவாறன் விளையென்னும் நீணகரமதுவே'' 'வாணனையாயிரந்தோள் துணித்தான் சரணன்றி மற்றொன்றிலமே'' 'திருவாறன் விளையொன்றி வலஞ்செய்ய,'' ''திருவாறன் விளையதனை மேவிவலஞ்செய்து கைதொழக் கூடுங்கொலென்னுமென் சிந்தனையே'' 'திருவாறன் விளையுறை தீர்த்தனுக் கற்றபின் - சிந்தை மற்றொன்றின் றிறத்ததல்லாத்தன்மை'' என்றிப்படியாயிற்று இவர்க்கவ்விஷயத்தில் கைங்கர்ய மநோரதம் நடந்தபடி யென்கை,

''உபகார ஸ்ம்ருதியோடே தன்சரிதைகேள்வியாகாமல் * இன்பம் பயக்க விருந்த நிலத்தேவர்குழுவிலே பாட்டுக்கேட்பிப்பதாக காந கோஷ்டியையும் தேவபிரானறிய மறந்தவர்'' என்றிறே ஆசார்யஹ்ருதயத்திலு மருளிச்செய்தது. (கண்டடிமை செய்யக் கருதியமாறன் கழலே திண்டிறலோர்யாவர்க்கும் தேவு) தர்மநாநுபவ கைங்கர்ய மநோரதத்தை யுடையவாழ்வார் திருவடிகளே, த்ருடாத்யவஸாய யுக்தராயுள்ளார்க்கெல்லாம்பரதேவதை. ஆழ்வாரும் வேண்டா; நமக்கு உத்தேஶ்ய மாழ்வார் திருவடிகளேயமையும். அன்றிக்கே, மாறன் கழல்சேர்திண்டிறலோருண்டு - த்ருடாத்யவஸாய யுக்தரான மதுரகவி நாதமுநிப்ரப்ருதிகளாயுள்ளவர்கள், மற்றும் அத்யவஸாய † யுக்தராயுள்ளாரெல்லார்க்கும் குலதைவமென்றாகவுமாம். (எ0)

பதவுரை.

மாநிலத்தீர் — பெரிய உலகத்திலுள்ளவர்களே!
தேவன் உறைபதியில் — எம்பெருமான் வாழ்கின்ற திருவாறன்விளையென்ற க்ஷேத்ரத்தில்

---

† (பா) தர்ப்பல.

சேரப்பெறுமையால்	சேர்ந்துபாடி அடிமைசெய்யப் பெறுமையாலே
மேவும் அடியார் வசன் ஆம் மெய்ந்நிலையும்	எம்பெருமான் றன்னை ஆஶ்ரயித்திருக்கிற அடியார்க்குப் பரதந்த்ரனாம் நிலையிலும்
யாவையும் தான் ஆம் நிலையும்	சேதநாசேதநங்களெல்லாம் 'தான்' என்கிறசொல்லுக்குள்ளே அடங்கும்படியான நிலையிலும்
சங்கித்து	அதிஶங்கைபண்ணி
அவை தெளிந்த	அவற்றை உள்ளவாறு தெளிந்த
மாறன்பால்	ஆழ்வார்விஷயத்தில்
நங்கள் மனம்	எங்கள்மனம் பதிந்திருக்கும். (எக)

அவ.-எழுபத்தோராம்பாட்டு (தேவனுறைபதியில்) இதில்-அவனுடைய குணங்களிலும் ஸ்வரூபத்திலு மதிஶங்கித்த வதிஶங்கையைப்போக்கினபடியைப் பேசினபாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். அதெங்ஙனேயென்னில்; இவர்மநோரதித்தபோதே அத்தேசத்திலே புக்கு திருவாய்மொழி கேட்பித்தடிமைசெய்யப் பெறுமையாலேமிகவு மவஸந்நராய், "அவன் ஆஶ்ரிதபரதந்த்ரன், ஸர்வநிர்வாஹகனென்றிருந்தோம், இவையு நம்மைத்தோற்றிப்பொய்யாகிறதோ?" என்று இவர் அவன் குணத்திலும்ஸ்வரூபத்திலுமதிஶங்கை பண்ண, கீழ்த்தடைமைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட வுபகாரத்தை ஸ்மரிப்பித்து, அவன் தம்மதிஶங்கையைப் போக்க, அத்தை யநுஸந்தித்து அதிஶங்கைதீருகிற * தேவிமாரி லர்த்தத்தை "தேவனுறைபதியில்" இத்யாதியாலே யருளிச் செய்கிறாரென்கை.

வ்யா.-(தேவனுறைபதியில்) இத்யாதி — "தன்மைதேவபிரான் அறியும்" என்னும்படியான * தேவர்க்குந் தேவனானவன், திவ்ய மஹிஷிகளோடே நித்யவாஸம்பண்ணுகிற திருவாறன் விளையிலே

புக்குப்பாடி யடிமைசெய்யப் பெறுமையாலே யென்னுதல்; அன்றிக்கே, “தேவிமாராவார் திருமகள் பூமியேவ மற்றமரராட்செய்வார் — அப்பனே காணுமாறருளாய்” “என்றென்றே கலங்கி” என்று அவஸந்நராயென்னுதல். (மேவுமடியார் வசனாமெய்ந்நிலையும் யாவையும் தானா நிலையும் ஸங்கித்து) தன்னையாச்ரயித்திருக்கும் ததீய பாரதந்த்ரனும் நிலையிலும், சேதநாசேதநங்களெல்லாம் “தான்” என்கிற சொல்லுக்குள்ளே யடங்கும்படியான நிலையிலும் மதிஸங்கை பண்ண.

அதாவது - (க) “ஸ்ராதஃ ஸ்ராதஜ்ஞ - ஸஹஜ்ஞஹ்ருதாஸ்ய லங்க்ஷயாத் - க்யாதப்ராஜ்ஞம் - ஸங்கேமம்பாக்ய ஸங்க்ஷயாத்” என்னும்படி, “உமருகந்துகந்த வுருவம் நின்னுருவமாகி” என்று தொடங்கி, “அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்” என்றும், “இறந்ததும் நீயே” என்று தொடங்கி “அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்” என்றும், இப்படி ஸௌலப்யத்திலும் குணத்திலும் மதிஸங்கை பண்ணின படியை யடியொற்றின படியென்கை. இப்படி யாச்ரித பாரதந்த்ர்யத்திலும் ஸர்வநிர்வாஹகத்வத்திலும்பிறந்த விஸ்மயங்கை நிவ்ருத்தமாம்படி பூர்வோபகாரத்தை ஸ்மரிக்கும்படி, “மலரடிப்போதுகளென்னெஞ்சத்தெப் பொழுதுமிருத்திவணங்கப் பலரடியார் முன்பருளிய” என்று உபகரித்ததை ஸ்ம்ருதி விஷயமாம்படி ப்ரகாசிப்பிக்க, அத்தை “தன்னையெனக் கேதலைத்தலைச் சிறப்பத்தந்த பேருதவி” என்றநுஸந்தித்து ப்ரீதராய் தெளிந்தவென்கை.

(தெளிந்த மாறன்பால் மாநிலத்தீர் நங்கள் மனம்) இதர விஷயங்களிலே மண்டியிருக்கிற மஹாப்ருதிவியிலுள்ளவர்களே! உங்களைப்போலன்றிக்கே ஆழ்வார் விஷயத்திலேயாயிருக்கும் நம்முடைய மநஸ்ஸு, உங்களுக்கு இதரவிஷயத்திலேயாயிருக்கும், ஆழ்வார்க்கு பகவத்விஷயத்திலே யாயிருக்கும்; உபய வ்யாவ்ருத்தரானவெங்களுக்கு ஆழ்வார் விஷயத்திலே யாயிருக்கும் மநஸ்ஸு. (எக)

(க) ரா-ஸா-உக-கரு

மூ.—நங்கருத்தை நன்ருக நாடிநிற்குமாலறிய
இங்கிவற்றிலாசை யெமக்குளதென்—சங்கையினுல்
தன்னுயிரின்மற்றினசை தானொழிந்த மாறன்ருன்
அந்நிலையையாய்ந்துரைத்தானங்கு. (எஉ)

பதவுரை.

நங்கருத்தை	நம்முடைய ஹ்ருதயத்தை
நன்ருகநாடிநிற்கும்	நன்ருக ஆராய்ந்துபோருகிற
மால்அறிய	எம்பெருமான் அறிய
இங்கு இவற்றில் ஆசை	இவ்விபூதியில் விருப்பம்
எமக்கு உளதென்சங்கையினுல்	எமக்குண்டென்று அதிசங்கையாலே
தன் உயிரில் மற்றில்	ஆத்மாத்மீயங்களில்
நசைதான் ஒழிந்த	விருப்பமற்ற
மாறன்	ஆழ்வார்
அந்நிலையை ஆய்ந்து	அந்த ஸ்வபாவத்தை ஆராய்ந்து
அங்கு உரைத்தான்	ஆராய்ந்தறிந்த அவ்வாறேஅருளிச்செய்தார். (எஉ)

அவ.—எழுபத்திரண்டாம்பாட்டு. (நங்கருத்தை) இதில் - ஆழ்வார் ஆத்மாத்மீயங்களில் நசையற்ற * நங்கள்வரிவளையை யநுவதித்தருளிச்செய்கிருர். எங்ஙனேயென்னில்; கீழ் - அதிசங்கை தீர்த்தமாத்ரமாய், ஸ்வாபேக்ஷிதமான பாஹ்ய ஸம்ஶ்லேஷம் பிறவாமையாலே கலங்கி அவஸ்தாந்தராபந்நராய், ஸர்வஜ்ஞனவனறிய நாமறியாதேயிருக்க, நமக்கு ஸம்ஸாரத்திலே நசையுண்டாகவேணும்" என்றுபார்த்து ஆத்மாத்மீயங்களில் தாம் நசையற்றபடியை அந்யாபதேஶத்தாலே யருளிச்செய்கிற *நங்கள் வரிவளையிலர்த்தத்தை, "நங்கருத்தை" என்றுதொடங்கி யருளிச்செய்கிருரென்கை.

வ்யா. - (நங்கருத்தை நன்ருகநாடிநிற்கும் மாலறிய) நம்முடைய ஹ்ருதயத்தை நன்ருக வாராய்ந்து போரும் மாலறியவென்னுதல், நம்முடைய ஹ்ருதயத்தை நன்ருக விரும்பி வர்த்தித்துப்போரும் ஸர்வேஶ்வரனறியவென்னுதல், * உள்ளத்தேயுறை

மூ.—அங்கமரர்பேணவவர் நடுவேவாழ்திருமாற்கு
இங்கோர் பரிவரிலையென் றஞ்ச—எங்கும்
பரிவருளரென்னப்பயந்தீர்ந்தமாறன்
வரிகழற்றாள் சேர்ந்தவர் வாழ்வார். (எ௩)

யும் மாலிநீற; இவர் * கருத்தையுறவீற்றிருந்தானும்; இப்படி ஸர்வஜ்ஞனை ஸர்வேச்வரனறியும்படி. (இங்கிவற்றிலாசையெமக்குளதென் சங்கையினால்) இந்தவிபூதியிலே (௩) "பாசங்கள்நீக்கியென்னை" என்னும்படி, பண்டே * ஏழுளிலும், * மாலுக்கு வையத்திலும் கைகழன்ற விவற்றிலாசை; அவற்றை யுபேக்ஷித்திருக்கிற நமக்கு நாமறியாமல் தானறிந்ததாகச் சிறிதபேக்ஷையுண்டென்று நினைத்திருக்கிறானென்கிற சங்கையினாலே, (தன்னுயிரின் மற்றில்நசை தானொழிந்தமாறன்றான் அந்நிலையையாய்ந்துரைத்தானங்கு) ஆத்மாவிலும்அதுக்கசலான வாத்மீயங்களிலும் நசையற்றவாழ்வார், அந்தஸ்வபாவத்தையாராய்ந்தருளிச்செய்தார் அத்தசையிலே.

அதாவது - (க) "ஹ்ருத்யேநாவஹிதேந - ஹஸ்யாம்ஹமிமாய்பாபாம்" என்றுதாயோடுறவறுத்து, (உ) "ராஜ்யஞ்சாஹம் சராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ய" என்றும், (௩) "நைநத்ருராஜ்யம் - நைச்சத்ராஜ்யம்" என்றும் நசையற்று, சித்ரகூடத்திலே சென்று * ப்ரஸாதயித்துப் பாதுகைகளைப் பெற்றாற்போலே இவரும், "வேங்கடவாணனை வேண்டிச்சென்று-சங்கஞ்சரிந்தனசாயிழந்தேன்" என்றும், "கோல்வளையொடுமாமை கொள்வான்" "கோல்வளை நெஞ்சத்துடக்கமெல்லாம் பாடற்றொழிய விழந்துவைகல் பல்வளையார் முன்பரிசழிந்தேன்" "காலம்பலசென்றும் காண்பதாணையுங்களோடெங்களிடையில்லையே" "கடையறப்பாசங்கள் விட்டபின்னையன்றியவனவை காண்கொடானே" "நான்கொடுத்தேனினியென்கொடுக்கேன்" "நின்னிடையேனல்லேனென்றுநீங்கி" "பாதமடைவதன் பாசத்தாலே மற்றவன் பாசங்கள் முற்றவிட்டு" என்றுமிப்படியாயிற்று அந்நிலையையாய்ந்துரைத்தபடி. (எ௨)

பதவுரை.

அங்கு — அந்தநித்யவிபூதியிலே [பண்ணே
அமரர்பேண — நித்யஸூரிகள் மங்களாசாஸநம்

(க) ரா-அ-எஅ-உஉ. (உ) ரா-அ-அஉ-கஉ. (௩) ரா-ஸங்க்ஷேபே.

அவர்நடுவேவாழ்	அவர்களின்நடுவில் வாழ்கின்ற
திருமாற்கு	ஸ்ரிய:பதிக்கு
இங்கு	இவ்விபூதியில்
ஓர்பரிவர் இல்லையென்று	அஞ்ச–பரிவுடன் மங்களாஶாஸநம் பண்ணுவார் ஒருவருமில்லையென்று பயப்பட
எங்கும்	எவ்விடத்திலும்
பரிவர் உளரென்ன	பரிவுள்ளவர்களிருக்கிறார்களென்று (எம்பெருமான்) கூற,
பயந்தீர்ந்த	அதனால் அச்சந்தீரப்பெற்ற
மாறன்	ஆழ்வாருடைய
வரிகழல்தாள்	வரியையுடைய வீரக்கழலோடே கூடின திருவடிகளை
சேர்ந்தவர்	அடைந்தவர்கள்
வாழ்வார்	உஜ்ஜீவிக்கப்பெறுவர்கள். (௭௩)

அவ.-எழுபத்துமூன்றாம்பாட்டு. (அங்கமரர்பேண) இதில் - பரிவரில்லையென்று கலங்க, பரிவருளரென்று தேற்றின பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார், - எங்ஙனேயென்னில்; "ஓர் கோல நீலநன்னெடுங்குன்றம் வருவதொப்பான்" என்றுகீழநுஸந்தித்தவனுடைய திவ்யவிக்ரஹ வைலக்ஷண்யத்திலே திருவுள்ளம்சென்று, "இப்படி ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களுக்குக்கொள்கலமான விவ்வடிவோடே ப்ரயோஜநாந்தரபரரான தேவர்கள் கார்யம்செய்கைக்காக ப்ரதிகூலர் வர்த்திக்கிற விஸ்ஸம்ஸாரத்திலே தனியே வந்தவதரித்து ஸஞ்சரியாநின்றான்; எங்கேயென்னதிற்கு வரத்தேடுகிறதோ" என்று இவர் வயிறெரிந்து பயப்பட, "நமக்கு முமுக்ஷுக்களும்முக்தருந்நித்யருமுண்டு; நாம்தாம்கடலைக்குளப் ப[illegible]வல்ல பெருமிடுக்கராகையாலே நமக்கொரு குறைகளுமில்லை" என்று அவனருளிச்செய்ய, அச்சந்தீருகிற * அங்குமிங்கிலர்த்தத்தை * அங்கமரர்பேண வித்யாதியாலே யருளிச்செய்கிறார்.

வ்யா.-(அங்கமரர்பேண) (க) "அங்காரவாரமது" என்னுமா போலே, தேசமது, தேசிகரவர்கள், பரிவின் மிகுதியது. நித்யவிபூதியிலே * பணியாவமரரான நித்யஸூரிகள் திருமங்களாசாஸநம் பண்ண; அவர்கள் நடுவே வாழுகிற ஸ்ரீயப்பதியான ஸர்வேச்வரனுக்கு, அப்படி (உ) * பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவாரிங் கொருவருமில்லையென்று பயப்பட. அதாவது-"அங்குமிங்கும்" என்றுதொடங்கி "அங்கஞ்சேரும் பூமகள் மண்மகளாய்மகள் சங்குசக்கரக்கையவனென்பர் சரணமே" என்றும், "கனலாழி யானைத்தின்படையேந்திய விசும்காளாயே - மரணம் தோற்றம் வான்பிணிமூப்பென்றிவைமாய்த்தோம்" என்றும், இச்சேர்த்திக்கு மங்களாசாஸநம் பண்ணாதே, ஐச்வர்ய காமரும் ஆத்மாநுபவ காமருமாயிப்படியக்யபரராய்ப்போருகையாலே, *வானும் விண்ணுமொன்று பின்னெல்லும் பரிவரொருவருமில்லையென்கிறது.

(பரிவரில்லையென்றஞ்ச,) "உன்கோலம் காரெழில் காணலுற்றாழும் கொடியேற்கு" "திருமேனிபார்மேனிபோலேன் மனம் சூழவருவாரே" என்றும், "கருமாயேனியன் பின்னென்காதல் கலக்கவே" என்றும், "ஆழியும் சங்கும் சுமப்பார் தாம்" என்றும், (ங) "யதா ஜ்ஞாயமாநம் வந்திருவிடகாயாஸ:-தநுராதாயஸகுணம் கலித்ரபிடகாதர:" (ச) "வ்ருஷ்ணயந்த்ருஷ்ணிஷு ஜமாஜ்ஞ - ப்ருஷ்டதஸ்த்வநுஸ்பாணிர்லக்ஷ்மணோ ஜகாமஹ" என்னும்படி "உருவார் சக்கரம் சங்கு சுமந்திங்கும்மோடொரு பாடுழல்வானோரடியானுமுளனென்றே" என்றும், "என்திறஞ்சொல்லார் செய்வதென்" என்றும், "என்றேயென்னையுன்னேரார் கோலத்திருந்தடிக்கீழ் நின்றேயாட்செய்ய நீகொண்டருள நினைப்பது தான்" என்று-மங்களாசாஸநரூப கைங்கர்யங்கொண்டருள நினைப்பிட்டருளுவதென்று அவனைக்கேட்டும், இப்படிக் கலக்கத்தாலே யஞ்ச.

(எங்கும் பரிவருளரென்ன) இங்குமங்குமெங்கும் நமக்குப்பரிவருளரென்ன. அதாவது-"கலக்கமில்லா நற்றவ முனிவர்" என்று தொடங்கி "என்செய்வதுரையீரே" என்று - இப்படி நம்மைப்பரிகைக்கு முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யருமுண்டு, நாம்தாம் மங்

(க) ௪-திருவ-௧௦. (உ) திருப்பல்லா.
(ங) ரா-அ-௩௧-௨௩; (ச) ரா-௧௧-௧,

மூ.—வாராமலச்சமினி மால் தன்வலியினையும்
சீரார்பரிவருடன் சேர்த்தியையும்—பாருமெனத்
தானுகந்தமாறன்றாள் சார்நெஞ்சேசாராயேல்
மானிடவரைச் சார்ந்துமாய். (எச)

தாரத்தைக்கொண்டு க்ஷீரஸிந்துவைக்ஷேபி(ஷி)தமாம்படிகடைந்தமஹாபாஹூக்களென்றுதன் மிடுக்கைக்காட்ட. (பயந்தீர்ந்தமாறன் வரிகழற்றாள் சேர்ந்தவர் வாழ்வார்) ஆழ்வாரைப்போலே பயமும் பயநிவ்ருத்தியுமின்றிக்கே, ஆழ்வாருடைய, வரியையுடைத்தான வீரக்கழலோடேகூடின திருவடிகளைச் சேர்ந்தவர்கள் நிர்ப்ப(ய-ர்) வாழப்பெறுவார். ஆழ்வாரிப்பாசுரத்தாலே பயந்தீர்க்கையாலே, யராய் இவர்களுக்கு வாழ்வேயாயிருக்கும். (எங)

பதவுரை.

இனி அச்சம்வாராமல்	(ஆழ்வார்) இனி அஞ்சவேண்டாமல்
மால்	ஸர்வேஶ்வரன்
தன்வலியினையும்	தன்னுடைய பராக்ரமாதிகளையும்
சீர் ஆர் பரிவருடன் சேர்த்தியையும்	மேன்மைபொருந்திய அன்பரோடு தான் சேர்ந்திருக்கும் படியையும்
பாருமென	பாரும் என்று காட்ட (க்கண்டு)
தான் உகந்த	தாம் உகந்தருளின
மாறன் தாள்	ஆழ்வாருடைய திருவடிகளை
நெஞ்சே சார்	மனமே! ஆஶ்ரயி;
சாராயேல்	அங்ஙனம் ஆஶ்ரயியாதொழிவாயாகில்
மானிடவரை சார்ந்துமாய்	மநுஷ்யரை ஆஶ்ரயித்து நஶித்துப்போ. (எச)

அவ.——எழுபத்துநாலாம்பாட்டு. (வாராமலச்சம்) இதில்-பயம் மறுவலிடாதபடி தன்ஸௌர்யவீர்யாதிகளையும், ஸாபாநுக்ரஹஸமர்த்தர் ஸஹவாஸத்தையுங் காட்டக்கண்டபடிபேசினவாழ்வார் பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; இன்னமும்இவர்க்கு தம்பக்கல் பரிவின்கனத்தாலே பயம் மறு

வலிடக்கூடுமென்று விசாரித்து, ப்ரதிகூலர்க்குக் கணிசிக்கவொண்ணாதபடி அரணுடைத்தான திருச்செங்குன்றூரிலே, ஸ்ருஷ்ட்யாதிக்யாதிகளை நிர்வஹிக்கவல்ல ஶக்திமான்களாய், ஶாபாநுக்ரஹஸமர்த்தரானமூவாயிரம் ப்ராஹ்மணர் பரிந்துநோக்க, அவர்களும் குழைச்சரக்காம்படி (க) "விஸ்ரவாஸ உதாநவாந் - ஸஜ்ஜவம்ஸுபர்ணகாந் ஸந்த்ருஷ்டிஜ ஸரிமமெணஸுப - பிஸாசாந் தாநவாந் அங்குல்யக்ரேணதாந் ஹந்யாமிச்சந் ஹரிகணேஸ்வர" என்று ஶௌர்யவீர்ய பராக்ரமாதிகுணங்களோடே தானெழுந்தருளியிருக்கிறநிலையை ஸர்வேஶ்வரன் காட்டிக்கொடுக்க அச்சத்தாலே யச்சங்கெட்டு, அவன் வடிவழகிலே நெஞ்சைவைத்தநுபவித்து ஹ்ருஷ்டராகிற * வார்கடாவருவியிலர்த்தத்தை "வாராமலச்சமினி" என்றுதொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.---(வாராமலச்சமினிமால் தன் வலியிதையும்) "வார்கடாவருவி" என்றுதொடங்கி 'கஞ்சனைத்தகர்த்த சீர்கொள்சிற்றாயன' என்னுமளவும்சொன்ன ஶௌர்யவீர்யாதிகள்முதலான தன்ஶக்தியோக(ம)த்தையும் (சீரார்பரிவருடன் சேர்த்தியையும்) அத்தாலே "அசுரர்வன்கையர் வெங்கூற்றை" என்னும்தன்மிடுக்கையும், "நல்லநான்மறையோர்" என்றும், "மனக்கொள்சீர் மூவாயிரவர்வண்சிவனுமயனும் தானுமொப்பார்வாழ்" என்றும், "அமர்ந்தசீர் மூவாயிரவர் வேதியர்கள் தம்பதியவனிதேவர் வாழ்வமர்ந்தமாயோனை" என்றும்-ஜ்ஞாநாதிகுணபரிபூர்ணராயிருக்கிற மூவாயிரம் ப்ராஹ்மணர் பரியவிருக்கிற விருப்பையும் தர்ஶியுமென்ன, தர்ஶித்து.

"தேம்பணைபுடைசூழ் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு" என்றும் 'செறிகுலைவாழை கமுகுதெங்கணிசூழ் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு" என்றும் "நல்லநீண்மாடத் திருசசெங்குன்றூரில் திருச்சிற்றாறு" என்றும் 'கனக்கொள் திண்மாடத்திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு" என்றும் 'கூரியவிச்சையோடொழுக்கம் நடைப்பலியியற்கைத் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றறமர்ந்தநாதனே" என்றும், இப்படியரணையுடைத்தான ஊரிலிருப்பையு மநுஸந்தித்துநிர்ப்ப(ஹ)யராய், "திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுட்கண்டவத்திருவடி" என்றுதொடங்கி "திகழவென்சிந்தை

(க) ரா-யு-கஅ-உங.

மூ. — மாயன் வடிவழகைக் காணாதவல்விடா
யாய் அதற விஞ்சியழுகலற்றும்—தூயபுக
ழுற்ற சடகோபனை நாமொன்றி நிற்கும்போது பகல்
அற்றபொழுதான தெல்லியாம். (௭௫)

யுளானே" என்னும்படி வடிவழகிலே நெஞ்சை வைத்தநுபவித்து ஹ்ருஷ்டராய், "தேனைநன்பாலைக்கன்னலையமுதை" என்று அவன் ரஸ்யதையையுமநுபவித்து. (தானுகந்தமாறன்) "நின் கோலங்காணெழில் காணலுற்றழுதும்" என்று அழகிலே கலங்கினவர், இப்போது அவ்வழகையநுபவித்து ஹ்ருஷ்டரான ஆழ்வார், (தாள்சார் நெஞ்சே) ஆழ்வார் திருவடிகளை உபாஸ்ரயமாக வாஸ்ரயி, நெஞ்சே! (சாராயேல்) ஆஸ்ரயியாதிருப்புதியாகில், (மானிடவரைச்சார்ந்தாய்) ப்ராக்ருதிவஸ்யரான மநுஷ்யரை யாஸ்ரயித்து நஸித்துப் போ. ஆழ்வார் திருவடிகளிலாஸ்ரயணம் உஜ்ஜீவநஹேது, ததிதராஸ்ரயணம் நாஸஹேதுவென்றதாயிற்று. (௭௪)

பதவுரை.

மாயன்	ஸர்வேஸ்வரனுடைய
வடிவு அழகை	திவ்யவிக்ரஹஸௌந்தர்யத்தை
காணாத	ஸேவிக்கப்பெறாமையாலுண்டான
வல்விடாயாயது	மிக்கவருத்தமானது
அறவிஞ்சி	மிகவும் அதிகரித்து
அழுது அலற்றும்	அழுது அடைவுகெடக்கூப்பிடுகிற
தூய புகழ் உற்ற	பரிசுத்தமான கீர்த்தியையுடையரான
சடகோபனை	ஆழ்வாரை
நாம் ஒன்றி நிற்கும்போது	நாம் கிட்டிநின்று அநுபவிக்குங்காலம்
பகல்	பகலாயிருக்கும்;
அற்றபொழுதானது	அவ்வநுபவம் விச்சேதித்த காலமானது
எல்லி ஆம்	காளராத்ரியாயிருக்கும். (௭௫)

அவ,-எழுபத்தஞ்சாம்பாட்டு. (மாயன்வடிவழகை) இதில்-அவ னுடையவடிவழகை யநுபவியாமலாழ்வார் ஆர்த்த்யதிஶய ஸூசக ஸூக்தியை யநுவதித் தருளிச்செய்கிறார். எங்ஙனேயென் னில்;கீழ்ப்ரஸ்துதமான வநுபவம் மாநஸாநுபவமாத்ரமாய் பாஹ்ய ஸம்ஶ்லேஷ போக்யமல்லாமையாலே மிகவும் நோவுபட்டு ஸ்கட்டித்தி கதுவிருவரைப்போலே பரிதப்த சி(வி)த்தகாத்ரராய், அவயவஶோ பை, ஆபரணஶோபை, ஒப்பனையழகு, இவற்றுக்காஶ்ரயமான விக்ர ஹம், இவற்றினுடைய வைலக்ஷண்யத்தைப் பலபடியாக வர்ணித் துக்கொண்டு பெருங்கூப்பீடாகக் கூப்பிடுகிற * மாயக்கூத்தனிலர் த்தத்தை, "மாயன் வடிவழகை" இத்யாதியாலே யருளிச்செய்கிறு ரென்கை.

வ்யா,—(மாயன் வடிவழகை) ஸௌந்தர்ய ஶீலாதிகளாலாஶ் சர்யமானவவன் விக்ரஹ ஸௌந்தர்யாதிகளை, (க) "ஸமாஶ்வாஸித் தோ: ஸஜ்ஜநம் ஹ்லாதயந்நிவ ஜா: - கர்மாபிதப்தா: பர்ஜந்ய ம் ஹ்லாதயந்த மிவப்ரஜா:" என்னும்படி யநுபவிக்க. (காணு தவல்விடாயாய்) (உ) "கணகழல் காண்பதென்று கொல் கண் களே" என்றும், (ங) "மெய்க்கொள்ளக் காணவிரும்புமென் கண் களே" என்றும், இப்படிப்பாரிப்பையுடைய கண்களின் விடாய்தீர ப்பருகப் பெறுமையாலே;- ப்ரத்யக்ஷமாகக் காணப் பெறுமையா லே மிக்க விடாயையுடையராய் (உருகுலைந்து) * காண வாராயெ ன்றென்று கண்ணும் வாயும் துவர்ந்துபசையற்று, "கீழ்ல் விடா யெல்லாம் குளப்படி" என்னும்படி கடல்போலே அகா அ(ஸி)ப்ய்ரு த்தமாய், அத்தாலே (அழுதலற்றும்) பெருந்த விடாய்தீரவந்து கல வாமையாலே பாலரைப்போலே யழுது, அடைவுகெடக்கூப்பிடும்.

அதாவது-"வாசத்தடம்போல் வருவானேயொருநாள் காணவா ராய்" என்றும், "கருமாமாணிக்க நாள்நன்மலைபோலசுடர்ச்சோதி முடிசேர் சென்னியம்மானே - இரங்கி யொருநாள் நீயந்தோ கா ணவாராய்" என்றும், "முடிசேர் சென்னியம்மா" என்று தொடங்கி "பெருமானே யென்றென்றேங்கி யழுதக்கால்" "படிசேர் மகரக் குழைகளும்" என்றுதொடங்கி "தூநீர் முகில்போல் தோன்றாயே" என்றும் "அளக்கூப்பிட் டழைத்தக்கால்- தொண்டனேனுன் கழல்

(க) ரா அ-ங-உக. (உ) தி-வாய்-ங-அ-க௦. (ங) தி-வாய்-ங-அ-சு,

எல்லிபகல் நடந்த இந்தவிடாய் தீருகைக்கு
மெல்லவந்து தான் கலக்கவேணுமென — நல்லவர்கள்
மன்னுகடித்தானத்தே மாலிருக்க மாறன்கண்டு
இந்நிலையைச் சொன்னானிருந்து. (எசு)

காணுமாறு நாள் வந்து தோன்றாயே" என்றும, "முகப்பே கூவிப் பணிகொள்ளாய்" என்றும், "நற்றேர்த்தனிப்பாகா வாராயிதுவோ பொருத்தம்" என்றும், "இருஞ்சிறைப்புள்ளதுவே கொடியா வுயர்த்தானே - உன்னையெங்கே காண்கேனே" என்றும், இப்படி (க) "[illegible] வாக்ஷமோக்ஷணம் - கதாத்ரக்ஷ்யாமி ராமஸ்ய வதநம் புஷ்கரேக்ஷணம்" என்னும்படி.

(அழுதலற்றுந் தூயபுகழுற்ற) ஸௌந்தர்யாதிகளை யநுபவிக்கப்பெருமையாலே யழுதலற்றும் புகழை யுடையராய், இதரவிஷயாலாபத்தாலேக்லேசிக்கை அயசஸ்ஸாய், பகவதலாபத்தாலேக்லேசிக்கை ச்லாக்யமானயசஸ்ஸாயிறேயிருப்பது; (தூயபுகழுற்ற சடகோபனை நாமொன்றி நிற்கும்போது பகல்) இப்படியானயசஸ்ஸையுடையரானவாழ்வாரை நாம் அநந்யப்ரயோஜநராய்க் கிட்டி நின்றநுபவிக்கும் காலம்பகலாயிருக்கும். * பராங்குசாதித்ய ஸந்நிதியிறே. (அற்றபொழுதானது) அவனுடைய வநுபவவிச்சேத காலமானது. (எல்லியாம்) ஸம்ஸாரமாகிற காளராத்ரியாம். (எரு)

பதவுரை.

எல்லி பகல் நடந்த	இராப்பகல்களாய் வர்த்தி(ஷி)த்த
இந்தவிடாய் தீருகைக்கு	இந்த வருத்தம் நீங்குகைக்காக
மெல்லவந்து தான்கலக்கவேணும் என	பையவந்துதான் அநுபவிக்கவேணுமென்று நினைத்து
நல்லவர்கள் மன்னு	நற்புகழ் வேதியர்கள் நிலைபெற்று
கடித்தானத்தே	திருக்கடித்தானத்திலே [வாழ்கிற
மால் இருக்க	ஸர்வேச்வரனெழுந்தருளியிருக்க
மாறன் கண்டு	(அவ்விருப்பை) ஆழ்வார்ஸேவித்து
இருந்து	நிலைபெற்றிருந்து
இந்நிலையைச் சொன்னான்.	இந்த ஸ்வபாவத்தை அருளிச்செய்தார், (எசு)

(க) ரா-அ-சுக-அ.

அவ,—எழுபத்தாரும்பாட்டு. (எல்லிபகல்நடந்த) இவர் விடாய் தீர அடுத்ததணித்தாகவந்திருந்து, பின்புதம்முடனே கலந்தபடி பேசின வாழ்வார் பாசுரத்தை யநுவதித் தருளிச்செய்கிறார். எங்ஙனே யென்னில்; இவருடைய பெருவிடாய் கெடும்படி இவரோடே வந்து கலந்து ஸம்ஶ்லேஷிக்கக் கோலி, அடுத்தணித்தாகத் திருக்கடித்தானத்திலே வந்திருந்து தம்பக்கலிலே அத்ய (ஹி) ப்ரவிஷ்டனா யிருக்கிறபடியை அவன் காட்டிக் கொடுக்க அத்தை யநுஸந்தித்து ஹ்ருஷ்டராகிற *.எல்லியுங் காலையிலர்த்தத்தை "எல்லிபகல்" என்று தொடங்கியருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(எல்லிபகல் நடந்த விந்தவிடாய் தீருகைக்கு மெல்ல வந்துதான் கலக்கவேணுமென) ராத்ரிந்திவமநுவர்த்தித்த வார்த்தி ஶமிக்கைக்கு, மந்தகதியாய்வந்தநுபவிக்கவேணுமென்று நினைத்து. மூன்றாற (௧) ‘‘ஸாஈஆஜாஸ்ரமமகஸா - பரத்வாஜாஸ்ரமங் கத்வா’’ என்னுமாபோலே. (நல்லவர்கள் மன்னுகடித்தானத்தே ‘மாவிருக்க மாறன் கண்டு) ‘‘நற்புகழ் வேதியர் நான்மறை நின்றெதிர் கற்பகச்சோலைத் திருக்கடித்தானம்’’ என்றும் "செல்வர்கள்வாழும் திருக்கடித்தானம்’’ என்றும் ‘‘தேசத்தமரர் திருக்கடித்தானம்’’என்றும், அங்குற்றைக்கநுகூலரானவர்கள் நித்யவாஸம்பண்ணும்திருக்கடித்தானத்திலே தம்மை விஷயீகரிக்க ஸர்வேஶ்வரன் வந்திருக்க.

அவ்விருப்பைக் கண்டவாழ்வார். (இந்நிலையைச் சொன்னுனிருந்து) அதாவது - ‘‘திருக்கடித்தானமு மென்னுடைச்சிந்தையு மொருக்கடுத்துள்ளே யுறையும்பிரான்’’ என்றும் ‘‘உள்ளந்தோறும் தித்திப்பான் திருவமர் மார்வன் திருக்கடித்தானத்தை மருவியுறைகின்றமாயப்பிரான்’’என்றும் ‘‘தேசத்தமரர்-வாசப்பொழில் மன்னுகோயில் கொண்டானே’’ என்றும் ‘‘தேசத்தினல்நெஞ்சநாடு குடிகொண்டான்’’ என்றும், "கோயில்கொண்டான்றன் திருக்கடித்தானத்தைக் கோயில் கொண்டானதனோடு மென்னெஞ்சகம்’’ என்றும் "என்நெஞ்சும் திருக்கடித்தான நகரும் தனதாயப்பதியே’’ என்றும் ‘‘அற்புதன் நாராயணனரி வாமனன்நிற்பது - கற்பகச்சோலைத் திருக்கடித்தானம் - மேவிருப்ப தென்னெஞ்சகம்’’ என்றும் இப்படி யிங்குற்றை யிருப்புத்தம்மை விடாய்கெட விஷயீ

(௧) ரா-ஸங்க்ஷேபே,

மூ.—இருந்தவன்றான் வந்திங்கிவரெண்ணமெல்லாம்
திருந்தவிவர்தந்திறத்தே செய்து—பொருந்தக்
கலந்தினியனாய் நிற்கக்கண்ட சடகோபர்
கலந்தநெறிகட்டுரைத்தார்கண்டு. (௭௭)

கரிக்கைக்கென்றும் இஸ்ஸ்வபாவத்தைப் பொருந்தி யிருந்தருளிச் செய்தாரென்கை. அவன் வரவாற்றாலே *மாயக்கூத்தினிக்கிடாய் தீர்க்குபொருந்தி யிருந்தருளிச் செய்தாரென்கை. (௭௬)

பதவுரை.

இருந்தவன்றான் — திருக்கடித்தானத்திலே யிருந்தஸர்வேஶ்வரனே
இங்கு வந்து — இவ்விடத்தேறவந்து
இவர்எண்ணம் எல்லாம்திருந்த-இவருடைய மநோரதம் முழுதும் முற்றுப்பெற
இவர்தம் திறத்தேசெய்து — இவரிடத்தே கிருபைசெய்து
பொருந்தக்கலந்து — ஒருநீராய்க்கலந்து
இனியனாய் நிற்கக்கண்ட — இனியனாய் நிற்கும்படியைவெளித்த
சடகோபர் — ஆழ்வார்
கலந்தநெறி — அவன் தம்மோடுவந்துகலந்த ப்ரகாரத்தை
கண்டு — திருவுள்ளத்தாலேகண்டு
கட்டுரைத்தார் — அருளிச்செய்தார், (௭௭)

அவ.-எழுபத்தேழாம்பாட்டு. (இருந்தவன்) இதில்—இவர் கருத்தைத்தான் கைக்கொண்டுஇவருடனே கலந்தபடி பேசினவாழ்வார் பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்;- இவர் வெள்ளக்கேட்டாலே யழியாதபடிதிருக்கடித்தானத் திருப்பைக்காட்டி ஸம்ஶ்லேஷரஸத்தை ஸாத்மிப்பித்த வநந்தரம், ஸ்வவிஷயத்திலர்த்தித்வ ப்ரமுகமான விவர் மநோரதத்தையெல்லாம்தான் இவர்பக்கலிலேபண்ணிக்கொண்டு இவரோடே பூர்ணஸம்ஶ்லேஷம்பண்ணி, அந்தஸம்ஶ்லேஷ ஜநிதஹர்ஷப்ரகர்ஷத்தாலே

புதுக்கணித்த திவ்யாவயவங்களையும், நீலபர்வதம்போலே யொளி விடுகிற வடிவையுமுடையனாயிருக்கிறபடியை மண்டியநுபவித்து ஹ்ருஷ்டராய்ச்செல்லுகிற * இருந்தவன் வியத்திலர்த்தத்தை, "இருந்தவன்தான் வந்து" என்றுதொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(இருந்தவன் தான்வந்து) திருக்கடித்தானத்திலே யிருந்தான், இவரிருந்தவளவும் மெள்ளவந்து. (இவரெண்ணமெல்லாம் திருந்தவிவர் தந்திறத்தே செய்து) இவரெண்ணமாவது - "என்றன் கருத்தையுற வீற்றிருந்தான்" என்று (௧) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிற வாழ்வார் திருவுள்ளக்கருத்தைத் தான் கைக்கொண்டபடியென்கை. (திருந்தவிவர் தந்திறத்தே செய்து) தனக்காஸ்ரிதபாரதந்த்ர்யம் ஸ்வரூபமாகையாலே, நன்றாக விவர் விஷயத்திலேசெய்து. தன்னை முற்றூட்டாக வநுபவிக்கும் படியாக்கிவைத்து. (பொருந்தக்கலந்து) "நாம் நித்யஸூரிகளுக்கவ்வருகாயிருப்புதோம், இவர் நித்ய ஸம்ஸாரிகளுக்கவ்வருகாக வெண்ணியிருப்பர்" என்றுவாசிவையாமல் "சிறியேனுடைச்சிந்தையுள்" "தூயசுடர்ச்சோதி தனதென்னுள் வைத்தான்" என்னும்படி ஒருநீராகக்கலந்து. (இனியனுயிருக்கக் கண்டசடகோபர்) "திகழுமணிக்குன்றமொன்றே பொத்துநின்றான்" "கருமாணிக்கக் குன்றத்துத் தாமரைபோல் திருமார்வுகால் கண்கைசெவ்வாயுந் தியானே" என்றும், "செவ்வாய்முறுவலோடெனதுள்ளத் திருந்த வவ்வாயன்றியானறியேன்" என்றும், இப்படியாயிற்றுப் பெறும் பேறுபெற்றானாயினியனாயிருந்தபடி யென்கை. (கண்டசடகோபர்) இப்படி அவனினியனாயிருந்த படியைக் கண்டநுபவித்தவாழ்வார்.

(கலந்தநெறிகட்டுரைத்தார்கண்டு) அவன் தம்முடனேவந்து கலந்தபடியைத்திருவுள்ளத்தாலேகண்டருளிச்செய்தார். கலக்கைக்கு அவன் க்ருபையேயுபாயம், இத்தலையிலுள்ளது அநு மதிமாத்ரமே. கலந்தநெறிகட்டுரைக்கையாவது-(௨) "ஸமேத்ய ப்ரதிநந்த்ய ஹஷ்டெள அந்யோந்ய மபிவீக்ஷந்தெள" என்னும்படி "கண்டுகொண்டு - இருந்தான்" "தருந்தானருள் தானினியானறியேன்" (௩) "கிஞ்சஸ்ராத்தோ மோஹாயம் - கிந்துஸ்யாச்சித்தமோஹோயம்" "மருள் தானீதோ" "மாயமயக்குமயக்கான்" "திகழும்தன்திருவருள்செய்தே" "திகழுந்தன்திருவருள்செய்து" "வெறிதேயருள் செய்வர்" என்றருளிச்செய்தவிவையென்கை.

(௧) தி-வாய் ௨-௩-௩, (௨) ரா-வி ரு-௧௭ (௩) ரா-ஸு-ரு-௩௪-௨௩.

மூ.—கண்ணிறைய வந்துகலந்தமாலிக்கலவி
திண்ணிலையாவேணுமெனச்சிந்தித்துத்-தண்ணிதெனு
மாருயிரினேற்றமதுகாட்ட வாய்ந்துரைத்தான்
காரிமாறன்றன்கருத்து. (எஅ)

பதவுரை.

கண்நிறையவந்து கலந்தமால்	கண்கள் நிறையவந்து கலந்த எம்பெருமான்
இக்கலவி	இந்தக்கலவியானது
திண்ணிலையாவேணும் எனச்சிந்தித்து	த்ருடமாயிருக்க வேணுமென்றெண்ண,
தண்ணிதுஎனும்	சிறியதென்கிற
ஆர் உயிரின்	அருமையாகிய ஆத்மாவின்
ஏற்றமதுகாட்ட	பெருமையைக்காட்டியருள
காரிமாறன்	ஆழ்வார்
ஆய்ந்து	ஆராய்ந்து
தன் கருத்து உரைத்தான்	தமது திருவுள்ளக்கருத்தை அருளிச்செய்தார். (எஅ)

அவ.—எழுபத்தெட்டாம்பாட்டு. (கண்ணிறையவந்து) இதில் ஆத்மஸ்வரூபவைலக்ஷண்யத்தை எம்பெருமான் காட்டக்கண்டு பேசினவாழ்வார் பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்; * இருத்தும் வியந்தில் பெரிய ப்ரீதியோடே யநுபவிக்கிறவளவில் "சிறியேனுடைச்சிந்தையுள்" என்றுநம் பெருமைக்கெதிர்த்தட்டான தம் சிறுமையை யநுஸந்தித்தார்; இவர் இன்னும் * வளவேழுலகு தலையெடுத்து நம்மைவிட்டகலவுங்கூடும், அதுக்கிடமறும்படி, "ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய் நித்யமாய் ஸ்ரீவத்ஸம்போலேயும் ஸ்ரீகௌஸ்துபம்போலேயும் நமக்கு நித்யபோக்யமாய்க் காணுமிவ்வாத்மவஸ்து இருப்பது" என்று ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யமடியாக வவன் காட்டிக்கொடுக்க, அத்தை யநுஸந்தித்து ப்ரீதராகிற * கண்கள் சிவந்திலர்த்தத்தை "கண்ணிறைய" இத்யாதியாலே யருளிச்செய்கிறரென்கை.

வ்யா.-(கண்ணிறைய வந்து கலந்தமால்) * கண்ணும் வாயும் துவர்ந்த விவருடைய கண்ணிறையும்படி வந்து ஸம்ஶ்லேஷித்த வாஸ்ரிதவ்யாமுக்த (ஹ்ரு) னை ஸர்வேஶ்வரன். (இக்கலவி) * இருந்தும் வியந்திருவிந்த ஸம்ஶ்லேஷம். (திண்ணிலையாவேனுமெனச்சிந்தித்து) த்ருடஸ்வபாவத்தை யுடைத்தாகவேணுமென்றெண்ணி (தண்ணிதெனுமாருயிரி]னேற்றமதுகாட்ட) இவர் "சிறியேனுடைச்சிந்தை" என்றநுஸந்தித்துப்போருகிற வாத்மாவினுடைய பெருமையானதைக் காட்டியருள. (ஆய்ந்துரைத்தான்) ஆத்மஸ்வரூபவைலக்ஷண்யத்தை யாராய்ந்தருளிச்செய்தார்.

அதாவது - (க) "ஈ॥லவஷ்-தாஸஸ்ய" (உ)ஈ॥வொாஹழ - தாஸோஹம்" என்னும்படி, "கண்கள்சிவந்து" என்றுதொடங்கி "அடியேனுள்ளான்" என்றும் "அடியேனுள்ளான்" என்றுதொடங்கி "உணர்விலும்பரொருவனை" என்றும் "உணர்விலும்பரொருவனை" என்றுதொடங்கி "என்னுணர்வினுள்ளே யிருத்தினேன்" என்று இரண்டரைப்பாட்டாலும் தனக்கு ஸ்ரீகௌஸ்துபம்போலே ஶேஷமாயிருக்கிற படியையும், "உணர்வைப்பெறவூர்ந்து" என்றும், "தேனும்பாலும் கன்னலுமமுதுமாகித்தித்தித் தென்னூனிலுயிரிலுணர்வினில் நின்றவொன்றையுணர்ந்தேனே" என்றும், "நன்றாய் ஞானங்கடந்ததே" என்றும், "தெருளும் மருளும்மாய்த்தோமே" என்றும் - ஆத்மாவினுடைய ப்ரக்ருதேஃ பரத்வமும். ஜ்ஞாத்ருத்வாதிகளும் போக்யதையும் ஜ்ஞாநாநந்தத்வமும் முதலாக வருளிச்செய்தவையென்கை.

(அதுகாட்டவாய்ந்துரைத்தான் காரிமாறன் தன்கருத்து) ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை யெம்பெருமான்காட்ட, அத்தையாராய்ந்தருளிச்செய்தாராழ்வார் தன்றிருவுள்ளக்கருத்தாலே யென்னுதல்; இப்படி ஸ்வரூபவைலக்ஷண்யத்தை யாராய்ந்தருளிச்செய்யும்படியாயிற்று ஆழ்வார் ,திருவுள்ளக்கருத்தென்னுதல்; அப்போது, "ஆய்ந்துரைத்தகாரிமாறன் தன் கருத்து" என்றாகக்கடவது.

(க) பார-மோக்ஷ (உ) ரா-ஸு-

மூ.—கருமால் திறத்திலொரு கன்னிகையாமாற
னொருமாகலவியுரைப்பால்—திரமாக
வன்னியருக்காகாதவன்றனக்கே யாகுமுயிர்
இந்நிலையையோருநெடிதா. (எகூ)

பதவுரை.

கருமால்திறத்தில்	ஸ்ரீ க்ருஷ்ணபகவான் விஷயத்தில்
ஒருகன்னிகையாம் மாறன்	ஒரு கந்யகாவஸ்தையை யடைந்த ஆழ்வார்
ஒருமாகலவி உரைப்பால்	அத்விதீயமாய் விலக்ஷணமான ஸம்ஶ்லேஷ லக்ஷணங்களைத் தோழி பேச்சாலே அருளிச்செய்யப் புகுகையாலே
திரம் ஆக	ஸ்திரமாக
உயிர் அந்நியர்க்கு ஆகாது	ப்ராப்தஶேஷிக்கே ஶேஷமாகிற ஆத்மஸ்வரூப நிஷ்டை பிறர்க்கு ஶேஷமாகாமல்
அவன்தனக்கேஆகும் இந்நிலையை	அவனுக்கே ஶேஷமாகுமிந்த நிலைமையை
நெடிதா	தீர்க்கமாக
ஓரும்	ஆராயுங்கள், (எகூ)

அவ.-எழுபத்தொன்பதாம்பாட்டு (கருமால் திறத்தில்) இதில்-ஆத்மாவினுடைய அந்யஶேஷத்வ நிவ்ருத்தியை யாழ்வாரருளிச்செய்தபடியை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; இப்படி விலக்ஷணமான வாத்மஸ்வரூபந்தான் தனக்குமுரித்தன்றிக்கே அவனுக்கே அநந்யார்ஹ ஶேஷமாயிருக்கும்படியை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிற * கருமாணிக்கமலையிலர்த்தத்தை "கருமால்திறத்தில்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.-(கருமால்திறத்திலொரு கன்னிகையாம் மாறன்) நீலநிறத்தையுடையனாய், ஆஶ்ரிதவ்யாமுக்தனான ஸர்வேஶ்வரன் விஷயத்தில் அந்யஶேஷத்வமில்லாத கந்யகாவஸ்தையை பஜித்தவாழ்வார், "கருமாணிக்கமலை" என்றத்தைக்கடாக்ஷித்தபடி. (ஒருமாகலவியுரைப்பால்) அத்விதீயமாய், விலக்ஷணமான ஸம்ஶ்லேஷலக்ஷணங்களைத் தோழிபேச்சாலே யருளிச்செய்யப்புகுகையாலே,

மூ;—நெடுமாலழகுதனில் நீள் குணத்திலீடு
படுமாநிலையுடைய பத்தர்க்கடிமைதனில்
எல்லைநிலந்தானாக வெண்ணினான் மாறனது
கொல்லைநிலமான நிலைகொண்டு. (அ௦)

அதாவது - "திருப்புலியூரருமாயன் பேரன்றிப்பேச்சிலள்" என்றும், "திருப்புலியூர் வளமே - புகழும்" என்றும், "அப்பன் றிருவருள் மூழ்கினள் - புனையிழைகளணிவுமாடையுடையும் புதுக்கணிப்பும் நினையும் நீர்மையதன்று" என்றும், "திருவருட்கமுகொண் பழத்துமெல்லியல் செவ்விதழே - திருவருளகளும் சேர்ந்தமைக் கடையாளம் திருந்தவுள" என்றும், இவற்றாலே "கண்ணன்றாளடைந்தாளிம்மடவரல்" என்றும், "படவரவணையான்றன் நாமமல்லால் பரவாளிவள்" என்றும், "திருப்புலியூர்புகழன்றிமற்று - பரவாளிவள்" என்றும் "திருப்புலியூர் நின்றமாயப்பிரான் றிருவருளாமிவள்நேர் பட்டதே - அன்றிமற்றோருபாய மென்னிவளந்தண்டுழாய்கமழ்தல்" என்றும், இப்படிக்கலவிக்குறிகளைக்கூறப் புகுகையாலேயென்கை.

(கிரமாகவன்னியருக்காகாது) (க) "கய௦நா ஜோவயாவஸ்யாதிஷூஜஜீநஸ்யலஸ்யவித் - கதம்நாமோபதாஸ்யாமி புஜமந்யஸ்யகஸ்யசித்" என்கிறபடியே நிஶ்சயமாக அந்யருக்கு ஶேஷமாகலாகாது, ப்ராப்தஶேஷியானவனுக்கே ஶேஷமாகிற வாத்மஸ்வரூபத்தின் நிஷ்டையை (ஒருநெடிதா) ஆராய்ந்துபோருங் கோள் ; தீர்க்கமாகவென்னுதல்; தீர்க்கமாகவிசாரியென்றுதன்றிருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறாரதல். (எக)

பதவுரை.

நெடுமால் அழகுதனில்	ஸர்வேஶ்வரனுடையவடிவழகிலும்
நீள் குணத்தில்	பெரிய ஸௌஶீல்யார்த்த குணத்திலும்
ஈடுபடும்	ஈடுபடுகின்ற
மாநிலை உடைய	பெரிய ஸ்வபாவத்தையுடைய

(க) ரா-சு-ஸ-உ௨-கஅ

பத்தர்க்கு அடிமைதனில்	பாகவதர்களின் திறத்தில் அடிமையாமளவுமன்றிக்கே (அவ்வடிமைக்கு)
எல்லைநிலம்தான் ஆக எண்ணினான்	எல்லைநிலம்தாமாக நினைத்தருளினார்; (அவர்யாரென்னில்,)
மாறன்	ஆழ்வார், (ஏனெனில்;)
அது கொல்லை நிலம் ஆனநிலை கொண்டு	அந்த பாகவதசேஷத்வம் எல்லை கடந்த உத்தமபுருஷார்த்தம் என்கிற நிஷ்டையினால், (அ௰)

அவ;—(நெடுமாலழகுதனில்) இதில், அநந்யார்ஹசேஷத்வத்துக் கெல்லை, பாகவத சேஷத்வ பர்யந்தமா யிருக்குமென் றாழ்வாரருளிச் செய்த பாசுரத்தை யநுவதித் தருளிச்செய்கிறார், அதெங்ஙனேயென்னில், ஜீவாத்மாவுக்குச்சொன்னபகவதநந்யார்ஹ சேஷத்வந்தான் நிலைநிற்பது, பாகவத சேஷத்வ பர்யந்தமானாலென்னுமிடத்தை யநுஸந்தித்து "அவனுடையஸௌந்தர்ய சீலாதிகுண சேஷ்டிதங்களிலே தோற்றடிமை புக்கிருக்கும் பாகவதர்களுக்குச் சேஷமா யிருக்குமிருப்பே யெனக்கு புருஷார்த்தம்;ஐச்வர்ய கைவல்ய பகவல்லாபங்களாகிற புருஷார்த்தங்கள்நான் பற்றின பாகவத சேஷத்வமாகிற பரம புருஷார்த்தத்துக்குத் தனித்தனியும் திரளவும் ஒப்பாகமாட்டாது; ஆனபின்பு எனக்கு மென்னுடையார்க்குமிப்புருஷார்த்தம் காலதத்வ முள்ளதனையும்நித்யஸித்தமாய்ச் செல்லவேணும்,' என்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ப்ரார்த்தித்துத் தலைக்கட்டுகிற * நெடுமாற்கடிமையிலர்த்தத்தை "நெடுமாலழகுதனில்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—நெடுமாலழகு தனில் நீள் குணத்திலீடுபடுமா நிலையுடையபத்தர்) அதாவது, புயல்மேகம்போல் திருமேனியம்மான் புனைபூம் கழலடிக்கீழ்ச்சயமே யடிமை தலைநின்றார் திருத்தாள் என்றும், "அவனடியார் சிறுமாமனிசராயென்னை யாண்டாரிங்கேதிரிய-செந்தாமரைக்கண் திருக்குறளன் நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப்புகுதல்-உறுமோ" என்றும், "தனிமாப்புகழே யெஞ்ஞான்றும்" என்றுதொடங்கி, தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப்புகுதலின்றி யவ

மூ.—கொண்ட பெண்டிர் தான் முதலாக்கூறுமுற்றார்கள்மத்தால்
அண்டினவரென்றேயவரைவிட்டுந்—தொண்டருடன்
சேர்க்குந்திருமாலைச் சேருமென்றானுக்குமிதம்
பார்க்கும் புகழ்மாறன்பண்டு. (அக)

னடியார் நனிமாக்கலவியின்பமே நாளும்வாய்க்கநங்கட்கு" என்றும், "கோளுமுடையமணிமலைபோற்கிடந்தான் தமர்கள்கூட்டமே நாளும் வாய்க்கநங்கட்கு" என்றும், 'தமர்கள்கூட்ட வல்வினையை" என்று தொடங்கி "கோதிலடியார் தமர்கள் தமர்கள் தமர்கள் தமர்களாம்சதிரேவாய்க்கதமியேற்கு" என்றும், "நீக்கமில்லாவடியார் தம்மடியாரடியாரெங்கோக்களவர்க்கே குடிகளாய்ச்செல்லும்நல்லகோட்பாடு - வாய்க்கதமியேற்கு" என்றும், இப்படி உத்துங்கதத்வமான வடிவழகிலும், "தலிமாப்புகழே" என்கிறதீர்க்(வ-ல்)கஸௌஹார்த(ஜ-ல்)குணத்திலும் ஈடுபட்டிருக்கும்;

(பத்தரடிமைதனிலெல்லைநிலம் தானாக வெண்ணினான் மாறன்) பக்தர்கள் திறத்திலடிமையாமளவு மன்றிக்கே அவ்வடிமையில் ஸீமாபூமிதாமம்படி யநுஸந்தித்தாராழ்வார் (அது கொல்லைநிலமான நிலைகொண்டு) அந்தபாகவதஶேஷத்வம் ஸீமாதிலங்கியான உத்தமபுருஷார்த்தமென்கிற நிஷ்டையைக்கொண்டு, எல்லைநிலம் தானாக வெண்ணினான். (க) "ஸத்ருஶோ நித்ய ஸத்ருஶ:-ஸத்ருக்நோ நித்யஸத்ருக்ந:" என்கிறபடியே 'வியன் மூவுலகுபெறினும்" என்கிறவைஶ்வர்யம் ஆத்மப்ராப்தியளவாயிருக்கும்; "தானேதானேயானாலும்" என்கிற வாத்மப்ராப்தி செந்தாமரைக்கண் திருக்குறளனது மாவிரைநாண்மலரடிக்கீழ் புகுதல்" என்கிறபகவத்ப்ராப்தியளவாயிருக்கும், இந்தபகவத்ப்ராப்தி பாகவதப்ராப்தி ஸாபேக்ஷமாயிருக்கும்; இந்தப்புருஷார்த்தத்துக்கு மேலெல்லையில்லை; ஆகையிறே "முழுதுமுறுமோ" என்றது. (அ0)

பதவுரை.

ஆர்க்கும்	எத்தனை அறிவில்லாதவர்கள் விஷயத்திலும்
இதம்பார்க்கும்	ஹிதத்தையே செய்யப்பார்க்கிற

(க ரா-அ க-க.

புகழ்	கீர்த்தியையுடைய
மாறன்	ஆழ்வார்,
பண்டு	முற்காலத்தில்
கொண்டபெண்டிர்தான் முதலாக்கூறும்	கொண்டமனைவி முதலாகச்சொல்லப்படுகிற
உற்றார்	பந்துவர்க்கமெல்லாம்
கன்மத்தால் அண்டினவர்என்றே	கர்மோபாதிகமாக அடைந்தவர்களென்றே
அவரைவிட்டு	அந்தஔபாதிகபந்துக்களைவிட்டு
தொண்டருடன் சேர்க்கும் திருமாலை	தன்னை ஆஶ்ரயித்தவர்களைத் தனக்கு ஶேஷபூதரானவர்களோடேசேர்க்கும் ஶ்ரியஃபதியை
சேரும் என்றான்	ஆஶ்ரியியுங்களென்றருளிச் செய்தார். (௯௧)

அவ,—எண்பத்தோராம்பாட்டு. (கொண்ட பெண்டிர்தான் முதலா) இதில் ஔபாதி(யி)கபந்துக்களைவிட்டு நிருபாதிகபந்துவைப் பற்றச்சொல்லுகிற வாழ்வார் பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயெனில்; தன்னைப்பற்றினாரைத்தனக்கபி(ஹி)மதரானபாகவதர்கள் திருவடிகளிலேசேர்த்துரக்ஷிக்கும்ஸர்வேஶ்வரனே ப்ராப்யமும் ப்ராபகமும் ஸர்வவிதபந்துவும்; அல்லாதாரடங்கலும் ஔபாதிக பந்துக்கள்; ஆனபின்பு, அவனையொழிந்த ஔபாதிக பந்துக்களைவிட்டு, (௧) "ஸர்வதர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந் - லோகவிக்ராந்த சரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ" என்னும்படி நிருபாதிக ஸர்வவிதபந்துவுமான ஸர்வேஶ்வரனுக்கடிமைபுக்கு உஜ்ஜீவிக்கப்பெறுங்கோளென்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பிறரைக்குறித்து உபதேசிக்கிற *கொண்டபெண்டிரிலர்த்தத்தை "கொண்டபெண்டிர்தான் முதலா" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.-(கொண்டபெண்டிர்தான் முதலாக்கூறுமுற்றார்) கையில் தநத்தையழியமாறிக்கொண்டஸ்த்ரீகள்; கொண்டவென்று-அதின் ஔபாதிகத்வம் தோற்றுகிறது; தானென்று-கொண்டபெண்டிரில்

(௧) பா-அ.

ப்ராதாந்யம் தோற்றுகிறது. இப்படிகளாக ப்ரதிபாதிக்கச் சொல்லப்படுகிற பந்துவர்க்கமெல்லாம், "கூடிமுற்றார்" என்றுபாடமானபோது ஆகந்துகமாக வந்துகூடினவர்களென்கிறது. (கர்மகதாலங்கடினவரென்றே யவரைவிட்டு) கர்மபாரதந்த்ர்யமாக வடைந்தவர்களென்றே ஔபாதிக பந்துக்களானவர்களைவிட்டு. "கொண்ட பெண்டிர் மக்களுற்றார்" என்றுதொடங்கியருளிச்செய்ததை யநுவதித்தருளிச்செய்தபடி. (தொண்டருடன் சேர்க்குந்திருமாலைச் சேருமென்றான்) தன்னையாஸ்ரயித்தவர்களைத்தனக்கு சேஷபூதரானவர்களோடே சேர்க்கும் ஸ்ரிய:பதியை யாஸ்ரயியுங்கோளென்றார். (ஆர்க்குமிதம்பார்க்கும் புகழ்மாறன்பண்டு) எத்தனையறிவில்லாதவர்கள் விஷயத்திலும் ஹிதத்தைத் தம்முடைய தீர்க்கதர்ஸித்வத்தாலே தர்ஸிக்கும் யஸஸ்ஸையுடையரான வாழ்வார் முந்தகாலத்திலே. இப்படி ஆத்மஹித தர்ஸியான விவருமொருவரே யென்றபடி.

ஆர்க்குமிதம்பார்க்கையாவது—"கொண்டபெண்டிர்" என்றுதொடங்கி 'தொண்டரோமாயுய்யலல்லாலில்லை கண்டீர் துணை' என்றும், "துணையும் சார்வுமாகுவார்போல்" என்றுதொடங்கி "புணையென்றுய்யப்போகிலல்லாலில்லை கண்டீர்பொருள்" என்றும், "பொருள்கையுண்டாய்" என்றுதொடங்கி "அருள்கொள்ளாளாயுய்யலல்லாலில்லைகண்டீரரணே" என்றும், "அரணமாவர்" என்றுதொடங்கி, "சரணென்றுய்யப்போகிலல்லாலில்லை கண்டீர் சதிரே" என்றும், "சதிரம்" என்றுதொடங்கி "எதிர்கொள்ளாளாயுய்யலல்லாலில்லை கண்டீரின்பமே" என்றும் "இல்லைகண்டீரின்பம்" என்றுதொடங்கி "சொல்லியுய்யப்போகிலல்லால்மற்றொன்றில்லைசுருக்கே" என்றும்,

"மற்றொன்றில்லை சுருங்கச்சொன்னோம்" என்றுதொடங்கி "வடமதுரைப்பிறந்தான் குற்றமில்சீர்கற்றுவைகல் வாழ்தல் கண்டீர்குணமே' என்றும், "வாழ்தல் கண்டீர்குணமிது" என்றுதொடங்கி "வீழ்துணையாப்போமிதனில் யாதுமில்லைமிக்கதே" என்றும், "யாதுமில்லை மிக்கிதனில்" என்றுதொடங்கி "தாதுசேர்தோள்கண்ணனல்லாலில்லை கண்டீர்சரணே" என்றும் "கண்ணனல்லால்" என்றுதொடங்கி "அவனன்றிமற்றில்லை" என்றும், இப்படி பஹுமுகமாக ஸர்வர்க்கும் ஸர்வஹிதங்களையுமுபதேசித்தருளிற

௮௨,—பண்டையுறவானபரனைப் புளிங்குடிக்கே
கண்டெனக்கெல்லா வுறவின் காரியமும்—தண்டற நீ
செய்தருளென்றே யிரந்தசீர் மாறன்றாளிணையே
உய்துணையென்றுள்ளமேயோர். (௮௨)

றென்கை. (௧) "இம்மடவுலகர்கண்டதொடு பட்ட அபாந்தவாரக்ஷகா போக்யா ஜ்ஞாநுபாயப்ரதிஸம்பந்தியைக்காட்டி" என்கிற ஆசார்யஹ்ருதயத்திலே நாயனாருமருளிச்செய்தது.

பதவுரை.

பண்டை உறவான பரனை	அநாதிஸித்த ஸம்பந்தத்தையுடையனான எம்பெருமானை
புளிங்குடிக்கே கண்டு	திருப்புளிங்குடியிலே ஸேவித்து
எனக்கு	அடியேனுக்கு
எல்லா உறவின் காரியமும்	ஸர்வவித பந்துத்வ கார்யத்தையும்
தண்டு அற நீ செய்தருள்என்று	தடையின்றி நீ செய்தருள வேணுமென்று
இரந்த	ப்ரார்த்தித்த
சீர் மாறன்	ஸ்ரீ ஶடகோபனுடைய
தாள் இணையே	இரண்டு திருவடிகளை
உய் துணை என்று	நமக்கு உஜ்ஜீவந ஸஹாயமென்று
உள்ளமே	நெஞ்சே
ஓர்	அநுஸந்தி. (௮௨.)

௮௨,—எண்பத்திரண்டாம்பாட்டு (பண்டையுறவான பரனை). இதில் "பந்துக்ருத்யமெல்லாஞ்செய்யவேணும்" என்றுபேசினவாழ்வார்பாசுரத்தையநுவதித்தருளிச் செய்கிறார்; எங்ஙனேயென்னில்; "இப்படி நிருபாதிக பந்துவான ஸர்வேஶ்வரனுக்கு ஸர்வவித பந்துக்ருத்யமும்செய்யவேணும்" என்று திருப்புளிங்குடியிலே போய்ப்புக்கு, அங்கேபிராட்டியோடேகூடப்பள்ளிகொண்டருளுகிற * சாய்சினவேந்தைக் குறித்து, "திருப்பவளத்தைத்திறந்து ஒரு இன்சொல்லுச்சொல்ல வேணும்; திருக்கண்களையலர விழித்துக்குளிர நோக்

யருளவேணும். திருவடிகளைத் தலைக்கலங்காரமாக வைத்தருள வேணும், பிராட்டியும் தேவருமாக திவ்ய ஸிம்ஹாஸநத்திலே யெழுந்தருளி யிருக்கவேணும், அன்றுகப்பே நாங்கள் ஸேவிப்பமங்ஙனத்தம் பண்ணும்படி யுலாவியருளவேணும்'' என்றாப்போலே, ஒரு கோடி வெள்ளங்களை அவர் ஸந்நிதியிலே யசலறியாதபடி ப்ரார்த்திக்கிற* பண்டை நாளிலர்த்தத்தை ''பண்டையுறவான'' இத்யாதியாலே யருளிச் செய்கிறாரென்கை.

வ்யா,—(பண்டையுறவான பரனை) (க) ''உலகுக்கோர் முந்தைத்தாய் தந்தையே முழுவேழுலகுமுண்டாய்'' (உ) ''தாயிருக்கும் வண்ணமே யும்மைத்தன் வயிற்றிருத்தி யுய்யக்கொண்டான்'' என்னும்படி, (ங) ''எண்டிசையும் கீழும் மேலும் முற்றவுமுண்டபிரான்'' என்று அநாதிஸித்த (ச) மானஸம்பந்தத்தையுடைய ஸர்வஸ்மாத்பரனை. அன்றிக்கே, (ச)*கண்கள் சிவந்து தொடங்கி நடந்துவருகிற திருமந்த்ர ப்ரதிபாத்யமான நவவித ஸம்பந்த யுக்தனான ஸர்வஸ்மாத்பரனை யென்றாகவுமாம். (புளிங்குடிக்கே கண்டு) ''திருப்புளிங்குடிக் கிடந்தானே'' என்னும்படி, திருப்புளிங்குடியிலே கண்டு. (ரு) ''என் மனக்கே'' என்னுமாபோலே, ''புளிங்குடிக்கே'' என்றிருக்கிறது.

(எனக்கெல்லா உறவின் காரியமும்) ''குடிகுடிவழிவந்தாட்செய்யுந்தொண்டர்'' என்றும் ''வழிவருகின்ற வடியர்'' என்றும் ''தொல்லடிமை வழிவருந் தொண்டர்'' என்றும் சொல்லும்படியான வெனக்கு (௬) ''ஹ்ருஷ்டஸ்ஸ்ரீவஸ்ஸ்ஸாஸஹா - ப்ராதுஃ ஸிஷ்யஸ்ய தாஸ்ய'' என்னும்படி ஸர்வவித பந்துத்வகார்யமும். (தண்டற நீசெய்தருளென்றே யிரந்த) விளம்பமின்றிக்கே யென்னுதல்; பரப்ரேரிதனுயன்றிக்கே யென்னுதல்; இவற்றிலொன்றுமிடைவிடாமல் தடையற தேவர் நடத்தியருள வேணுமென்றர்த்தி(யி-ல்) தத்தென்னுதல்.

அதாவது - ''சோதிவாய் திறந்துன் தாமரைக்கண்களால் நோக்காய் ''நின் பாதபங்கயமே தலைக்கணியாய்'' ''நீயெழுந்துன் தாமரை மங்கையும் நீயுமிடங்கொள் மூவுலகுந்தொழ விருந்தருளாய்'' ''கனிவாய் செவ்வாய்கொணவாராய் ''நின் திருக்கண்டாமரை தயங்க நின்றருளாய்'' ''காய்சினப் பறவையூர்ந்து-காய்சின

(க) தி-வாய்-ரு-எ-எ. (உ) தி-மொ-கக ௬-௬. (ங) தி-வாய்-௬-க க. (ச) தி-வாய்-அ-அ. (ரு) தி-வாய்-உ-௬-ச (௬) ரா-அ-௧0௪-௧௨.

மூ.—ஓரா நீர் வேண்டினவை யுள்ள தெல்லாஞ் செய்கின்றேன்
நாராயணனன்றே நானென்று—பேருறவைக்
காட்டவவன் சீலத்திற் கால்தாழ்ந்த மாறனருள்
மாட்டிவிடும் நம்மனத்து மை. (௮௩)

வாழி சங்குவாள் வில் தண்டேந்தி யெம்மிடர் கடிவானே" "இம்மடவுலகர் காண நீ யொருநாளிருந்திடா யெங்கள் கண்முகப்பே" "இருந்திடாய் வீற்றிடங்கொண்டே" "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக் கொடுவினையேனும் பிடிக்க நீயொருநாள் கூவுதல் வருதல் செய்யாயே" என்று இப்படி ஆத்ம தர்சந பலாநுபவ பரம்பரையைக் கூவுதல் வருதலென்று முடிகவிட்டபடி யென்கை. இப்படிச் செய்தருளவேணுமென்றர்த்தித்த. (சீர்மாறன்) கைங்கர்ய ஸம்பத்தை யுடையவரென்னுதல்; பக்த்யாதி குணங்களையுடையவரென்னுதல்; ஏவம்விதரான வாழ்வார் திருவடிகளை. (உய்த்துணை யென்றுள்ளமேயோர்) நாமத்தை விளக்குந் துணை போலன்றிக்கே, உஜ்ஜீவநத்தைப் பண்ணுந் துணையென்று மநஸ்ஸே அநுஸந்தித்துப் போருவென்கிறார். (௮௨)

பதவுரை.

நீர்	(ஆழ்வீர்!) நீர்
ஓரா	ஆராய்ந்து
வேண்டினவை உள்ளது எல்லாம்	அபேக்ஷித்தவை யெல்லாவற்றையும்
செய்கின்றேன்	நான் முடித்துத்தருகின்றேன்;
நான் நாராயணன் அன்றே என்று	நான் ஸர்வஶக்தனான நாராயணனன்றோ வென்று
பேர் உறவைக்காட்ட	தனது பெரிதான ஸர்வவிதபந்துத்வத்தையுங்காட்ட,
அவன் சீலத்தில்	அவ்வெம்பெருமானுடைய ஶீலகுணத்திலே
கால்தாழ்ந்த	ஆழங்காற்பட்ட
மாறன் அருள்	ஆழ்வாருடைய க்ருபையானது
நம்மனத்து	நமது நெஞ்சிலுள்ள
மை	அஜ்ஞாநத்தை (௮௩)
மாட்டிவிடும்	நாசஞ்செய்துவிடும் (நீக்கிவிடும்).

அவ.—எண்பத்துமூன்றும்பாட்டு. (ஓரா நீர்) இதில்-ஶீல குணத்திலே யாழங்காற்பட்டு, ஆழ்வார் பேசினபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; "உம்முடைய பேற்றுக்குநீர் ப்ரார்த்திக்கவேணுமோ, நாமே ப்ரார்த்தித்துச் செய்யும்படியன்றோ, நமக்குண்டான நாராயணத்வ ப்ரயுக்தமான ரக்தஸ்பர்ஶம்; ஆனபின்பு, நாமேஉம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் செய்யக்கடவோம்" என்றுஅவனருளிச்செய்ய, "தன்பெருமைபாராதே என் சிறுமைபாராதே யிப்படி யருளிச்செய்வதே? இதொருஶீலமிருக்கும்படியே" என்று, அவனுடையஶீலகுணத்திலே வித்த(ஐ)ராகிற *ஓராயிரத்திலர்த்தத்தை "ஓரா நீர்வேண்டினவை" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.-(ஓரா நீர்வேண்டினவை யுள்ளதெல்லாஞ்செய்கின்றேன்) ஓரா-ஓர்ந்து; "அதுவேணும்இதுவேணும்" என்றாராய்ந்து, நீரர்த்தித்தவையுள்ளதெல்லாமென்னுதல்; அன்றிக்கே, நீரர்த்தித்தவற்றையெல்லாம், "இன்னதுஉபகரிக்கவேணும், இன்னது உபகரிக்கவேணும்" என்றுநாம் நிரூபித்தென்னுதல்; இப்படி ந்துக்ருத்யமாயுள்ளதெல்லாம் நாமேயர்த்திகளாய்ச் செய்கிறோம். அதுக்குடலாக (நாராயணனன்றோநானென்று பேருறவைக்காட்ட) (க)‡'ராமோ நாராயண ஶ்ரீரோ நீ-ராமோ நாராயணஶ்ரீமாந்" என்னும்படி-ஸர்வவிதபந்துத்வமும் நடத்தும்படிக்கு நான் நாராயணஶப்த வாச்யனன்றோவென்று, அத்தாலேபெரிதான தன் ஸர்வவிதபந்துத்வத்தையும்காட்ட; அத்தை "ஓராயிரமாயுலகேழளிக்கும் பேராயிரங்கொண்டதோர் பீடுடையன் நாராயணன் நங்கள்பிரானவனே" என்று அநுஸந்தித்து.

(அவன்சீலத்திற்கால்தாழ்ந்தமாறனருள்) அதாவது-'அவனேமற்றெல்லாமுமறிந்தனனே' என்றும், 'அரியைவணங்கி யறிந்தனர்நோய்களறுக்குமருந்தே" என்றுவெறுத்தும், "விண்ணுலகந்தருந்தேவனைச்சோரேல் கண்டாய்மனமே" என்றும், 'இனமேதுமிலானையடைவதுமே" என்றும், "என்மனமுடைவது மவற்கேயொருங்காகவே" என்றும், "ஆகஞ்சேர்நரசிங்கமதாகி" என்றும், "நின்றவேங்கடம் நீணிலத்துள்ளது" என்றும், 'தொழுது-எழுதுமென்

‡ நமோ-

மூ,—மையார்கண்மா மார்பின் மன்னுந் திருமாலை
கையாழி சங்குடனே காணவெண்ணி—மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் கண்டுகந்த மாறன்பேர்
ஓதவுய்யுமே யின்னுயிர். (அச)

னுமிதுமிகை'' என்றும், ''தாளதாமரையான்'' என்றுதொடங்கி ''நாளுநியன் புகழ்கோவுனசீலமே'' என்றும், ''சீலமெல்லையிலான்'' என்றும் இப்படி குணவானென்னும்படியான ஶீலகுணத்திலே யாழங்காற்பட்டருளிச்செய்த வாழ்வாருளுண்டு - க்ருபை; அது (மாட்டிவிடும் நம்மனத்துமை) நம்முடைய வஜ்ஞாநத்தை நிஶ்ஶே ஷமாகப்போக்கும். (உ) ''அம்மாழிப்பிரானவனெவ்விடத்தான் யானார்'' என்று பிறகாஸிக்கிற கலக்கத்தை, சீலகுணப்ரகாசகத்வத் தாலே ஶேஷியாதபடி நசிப்பிக்கும்; ஸாமாந்யமான வஜ்ஞாநமாகவுமாம். (அரு)

பதவுரை.

மை ஆர் கண்மா	மையணிந்தகண்களையுடைய பெரியபிராட்டியார்
மார்பில் மன்னும்	திருமார்பிலே நித்யவாஸம்பண்ணப் பெற்ற
திருமாலை	ஶ்ரிய:பதியை
கை ஆழிசங்குடனே	திருக்கைநிறைந்த திருவாழி திருச்சங்குகளுடனே
காண எண்ணி	ஸேவிக்கக்கருதி
மெய் ஆன	உண்மையான
காதலுடன்	அபிநிவேஶத்தோடு
கூப்பிட்டு	கூவி
கண்டு	அவ்வாறே ஸேவித்து
உகந்த	மகிழ்ச்சியடைந்த
மாறன்பேர்	ஆழ்வாருடைய திருநாமங்களை
ஓத	அநுஸந்திக்கவே
இன் உயிர்	விலக்ஷணமான ஆத்மவஸ்து
உய்யும்	உஜ்ஜீவிக்கும். (அச)

(க) தி-வாய் டு-க-எ.

அவ;— என்பத்தாறாம்பாட்டு. (மையார் கண்மா) இதில்-விலக்ஷண விக்ரஹயுக்தனானவனைக் காண வாசைப்பட்டுக் கூப்பிடுகிறபாசுரத்தை யனுவதித்தருளிச்செய்கிறார்; என்னவென்னில்; கீழ்- "ஸ்ரீலாதிகனாய், அதுக்கேற்றவாயான பிராட்டியோடே நித்ய ஸம்யுக்தனாய், இரண்டிடத்திலும் மருகுபெற(ய) தரித்துவாழ்வார்களையுடையனான வெம்பெருமானை யனுபவிக்கவேணும்" என்று தாமும் தம்முடைய கரணத்ர(ய)ங்களுமாகவிடாய்த்துக் கூப்பிட, தூணிலே தோற்றிச் சிறுக்கனுக்குதவினாப்போலே மாநஸமாகத் தோற்றித்தன் குணங்களை யனுபவிப்பிக்க, அத்தை யனுபவித்து ஹ்ருஷ்டராகிற * மையார் கருங்கண்ணியிலர்த்தத்தை, "மையார் கண்மாமார்பில்மன்னும்" என்று தொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா,— (மையார் கண்மா மார்பில் மன்னுந்திருமாலை) (க) * அஸிதேக்ஷணையான லக்ஷ்மி, வக்ஷஸ்தலத்திலே நித்யவாஸம் பண்ணும்படியாய், அத்தாலே ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரனை. (கையாழி சங்குடனே காணவெண்ணி) அச்சேர்த்தியைக் காத்துவாட்டமல்ல வாழ்வார்களோடே யனுபவிக்கவெண்ணி. இத்தால் - "மையார் கருங்கண்ணி" என்று தொடங்கி "உன்னைக் காணக்கருதுமென் கண்ணே" என்ற முதற்பாட்டைக் கடாக்ஷித்தருளிச் செய்தபடி. (உ) "தேவேஹீம் லக்ஷணம் ராஜேந்த்ர தேவி நிர்த்தி தேஷிபி - வைதேஹீம் லக்ஷ்மணம் ராமம்நேத்ரைரநிமிஷைரிவ" (ங) "ஸ்வவக்ஷஸ்ஸ்தலைக்ஷஸம்ஹ்ருஷ்டம் ... - அவஷ்டப்ய சதிஷ்டந்தம் ஸதர்மஸதநுரூர்ஜிதம்" என்னும்படியாயிற் றபேக்ஷித்தது.

(மெய்யான காதலுடன் கூப்பிட்டுக் கண்டுகந்த) யதாவத்தான ப்ரேமத்தோடே கூப்பிட்டு, அப்படியே கண்டு ஹ்ருஷ்டரான; அதாவது - "கண்ணே யுன்னைக் காணக்கருதி" என்று தொடங்கி "நண்ணுகொழியேனென்று நானழைப்பன்" என்றும், "உகந்தேயுன்னை யுள்ளுமென்னுள்ளத்து" என்று தொடங்கி "கொடுங்குமதாயவுருவே" என்றும், "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்டேன்" என்றும, "கண்டுகொண்டு" என்று

(க) ரா-ஸு-கரு-டு. (உ) ரா ஆ-க-கச. (ங) ரா-கி கரு-உடு.

மூ,—இன்னுயிர்மால் தோற்றினதிங்கென் னெஞ்சிலென்றுகண்ணா
லன்றவனைக்காணவெண்ணி யாண்பெண்ணாய்ப்-பின்னையவன்
றன்னைநினைவிப்பவற்றால் தான்றளர்ந்தமாறனரு
ளுன்னுமவர்க் குள்ளமுருகும். (அரு)

தொடங்கி "அண்டத்தமரர்பெருமானடியேனே" என்றும், "உலகமளந் தவடியானை யடைந்தடியே னுய்ந்தவாறே" என்றும் இவற்றாலே அவற்றை வெளியிட்டாரென்கை. (மாறன் பேரோதவுய்யுமே யி ன்னுயிர்) இப்படி பகவத்விஷய பக்தியையுடைய வாழ்வார் திரு நாமத்தை யநுஸந்திக்கவே யுஜ்ஜீவிக்கும், விலக்ஷணமான வாத்ம வஸ்து. (அச)

பதவுரை.

இன் உயிர் மால்	எனக்கு தா(யா)ரகனான ஸர்வேஸ்வரன்
இங்கு தோற்றினது	இத்தசையில் ப்ரத்யக்ஷமானது
என்நெஞ்சில் என்று	என் மநஸ்ஸிலென்று
அன்று அவனை கண்ணால்காண எண்ணி	அன்று அவனைக்கண்ணால் கண்டநுபவிக்கவிருமபி
ஆண் பெண் ஆய்	ஆண்தன்மைகுலைந்து பெண்தன்மையை அடைந்து
பின்னை அவன்தன்னை நினைவிப்பவற்றால்	மேலும் அவனை ஸ்மரிப்பிக்கிற மேகஸமூஹமும் முதலானவற்றால்
தான் தளர்ந்த	தான் தளர்ச்சியடைந்த
மாறன் அருள்	ஆழ்வாருடைய க்ருபையை
உன்னுமவர்க்கு	அநுஸந்திப்பவர்களுக்கு
உள்ளம் உருகும்	மனமுருகாநிற்கும். (அரு)

அவ.—எண்பத்தைந்தாம்பாட்டு. (இன்னுயிர்மால்) இதில், ஸ்மாரகபதார்த்தங்களாலே நோவுபட்ட ஆழ்வார் பாசுரத்தை அநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; கீழ்ப்பிறந்த வநுபவம் மாநஸாநுபவமாகையாலே, அவனை பாஹ்யகரணங்க ளாலே அநுபவிக்கவேணுமென்றாசைப்பட்டு, அப்போதே அது கிடையாமையாலே ஶிதிலசித்தராய், அவன்குணசேஷ்டிதாதிகளு

க்கு ஸ்மாரகமான லௌகிகபதார்த்தங்களைக்கண்டு, அவ்வழியாலே ஸ்மர்யமாணமான அவன் குணசேஷ்டிதாதிகளை அநுஸந்தித்து, அவனை யதாமநோரதமநுபவிக்கப்பெறாமல், இப்படி, ஸ்மாரக பதார்த்தத்தாலே தாமிநபட்டுச்செல்லுகிறபடியை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிற * இன்னுயிர்ச்சேவலிலர்த்தத்தை "இன்னுயிர்மால்" இத்யாதியாலே அருளிச்செய்கிறாரென்கை.

வ்யா. — (இன்னுயிர்மால் தோற்றினிடுங்கண்ணெஞ்சிலென்று) கீழ்த்திருவாய்மொழியிலே, (௧) 'நரசிங்கமதாயவுருவே - "உகந்தேயுன்னையுள்ளுமென்னுள்ளத்து" என்றும், (௨) "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக்கண்டுகொண்டேனே" என்றும், (௩) "கண்டுகொண்டென் கண்ணிணையாரக்களித்து" என்று மருளிச்செய்தவை, மாநஸஸாக்ஷாத்காரமாத்ரமாய் ப்ரத்யக்ஷஸாக்ஷாத்காரமல்லாமையாலே, இத்தசையிலெனக்கு தா(யா)ரகனை ஸர்வேஶ்வரன் ‡ ஸாக்ஷாத்கரித்தது மாநஸஜ்ஞாந விஷயமென்று. (கண்ணாலென்றவனைக்காண வெண்ணியாண்பெண்ணாய்) சக்ஷுர்விஷயமாக வவனை தர்ஶிக்கவெண்ணி, அதுலபி(வி)யாமையாலே பும்ஸ்த்வம் குலைந்து ஸ்த்ரீத்வாபத்தியைப(ஸ)ஜித்து, பின்னையவன்றன்னை நினைவிப்பவற்றால்) இப்படி ஸ்த்ரீத்வாபத்தியை பஜித்தவநந்தரம், அவனைப்ரணயகந்தத (ஸூசக) ஸ்வரத்தாலும் ரூபவத்தையாலும் ஸ்மரிப்பிக்கு மவற்றாலே.' (௪) "விகூஜந்தி விஹங்கமாஃ - விகூஜத்பிர் விஹங்கமைஃ" என்னும்படியான பக்ஷிஸமூஹங்களாலும், மேகஸமூஹங்களாலும்;

(தான் தளர்ந்து) (௫) "தாந்யேவாரமணீயாநி- தாந்யேவாரமணீயாநி" என்னும்படி அஸஹ்யமாய், மிகவும்பாரவஶ்யத்தையடைந்து. அதாவது- "இங்கெத்தனை என்னுயிர் நோவமிழற்றேல்மின் குயிற்பேடைகாள்" "இத்தனைவேண்டுவதன்றந்தோ வன்றில்பேடைகாள்" "எவஞ்சொல்லீற்றும் நும்மெங்குகூக்குரல் கேட்டுமே" "மேற்கினைக்கொள்ளேல்மின் நீரும்சேவலும் கோழிகாள்- அக்கையுமாழியுமேந்தரின்றழலுமே" "அந்தரநின்றுழல்கின்ற யானுடைப்பூவைகாள் நும்நிறத்தே நுடையிலே குழறேல்மினே" என்றும், "நன்

‡ ஸாக்ஷாத்கரித்தது - ப்ரத்யக்ஷமாக்கினரூபம்.

(௧) தி-வாய்-௯-௪-௨. (௨) தி-வாய்-௯-௪-௮. (௩) தி-வாய்-௯-௪-௯.
(௪) ரா-கி-௧-௯௯. (௫) ரா-கி-௪-௯௯.

மூ.—உருகுமாலென்னெஞ்ச முன்செயல்களெண்ணி
பெருகுமால் வேட்கையெனப்பேசி—மருவுகின்ற
வின்னாப்புடனவன் சேர்ந்தரைத்தமாறன்சொல்
லென்னாச்சொல்லாதிருப்பதெங்கு. (அசு)

கெண்ணரினான்வளர்த்த சிறுகிளிப்பைதலே இன்குரல் நீமிழற்றேல்-நின்பசுஞ்சாமநிறத்தனன் கூட்டுண்டுநீங்கினான்" "கண்ணன்மாயன் போல் கோட்டியவில்லொடுமின்னுமேகக்குழாங்கள்காள் - காட்டேன்மின்னும்முருவென்னுயிர்க்கதுகாலனே" "குயிற்பைதல்காள் கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்" "பண்புடைவண்டொடு தும்பிகாள் பண்மிழற்றேன்மின், புண்புரைவேல்கொடுகுத்தாலொக்கும் நும்மின்குரல்" "காரைக்குழாங்கள்காள் பயின்றென்னினி" என்றிப்படி, ரூபதர்ஶநத்தாலும் நாமஸங்கீர்த்தநத்தாலும் ப்ரணயகூஜிதத்தாலும் மிகவுந்தளர்ந்து ஜீவநாத்ருஷ்டத்திலும் நசையற்றபடியென்கை.

இப்படிமிகவும் பாரவஶ்யத்தையடைந்த (மாறனருள்) (க) "அருள்கண்டீரிவ்வுலகினில்மிக்கதே" என்னும்படியான ஆழ்வார் க்ருபையை அநுஸந்திக்குமவர்களுக்கு மநஸ்ஸு நீராயுருகும். "இதொருக்ருபாதிக்யமிருந்தபடியே" என்று ஹ்ருதயம் த்ரவீபூதமாம். "மாறனுரையுன்னுமவர்க்கு" என்று பாடமானபோது, ஆழ்வார் திவ்யஸூக்தியை அநுஸந்திக்கப்புக்கால் "இதுவொரு ஸ்ரீஸூக்தியே" என்று மநஸ்ஸு த்ரவீபூதமாம். "இவையொன்பதோடொன்றுக்கும் மூவுலகுமுருகுமே" என்றதைப்பின் சென்றபடியென்றாகவுமாம். (அரு)

பதவுரை.

உன்செயல்கள் எண்ணி	"உன்னுடைய சரித்ரங்களைநினைத்து
என்னெஞ்சம் உருகும்	என்மனம் உருகாநின்றது;
வேட்கைபெருகும் எனப்பேசி	-அதற்குமேலே ஆசையும் விஞ்சி வாராநின்றது" என்றருளிச் செய்து

(க) க-சி-கூ-

மருவுகின்ற இன்னாப்புடன் (கீழ்ஸ்மாரகபதார்த்தத்தாலே நோவுபட்டு) அநுவ்ருத்தமான அந்த வெறுப்போடே

அவன்சீர் எய்ந்து உரைத்த அவனுடைய ப்ரணயித்வகுணத்தைத் திருவுள்ளத்திற்பொருந்த அருளிச்செய்த

மாறன்சொல் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை

என்நா என்னுடைய நாக்கு

சொல்லாது இருப்பது எங்கு அநுஸந்தியாமலிருப்பது எவ்வாறு?

அவ.—எண்பத்தாறும்பாட்டு. (உருகுமாலென்னெஞ்சம்) இதில் ஆழ்வாருடைய அப்ரீதிகர்ப்ப(ஸ)குணாநுஸந்தாநவித்த (ஈ)ராம் ஸூக்தியை யநுவதித்தருளிச்செய்கிறார். அதெங்ஙனே யென்னில், ஸ்மாரகபதார்த்தங்களைக்கண்டு நோவுபட்டுச்செல்லா நிற்கச்செய்தே (௧) * இருத்தும் வியந்தில் தலைதடுமாறாகக்கலந்த கலவி ஸ்ம்ருதிவிஷயமாய்த(ய)ரிக்க, அத்தாலே பூர்வஸம்ஸ்லேஷ ப்ரகாரத்தை யநுஸந்தித்து ப்ரீதராய்ச்செல்லுகிற * உருகுமால் நெஞ்சத்திலர்த்தத்தை யருளிச்செயகிறார் "உருகுமாலென்னெஞ்சம்" இத்யாதியாலே யென்கை.

வ்யா.—(உருகுமாலென்னெஞ்சமுன் செயல்களெண்ணி)(௨) ‘[illegible] - ஹ்ருதயாந்யாமமந்தேவ ஜநஸ்யகுணவத்தயா’’ என்னும்படி, * உன்னுடையதாழ்ந்த செயல்களையநுஸந்தித்து என்னுடையமநஸ்ஸானது த்ரவத்ரவ்யம் போலே உருகாநின்றது; (பெருகுமால் வேட்கையெனப்பேசி) அது க்குமேலே அபி(ஸி)நிவேஶமும் மிக்குவாராநின்றதென்றருளிச் செய்து. (மருவுகின்ற வின்னாப்புடன்) கீழ் ஸ்மாரகபதார்த்தத் தாலே நோவுபட்டு அந்த அநுவ்ருத்தமான வெறுப்போடே. (அவன்சீரேய்ந்துரைத்த மாறன்சொல்) அவனுடைய (௧) * இருத்தும் வியந்தில் (௩) ‘ அறியேன்மற்றருள் ’’ இத்யாதியாலே அருளிச் செய்த ப்ரணயித்வகுணங்களைத்திருவுள்ளத்திலே பொருந்தவரு ளிச்செய்த.

---

(௧) தி-வாய்-௮-௭- (௨) ரா-அ-௨௬-௨. (௩) ௮-௭-௮.

மூ — எங்காதலுக்கடிமாலேய்ந்தவடிவழகென்
றங்காதுபற்றுசாவாங்கவன்பா — லெங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப்போகவிடுமாறன்றாள்
உள்ளினர்க்குத் தீங்கையறுக்கும். (அஎ)

அதாவது - * உருகுமால் நெஞ்சமுயிர்ப்பாட்டாய், அத்தைப் பின்சென்று "வினைதொறும்" என்றுதொடங்கி "விளைகிலேன் நானுனக்காட்செய்யும் நீர்மையே," "நீர்மையால் - சார்முகில்வண்ணன்றன் கள்வமறிகிலேன்," "அறிகிலேன் - தெறியவென்னாருயிருண்ட திருவருளே" "திருவருள் செய்பவன்போல - கருவளர் மேனிநங்கண்ணன் கள்வங்களே" "என்கண்ணன் கள்வமெனக்குச் செம்மாய்நிற்கும் - என்கண்ணனென்றவன் காட்கரையேத்துமே," "என்னாருயிர்கோளுண்டே - காட்கரையேத்துமதனுட் கண்ணு வென்னும்," "கோளுண்டானன்றி - ஆளன்றேபட்ட தென்னாருயிர்பட்டதே," "தெய்வவாரிக்கு - இங்கெனதுயிர்பட்டது - அங்காருயிர்பட்டது," "வாரிக்கொண்டு - பருகினுன், காரொக்குங் காட்கரையப்பன்கடியனே," என்றிப்படி, அவன் தாழநின்றுபரிமாறின ஶீலாதிகுணங்களிலே ஶிதிலாந்தꞏகரணராயருளிச்செய்த ஸூக்தியென்கை.

இப்படி ஈடுபாட்டையுடையராயருளிச்செய்த இச்சொல்லை (என்னாச்சொல்லாதிருப்பதெங்கு) என்னுடையநாவானது எவ்விடத்துச்சொல்லாதிருப்பது?; எல்லாவிடத்திலும், (க) * நாவினால்நவிற்று - குருகூர்நம்பி பாவினின்னிசைபாடித் திரிவனென்னுதல்; அன்றியே "என்னாற்சொல்லாதிருப்பது எங்கு" என்று பாடமாய், இதல்ரஸஜ்ஞனென்னாலே சொல்லப்படாதிருப்பதெத்தசையிலேயெங்ஙனே யென்றுமாம்; எல்லாதசையிலு மநுஸந்தியாதிருக்கவொண்ணாதென்றபடி. (அசு)

பதவுரை.

எம் காதலுக்கு அடி — எமது அன்புக்குக்காரணம்
மால் ஏய்ந்த வடிவழகு என்று — ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூபாநுபந்தியாய் அநுரூபமான விக்ரஹ ஸௌந்தர்யமென்று

(க) கண்ணி-உ.

அங்கு ஆதுபற்றுச ஆ	அத்தசையில் அந்தவிக்ரஹஸௌந்தர்யமே ஆலம்பமாக
ஆங்கு அவன்பால்	அவ்விடத்தில் அவன் விஷயமாக
எங்கும் உள்ளபுள்ளினத்தை	எவ்விடத்திலுமுள்ள பறவைக் கூட்டத்தை
தூதாகப் போகவிடும்	தூதாக அனுப்பின
மாறன் தாள்	ஆழ்வாருடைய திருவடிகள்
உள்ளினர்க்கு	தம்மை அநுஸந்தித்தவர்களுடைய
தீங்கை அறுக்கும்	தீங்குகளை ஒழித்திடும். (அஎ).

அவ.—எண்பத்தேழாம்பாட்டு (எங்காதலுக்கடி) இதில், வடிவழகுபற்றாசாகத் தூதுவிட்டருளின வாழ்வார் திவ்யஸூக்தியை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; அப்ரீதிகர்ப்ப(ஸ்)குணாநுஸந்தாந மாத்ரமாய்ச்சென்றவிடத்தில், பா(ஹ)க்யவைகல்யத்தாலே குணாநுபவத்தால்வந்த ப்ரீதிகீழ்ப்பட்டு, அப்ரீத்யம்ஸமே தலையெடுத்து அவனுடைய ஸௌந்தர்யத்தாலே அபஹ்ருதசித்தராய், "அவ்வழகைக்கண்ணாலே கண்டநுபவிக்க வேணும்" என்று கண்ணாற்கண்டபக்ஷிகளைத் தூதுவிடுகிற * எங்கானலிலர்த்தத்தை யருளிச்செய்கிறார் "எங்காதலுக்கடி" இத்யாதியாலேயென்கை.

வ்யா.- (எங்காதலுக்கடி) என்னுடையப்ரேமத்துக்குஹேது, (மாலேய்ந்தவடிவழகென்று) ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூபாநுபந்தி(வஸி)யா யநுரூபமான விக்ரஹஸௌந்தர்யமென்று. (அங்காதுபற்றுசா ஆங்கவன்பால்) அத்தசையில் அவன் ஸௌந்தர்யமே, பற்றுசாக—ஆலம்பநமாக, அவ்விடத்தில் அவன் விஷயமாக - திருமூழிக்களத்துறையு மவன் விஷயமாக. (எங்குமுள்ள புள்ளினத்தைத் தூதாகப்போகவிடும் மாறன்) (க) "யாංகவீநாංஸஹஸ்ராணி - யாம்கவீநாம்ஸஹஸ்ராணி" என்னும்படி ஸர்வதிக்குக்களிலுமுண்டான பக்ஷிஸமூஹத்தை, தம்முடைய ப்ராணரக்ஷணார்த்தமாக தூதப்ரேஷணம்பண்ணுமாழ்வார்.

அதாவது- "செங்காலமடநாராய்" என்று தொடங்கி "எங்குடக்கூத்தர்க்கென் தூதாய" என்றும். "அமர்காதற்குருகினங்காள்"

(க) ரா-ஸு-ரு௦-ரு.

மூ. — அறுக்குமிடரென்றவன்பாலாங்குவிட்டதூதர்
மறித்தாரைப்பற்றுமனத்தா — லறப்பதறி
செய்யதிருநாவாயிற்செல்லநினைந்தான்மாறன்
மையலினாற் செய்வதறியாமல். (௮௮)

என்று தொடங்கி "தமரோடங்குறைவார்க்குத் தக்கிலமேகேளீரே" என்றும், "தக்கிலமேகேளீர்கள்" என்று தொடங்கி "கொக்கினங்காள் குருகினங்காள் - செக்கமலத்தலர்போலும் கண் கை கால் செங்கனிவாய் அக்கமலத்திலைபோலுந் திருமேனி யடிகளுக்கு" என்றும், "திருமேனியடிகளுக்கு" என்று தொடங்கி, "மாதரைத்தம் மார்பகத்தேவைத்தார்க்கு" என்னும், "திருமூழிக்களத்துறையும் பங்கயக்கட்சுடர் பவளவாயனைக்கண்டு" என்றும், "புனக்கொள் காயாமேனிப் பூந்துழாய் முடியார்க்கு" என்றும், "பூந்துழாய்முடியார்க்கு" என்று தொடங்கி "காந்தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்றுரையீர்" என்றும், "என்னகமேனியொழியாமே திருமூழிக்களத்தார்க்கு" என்றும், இப்படி "பூந்துழாய்முடியார்க்கு" என்னுமளவும்வடிவழகு பற்றாசாகப்பலபக்ஷிகளைத் தூதுவிட்டாரென்கை.

(௧) "நம்பிள்ளையுஞ்சிறந்த செல்வமும் படைத்தபரப்பும் தமரோட்டைவாஸமும் மறப்பித்துக்ஷமா தீக்ஷா ஸாரஸ்யஸௌந்தர்யங்களை யுணர்த்தும் வ்யூஹவிபவ பரத்வத்வயார்ச்சைகள் தூதுநாலுக்குமவிஷயம்" என்றிறே ஆசார்யஹ்ருதயத்திலே நாயனாருமருளிச் செய்தது. (௨) "ஸ்வஸாரஸ்யஸம்பாத்ய விஶேஷஸ்ஸம்பந்நஸ்வைர ஸௌதகாக்ஷ: | ஷீண்ணாதரோநாஷ ஸ்வகாதஸம்பாதஸ்ஸ: - அபராதஸஹத்வாச்ச விபோஸ்ஸம்பந்தவைபவாத் | ஐகர்ஸ்யாச்சஸௌந்தர்யாத் கடாக்ஷ்யாசதேமுநி:" என்றிறே வாதிகேஸரி அழகிய மணவாளஜீயரு மருளிச்செய்தது. (மாறன்றுணுள்ளினர்கருத தீங்கையறுக்கும) ஆழ்வார்திருவடிகளானது, தன்னை மநஸ்ஸாலே யநுஸந்தித்தவர்களுக்கு ப்ரதிபந்தகங்களைத் தானே சே(வெதி)தித்துப்போகடும்; * துயரறுசுடரடிபோலே. (௮௭)

பதவுரை.

இடர் அறுக்கும் என்று	நமது துக்கங்களைப் போக்கியருள் வனென்று

---

(௧) ஆசாரஹ்ருதயம், (௨) பன்னீராயிரப்படி.

அவன்பால் ஆங்குவிட்டதூதர்	அவ்வெம்பெருமானிடத்தில் அனுப்பியதூதர்
மறித்து வரப்பற்றுமனத்தால்	மீண்டுவருமளவும் ஆலஸ்யத்தைப் பொறுக்கமாட்டாததிருவுள்ளத்தாலே
அறப்பதறி	மிகவும் விரைந்து
மையலினால்	அறிவுகலக்கத்தினால்
‡ செய்வு அறியாமல்	செய்யவேண்டியது இன்னதென்றறியாமல்
மாறன்	ஆழ்வார்
செய்யதிருநாவாயில்	விலக்ஷணமான திருநாவாயிலே
செல்லநினைந்தான்	எழுந்தருள உத்யோகித்தார் (அஅ)

அவ.—எண்பத்தெட்டாம்பாட்டு. (அறுக்குமிடர்) தூதர் வருமளவும் பற்றாமல் “திருநாவாயிலே போய்ப்புகவேணும்.” என்று மநோரதிக்கிற வாழ்வார்பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; இப்படிவிட்டதூதர் அத்தலைப்பட்டு அவனுக்கு ஸ்வதசையையறிவித்து மீண்டுவருவதற்குமுன்னே, ப்ராப்யத்வராதிசயத்தாலே, “அவனெழுந்தருளியிருக்கிற திருநாவாயிலே போய்ப்புக்கு அவ்வோலக்கத்திலே அங்குள்ளவர்களோடே கூட ஸபத்நீகனானவனைக்கண்டநுபவித்து அடிமைசெய்யப்பெறுவதெப்போதோ?” என்று மநோரதிக்கிற* அறுக்கும் வினையிலர்த்தத்தை “அறுக்குமிடர்” என்று தொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(அறுக்குமிடரென்றவன் பாலாங்குவிட்டதூதர் மறித்து வரப்பற்றாமனத்தாலறப்பதறி) (அறுக்குமிடரென்று) நம்முடைய துக்கத்தைப்போக்கியருளுமென்று. (அவன்பாலாங்குவிட்டதூதர்) திருமூழிக்களத்துறைவார் விஷயமாக அவ்விடத்தலே விட்டதூதர். (மறித்துவரப்பற்றாமனத்தால்) திரும்பி மீண்டு வந்துமறுமாற்றம் சொல்லப்பற்றாத திருவுள்ளத்தாலே. (அறப்பதறி) மிகவும் த்வரித்து; (க) “ஜக்வேர ஸ்யாத்ரஜநாய௦ ம-ஞா௦

(க) ரா. ஸு-ரு-உ-கள.

(‡ ‘செய்வதறியாமல்’ என்றபாடம் மோனையின்பத்திற்கு மாறுபாடாம்.)

மூ.—மல்லடிமைசெய்யுநாள் மால்தன்னைக்கேட்கவவன்
சொல்லுமளவும் பற்றாத்தொன்னலத்தால்—செல்கின்ற
வாற்றாமைபேசி யலமர்ந்தமாறனருள்
மாற்றாகப்போகு மென்றன்மால். (அசு)

[illegible] - இதம்ப்ரூயாச்சமேநாதம் ஶூரம்ராமம் புந: புந:'' என்று, திருவடியைத்தூதுபோகவிட்டவநந்தரம் பிராட்டி பதறினாப்போலே. (செய்யதிருநாவாயிற்செல்ல நினைந் தான்மாறன்) அழகியதிருநாவாயிலேயெழுந்தருளும்படி யெண் ணினாராழ்வார்.

அதாவது—"வெறித்தண்மலர்ச்சோலைகள் சூழ்திருநாவாய் குறுக் கும்வகை யுண்டுகொலோகொடியேற்கே" என்றும், "திருநாவாயடி யேனணுகப்பெறுநாள் எவைகொலோ" என்றும், "திருநாரணன் சேர்திருநாவாயவையுட் புகலாவதோர் நாளறியேனே" என்றும், "திருநாவாய் வாளேய்தடங்கண் மடப்பின்னைமணாளா – நாளேலறி யேன்" என்றும், "விண்ணாளன் விரும்பியுறையும் திருநாவாய்கண் ணாரக்களிக்கின்றதிங்கென்றுகொல்கண்டே" என்றும், "திருநாவாய் கொண்டேயுறைகின்ற வெங்கோவலர்கோவே - கண்டேகளிக்கின்ற திங்கென்றுகொல்கண்கள்" என்றும், "நாவாயுறைகின்றவென் நாரணநம்பீ ஆவாவடியானிவனென்றருளாயே" என்றும், "தென் திருநாவாயென்தேவே - அருளாதொழிவாய்" என்றும், "திருநா வாய் யாவரணுகப்பெறுவாரினியந்தோ" என்றும், "திருநாவாய் வந்தேயுறைகின்றவெம்மாமணிவண்ணா - அந்தோவணுகப்பெறுநாள்" என்றும், இப்படித்வராதிஶயத்தை ப்ரகாசிப்பித்தாரென்கை. அது எத்தாலேயென்னில்; (மையலினால் செய்வதறியாமல்) ஸௌந்தர் யத்தாலே அறிவுகலங்கி, அத்தாலேப்ராப்தாப்ராப்தவிவேகமின் றிக்கே, விட்டதூதர் வருவதற்குமுன்னேத்வரித்தார்; இவர் ப்ரேம ஸ்வபாவமிருந்தபடியேயென்று விசத(ஜ)மாயருளிச்செய்கிறார். அது

பதவுரை.

மல்அடிமைசெய்யும் நாள்	பூர்ணமான கைங்கர்யம் செய்கிற காலம் (எப்போதென்று)
மால்தன்னைக்கேட்க	ஸர்வேஶ்வரனை நோக்கிக்கேட்க,

அவன் சொல்லுமளவும்பற்று	அவன் அறுதியிட்டுச் சொல்லுமளவும் பொறுத்திருக்கமாட்டாத
தொல்நலத்தால்	ஸ்வாபாவிகமான பக்தியாலே
செல்கின்ற ஆற்றாமைபேசி	தமக்கு நிகழ்கின்ற ஆற்றாமையை அருளிச்செய்து
அலமர்ந்தமாறன்	அலமாப்பை அடைந்த ஆழ்வாருடைய
அருள்	க்ருபையானது
மாற்று ஆக	அஜ்ஞாநத்திற்கு எதிர்த்தட்டாக
என்றன்மால் போகும்	என்னுடைய அஜ்ஞாநம் நிவர்த்திக்கும். (அ௯)

அவ.—எண்பத்தொன்பதாம்பாட்டு. (மல்லடிமைசெய்யும் நாள்) இதில், ஒருஸங்க்யையிலுண்டான ஆழ்வாரபி(ஹி)ஸந்தியை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்;(க) * அறுக்கும் வினையில் பெரியத்வரையோடே மநோரதித்தவர், த்வராநுகுணமாக ப்ராப்யபூமியிலேபுக்கு அவனையநுபவிக்கப் பெறுவதற்கு முன்னே தத்ப்ராப்திஸூசகமான வடையாளங்களைக்கண்டு நோவுபட்டுச்செல்லுகிறபடியை, பகலெல்லாம் பசுமேய்க்கப்போனக்ருஷ்ணன் மீண்டுவருவதற்குமுன்னே அவன் வரவுக்கடையாளமான மல்லிகைகமழ்தென்றல் முதலானவஸ்துக்களைக்கண்டு திருவாய்ப்பாடியிலிடைப்பெண்கள் அந்த க்ருஷ்ணவிரஹத்தாலே ஸந்த்யாஸமயத்திலே நோவுபட்டுச்செல்லுகிறதுறைமேலே வைத்தருளிச்செய்கிற * மல்லிகைகமழ்தென்றலிலர்த்தத்தை "மல்லடிமை" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(மல்லடிமைசெய்யும்நாள் மால்தனைக்கேட்க) மல்லடிமை- ஸம்ருத்த(ஸ)மானவடிமை; பரிபூர்ணமானகைங்கர்யம்; அது செய்யும் காலமெப்போதென்று ஸர்வேஸ்வரனைக்கேட்க,(உ) "நாளேலறியேனெனக்குள்ளன" என்று கேட்க (அவன் சொல்லுமளவும் பற்றாத்தொன்னலத்தால்) அவன் (ங) * மாலைநண்ணியிலே (ச) "மரணமானால்" என்று - நாள் அவதி(யி)யிட்டருளிச் செய்யுந்தனையும்பற்றாத ஸ்வாபாவிகமான பக்தியாலே. (செல்கின்ற

(க) தி-வாய் அ௯. (உ) அ௯-ச. (ங) க௦, (ச) க௦-ரு.

வாற்றாமை பேசியலமர்ந்தமாறன்) சமக்ஞநடந்துசெல்லுகிற (ஸ)தரியாமையையருளிச்செய்து அலமாப்பையடைந்த ஆழ்வார்.

அதாவது - "மல்லிகைகமழ்தென்றல்" "புலம்புறுமணிதென்றல்" "தாமரைக்கண்ணும் கனிவாயும்" "வாடைதண்வாடை" "ஆபுகுமாலை" "அவனுடையருள் பெறும்போதரிதால்" "ஆருயிரளவன்றிக்கூர்தண்வாடை" "புதுமணமுகந்துகொண்டெறியு மாலேபொங்கிளவாடை" "ஊதுமத்தீங்குழற்கே யுய்யேன்நான்" "மாலையும்வந்தது மாயன்வாரான்" என்று இவையடியாக பாத(வாய)கபதார்த்தங்களாயுள்ள வெல்லாவற்றாலும்நொந்து, பிராட்டி, சுக்ரீவதர்சநாநந்தரம் மாருதிதர்சநாத்பூர்வம் மத்யேராவணப்ரேரிதரான ராக்ஷஸீவர்கமாபக்நையாய் ஜீவிதத்தில நசையற்றாப்போலே, "யாமுடையாருயிர் காக்குமாறென்" என்கிறார்.

அதாவது - "புகலிடமறிகிலம் தமியமாலோ" என்றும் "இனியிருந்தென்னுயிர் காக்குமாறென்" என்றும் "பாவியேன்மனத்தே நின்றீருமாலோ" என்றும் "ஆவியின் பரமல்லவகைகளாலோ" என்றும் "யாமுடையாருயிர் காக்குமாறென்" என்றும் "எவமினிப்புகுமிடமெவம் செய்கேனே" என்றும் "ஆருக்கென் சொல்லுகேனன்னைமீர்காள் ஆருயிரளவன்றிக்கூர்தண்வாடை" என்றும் "ஆய்ச்சியர்க்கே யூதுமத்தீங்குழற்கே யுய்யேன்நான்" என்றும் "யாதுமொன்றறிகிலமம்மவம்ம" என்றும் "என்சொல்லியுய்வனிங்கவனைவிட்டே" என்றும், "அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா" என்றும், இப்படி ஆற்றாமையையருளிச்செய்து முன்னடி தோற்றாமலலமந்து நிலந்துழாவின வாழ்வாரென்கை.

இப்படியான (மாறனருள்மாற்றாகப் போகுமென்றன்மால்) அதாவது-"அவனியுண்டுமிழ்ந்தவன் மேலுரைத்த வாயிரத்துள்ளிவை பத்துங்கொண்டு அவனியுளலற்றி நின்றுய்மின்தொண்டீர்" என்று உபக்ரமித்தவாழ்வாரருள் - அஜ்ஞாநத்துக்கு ப்ரதிபக்ஷமாக, என்னுடைய வஜ்ஞாநம் நிவ்ருத்தமாம். (க) "பண்டைவல்வினை பாற்றியருளினான்" என்னக்கடவதிறே. * ஆபுகுமாலைக்கு அவனுடையருள் பெறும்போதரிதாயிற்று; இங்கு "என்றன்மால்-மாறனருள் மாற்றாகப்போகும்" என்று நிப்சிதமாயிற்று. (அகூ)

(க) கண்ணி-எ.

மூ.—மாலுமது வாஞ்சைமுற்றும் மன்னுமுடம்பின் முடிவில்
சாலநண்ணிச்செய்வனெனத்தானுகந்து—மேலவனைச்
சீரார்கணபுரத்தே சேருமெனும்சீர்மாறன்
தாராரோ நந்தமக்குத்தாள். (௯0)

பதவுரை.

மால்	ஸர்வேஸ்வரன்
உமதுவாஞ்சை முற்றும்	"உம்முடைய அபேக்ஷிதங்களெல்லாவற்றையும்
மன்னும் உடம்பின் முடிவில்	ஆத்மாவோடே பொருந்தியிருக்கிற ஶரீரத்தின் முடிவிலே
சால நண்ணிச் செய்வன்என	மிகவும் பொருந்தித் தலைக்கட்டித் தருகிறேன்" என்ன;
தான் உகந்து	தாம் மனமகிழ்ந்து
மேல் அவனை	"அப்பரமபுருஷனை
சீர்ஆர் கணபுரத்தே சேரும் எனும்	திருக்கண்ணபுரத்திற்சென்று ஆஶ்ரயியுங்கள்" என்றருளிச்செய்த
சீர்மாறன்	ஜ்ஞாநாதிகுணங்களையுடைய ஆழ்வார்
நந்தமக்கு	நமக்கு
தாள்தாராரோ	தம்திருவடிகளை ப்ரஸாதித்தருளாரோ? (௯0)

அவ:—தொண்ணூறும்பாட்டு. (மாலுமது) இதில், ஆழ்வார்க்கு நாளவதி(யி)பிறக்க, அத்தாலே அவர் பரோபதேஸம் பண்ணின பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார் எங்ஙனே யென்னில்; (க) "நாளேலறியேன்" என்றுகேட்டவர்க்கு, "உம்முடையத்வராநுகுணமாக உம்முடைய ஶரீராவஸாநத்திலே உம்மைப்பரமபதத்திலே கொடுபோயடிமைகொள்ளக்கடவோம்" என்றுநாளிட்டுக் கொடுக்க, அத்தாலே ஹ்ருஷ்டராய், அந்தஹர்ஷப்ரகர்ஷத்தாலே "திருக்கண்ணபுரத்திலே நிற்கிறவவன்றிருவடிகளிலே புஷ்பாத்யுபகரணங்களைப் பணிமாறிபக்தியைப் பண்ணுங்கோள், அதுக்குமாட்டாதார் ப்ரபத்தியைப் பண்ணுங்கோள், அதுக்குமாட்டாதார்

(க) தி-வாய்-௮ ௮ ௪.

இங்கப்புத்தப்பாட்டையும் ப்ரீதிபூர்வகமாகப்பாடி அவன் திருவடிகளிலே வணங்குங்கோள்" என்றுஸர்வரையும் தத்ஸமாஸ்ரயணத்திலே ப்ரதி(வி)காரிதுருணயூட்டுகிற * மாலைநண்ணியிலர்த்தத்தை "மாலுமதுவாஞ்சைமுற்றும்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.-(மாலுமதுவாஞ்சை முற்றும் மன்னுமுடம்பின் முடிவில் சாலநண்ணிச்செய்வனென) ஆஸ்ரிதவ்யாமுக்த(ழு)னை ஸர்வேஸ்வரன், உம்முடைய வபேக்ஷிதங்களெல்லாம் ஆத்மாவோடே பொருந்தியிருக்கிறஸரீரத்திறுடைய வியோகாநந்தரத்திலே திருக்கண்ணபுரத்திலே மிகவும் கிட்டிச்செய்வனென்றென்னுதல்; அன்றிக்கே, உம்மைக்கிட்டி மிகவும் செய்வனென்னுதல்; அங்ஙனுமன்றிக்கே, அந்தக்கார்யத்திலே மிகவுமுற்றென்னுதல்; இப்படிச் செய்வனென்று * கண்ணபுரமொன்றுடையானருளிச்செய்ய (தானுகந்து) அவனைக்கொண்டு நாளவதியிட்டுக்கொண்டதாம் ஹ்ருஷ்டராய்.

(மேலவனைச்சீரார் கணபுரத்தே சேருமெனும் சீர்மாறன்) நாளவதியிட்டுக்கொடுத்ததுக்கு மேலாகத்திருக்கண்ணபுரத்திலே வந்து அத்யாஸந்நனாயிருக்கிறவனை மேலவனையென்று - மேலானவனையென்றுமாம். பரதாழ்வானுக்கு (க) "பூர்ணே சதுர்த்தஸே வர்ஷே" என்று நாளவதியிட்டுக்கொடுத்து, அவதி(யி)பார்த்துக்கொண்டு நின்றாப்போலே நின்றபடி. (சீரார்கணபுரத்தேசேருமெனும் சீர்மாறன்)ஐஸ்வர்யாதிகளும் ஸீலாதிகுணங்களும் புறவெள்ள மிடும்படியான திருக்கண்ணபுரத்தில் நிலையிலே. (சேருமெனும் சீர்மாறன்) ஆஸ்ரயியுங்கோளென்று, அனைவரையும் குறித்தருளிச்செய்யும் ஜ்ஞாநப்ரேமாதி குணங்களையுடைய வாழ்வார்.

அதாவது-"திருக்கண்ணபுரத்தாவின் மேலாலமர்ந்தானடியிணைகளை - காலைமாலை கமலமலரிட்டு - மாலைநண்ணித் தொழுதெழுமினோ" என்றும் 'திருக்கண்ணபுரமுள்ளி - கள்ளவிழும் மலரிட்டு-நாளும்தொழுதெழுமினோதொண்டர்" என்றும், "திருக்கண்ணபுரத்தண்டவாணனமரர் பெருமானை - தொண்டர் நுந்தம் துயர்

(க) ரா-யு கஉஎ-க.

போக - விண்டுவாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின்'' என்றும், ''யானை யுந்துமதிள்சூழ் திருக்கண்ணபுரம் தானயந்தபெருமான் - மடப் பின்னைதன்கேள்வனைத் தேனை வாடாமலரிட்டு நீரிறைஞ்சுமினோ'' என்றும், ''திருக்கண்ணபுரந்தரணியாளன் - சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்'' என்றும், ''திருக்கண்ணபுரத்தின்பன் - தனதாளடைந்தார்க்கெல்லாம்-அன்பனாகும்'' என்றும், ''செய்யில் வாளையுகளும் திருக்கண்ணபுரத்தையன் ஆசுதந்தணைப்பார்கட்கணி யனே'' என்றும் ''மணிபொன்னேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம் பணிமின்'' என்றும், ''வேதநாவர்விரும்பும் திருக்கண்ணபுரத்தாதி யானை யடைந்தார்க்கல்லலில்லையே'' என்றும், ''அல்லிமாதரமரும் திருமார்பினன் — கல்லிலேய்ந்தமதிள் சூழ்திருக்கண்ணபுரஞ் சொல்ல நாளும்துயர்பாடுசாராவே'' என்றும், ''பாடுசாராவினை பற்றறவேண்டுவீர் - இப்பத்தும் பாடியாடிப்பணிமினவன்றாள் களையே'' என்றும் இப்படி ஸர்வர்க்கும் ஸர்வாதிகாரயாய்படி ஸமாஶ்ரயணத்தை யருளிச்செய்தாரென்கை.

(க) ''மற்றொன்று'' ''கண்ணனல்லால்'' என்கிற * வைகல் வாழ்தலான ஸித்தோபாயம்; அதில் ஶர்ப்பலபுத்திகளுக்கு, மாலை கண்ணி - காலைமாலை விண்டு தேனைமலரிட்டு * அன்பராம் ஸாங்கபக்தி; அதில்அஶக்தர்க்கு - தாளடையும் ப்ரபத்தி; அதில் அஶக்தர்க்கு-உச்சாரணமாத்ரம்; ஸர்வோபாயஶூந்யர்க்கு, இப் பத்தும் பாடியிடும் தொண்டன்'' என்று கீதாசார்யனைப்போலே அதிகாராநுகுணம் நெறியெல்லாமுரைக்கிறார்'' என்றிறே ஆசார் யஹ்ருதயத்திலே நாயனாருமருளிச்செய்தது;

ஏவம்விதவைபவயுக்தரான, (சீர்மாறன்தாராளே நந்தமக் குத்தாள்) இப்படி உபதேசிக்கைக்குடலான ஜ்ஞாநப்ரேமாதிகளை யுடையவாழ்வார், நம்முடைய ஸ்வரூபாநுகுணமாகத் திருவடிக ளை உபாயோபேயமாக வுபகரித்தருளாரோ? (நந்தமக்கு) தம்மு டைய திருவடிகளிலே பிறந்துமுற்றுண்டுபெற்று (உ) ''முயல்கின் றேனுன்றன் மொய்கழற்கன்பையே'' என்றுதரித்துப்போருகிற நமக்கு. ஆகையால் ஆழ்வார் திருவடிகள் நித்யப்ராத்த்ய மென்றபடி. (கூ௦)

(க) ஆசார்யஹ்ருதயம். (உ) கண்ணி-க௦.

மூ.—தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழித்துணையாம்
காளமேகத்தைக் கதியாக்கி—மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகி லேக வெண்ணுமாறனெனக்
கேதமுளதெல்லாங் கெடும். (௬௧)

பதவுரை.

தாள் அடைந்தோர் தங்கட்கு	தன்திருவடிகளை உபாயமாகப் பற்றினவர்களுக்கு
தானே வழித்துணையாம்	தானே மார்க்கபந்துவாகிற
காளமேகத்தை	நீலமேகம்போன்றஎம்பெருமானை
கதி ஆக்கி	வழித்துணையாகக்கொண்டு
மீளுதலாம் ஏதம் இலா	புநராவ்ருத்தி தோஷமற்ற
விண்ணுலகில்	பரமபதத்தில்
ஏக எண்ணும்	எழுந்தருளவெண்ணின
மாறன் என	ஆழ்வாரென்றநுஸந்திக்கவே
கேதம் உள்ளதுஎல்லாம்கெடும்.	துக்கமென்றுபேர்பெற்றிருப்பவையெல்லாம் ஒழியும். (௬௧)

அவ.—தொண்ணூற்றோராம்பாட்டு. (தாளடைந்தோர் தங்கட்கு) இதில், நாளிடப்பெற்று வழித்துணையோடே போகவொருப்படுகிற வாழ்வார் பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். எங்ஙனேயென்னில்; "ஶரீராவஸாநத்திலேபேறு" என்று ஸர்வேஶ்வரன் நாளிட்டுக்கொடுக்கையாலே போக்கிலே யொருப்பட்டு, நெடுங்காலம்முகம் பழகினசரீரத்தைவிட்டு, ஹ்ருதயகுஹையில் நின்றும் வழிகண்டு,மூர்த்தந்யநாடியாலே ப்ரஹ்மரந்த்ரத்தை பேதித்துக்கொண்டு, அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்தேறப் போமிடத்தில், கேட்டபோதே நடுங்கவேண்டும்படியான யாம்யமார்க்கத்திலே பட்டவிளைப்பெல்லாமாறும்படி தன்கடாக்ஷாம்ருதவ்ருஷ்டிகளாலே குளிரவழியவார்த்து, யமபடருடைய ஶ்ரவணகடுகமான கடுஞ்சொற்களைக் கேட்டவுள்வெதுப்பாறும்படி, * செவிக்கினிய செஞ்சொற்களாலே செந்தளிப்பிக்கும், உக்ரமான யமதர்ஶநத்தால்வந்த வெக்காயமாறும்படி தன்னுடைய ஸௌந்தர்யாம்ருதத்தை நிரந்தரம் வர்ஷித்துக்கொண்டு, வழியிலுண்டான

விடையூறுகளையும் திவ்யாயுதங்களாலே நிரஸ்தமாகவிட்டு, (௧) "நயாமி பரமாங்கதிம் - நயாமி பரமாங்கதிம்" என்கிறபடியே பெரியதிருவடி திருத்தோளிலே வைத்துக்கொண்டு, ஆதிவாஹிகரைக்காட்டாமல் தானேகொண்டுபோய், திருநாட்டிலே விடுகைக்கு வேடன், வேடுவிச்சி, பக்ஷி, குரங்கு, பிசாசம், சராசரம் முதலானோரை வருத்தமறக்கொண்டுபோய் வைகுந்தத்தேற்றி யருளின காளமேகமான (௨) * ஆங்கத் துணையுமின்துணையவனை யொழிய வேறொருவருமில்லையென்று காளமேகத்தை வழித்துணையாகப் பற்றுகிற * தாளதாமரையிலர்த்தத்தை "தாளடைந்தோர் தங்கட்கு" என்று தொடங்கி யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா—(தாளடைந்தோர் தங்கட்குத்தானே வழித்துணையாம் காளமேகத்தைக்கதியாக்கி)(௩) "சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தங்கொடுக்கும்பிரான்" என்று-தன்திருவடிகளை யுபாயமாகவடைந்தவர்களுக்குத் தானேமார்க்கபந்துவாம்; ஆதிவாஹிகர்கையிலும் காட்டிக்கொடாதே, (௪) "துன்னுகுழல்கருநிறத்தென் துணையே" என்கிறபடியே "சுரிகுழற்கமலக்கட்கனிவாய்க் காளமேகத்தையன்றி மற்றொன்றிலம் கதியே" என்றகாளமேகமானதானே * நயாமியிற்படியே நடத்தும். "தாளடைந்தோர்" என்கிறவிதில் தாழுமந்தர்ப்பூ (ஸூ-௭) தரிறே;

(காளமேகத்தைக்கதியாக்கி) ஸாம்ஸாரிகதாபமெல்லாமாறும்படி ஸௌந்தர்யாம்ருதவர்ஷியான காளமேகத்தை வழிக்குரக்ஷகமான கதியாக்கி. அதாவது - "அவனடிநிழற்றடமன்றியாமே" என்றும் "அண்டமூவுலகளந்தவன்" என்றும், "கூத்தன் கோவலன்-திருமேனிகூராத்தன் தாமரையடியன்றிமற்றிலமரணே" என்றும், "தயாதன் பெற்றமரதகமணித்தடம்" என்றும்; "மணித்தடத்தடிமலர்க்கண்கள் பவளச்செவ்வாயணிக்கொள் நாற்றடந்தோள்தெய்வமசுரரையென்றும் துணிக்கும்வல்லரட்டன்" என்றும், "காமரூபங்கொண்டெழுந்தளிப்பான்" என்றும், இப்படிவழிக்குவேண்டும் நிழல்தடங்கள் முதலானவையெல்லாம் தானேயானவனென்கை.

(௧) வராஹசரமம். (௨) தி-மொ-௨௭-௬, (௩) ௧௦-௫. (௪) திருநெ-௧௪-

மூ.—கெடுமிடர்வைகுந்தத்தைக் கிட்டினாற்போலே
தடமுடையனந்தபுரந்தன்னில்—படவரவில்
கண்டுயில்மாற்காட்செய்யக் காதலித்தான்மாறனுயர்
விண்டனிலுள்ளோர் வியப்பவே. (௯௨)

(௧) "அக்ரதஃ ப்ரயயௌ ராமஃ" என்று, அவர்முன்னேபோக (௨) * மன்னனிராமன்பின் வைதேவியென்றுரைக்குமன்னநடையவணங்கு - அவர்தோள்நிழலை யண்டை கொண்டு நடந்தாப்போலே நடக்கப்பாரிக்கிறாரிறே.

(மீளுதலாமேதமிலாவிண்ணுலகிலேக வெண்ணும்மாறன்) (௩) "குடி மன்னுமின் சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள்" என்னும்படி மீளுதலாகிற தோஷமின்றிக்கே, (௪) "ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே" என்றும் (௫) "புணைக்கொடுக்கிலும் போகவொட்டாரே" என்றும் (௬) "மீளாப்பொருவரியவிண்ணாடு" என்றும் (௭) "மீட்சியில்லாநாடு" என்றும் சொல்லப்படுகிற பரமவ்யோமஶப்தவாச்யமான பரமபதத்திலே, (௮) "மாகவைகுந்தம் காண்பதற்கென் மனமேகமெண்ணும்" என்று எழுந்தருளமநநம் பண்ணுகிற மோக்ஷலக்ஷ்மியையுடைய மாறனென்னும் - ஆழ்வாரென்றநுஸந்திக்க. (கேதமுள்ளதெல்லாம்கெடும்) (௯) "மனக்கேதஞ்சாரா" என்கிறபடியே துக்கமென்றுபேர்பெற்றவையெல்லாம் நசிக்கும். ப்ராப்யாலாபதுக்கமெல்லாம் நிவ்ருத்தமாம். (௯௧)

பதவுரை.

மாறன்	ஆழ்வார்
உயர்விண்தனில் உள்ளோர் வியப்ப	உயர்ந்த பரமபதத்திலுள்ள நித்யஸூரிகள் ஆஶ்சர்யப்படும்படி
கெடும் இடர்வைகுந்தத்தை	துக்கரஹிதமான ஸ்ரீவைகுண்டத்தை
கிட்டினாற்போல	அடைந்து அடிமைசெய்யப்பெற்றாற்போலே
தடம் உடை அனந்தபுரம்தன்னில்	விஸ்தீர்ணமான திருவனந்தபுரத்திலே

(௧) ரா-ஆ-௧௧-௧௦. (௨) பெரியதிரும-௫௧. (௩) தி-வாய்-௩-௧-௯.
(௪) சாந்தோ-௮-௧௫. (௫) பெரி-தி-௩-௫-௨. (௬) ஜ்ஞாநஸாரம்.
(௭) ப்ரமேயஸாரம் (௮) அ௩-௭. (௯) ௪ திரு-௬௧.

படவரவில்	படத்தையுடையசேஷசயநத்தில்
கண்துயில் மாற்கு	திருக்கண்வளர்ந்தருளுகிற எம்பெமானுக்கு
ஆள்செய்ய	அடிமைசெய்ய
காதலித்தான்	விரும்பினார். (கூஉ)

அவ. — தொண்ணூற்றிரண்டாம்பாட்டு. (கெடுமிடர்வைகுந்தத்தை) இதில், பரமபதத்தில் செய்யுமடிமையைத் திருவனந்தபுரத்திலே செய்யப்பாரிக்கிற வாழ்வார் ஸ்ரீஸூக்தியை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; குறைவறப்பரமபதத்திலேபோனால் * வானிளவரசான வைகுந்தக்குட்டனுக்குச் செய்யக்கடவ * வழுவிலாவடிமைகளை, நித்யஸூரிகளில்தலைவரான ஸ்ரீ ஸேநாபதியாழ்வானெடுத்துக் கைநீட்டும்படி நிரதிசயபோக்யமான திருவனந்தபுரத்திலே திருவனந்தாழ்வான்மேலே பள்ளிகொண்டருளுகிற பரமப்ராப்யபூதரான ஸ்ரீபத்மநாபப்பெருமாள் திருவடிகளிலே அநுகூலஜநங்களும் தாமுமாய்ப்போயடிமைசெய்யவேணுமென்று மநோரதிக்கிற* கெடுமிடரிலர்த்தத்தை "கெடுமிடர்வைகுந்தத்தை" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(கெடுமிடர் வைகுந்தத்தை) கைங்கர்யவிச்சேதத்தாலே நிவ்ருத்த துக்கராம்படி பண்ணவற்றான ஸ்ரீவைகுண்டத்தை அன்றிக்கே, துக்கரஹிதமான ஸ்ரீவைகுண்டத்தையென்றுதல். (கிட்டினாற்போல்) அத்தைப்ராபித்து அடிமைசெய்யப்பெற்றாற்போலே. (தடமுடையனந்தபுரந்தன்னில் படவரவிற்கண்டுயில் மாற்காட்செய்யக் காதலித்தான்) (க) "ஹரிர்த்ருஷ்டிர்மே வஸ்மிருஜ்யதே - ஏபிஸ்சஸசிவைஃ" இத்யாதியால் பரதாழ்வான் பாரித்தாப்போலே, * தடமுடையநந்தபுரநகர்தன்னில் * படமுடையரவில் பள்ளிபயின்ற ஸர்வேஸ்வரனுக் கடிமைசெய்ய வபேக்ஷித்தார்.

அதாவது - "பூசனைசெய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே" என்றும், "சாந்தொடுவிளக்கம்தூபம் தாமரைமலர்கள்நல்ல ஆய்ந்துகொண்டேத்த வல்லாரந்தமில் புகழினாரே" என்றும், "அமரராய்த்திரிகின்றார்கட்கு" என்று தொடங்கி "நாமும்போய் நணுகவேண்டும்" என்றும் * படமுடையரவில் பள்ளிபயின்றவன்

(க) ரா அ கபக சஉ.

௯௩.—வேய்மருதோளிந்திரைகோன் மேவுகின்ற தேசத்தை
தான்மருவாத் தன்மையினாற்றன்னை—இன்னம் பூமியிலே
வைக்குமெனச்சங்கித்து மால் தெளிவிக்கத்தெளிந்த
தக்கபுகழ்மாறனெங்கள் சார்வு. (௯௩)

பாதங்காணநடமினோ நமர்களுள்ளீர்" என்றும், தாமும் தம்திருவுள்ளத்தோடொத்த ஸ்ரீவைஷ்ணவர்களுங்கூட அடிமைசெய்ய மநோரதித்தபடியென்கை.

(படவரவிற்கண்டுயில் மாற்காள்செய்யக் காதலித்தான் மாறனுயர் விண்டனிலுள்ளோர் வியப்பவே) ஸர்வோத்தரமான பரமாகாஶத்திலுள்ளாராய் * கோயில்கொள் தெய்வங்களான திருவடி திருவனந்தாழ்வான் ஸ்ரீஸேநாபதியாழ்வான் தொடக்கமானவர்கள், "நாம் * தெளிவிசும்பு திருநாட்டிலேயிருந்து செய்யுமடிமையை - இவர், * இருள்தருமாஞாலத்திலே யிருந்துபாரிப்பதே!" என்று விஸ்மயப்படும்படி, ஶேஷியாய் ஸ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுக்கு ஸர்வவிதகைங்கர்யங்களையும் செய்யவாதரித்தாராழ்வார், "இவருமொருவரே!" என்று இவர்க்கீடுபாடாயிருக்கிறது. (௯௨)

பதவுரை.

வேய்மருதோள்	மூங்கில்போன்ற திண்ணியதோள்களையுடைய
இந்திரைகோன்	ஸ்ரிய:பதியானவன்
மேவுகின்றதேசத்தை	எழுந்தருளியிருக்குமிடத்தை
தான்மருவாத்தன்மையினால்	தான்புகப்பெறுமையால்
தன்னை இன்னம் பூமியிலே வைக்குமெனச்சங்கித்து	தம்மை இன்னமும் இந்தஸம்ஸாரத்திலேயே இட்டுவைக்குமோவென்று அதிஶங்கித்து
மால் தெளிவிக்கத் தெளிந்த	எம்பெருமான்தேற்றத் தேறின
தக்கபுகழ்மாறன்	தகுதியான கீர்த்தியையுடைய ஆழ்வார்
எங்கள்சார்வு	எமக்குப்புகல். (௯௩)

அவ.—தொண்ணூற்றுமூன்றும்பாட்டு. (வேய்மருதோளிந் திரைகோன்) இதில், யதாமநோரதம் பெருமல் ஸம்ஸாரத்திலே ஸர்வேஶ்வரன் வைக்கவெண்ணினுனுகஶங்கிக்க, அவ்வதரித்த படியை யருளிச்செய்கிற பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிருர். எங்ஙனேயென்னில்; தம்மநோரதாநுகுணமாக அப்போதே அத்தேசத்திலே போயடிமைசெய்யப் பெருமையாலே கலங்கி, "பழைய படியே நமக்கு ஸம்ஸாரத்திலிருப்பே ஶேஷித்துவிடுகிறதே!?" என்று, ப்ரக்ருதி ஸம்பந்தத்தின் கொடுமை, ஈஶ்வரஸ்வாதந்த்ர்யம் முதலான ஹேதுக்களாலே தமக்குப்பிறந்த வதிஶங்கையை, ஒரு படுக்கையிலே கூடவிருக்கச்செய்தே பண்டுபசுமேய்க்கப்போகிற ப்ரபா(ஹா)தகாலம்வந்து அக்காலத்துக்கடுத்த குயில்மயில் முதலான வற்றினுடைய பாடலாடல் முதலானவடையாளங்களையும் காண்கையாலே, அவற்றையேகொண்டு "க்ருஷ்ணன் பசுமேய்க்கப் போனான்" என்றதிஶங்கைபண்ணி நோவுபடுகிற விடைப்பெண்கள் பேச்சாலே யருளிச்செய்கிற * வேய்மருதோளிணையிலர்த்தத்தை "வேய்மருதோளிந்திரைகோன்" இத்யாதியாலே யருளிச்செய்கிருரென்கை.

வ்யா.- (வேய்மருதோளிந்திரைகோன் மேவுகின்றதேசத்தை) (க) "வேய்போலுமெழில் தோளி" என்னும்படி அணைக்கைக்குப் பணைபோலே யிருக்கிற தோளையுடைய பெரியபிராட்டியார்க்குவல்லபனானவன், (உ) "படமுடையரவிற்பள்ளி பயின்றவன்" என்று அநந்தஶாயியாய் (௩) "திருமாற்கரவு" என்று இருவருமாய்ச்சேர்த்தியாயிருக்கிற தேசத்தை; (௪) "மாதவாவென்ன" என்றாரிறே. (தான் மருவாத்தன்மையினால்) (௫) "நாமும்போய் நணுகவேண்டும்" என்னுமபி(ஹி)நிவேஶத்தையுடைய தாம் போய்ப்புகப்பெறாதபடியாலே. (தன்னையின்னம் பூமியிலே வைக்குமெனச்சங்கித்து) (௬) "நன்றுயஞ்சுவன் நரகம் நானடைதல்" என்றதம்மை இன்னம் ஸ்வாதந்த்ர்யாதிகளாலே ஸம்ஸாரத்திலே யிட்டுவைக்குமோவென்று ஶங்கித்துப்போர.

அதாவது - இவர் ரக்ஷணசிந்தை பண்ணிக்கொண்டு ஸௌஹார்த்தயுக்தனானவனும் "என்னைநெகிழ்கிலும்" என்னும்படி

(க) பெரு-தி-கூ-௪. (உ) தி-வாய்-கூஉ-அ. (௩) க-திருவ-௫௩.
(௪) கூஉ-க0. (௫) கூ௩-௬. (௬) ௭௧-௬.

பொருந்தி ப்ரத்யக்ஷமானாற்போலே யிவர் கையிலேயிருக்க, அத்தசையிலே ஸ்வரக்ஷணத்தில் †கைவாங்கியிருக்குமவர்கள் விஷயத்தில்ரக்ஷணத்திலே அவன்மண்டி, அங்கே விஸ்லேஷிக்கும் காலத்தையும், அவன்கைகழிந்தால் ஸப்தாதிகள் பாத(பாய)கமாகிறபடியையும், காலதைர்க்ய(தெய்வ-ஹ்ரீ) ஸஹதையையும், ஆஸ்ரித ரக்ஷணத்தில் அந்யபரதையாலே அந்தராயங்கள் புகும்படியையும், அவனுக்கறிவிக்கிற ப்ரகாரத்தை;

"வேய்மருதோளிணை" என்று தொடங்கி "ஆமருவினநிரை மேய்க்கநீபோக்கொரு பகலாயிர மூழியாலோ" என்றும் "தகவிலை தகவிலை - இனியுன்னைநீ பிரிவையாமால் வீவநின் பசுநிரைமேய்க்கப் போக்கு" என்றும் "வீவநின்பசுநிரையேய்க்கப்போக்கு - சாவதிவ்வாய்க்குலத்தாய்ச்சியோமாய்ப் பிறந்தவித்தொழுத்தையோந்தனிமைதானே" என்றும், "நின்தொழுத்தனில் பசுக்களையே விரும்பித்துறந்தெம்மையிட்டவை மேய்க்கப்போதி" என்றும் 'பிணிபவிழ்மல்லிகை வாடைதூவப் பெருமதமாலையும் வந்தின்றாலோ" என்றும், 'வெடிப்புநின் பசுநிரைமேய்க்கப்போக்கு" என்றும், "ஆமகிழ்ந்துகந்தவைமேய்க்கின்றுன்னோடசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கோலாங்கே" என்றும், "அசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கொலாங்கென்றாழுமென்னாருயிரான் பின்போகேல்-நீயுகக்கு நல்லவரொடு முழிதராயே" என்றும், "உகக்குநல்லவரொடும்" என்றுதொடங்கி 'அவத்தங்கள் விளையுமென் சொற்கொள்" என்றும். "அவத்தங்கள் விளையுமென் சொற்கொள் - திவத்திலும் பசுநிரைமேய்ப்புவத்தி" என்றும். இப்படி பஹுமுகமாக ஸங்கிக்க.

(மால்தெளிவிக்கத்தெளிந்த) அதாவது * (க) அணியாய்ச்சியர் சிந்தையுட்குழகனானவனும், (உ) "யஸ்ய ஹீநா - ஸஹதைர்ஜீவிதும் ஸ்வயாஹீநா - முஹூர்த்தமபிஜீவாவ:" என்னும்படி (ங) * அவனைவிட்டகன்றுயிராற்றகில்லாதே * அவனோடும் பிரிவதற்கிரங்கும்படியான இவர்கள் ப்ரேமஸ்வபாவத்தைக் கண்டு, 'செங்கனிவாயெங்களாயர்தேவு" என்னும்படி (ச) * ஸவி

(க) நா-தி-க0. (உ) ரா அ-ருங-ஙக, (ங) சுகூ-ககூ.
(ச) வி பு-ரு-கக-ங- † அஜ்ஞராயிருக்கிறவர்.

மூ.—சார்வாகவேயடியில்தானுரைத்தபத்திதான்
சீரார்பலத்துடனே சேர்ந்ததனைச்—சோராமல்
கண்டுரைத்தமாறன் கழலிணையேநாடோறும்
கண்டுகக்குமென்னுடையகண். (கூச)

லாஸ்யதம்பண்ணி, * ஆணிமிகுதாமரைக்கையாலே (க) "அஞ்சேல்" என்றுஸ்வஸிப்பித்து "உம்முடைய வபேக்ஷிதத்தின்படியே செய்கிறோம்" என்றதிஸங்கையைத்தீர்த்தாருயிற்று. அதாவது - பசுகிரைமேய்ப்பொழிகை; அத்தைப்பற்ற "தாமோதரன்" என்றார். (மால்தெளிவிக்கத்தெளிந்த) க்ருஷ்ணன்தெளிவிக்கத் தெளிந்த. கலங்கினவனைத் தேற்றுமவனிறே. (தக்கபுகழ்மாறனெங்கள் சார்வு) ஸங்காஹேதுவின்றிக்கே கூடவிருக்கச்செய்தே ஸங்கிக்க, ஸர்வஜ்ஞனை ஸர்வேஸ்வரன் ஸமாதாநம்பண்ண ஸமாஹிதராய், அத்தாலே தமக்கு ஸத்ருஸமான யஸஸ்ஸையுடையவாழ்வார். அநந்யகதிகளான வெங்களுக்கு அபாஸ்ரயம். (கூரு)

பதவுரை.

அடியில்	கீழ் * வீடுமின்முற்றத்திலே
சார்வுஆகவே	எல்லார்க்கும் உபாதேயமாகவே
தான் உரைத்தபத்திதான்	தம்மாலருளிச்செய்யப்பட்ட பக்தியானது
சீர் ஆர்பலத்துடனே	ப்ரபத்தியாகிற சிறந்தபலத்துடனே
சேர்ந்ததனை	சேர்ந்தபடியை
கண்டு	அறிந்து
சோராமல் உரைத்த	ஒன்றுங்குறையாமல் அருளிச்செய்த
மாறன்	ஆழ்வாருடைய
கழல் இணையே	திருவடியிணைகளையே
நாள்தோறும்	தினந்தோறும்
என்னுடையகண்	என்கண்கள்
கண்டு உகக்கும்	கண்டுகளிக்கும். (கூச)

அவ.—தொண்ணூற்றுநாலாம்பாட்டு. (சார்வாகவேயடியில்) இதில், அடியிலுபதேஸித்த பக்தி-ஸ்வஸாத்யமான பலத்தோடே

(க) தி-மொ-கூரு-ரு.

தலைக்கட்டினபடியை யருளிச்செய்த திவ்யஸூக்தியை அநுவதித்தாகவிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; இழ் காளமேகத்தை யழித்துணையாக (க) * காளதாமரையிலேபற்றிப் போக்கிலேயொருபட்டவராகையாலே * உயர்வறவுயர்நலத்தில் * ஆயர்வறுமமரர்களதிபதியாக உறுதியிட்ட பரத்வமே பரமப்ராப்யமாகையாலே, அந்தப்ராப்யவேஷத்தையும் ப்ராப்யபலமான கைங்கர்யத்தையும் (உ) * கெடுமிடரிலே யநுஸந்தித்து, அந்தப்ராப்யவேஷத்தைப் பெறுகைக்குபாயமாக (ங) * வீடுமின்முற்றத்திலும் (ச) * பத்துடையடியவரிலும் தொடங்கின பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச்சொல்லி, தமக்கு உபாயமாக முதற்றிருவாய்மொழியிலே சொன்ன ப்ரபத்தியையும் சொல்லித்தலைக்கட்டுகிற * சார்வேதவநெறியிலர்த்தத்தை, "சார்வாகவேயடியில்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(சார்வாகவேயடியில் தானுரைத்தபத்திதான்) (ங) * வீடுமின்முற்றத்திலும் (ச) * பத்துடையடியவரிலும் பரோபதேஶரூபேண எல்லார்க்கு மபாஶ்ரயமாகவருளிச்செய்த ப்ரபத்தியோடு விகல்பிக்கலாம்படியான பக்தியானது தான். (ரு) "ஶரணம்-ஶரண்யஃ" என்றத்தை, (சு) "லவலோகஶரண்யாய - ஸர்வலோகஶரண்யாய" என்றும், (எ) "பாதயோஶ்ஶரணாகதிநீவே பாதயோஃ ஶரணங்கவேஷீகிபபாத" என்றும் ஸாக்ஷாத்பலத்தோடே தலைக்கட்டினைப்போலே.

இவரும், (அ) "உம்முயிர் வீடுடையானிடைவீடுசெய்மினே" என்றும், (கூ) "எல்லையிலந்நலம்புல்கு பற்றற்றே" என்றும், (கO) "உள்ள முரை செய லுள்ள விம்மூன்றையு முள்ளிக்கெடுத்திறையுள்ளிலொடுங்கே" என்றும், (கக) "பத்துடையடியவர்க் கெளியவன்" என்றும், (கஉ) "அம்பகவன் வணக்குடைத்தவநெறிவழிநின்று" என்றும் (கங) "நன்றெனநலம் செய்வது" என்றும் இப்படி யருளிச்செய்த ப(ஶ)க்திமார்க்கமானது ஸாத்யமானபலத்

(க) தி-வாய்-கக. (உ) கூ௨. (ங) உ. (ச) ங. (ரு) ரா-ஸ-ம.
(சு) ரா-யு-கஎ-கரு. (எ) ரா-யு-கவ. (அ) தி-வாய்-உ-க. (கூ) உ-ச.
(கO) உ-அ. (கக) ங-க. (கஉ) ங-ரு. (கங) ங-எ.

மூ.—கண்ணனடியிணையிற் காதலுறுவார்செயலை
திண்ணமுறவேசுருக்கிச்செப்பியே—மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினான்மாறன்
ஆனபுகழ்சேர் தன்னருள். (கூரு)

சேரடே பொருந்தினபடியை, "சாலவேநவநெறிக்குத்தாமோத நன்றான்கள்" என்றும், "அருளினன் தயாறு சூடடி தொழு தெழு" (க) "வண்புகழ்நாரணன் திண்கழல்சேர்" (உ) "நாளும் நம்திருவுடையடிகள்தம் நலங்கழல்வணங்கி" என்றும் அடியே தொடங்கியருளிச்செய்துபோருகிறப்ரபத்தி வைலக்ஷண்ய(ஞ)த்தோ டேபொருந்தினபடியை.

"பண்டேபரமன் பணித்தபணிவகையே - கண்டேன் கமல மலர்ப்பாதம் காண்டலுமே விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்" என்றுமருளிச்செய்து, மற்றும் பக்தப்பத்திக்குப்யுக்தமான வற்றையும் "கார்மேகவண்ணன் கமலநயனத்தன்" என்றும் "திருமெய்யுறைகின்ற செங்கண்மால்" என்றும் "மடப்பின்னைதன்கேள்வன்றாள்கண்டுகொண்டு" என்றும் "தலைமேல்புனைந்தேன்" என்றும் "நச்சப்படும்நமக்கு" என்றும் "வரையெடுத்தான்பாதங்கள் வாழியென்னெஞ்சேமறவாது வாழ்கண்டாய்" என்றுமருளிச் செய்தாரிறே.

ஏவம்விதமான்வர்த்த(ஞ)ங்களை. (சோரால் கண்டுரைத்த மாறன்) இவ்வர்த்தமானது வ்யர்த்தமேநமூவிப்போகாமே நிஸ் ஸந்தேஹமார்த்தத்தை தர்ஸித்தருளிச்செய்தவாழ்வார். (கண்ணனடியிணை யேநாடோறும் கண்டுகக்குமென்னுடையகண்) இப்படி ஸந்தேஹ மார்த்ததர்ஸியரனவாழ்வார் சேர்த்தியழகையுடைய திருவடியிணை யே, கண்டுகக்கும் - ஸேவித்துஹ்றுஷ்டமாம்; (ங) "ஸ்ருஷ்டி: - மே-த்ருஷ்டி:" என்னும்படியானவென்கண்கள். * தாமோதரன் தாளிணுடைய ஸ்தாநத்திலே இவர்க்கு *மாறன்தாளாயிற்று. (கூச)

பதவுரை.

கண்ணன் அடியிணையில்	எம்பெருமான் திருவடிகளில்
காதலுறுவார் செயலை	பக்தியுடையவர்களின் க்ருத்யத்தை

(க) தி-வாய்-க-உ-சo (உ) தி-வாய்-க-ங-அ. (ங) ரா-அ-சஉ-ஙo.

திண்ணம்உற	த்ருடமாக அதிலே ஊன்றும்படி
மாறன்	ஆழ்வார்
§ ஆனபுகழ்சேர் தன் அருள்	சிறந்த கீர்த்தியோடேசேர்ந்த தம துக்ருபையினாலே;
சுருங்கச்செப்பி	சுருக்கமாக அருளிச்செய்து
மண்ணவர்க்கு	பூமியிலுள்ள ஸர்வாத்மாக்களுக்கும்
தான் உபதேசிக்கை தலைக் கட்டினான்	தாம் உபதேசிக்குந் தொழிலைப் பூர்த்திசெய்தருளினார். (சுரு)

அவ. — தொண்ணூற்றைந்தாம்பாட்டு. (கண்ணனடியிணையில்) இதில், பக்திமான்கள் பரிமாற்றத்தைச்சுருங்க வருளிச்செய்தபடியை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; ஈஶ்வரன் தம்மைப் பரமபதத்திலே கொடுபோகையிலே த்வரிக்கிறபடியைக் கண்டு, "இவர்களுக்கிதொன்று குறைப்பட்டுக்கிடக்கவொண்ணாது" என்றுபார்த்து, தம்முடையபரமக்ருபையாலே, ஸர்வேஶ்வரனைப் பற்றுகையாலும்,இவர்களுக்கு ஸங்க்ரஹமாகவேணுமென்று பாசுரப்பரப்பறச் சுருக்கத்திலே பக்திமான்கள் பரிமாற்றமிருக்கும்படியை ஸம்ஸாரிகளுக்குபதேசித்து,பரோபதேசத்தை நிக(ம)மிக்கிற * கண்ணன் கழலிணையிலர்த்தத்தை * கண்ணனடியிணையாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(கண்ணனடியிணையில்) க்ருஷ்ணன்றிருவடிகளில், (காதலுறுவார்செயலை) பக்தியுக்தராயிருப்பார் க்ருத்யத்தை. (திண்ணமுறவே) த்ருடமாகவதிலேயூன்றும்படி. (சுருங்கச்செப்பியே) ஸங்க்ரஹமாகவருளிச்செய்து. (ஏ) ஈற்றசை. (மண்ணவர்க்கு) பூமியிலுண்டான ஸர்வாத்மாக்களுக்கும். (தானுபதேசிக்கை தலைக்கட்டினான்மாறன்) பிராட்டி (க) "விதித:-விதித:" இத்யாதியாலேபரோபதேசத்தை முடித்தாப்போலே, கீழுபதேசித்துக் கொடுபோந்த பரோபதேஶத்தைப் பரிஸமாப்திபண்ணி யருளினார் பெருமதிப்பரானவாழ்வார். (ஆனபுகழ்சேர்தன்னருள்) ஶ்லாக்யமான யஶஸ்ஸோடே கூடினதம்முடைய பரமக்ருபையாலே.

(க) ஸ-ஸு உக-உரு-

§ 'ஆனபுகழ்சேர்தனதுஸால்' என்றும் பாடம்.

மூ — அருளாலடியிலெடுத்தமாலன்பா
லிருளார்ந்த தம்முடம்பையிச்சித்து—இருவிசும்பி
லித்துடன்கொண்டேக வியாரிசைவுபார்த்தேயிருந்த
சுத்திசொல்லுமாறன்செஞ்சொல். (௬௬)

பரோபதேசத்தைத் தலைக் கட்டியருளினார். (ஞானபுகழ்) *உலகத்தார் புகழும்புகழ். (தன்னருள்) * அருள் கொண்டாடும்படியானவருள்.

கண்ணனடியிணையில் காதலுறுவார் செயலைச் சுருங்கச் செப்புகையாவது - "கண்ணன்கழலிணைநண்ணும் மனமுடையீர் எண்ணுந்திருநாமம் திண்ணம்நாரணமே" என்றும், "நாரணனெம்மான்" என்றும், "கோள்வாயரவணையான்றாள்வாய் மலரிட்டுநாள்வாய்நாடீரே" என்றும், "நாடீர்நாடோறும் வாடாமலர்கொண்டு பாடீரவன்நாமம்" என்றும், "மேயான்வேங்கடம் காயாமலர்வண்ணன் பேயார்முலையுண்டவாயான் மாதவனே" "மாதவனென்றென்றோதவல்லீரேல்" என்றும், "பேராரோ அவாரராரமரரே" என்றும், "சுனைநன்மலரிட்டு நினைமின்நெடியானே" என்றும், இப்படி (௪) * எண்பெருக்கில் எண்ணுந்திருநாமத்தின் ஸப்தார்த்தங்களைச் சுருக்கி "மாதவன்" என்றுத்வயமாக்கி கரணத்ரய ப்ரயோஜந வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலைசெய்து கொடுத்தபடியென்கை. (௬௫)

பதவுரை.

அருளால்	நிர்ஹேதுகக்ருபையாலே
அடியில்எடுத்த	(அஜ்ஞாநவர்த்தகமான ஸம்ஸாரத்தினின்றும்) அடியிலே எடுத்தருளின
மால்	ஸர்வேஸ்வரன்
அன்பால்	பரமப்ரீதியாலே
இருள்ஆர்ந்ததம் உடம்பைஇச்சித்து	அஜ்ஞாநப்ரசுரமான தம்முடைய தேஹத்தை அபேக்ஷித்து
இருவிசும்பில்	பரமபதத்தில்

---

(௪) ஆசார்யஹ்ரு-ச-

இத்துடன்கொண்டு ஏக	(ஆழ்வாரை) இந்த ஶரீரத்தோடே கொண்டுபோக
இவர் இசைவுபார்த்து இருந்த—	இவ்வாழ்வாருடைய அநுமதியை எதிர்பார்த்திருந்த
சுத்தி	அவனுடைய ஶக்தியை
மாறன் செம்சொல்	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியானது
சொல்லும்	தெரிவிக்கும். (கக)

அவ.—பதினொன்றாம்பாட்டு. (அருளால்) இதில், பரம பதத்தில் செல்லும் யாத்ரையிலே த்வரிக்குமிடத்திலும் விதேய(ப்பி)பாரதந்த்ரனாய்ச் செய்கிறபடியைப் பேசினபாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார்;- எங்ஙனேயென்னில்; இப்படிப்பரோபதேசம் தலைக்கட்டினபின்பு தம்மைஅவன் திருநாட்டிலே கொடுபோகத்வரிக்கிறபடியையும், கொடுபோமிடத்தில் தாம்நியமித்தபடி கொடுபோகவேணுமென்று தமக்கவன் பரதந்த்ரனாய் நிற்கிறபடியையும், தாம்பெற்ற பேற்றின் கனத்தையும், தம்முடைய திருவுள்ளத்துக்குச்சொல்லி யினியராய்ப்பேசுகிற * அருள்பெறுவாரிலர்த்தத்தை அநுவதித்தருளிச்செய்கிறார் "அருளாலடியில்" என்று துடங்கியென்கை.

வ்யா.—(அருளாலடியிலெடுத்தமால்) (க)'காரணகளேவரை: கடயிதும் தயமாநமநா:' - கரணகளேபரைர்க்கடயிதும் தயமாநமநா: என்றும் "அங்காள்நீதந்தவாக்கை" என்றும் அடியிலே யெடுத்தபடியாதல். அன்றிக்கே, "மயர்வறமதிநலமருளினன்" என்று கேவலநிர்ஹேதுக க்ருபையாலே அஜ்ஞாநாவஹமான ஸம்ஸாரத்தில் நின்றும் அடியிலேயெடுத்த ஸர்வேஶ்வரனென்றுதல்; அதுவுமன்றிக்கே,"மாலருளால் மன்னுகுருகூர்ச்சடகோபன்" என்னும்படி அயோக்யதாநுஸந்தாநத்தாலே யகன்றுமுடியாதபடி எடுத்தவென்றுகவுமாம், (அன்பாலிருளார்ந்ததம்முடம்பையிச்சித்து) * அந்தாமத்தன்பு செய்யுமன்பாலே, * இருள்தருமாஞாலத்தில் ஜந்மமாகையாலே, இருளார்ந்த தம்முடம்பையிச்சித்து - அஜ்ஞாநப்ரசுரமானதம் தேஹத்தைவாஞ்சித்து; அன்றிக்கே,(இருளார்ந்த தம்முடம்பையிச்சித்து) ராகாந்தனாய், 'நெய்யூண்மருந்தோ மாயோனே" என்று இவன் திருவாய்ப்பாடியில் வெண்ணெ

(க) ர-ஸ்த

மூ.—செஞ்சொற்பரன்றனது சீராருமேனிதனில்
வஞ்சித்துச்செய்கின்றவாறுணர்ந்தவனை — விஞ்சுதலைக்
கண்டவனைக்காற்கட்டிக் கைவிசித்துக்கொண்ட
திண்டிறல்மாறனந்திரு. (கஎ)

யையாதரித்தாப்போல் ஜ்ஞாநபரிமளம் விஞ்சின, சரமஶரீரமாகை யாலே இவர்திருமேனியை அவனாதரிக்கப்புக்கால் வென்றாகவு மாம் (இருவிசும்பில்) பெரியவாளிறே.

(இத்துடன்கொண்டேக)இவர்"அஜ்ஞாநாவஹம்"என்றநாதரிக் கிற விஶ்ஶரீரத்துடனேகொடுபோக. (இவரிசைவுபார்த்தேயிருந்த சுத்திசொல்லும்மாறன் செஞ்சொல்) விதி(யி)பாதந்த்ரனாய், (க) "ஸமேரஹு-வஜ்ஜ-ஷாமக்ஷுஜா - ஸமைரவ்ஜுலக்குலாடக்ருத்வா" இத்யாதிப்படியே பிராட்டி திருவுள்ளக்கருத்தைப்பின்சென்று செய்தாப்போலே, இவர்நமக்கிபார்த்தேயிருந்தவனுடையஸௌஶீல்யத் தியைச் சொல்லுமாழ்வாருடைய ஶ்ராவ்யமான ஸப்தங்கள்.

அதாவது - "என்னெஞ்சத்துளிருந்து" என்றும் "இங்கே போரேனென்னெஞ்சத்தெப்பொழுதும்" என்றும், "எங்கன்றி செய்தேனுவென்னெஞ்சில் திகழ்வதுவே" என்றும், "இகழ்வின்றி யென்னெஞ்சத் தெப்பொழுதும்பிரியானே" என்றும், இப்படி இவர்திருவுள்ளத்தைவிரும்பி, "அருள்பெறுவாரடியார் தம்மடிய னேற்காழியானருள் தருவானமைகின்றனது நமதுவிதிவகையே" என்றும், "இன்று விண்ணுலகம்தருவானாய் விரைகின்றான் விதி வகையே" என்றும், இவர் தம் தேஹத்தையொழியக்கொடுபோக வேணுமென்றபடியே பாரதந்த்ரனாய் நின்றருளுமஸௌஶீல்யத்தியைப் பேசினபடியென்கை. * விதிவகையேநடத்துமவனே உபதேஶ ஸத்பாத்ரமென்றபாத்ரஸௌஶீல்யத்தியிறே. இசைவுபார்த்தேயிருந்தசுத்தி யென்று - அவ்வ்ருத்தாந்தத்தைப் பேசினபடியென்றுமாம். (கசு)

பதவுரை.

செஞ்சொல்பரன்	செஞ்சொல்மறைப்பொருளாகி நின்றபரமபுருஷன்,
தனது	தம்முடைய

(க) ஜா-ஸு-ரு-க-ரு0-

சீர் ஆரும் மேனிதனில்	ஜ்ஞாநாதிகுண பரிபூர்ணமான திருமேனியிலே
வஞ்சிக்கச்செய்கின்ற வாஞ்சைதனின் விஞ்சுதலைக்கண்டு	வஞ்சனையாகச் செய்கிற விருப்பத்தின் மிகுதியைக்கண்டு
அவனைக்கால்கட்டி	அவன் திருவடிகளைக் கட்டிக்கொண்டு
கைவிடுவித்துக்கொண்ட	(அவன் மாயவலையினுள் தாம் அகப்படாதபடி) தம்மைவிடுவித்துக் கொண்ட
திண்திறல்மாறன்	த்ருடமான ஶக்தியையுடைய ஆழ்வார்
நம்திரு	நம்முடைய ஸம்பத்தாயிராநின்றார்.

அவ:- தொண்ணூற்றேழாம்பாட்டு (செஞ்சொல்பான்) இதில், அவன், தேஹசபலனாயாதரிக்க, இவர் "விரோதியான ஶரீரத்தை வி[illegible]னையு விடுவித்துக்கொண்டமை பேசினபாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார் ஈங்ஙனேயென்னில்; தம்மோடேவந்து கலந்து தமக்குப்பாரதந்த்ரனாய்த் தம்திருமேனியிலே அத்யபி(பி)நிவிஷ்டனாய்த்திருமேனியோடே தம்மைத்திருநாட்டிலே கொடுபோகவேணுமென்று அவன் தம்திருமேனியிலே மிகவும் பண்ணுகிற சாபலத்தைக்கண்டு, "நம்பக்கலாதராதிஶயத்தாலேயன்றே இவன் நம்முடம்பையாதரிக்கிறது" என்றுபார்த்து, "இதில் தோஷமறியாமல் ராகாந்த(மோஹ)னாயிருக்கிற இவனுக்கு இதின்தோஷத்தை யுணர்த்தவே இத்தைத்தவிரும்" என்று நினைத்து, இதின் தோஷங்களை அவனுக்கறிவிக்க, அபிமதவிஷயத்திலழுக்கு உகப்பாரைப் போலே அதுதானே அவனுக்குமேல்விழுகைக்குடலாக, "எனக்கிது மிகவுமபிமதமாயிருக்கும், ஆனபின்பு இத்தைக்கழிக்கவேணும்" என்று இவர் அவன்திருவடிகளிலே தலையைமடுத்துச் சரணம்புக, இவர்நினைவை பார்க்குமவனாகையாலே "இவர்க்கபிமதமாகில் வருந்தியும்இத்தைக்கழித்துக்கொடுக்கக்கடவோம்" என்றுதலைதுலுக்க, "தம்சொலவைப் பரிபாலிப்பதே! இதொரு ஶீலமிருந்தபடியே!" என்று தலைதுலுக்குகிற * செஞ்சொற்கவிகா

லர்த்தத்தை "செஞ்சொற் ... ரன் இத்யாதியாலே அருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.--(செஞ்சொற்கவிகாள்) (க) "செஞ்சொற்கவிப்பொருளாகின்ற தேவர்கள்நாயகன்" என்கிறபடியே - செவ்வியசொல்லானவித்திருவாய்மொழியால் ப்ரதி... திக்கப்படுகிற ஸர்வஸ்வாத்பரனான ஸர்வேச்வரன். இதுதா... * செவிக்கினிய செஞ்சொல்லிறே. (சீராரும்மேனிதனில்) (உ) * தனிச்சிறையில் விளப்புற்று அஸ்நாதையாயிருந்த பிராட்டிவடிவைச்சாணவாசைப்பட்டாப்போலே, * பிறவியஞ்சிறையிலே ஜ்ஞாநடக்த்யாதிகள் விஞ்சியிருக்கிற விக்ரஹத்திலே.

(வஞ்சித்துச்செய்கின்ற வாஞ்சைதனின் விஞ்சுதலைக்கண்டு) அதாவது - "வஞ்சக்கள்வனைமாயனை - நெஞ்சுமுயிருமவையுண்டு தானேயாகிநிறைந்தான்" என்றும், "என்னை முற்றுமுயிருண்டே" என்றும், "என்னைமுற்றுமுயிருண்டிடன் மாயவாக்கையிதனுட்புக்கு" என்றும், "என்கொலம் மான்திருவருள்கள் - நன்கென்னுடலம்கைவிடான்" என்றும், "திருமாலிருஞ்சோலைமலையே" என்று தொடங்கி "ஒருமாநொடியும் பிரியான்" என்றும், இவ... ழ்வார்திருமேனியை மேல்விழுந்து அத்யாதரம் பண்ணுகிற... யைக்கண்டு; "உடலுமுயிரும் மங்கவொட்டு" என்றும், "பொங்கைம்புலனும்" என்றுதொடங்கி "மாணாங்காரமனங்கள் - மங்கவொட்டு" என்றும், இதின் தோஷதர்சநபூர்வகமாக அவனைக்காற்கட்டித்தம்காற்கட்டைவிடுத்துக்கொண்டபடியென்கை.

† (கைவிடுவித்துக்கொள்ளுகையாவது - அவன் காலைக்கட்டிக்கை விடுவித்துக்கொண்டாரென்றபடி.)(கைவிடுவித்துக்கொண்ட திண்டிறல்மாறன்) ஸர்வஸ்த... "ப்ரீதத்தோடேகொடுபோகவேணும்" என்று சாக்ரஹணம்பண்ண, இவர், (ங)சரணக்ரஹணம்பண்ணிவிடுவித்துக்கொண்ட த்ருடமான ஸக்தியையுடைய ஆழ்வார், (நந்திரு) (க) "ஸத்வோத்தரைஸ் ஸஜ்ஜநைஸ்ஸஹ - ஸம்பச்சஸாத்விகஜநஸ்ய" என்னும்படி ஆழ்வாரானமாறன் நம்முடையஸம்பத்து. (சுஎ)

(க) பெரி-தி-சச-எ (உ) தி-வாய்-க-அ-டு (ங)- ஸடகோபாஷ்டகம்.
† குண்டலிதம் அதிகம்

மூ. — திருமால்தம்பால் விருப்பஞ்செய்கின்றதோர்கண்டு
அருமாயத்தன்றகல்விப்பானென் — பெருமால்நீ
இன்றென்பாற்செய்வானென்னென்னவிடருற்றுநின்றான்
தன்னுபுகழ்மாறனைத்தான் சூழ்ந்து. (கூஅ)

பதவுரை.

திருமால்	ஸ்ரீ:பதியானவன்
தம்பால்	தம்விஷயத்தில்
விருப்பஞ்செய்கின்றதோர்கண்டு	அத்யாதரஞ் செய்யும்படியைக் கண்டு
அன்று அருமாயத்து அகல்விப்பானென்	"எம்பெருமானே! அன்று அநாதி காலம் ப்ரக்ருதியிலே இட்டு வைத்து அகற்றிவிடுவானென்?
இன்று	இப்பொழுது
என்பால்	என்னிடத்தில்
நீ பெருமால் செய்வான் என்	மிக்க வ்யாமோஹத்தைச்செய்வானென்?"
என்ன	என்றுகேட்க,
தன்னுபுகழ்	மிக்கபுகழையுடைய
மாறன்	ஆழ்வாரை
தான் சூழ்ந்து	தான் வளைந்து
இடருற்றுநின்றான்	(அவர் கேட்டகேள்விக்கு விடை சொல்லமாட்டாமல்) விம்மல் தும்மலாய்நின்றான். (கூஅ)

அவ. — தொண்ணூற்றெட்டாம்பாட்டு. (திருமால்தன்பால் விருப்பம்) இதில், இப்போதாதரிக்கிறதேவர் அநாத்யநாதரஹேது சொல்லுமென்று மடிபிடித்துக்கேட்க; அவன் அதுக்கொன்றும் சொல்லாமல் நிருத்தரனானபடியை யருளிச்செய்கிறவாழ்வார் ஸ்ரீஸூக்தியை யநுவதித்தருளிச்செய்கிறார்; எங்ஙனேயென்னில்; ஆதியிலே அத்வேஷத்தைப்பிறப்பித்து, ஆபி(ஸி)முக்யத்தையுண்டாக்கி ஆஶ்ரயணருசியைவிளைத்து, தானே யுபாயமாய், தன் திருவடிகளில் ப்ரேமத்தையும் பரமபக்திபர்யந்தமாக முற்றுவித்து, தன்னாலல்லது செல்லாதபடி பண்ணி; நாம்சொன்னபடியே செய்வானாகச்

சமைந்து நம்மை இவ்வளிப்படித்தலையாலே சுமவாநின்றதற்கு ஹே தென்று அவனைக்கேட்க; அவன் திருக்கண்களைக் கலக்கிக்கொண்டு நிற்க; "நிர்ஹேதுகமாகாதே!" என்று ப்ரதமம் ... கரித்தபடியையும், அங்கீகாரஹேதுவானவவன்க்ருபை திருவுள்ளத்தை மநுஸந்தித்து, "இதொருநிர்ஹேதுகவிஷயீகாரமிருந்தபடியே!" என்று வித்த(ஸ)ராகிற * திருமாலிருஞ்சோலை மலையிலர்த்தத்தை "திருமால்தம்பால்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா.—(திருமால்தம்பால் விருப்பம்செய்கின்ற நேர்கண்டு); (க) "ஸயிகம்வை ஸவாவஸாதுரேந்த்ரவஅஸாநாக - அத்ய புராவாஸாச்சமங்யேதவசதர்ஸநாத்" என்னும்படி ஸ்ரீயப்பதியானவவன் தம்முடையவிஷயத்திலே அத்யாதரம்பண்ணுகிறபடியைக் கண்டு; அதாவது - "திருமால்வந்தென்னெஞ்சு நிறையப்புகுந்தான்" என்றும், "இன்று வந்துபேரேனென்றென்னெஞ்சு நிறையப்புகுந்தான்" என்றும், "திருப்பேரானடிச்சேர்வதெனக்கெளிதாயினவாறே" என்றும், "தெளிதாகியசேண்விசும்பு தருவானே" என்றும், "வானே தருவானெனக்காயென்னோடொட்டி ஊனேய்குரம்பையிதனுள்புகுந்து இன்றுதானே தடுமாற்றவினைகள் தவிர்த்தான்" என்றும், "இன்றுவந்திருப்பேனென்றென்னெஞ்சு நிறையப்புகுந்தான்" என்றும், "உண்டுகளித்தேற்கு" என்று தொடங்கி "கண்டுகளிப்பக்கண்ணுள் நின்றகலான்" என்றும் "கருத்தின்கட்பெரியன்" என்றும், "திண்ணமென் மனத்துப்புகுந்தான் செறிந்தின்றே" என்றும், இப்படிமேன்மேலனவத்யாதரத்தைப் பண்ணினபடியென்கை. ஏவம்விதநிர்ஹேதுக வ்யாமோஹத்தைத் தர்ஸித்து. (அருமாயத்தன்றகல்விப்பானென் பெருமால் நீயின்றென்பால் செய்வானென்னென்ன) அன்னாதிகாலம் ஸாத்யமான ப்ரக்ருதியிலேயிட்டுவைத்து அகற்றிவிடுவானென்? இன்று நிர்ஹேதுகமாக நிரவதிகவ்யாமோஹத்தை, ஸர்வஜ்ஞனாய் ஸர்வஸக்தியாய் நிரஸ்தஸமஸ்த ஹேயனான நீ, அஜ்ஞனாய் அஸக்தனாய் ஹேயைக ஸர்க்காரஹனாயிருக்கிற என்விஷயத்திலிப்படிச் செய்வானென் என்றுகேட்க. "இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான்! அன்றென்னைப்புறம் போகப்புணர்த்ததென் செய்வான்! குன்றென்னத்திகழ் மாடங்கள்சூழ்திருப்பேரான் தானென்றெனக்கருள்செய்ய வுணர்த்தலுற்றேன்" என்றதைக் கடாக்ஷித்தருளிச்செய்தபடி.

(க) ரா-அயோ-ககூ.

மூ.—சூழ்ந்துநின்றமால்விசும்பில் தொல்லைவழிகாட்ட
ஆழ்ந்ததனைமுற்றுமநுபவித்து—வாழ்ந்தங்கு
அடியருடனேயிருந்தவாற்றையுரைசெய்தான்
முடிமகிழ்சேர்ஞானமுனி. (௯௯)

இப்படி அநாத்யநாகாரஹேதுசொல்லென்று மடியைப்பிடித்துக்கேட்க, அவனும் சிலஹேதுபரம்பரைகளை இவருக்கர்த்தக்கு ப்ராப்யுக்தமாகச் சொல்லிக்கொடுபோர, இவர்தம்நாவீறுடைமையாலே அவனைநிருத்தரனாம்படிபண்ண (என்னைவிடுதற்றுகின்றான்) இப்படி இவரருளிச்செய்ய, மேல்போக்கடிகாணாமல் தரையைக்கீறிக்கவிழ்தலையிட்டு ஸ்தப்தனாய் நின்றான். அடாவது. ஊதி(யி)கோத்திசொல்லமாட்டாத வாகுலம். (தானுபுகழ்மாறனைத்தான்சூழ்ந்து) "இது நிர்ஹேதுகமாகாதே!" என்று அவன் விஷயீகாரத்திலே விக்ருதராய் அத்தாலே வந்தஸந்தோஷமானபரவஸ்ஸையையுடைய வாழ்வாரை, அந்யஸம்ஶ்லேஷபாதியாகத் தானும்சூழ்ந்து - இடருற்றுகின்றான்!. "ஸர்வஜ்ஞனும் நிருத்தரனாய்நிற்பதே!" என்று இவர்க்கீடுபாடாயிருக்கிறது. (௯௮)

பதவுரை.

முடிமகிழ் சேர் ஞானமுனி	தம்திருமுடியிலே வகுளமாலை சேர்ந்தஞானமுனிவராகிய ஆழ்வார்
சூழ்ந்துநின்றமால்	தம்மைச் சூழ்ந்துநின்ற எம்பெருமான்
விசும்பில்	பரமபதத்தில்
தொல்லை வழிகாட்ட	பூர்வமார்க்கமான அர்ச்சிராதிமார்க்கத்தைக்காட்ட
ஆழ்ந்து அதனைமுற்றும் அநுபவித்து	அங்குள்ள இன்பக்கடலில் அழுந்தி அதனைமுழுதுமநுபவித்து
அங்கு வாழ்ந்து	அவ்விடத்தே வாஸம்பண்ணி
அடியருடனே இருந்தஆற்றை	அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளான அடியாருடன் ஆநந்த நிர்ப்பரராயிருந்தபடியை
உரைசெய்தான்	அருளிச்செய்தார். (௯௯)

அவ—தொண்ணூற்றொன்பதாம்பாட்டு. (சூழ்ந்துநின்ற) இதில், அர்ச்சிராதிமார்க்கஸத்காரத்தையடையக்காட்ட வநுபவித்தருளிச்செய்த பாசுரத்தையநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனே யென்னில்; இவரை அமர்ந்தநிலமான பரமபதத்திலே கொடு

போய்வைத்து, இவரும் தாமுமாக அநுபவிப்பதாக ஸர்வேஶ்வரன் விசாரித்து, இவர்க்கர்ச்சிராதிமார்க்கத்தையும், அங்குள்ளார் பண்ணும் ஸத்கார விஶேஷங்களையும், பரமபதப்ராப்தியையும், அங்குள்ளார் வந்தெதிர்கொண்டு ஸத்கரிக்கும் கட்டளைகளையும், தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளையும், இவர்க்குக் கண்டநுபவிக்கலாம்படி பரஜ்ஞாநதசையைப் பிறப்பித்துக்காட்டிக்கொடுக்க, இவரும், கட்டடங்கவற்றைக் கண்டநுபவித்துத் தாம்பெற்றபேற்றை அந்யாபதேஶத்தாலே யருளிச்செய்கிற *சூழ்விசும்பணிமுகிலின் அர்த்தத்தை "சூழ்ந்துநின்றமால்" இத்யாதியாலே யருளிச்செய்கிறாரென்கை.

வ்யா — (சூழ்ந்துநின்றமால்விசும்பில் தொல்லைவழிகாட்ட) கீழ் இவரைச்சூழ்ந்துகொண்டு நிருத்தராய்நின்ற ஸர்வேஶ்வரன், (௧) "வஹ்நி ஸாத்ருஶ்யதே - ஏஷாபாத்ருஶ்யதே" இத்யாதிப்படியே பரமாகாஶத்தில் (௨) "ஜமதஸ்ருாஸ்வேக்ஷே-ஜகதஸ்ஸமாஸ்யதே மதே" என்று பூர்வமார்க்கமான அர்ச்சிராதிமார்க்கத்தைக் காட்ட, அமாநத்ரஜ்ஞாநத்ஸவகோஷம்போலே ஏறப்பெறுகிற பெருச்சியை ஸூசிப்பிக்கிறமேகஸமுத்ரபே(ஹ)ரீகீதகாஹளஸங்கா(ஸ்வா)ஸீஸந்திகோலாஹலம் செவிப்படும்படியையும், (௩) "ஸுஜ்ஞா ஸவிமக்ருஷ்ணா காஸ்யாஸமுத்வநஃ - அலங்காரவிதிம்க்ருத்ஸ்நாம் காருயாமாஸவேஶ்மநஃ" என்கிறபடியே அங்குள்ள ஆதிவாஹிகஸத்காரக்ரமத்தையும், மேல்நித்யஸூரிகள் ப்ரத்யுத்க(த்ய)தராய்ஸத்கரிக்கும்க்ரமத்தையும்த்வாரத்ய(க்ஷ)க்ஷராகரிக்கும்க்ரமத்தையும், திவ்யப்ரஸாதஸத்கார க்ரமத்தையும், ஸர்வேஶ்வரனும் பெரியபிராட்டியாரும் ஆதரிக்கும்படியையும், திவ்யஸூரிபரிஷத்திலேயிருந்து ஆநந்தநிர்ப்பரராய் அநுபவிக்கும்படியையும், "தொல்லைவழிகாட்ட" என்றவதிலேயிவ்வளவு மநுவர்த்தித்தபடி.

(ஆழ்ந்ததனைமுற்று மநுபவித்து) அதிலேயாழங்காற்பட்டு, அவன் காட்டினதெல்லாவற்றையும் கட்டடங்கவநுபவித்து. அதாவது - "சூழ்விசும்பணிமுகில் தூரியமுழக்கின ஆழ்கடலலை திரைகையெடுத்தாடின" என்றும், "நாரணனமர்க்கண்டு கந்து நன்னீர்முகில் பூரணபொற்குடம் பூரித்ததுயர்விண்ணில்" என்றும், "தொழுதனருலகர்கள்" என்று தொடங்கி "வழியிது வைகுந்தர்க்கென்றுவந்தெதிரே" என்றும், "எதிரெதிரிமையவர்" என்று தொடங்கி "மதுவிரிதுழாய்முடிமாதவன்றமர்க்கே" என்றும்

(௧) ஶா-யு. (௨) ஸ்-ஆ-௩௪. (௩) ஶா-யு-

மூ,— முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம் நீங்கித்
தனியாகி நின்று தளர்ந்து — நனியாம்
பரமபத்தியால் நைந்து பங்கயத்தாள் கோனை
யொருமையுற்றுச் சேர்ந்தா னுயர்ந்து. (௧௦௦)

திருவாய்மொழி நூற்றந்தாதி முற்றிற்று.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

"மாதவன் றமரென்றுவாசலில் வானவர்" என்று தொடங்கி "வேத நல்வாயவர் வேள்வியுள்மடுத்தே" என்றும், "வேள்வியுள்மடுத்தலும்" என்று தொடங்கி "வாளொண்கண்மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே" என்றும், "மடந்தையர்வாழ்த்தலும்" என்று தொடங்கி "குடந்தையன் கோவலன் குடியடியார்க்கே" என்றும், "குடியடியார்" என்று தொடங்கி "வடிவுடைமாதவன் வைகுந்தம் புகவே" என்றும், "வைகுந்தம்புகுதலும்" என்று தொடங்கி "வைகுந்தம் புகுவதுமண்ணவர் விதியே!" என்றும், "விதிவகை" என்று தொடங்கி "மதிமுகமடந்தையரேந்தினர்வந்தே" என்றும், "வந்தவரெதிர்கொள்ள மாமணிமண்டபத்தந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை" என்றும், இப்படி முழுதுமநுபவித்தபடியென்கை.

(அநுபவித்து வாழ்ந்து) இவ்வநுபவத்தையடைவே யநுபவித்து க்ருதார்த்தராய். (அங்கடியருடனே யிருந்தவாற்றை யுரைசெய்தான்) பரமபதத்திலே ஆநந்தமயமான திருமாமணிமண்டபத்திலே அநந்தகருடவிஷ்வக்ஸேந ப்ரமுகராயுள்ளவடியாரோடே ஆநந்திப்பராயிருந்த ப்ரகாரத்தை யருளிச்செய்தார். (முடிமகிழ்சேர் ஞானமுனி) * முடியுடைவானவரோடே கூடுகையாலே முடியையுடையராய் ப்ரபந்தம்தலைக்கட்டுகையாலே ஆழ்வாரும் அளகபந்தத்திலே வகுளபந்தத்தையுடையராய்த் தலைக்கட்டினபடியை யருளிச்செய்கிறார். அவன் * மதுவிரிதுழாய் முடிமாதவன், இவர் முடிமகிழ்சேர்ஞானமுனி; பரஜ்ஞாநத்தையுடைய பராங்குசமுனியானவர். (அடியருடனேயிருந்த வாற்றையுரைசெய்தான்) * சூழ்விசும்பணிமுகில் தொடங்கி "அடியரோடிருந்தமை" என்றுமளவுமருளிச்செய்தார், எல்லாரும் விஶ்வஸித்து உஜ்ஜீவிக்கைக்காக. (௯௯)

பதவுரை.

முனி மாறன் — மநநஶீலரான ஆழ்வார்

முன்பு உரைசெய்	முன்புதாம் பேசுபெற்றவற்றை அருளிச்செய்த
முற்றின்பம் நீங்கி	இன்பம் முழுதும் நீங்கி
தனி ஆகிநின்று தளர்ந்து	தனிமையாய் நின்றுவருந்தி
நனிஆம் பரமபத்தியால் நைந்து	அதிகமாகவிளைந்தபரமபக்தியினால் பரிபக்வராய்
பங்கயத்தாள்கோனை	ஸ்ரிய:பதியை
ஒருமையுற்று உயர்ந்து சேர்ந்தான்	திருவுள்ளத்தாலே ஒருமைப்பட்டு அத்தாலே நித்யஸூரிகளுடைய உயர்வையுடையராய் ப்ரத்யக்ஷஸாக்ஷாத்காரமாம்படி கிட்டி இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்யப்பெற்றார். (க00)

அவ—நூறாம்பாட்டு. (முனிமாறன்) இதில், பரமபக்தியாலே பரப்ராப்தியானபடியைப் பேசின பாசுரத்தை யநுவதித்தருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்; கீழ் * சூழ்விசும்பணிமுகிலிலே - பரமபதத்திலே புக்கு விரதிஶயானந்த யுக்தராய் நித்யஸூரிகள் திரளிலே யிருக்கிறாராகத் தம்மையநுஸந்தித்தவிது ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய் பாஹ்யஸம்ஶ்லேஷயோக்யமல்லாமையாலே, மேருஶிகரத்திலே ஸுகோத்தரமாக விருந்தவன் பேராழமான பாதாளத்திலே தலைகீழாகத்†தள்ளுண்டு விழுந்துநோவுபடுமாபோலே, * அநந்தக்லேஶ பா(ஜ)ஜநமானஸம்ஸாரத்திலேதாமிருக்கிறபடியைக்கண்டு, ஈஶ்வரனுக்குப்பண்டுபோலே யொருகுணாவிஷ்காராதிகளால் பரிஹரிக்க வொண்ணாதபடி ஆற்றாமை தலையெடுத்து, ஒருதூத ப்ரேஷணாதிகளாலே யிட்டு நீட்டுகையுமின்றிக்கே, தாமே அவன்முகத்தைப்பார்த்து, தம்மாவியைப்பரிஹரித்துக்கொள்ளப்போகா திருக்கிறபடியையும், ஸாதநாந்தரங்களையநுஷ்டித்தாலும் அவன்கைபார்த்திருக்க வேண்டுகிறபடியையும், சொல்லிக்கொண்டு, பெரியபிராட்டியாரானையிட்டுத்தடுத்தும் வளைத்தும் அவனைப்பெறவேண்டும்படி பரமபக்தி தலையெடுத்துநிர்க்(வ-ஞ) ருணருடைய ஹ்ருதயங்களுங்கூட விரங்கும்படியாகவும், அவனுக்

† தள்ளுண்டு.

குடக்கூத்தாடிய செய்தல்லனன திருநாட்டில் குடியிருப்பரிதாம்படி யாகவும் பெருமிடறு செய்துகூப்பிட்டுப் பெரியவார்க்கிலோடே திருவடிகளிலே மரணம்புக;பெரியதிருவடி திருத்தோளிலே பெரிய பிராட்டியாரோடேகூட விவரபேக்ஷித்தபடியே ஸர்வேஸ்வரன் வந்து இவர் காற்கட்டான ப்ரக்ருதி ஸம்பந்தத்தையு மறுத்து, பரமபதத்திலேகொடுபோய், நித்யஸூரிகளோடே யொருகோவை யாக்கி, நித்யகைங்கர்யம் கொண்டருள; அத்தாலே தாம்நிரஸ்த ப்ரதிபந்த(ரு)ராய்ப்ராப்தஸமஸ்தமநோரதரானபடியைச்சொல் விக்கலைக்கட்டுறு * முனியேநான்முகனிலர்த்தத்தை “முனிமா றன்” இத்யாதியாலே யருளிச்செய்து தலைக்கட்டுகிறாரென்கை.

வ்யா.—(முனிமாறன்) ஸர்வேஸ்வரன், “முனியே” என்னும் படி ஸ(*)ர்வஸ்தமானஸம்ஹ்ருதிஸமயத்தில்ஸர்வசேதநரக்ஷணத்தி லே *த்யாநாத்தஸ்த(ஹ)னயிருக்குமாபோலே, இவரும்,நித்யஸம் ஸாரிகளாய்ஸம்ஸரித்துஅசித்ப்ராயரான ஆத்மாக்கள்விஷயத்திலும் ரக்ஷணசிந்தை பண்ணிப்போருகையாலே - முனியென்கிறது; அன் றிக்கே, பகவத்விஷயத்திலே * எண்ணுதனகளெண்ணும் நன் முனிவரின்பம் அன்றிக்கே, ப்ரக்ருதத்துக்குச்சேர ஸர்வேஸ் வரன் விஷயத்திலே பரமபக்தி பர்யந்தமாக நிரந்தர சிந்தாயுக்தரா யிருக்கு மவனொன்னுதல்; இப்படிமநநசீலராயிருக்கிறவாழ்வார்,

(முன்புனைசெய்முற்றின்பம் நீங்கி) அதாவது- “ கனிதாகிய சிந்தைய ளுட்களிக்கின்றேன்” என்றும், “ விருப்பேபெற்றமுத மூண்டுகளித்தேனே ” என்றும், “ உண்டுகளித்தேற்கும்பரென் குறைமேலைத்தொண்டு களித்தந்தி தொழுஞ்சொல்லுப்பெற்றேன்” என்றும், {உ “கண்ணுள் நின்றகலான் ” என்றும், “உற்றே னுகந்து பணிசெய்துனபாதம் பெற்றேன்” என்றும், “ வந்தவ ரெதிர்கொள்ள மா;மணிமண்டபத் தந்தமில் பேரின்பத்தடியரோடி ருந்தமை” என்றும, இப்படி முன்புபேற்றைப்பெற்றதாக வரு ளிச்செய்த ஸமஸ்தாநந்தமும் நிரஸ்தமாய்ப்போய், அதெல் லாம் மாநஸாநுபவ மாத்ரமாய், ப்ரத்யக்ஷஸாக்ஷாத்காரத்திலே அபேக்ஷையுடையராய், அத்தை அப்பேகதே பெறாமல் மீளவு மஜ் ஞாநாவஹமான ஸம்ஸாரத்திலே யிருக்கக்கண்டு, பூர்வத்திலாநந் தமூ மபூர்வமாய்படி கழிந்தமைதன்மை.

(தனியாகி நின்று தளர்ந்து) * அத்தயில் [illegible] யாரான ஸௌந்ரிஸங்கங்களோடேயிருந்த தாம் [illegible] ரத்தில் தனிமையே சேஷித்து, பிராட்டி [illegible] ஞாத்தகரான பெருமாளை, (௧) "பரதனும் தம்பி சத்ருக்நனு மிலக்குமனோடு மைதிலியும்" என்னும்படி சேர [illegible] க்கு, பின்பு பிரிந்து, (உ) "காகுஸ்த [illegible] வைகுந்ராவிமௌ பவஸீதா - காந்தா [illegible] டா பாலேவ கந்யா [illegible] பஸீதா" என்னும்படி [illegible] பிட்டாப்போலே, "தனியேனுநிரே" என்று [illegible] தளர்ந்து - மிகவும் வைவர்ண்யத்தையுடையராய்த் [illegible].

அதாவது - 'கலிவாய்ந்தாமனைக்கட்கருமணிக்கமே - மாயஞ் செய்யேலென்னை" என்றும், "மாயஞ்செய் [illegible] "திருவாணை நின்னாணை கண்டாய் - கூவிக்கொள்ளாய் [illegible]" என்றும், 'ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலால் [illegible] நான்" என்றும், 'உம்பர்க்கண்பாழேபோ - என்னைப்போர [illegible]" என்றும், "எனக்காராவமுதானாயே" என்றும், "எனக்காராவமுதாயெனதாவியை யின்னுயிரை மனக்கொள்ளையைம் மன்னியுண்டிட்டா யினியுண்டொழியாய்" என்றும், "கோலமலர்ப்பாவைக்கன்பாகிய வென்னன்பேயோ - உன்னைப்பெற்றினிப்போக்குவனோ" என்றும், பெற்றினிப்போக்குவனோவுன்னை" என்றும் [illegible] னையுன்னையெனாள் வந்து கூடுவன் நான்" என்றும், இப்படி ஆர்த்தியாலே அவஸந்நராய்க்கூப்பிட்டென்கை. (தனியாம் பரமபக்தியால் நைந்து) "அதனிற்பெரிய" என்னும்படி தத்வத்ரயங்களிலும் பெரிதாய், * முடிந்த அவாவான பரமபக்தியாலே பக்வராய். தனி - பெருமை. அன்றிக்கே, "பரமபத்தியாலேந்து" என்றுபாடமாய், முடிந்த அவாவாகிறவமுதவெள்ளமான ஆநந்தஸாகரத்திலே மக்நராயலைந்தென்றுமாம். (பங்கயத்தாள்கோனை) அந்தப் பரமபக்திக்கு விஷயமான ஸ்ரிய:பதியை. 'கோலமலர்ப்பாவைக் கன்பாகிய வென்னன்பேயோ - †(உன்னைப்பெற்றினிப்போக்குவனோ" என்றரு ளிச்செய்தவனை. உத்தரவாக்யத்தில் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஸ்ரிய:பதியை) (ஒருமையுற்று) (௩) 'வீடுதிருத்தி" (௪ [illegible] வின்னு லகந்தருவானுய்விரைகின்றான்" என்றும் (௫) "[illegible] னைக்காயெனை ஞெட்டி" என்றும் த்வரிக்கிற [illegible] திரு வுள்ளத்தோடே சேரும்படி இவர் திருவுள்ளமும் [illegible] ஒரு தலைத்தென்னுதல்; அன்றிக்கே, பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தியுக்

† குண்டலிதம் க்வாசித்கம். (௧) தி-மொ உ-௩-எ. (௩) ரா-ஸு உ௯-உ. (௩) ௧-௫-௧௦. (௪) ௧௧-௩.

தாமப்பேற்றுக் குருகூரிலே அவாவாலே கூப்பிட்டுப்போந்தவிவர் திருவுள்ளமும் (க) "பரிஷ்வஜ-முதிதப்பரிஷ்வஜே" என்னும்படி "என்னைமுற்றும் நீ சூழ்ந்தாயே" என்று இவர் திவேஹம் இருக்கும்படியிலேயே அவாவற்று வீடுபெற்ற ப்ரகாரத்தையாகவுமாம். (பங்கயத்தாள் கோனைப் பொருமையுற்று-உயர்ந்து-சேர்ந்தான்) அதாவது - (உ) "கோலத்திருமாமகளோடுன்னைக்கூடாதே சாலப்பலநாளடியேனின்னம் தளர்வேனோ" என்கிற விழவுதீர, ஸ்ரீயபதியான ஸர்வேச்வரனை ஒருதலைத்த பரமபக்தியுக்தராய், அத்தால் நித்யஸூரிகளுக்கு (ஆரா) பத்தை இங்கேயுடையராய்ப் ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரமாம்படிகிட்டி, இருவருமானசேர்த்தியிலே, (கஉ) "அடிமைசெய்வார் திருமாலுக்கே" என்னும்படி அடிமைசெய்யப்பெற்றார்; அவனும், (க) "ஸுக்ரீவஸ்ய தாவாவ்ருத்ய-மதிதப்பரிஷ்வஜே அங்கேபரதமாரோப்ய முதிதப்பரிஷ்வஜே" என்று இவரைப்பெற்று ஹ்ருஷ்டனாக; இவரும், அந்தலையில் முகோல்லாஸத்தைப் பெற்றநுபவித்து ஹ்ருஷ்டரானார்; அத்தையாயிற்று "ஒருமையுற்றுச்சேர்ந்தான்" என்கிறது. இத்தால்—"அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்" என்றத்தை நினைக்கிறது.

"ஸாக்ஷாத்கரித்த பரமப்ராப்திக்குத் தலைமிசையாய் வந்து தாளிணையுடனே போகாமைதடுத்துத் திருவாணையிட்டுக்கூசம்செய்யாதுநின்று தமிழையற்றுக் கொம்பற்றகதிகேடுபோய் விட்ட பெரும் பழிபுரிந்தபோனால் வருமிழவு உண்டிட்ட முற்றீம்பு அன்புவளர்ந்த அப்புமை உயிருறவுமுதலளவுதுறக்கைகளாலே பெறுவானை யலவாக்கினபேரவாவானப்படியாம்படி கடல்போன்ற வாதரத்தே கூடுசூழ்ந்த தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிறார்" என்றிறே ஆசார்யஹ்ருதயத்திலே நாயனாருமருளிச்செய்தது. "கண்டு களிப்பளவும்-பரஜ்ஞாந (மஹத்)கர்ப்பபரபக்தி, இருந்தமையென்றது-பூர்ணபரஜ்ஞாநம், முடிந்தஅவாவென்றது-பரமபக்தி. இவை ஜ்ஞாநதர்சநப்ராப்த்யவஸ்தைகள்" என்றும் இந்தப்பரபக்த்யாதி பேதத்தையுமருளிச்செய்தார். "ஏவம் விதமான பரமபக்தியாலே பரிபக்வராய் பலத்தோடே சேர்ந்தார்" என்கிற திருவாய்மொழியினர்த்தத்தை இப்ரபந்தத்திலிப்பாட்டாலே ஸங்கரித்தருளினாராயிற்று. (௧௦௦)

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த திருவாய்மொழி நூற்றந்தாதி வ்யாக்யாநம், முற்றிற்று.

(க) ராம-௧௩௧. (உ) ௬௯-௩. (௩) ௩௭-௧௧.